விலை ரூபா 30
பக்கங்கள் : 56 + VIII

# உதயன்

சுடர் 31 கதிர் 164 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 25, ஞாயிற்றுக்கிழமை 08.05.2016

மகர்ராஜா பொதிகள் சேவை
சிக்கனப் பொதிகள் சேவை
Per Kg
449/- 646/- 449/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா,
024 - 4930200 / 076 - 6908961

# கைதுகள் விடயத்தில் வெளிப்படை அவசியம்

## அரசை வலியுறுத்துகின்றது ஐ.நா.

- சித்திரவதைகள் இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.
- சிறைச்சாலைகளின் மோசமான நிலையை வர்ணிக்க வார்த்தைகளே வர மறுக்கின்றன.
- நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையைக் கட்டியெழுப்ப நிலைமாற்று நீதி மிக அவசியம்.



கொழும்பு, மே 8
கைதுகள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை இருக்குமிடத்தில், அரசு மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா. அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.
கொழும்பிலுள்ள ஐ.நாவின் இலங்கைக்கான தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, வடக்கு-கிழக்கில் மீண்டும் இடம்பெற்றுவரும் கைதுகள் தொடர்பாக 'உதயன்' ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர்கள் இவ்வாறு வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளனர்.
இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சித்திரவதைகள் மற்றும் கொடூரமான - மனிதத்தன்மையற்ற -கீழ்த்தரமான பக். 53

# தமிழரின் துன்பத்தைப் போக்கவே இலங்கையுடன் இந்தியா நல்லுறவு

## தமிழகத் தேர்தல் பரப்புரையில் பிரதமர் மோடி தெரிவிப்பு



சென்னை, மே 8
இலங்கையில் உள்ள தமிழ்ச் சகோதரர்களின் நிலையை எண்ணிப் பார்த்தால் கவலைக்கிடமாக இருந்தது. அதனால் அவர்களின் துன்பத்தைப் போக்க இலங்கையுடன் நல்லுறவை ஏற்படுத்தி, யாழ்ப்பாணத்துக்குச் சென்ற முதல் இந்தியப் பிரதமர் நான் தான்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. பக். 53

# ரயில் மோதியதால் 2 இளைஞர்கள் சாவு

## கோண்டாவிலில் நேற்று அதிகாலை துயரம்

யாழ்ப்பாணம், மே 8
கோண்டாவிலில் ரயில் மோதி இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



குறித்த இளைஞர்கள் இருவரும் ரயில் தண்டவாளத்தில் நித்திரையிலிருந்ததாக அங்குள்ளவர்களால் கூறப்படுகின்ற போதும், அதன் உண்மைத் தன்மை புலப்பட பக். 53

# அறிக்கை கோருகின்றார் வடக்கு மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், மே 8
வடக்கு மாகாண சபையால், அரசியல் தீர்வுத் திட்ட வரைவை நிறைவேற்றுவதற்கான அமர்வுகள், கடந்த மாதம் இரண்டு தினங்கள் நடத்தப்பட்டன. இந்த அமர்வுகளின் முழுமையான அறிக்கையை வழங்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் பக். 53

# தீர்வு வரைவை கேட்கிறார் கிழக்கு மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், மே 8
வடக்கு அரசின் தீர்வுத் திட்டத்தின் பிரதி ஒன்றை வழங்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது.
வடக்கு மாகாண அரசின் தீர்வுத் திட்டம் கடந்த மாதம் 22 ஆம் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டி பக். 53

# ரவுடிகள் ஐவர் யாழ். நகரில் கைதாகினர்

*ஒருவர் பொலிஸுக்கும் வெட்ட முற்பட்டாராம்*

யாழ்ப்பாணம், மே 8
பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் கல்வீச்சுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது செய்துள்ளதாகப் பக். 53

# காணாமற்போனோர் ஐ.நா அமர்வு நாளை ஆரம்பம்

கொழும்பு, மே 8
ஜெனிவாவில் நடைபெறவுள்ள, பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் 109 ஆவது அமர்வில், இலங்கை விவகாரம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. பக். 53

# பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் அமையவேண்டும்

(விரிவு 2 ஆம் பக்கத்தில்)

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு பெரும் இலாபப்பங்கான ரூ.5.4 பில்லியனை வழங்குகின்றது.

மீண்டும் ஒரு முறை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு காப்புறுதித் துறையில் வேறு எவராலும் வழங்க முடியாத பாரிய இலாபப் பங்கான ரூ.5.4 பில்லியனை வழங்குகின்றது. கடந்த 11 வருட வரலாற்றில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் வழங்கிய மொத்த இலாபப்பங்குத் தொகை ரூ.35 பில்லியனையும் கடந்துள்ளது.



இம்முறை 2015ஆம் ஆண்டிற்கான இலாபப்பங்கினை வழங்குவதுடன், ஒவ்வொரு வருடமும் சவால் மிகு இலாபப் பங்கினை பகிர்ந்தளிக்கின்றது. காப்புறுதித்துறையில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் முதன்மை இடத்தில் தனித்துவம் மிக்கதாக திகழ்வதுடன், மக்களின் ஆயுள் காப்புறுதித் தேவைகளுக்கு ஏற்ற தீர்வுகளையும் வடிவமைக்கின்றது......

பக்கம் 15

www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
12.00%
உச்ச வருட வட்டி
வ.தே.வ. 9.86%

| | மாதம் | மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 9.50% | 10.00% | 10.25% |
| வ.தே.வ. | 9.84% | 10.25% | 10.25% |

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்

011 5411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ
தேசத்தின் முன்னோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் அமைய வேண்டும்

## வலியுறுத்தி நேற்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 8

பொருளாதார மத்திய நிலையம் வவுனியா எல்லைக்குள் – தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, வவுனியா மாவட்டத்தில்நேற்றுக்காலைமாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




வவுனியாமாவட்டத்தில்அமைக்கத் திட்டமிடப்பட்ட பொருளாதார மத்திய நிலையம், வேறு மாகாணத்துக்கு மாற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு அரசால் கடந்த ஆண்டு பாதீட்டில், வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 400 மில்லியன் ரூபா முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டது. அதற்குரிய காணியை இனங்காண்பதில் இன்னமும் முடிவு எட்டப்படவில்லை.

பொருளாதார மத்திய நிலையம் வவுனியா நகரிலிருந்து மூன்று கிலோமீற்றர் சுற்றாடலில் அமைக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனையைகிராமியபொருளாதரஅபிவிருத்தி அமைச்சு வலியுறுத்தி வருகின்றது. அதனால் நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தாண்டிக்குளம் காணி அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால் அந்தக் காணியை, பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு விடுவிக்க வடக்கு மாகாண அரசு மறுத்துள்ளது.

அதேவேளை வடக்கு மாகாண அரசு அடையாளப்படுத்திய ஓமந்தை மாணிக்கபுரம் காணி, நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது என்றும், அந்தக் காணி தனியாருக்கு உரியது என்றும் தெரிவித்து கொழும்பு அரசு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது. இந்தத் திட்டத்தை விரைந்து ஆரம்பிக்கவேண்டும் என்றும், இல்லாவிடின் வேறு மாவட்டத்துக்குத் திட்டம் மாற்றப்படக் கூடும் என்றும் கொழும்பு அரசு தெரிவித்துள்ளது.

பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலேயே அமைய வேண்டும் என்று விவசாயிகள் – வியாபாரிகள் ஏற்கனவே தெரிவித்துள்ளனர். அதனை வலியுறுத்திவடக்குமாகாணமுதலமைச்சருக்குக் கடிதமும் அனுப்பியுள்ளனர். இதற்கு எந்த முடிவும் தெரிவிக்கப்படாத நிலையில், நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூர் விளைபொருள் விற்பனைச் சங்கம் அமைதிப் பேரணியை நடத்தியது. மு.ப. 9.30 மணிக்கு தினச் சந்தையில் மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட விவசாயிகள், மொத்தக் கொள்வனவாளர்கள், விற்பனையாளர்கள் எனப் பலரும் ஒன்று கூடி அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டனர். பசார் வீதி – தர்மலிங்கம் வீதி வழியாக ஹொரவப் பொத்தானை வீதியூடாக வவுனியா மாவட்டச் செயலகத்தைப் பேரணி சென்றடைந்தது. அங்கு மாவட்ட அரச அதிபரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்துக்கு வவுனியா மாவட்டத்திலுள்ள தினச் சந்தை முழுமையாக மூடப்பட்டு ஆதரவளிக்கப்பட்டது.

ஜனாதிபதி, வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு மனுவின் பிரதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில்–

வவுனியாவில் 35 வருடங்களுக்கு மேலாக எந்த விதமான அடிப்படை வசதிகளுமின்றி உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் சந்தையானது இயங்கி வருகின்றது. போதிய இட வசதிகளின்றி காணப்படுகின்றது. விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.



இந்த நிலைமையில் நவீன வசதிகள், மேலதிக உற்பத்திப்பொருள்களை சேமித்து வைக்கக் கூடிய குளிரூட்டி அறைகளைக் கொண்டதுமான மத்திய நிலையம் வவுனியாவில் அமைவது விவசாயிகளாகிய எமக்கு ஓர் வரப்பிரசாதமாகும். அதிலும் வடக்கு மாகாணத்தின் நுழைவாயிலாக இருக்கும் வவுனியா மாவட்டத்தில் இவ்வாறான நிலையம் அமைவது வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்ட விவசாயிகளுக்கும் நன்மையளிக்கும்.

இதற்கான காணி தெரிவில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது.

பொருளாதார மத்திய நிலையமானது வவுனியா நகருக்கு அண்மையில் அமைய வேண்டும் என்பதே 35 வருடங்களாக மாவட்டத்தின் விவசாயிகளுடன் இணைந்து சேவை செய்து வரும் சங்கத்தினதும், மாவட்டத்தின் விவசாயிகளினதும் ஒருமித்த கருத்தாகவுள்ளது.

குறிப்பாக உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் விவசாயிகள் அதன் மூலம் பெறும் பணத்தைக் கொண்டு தமது விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான விவசாய உள்ளீடுகளை கொள்வனவு செய்தல், அவர்களுக்குத் தேவையான இதர பொருள்கள் கொள்வனவு செய்தல், வங்கி வேலைகள் மற்றும் அரச திணைக்களங்களிலுள்ள அன்றாட வேலைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இடத்தெரிவு அமைதல்வேண்டும். ஏற்கனவே பிரதேச செயலாளரால் முன்மொழியப்பட்ட தாண்டிக்குளம் விவசாயப் பண்ணையின் பயிர்ச் செய்கைக்கு உட்படாத தெற்கு எல்லையில் அமைந்துள்ள மேட்டுக்காணியில் மேற்படி மத்திய நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-5)

## மக்களின் வாக்குகளால் பதவி பெற்றதை வடக்கு முதலமைச்சர் மறந்துவிடக்கூடாது

### சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மக்களின் வாக்குகளாலேயே தங்களுக்கான பதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை வடக்கு முதலமைச்சர் மறந்து விடக் கூடாது. பொருளாதார மத்திய நிலையத்துக்கு மத்திய அமைச்சால் அடையாளப்படுத்தப்பட்ட காணியையே வழங்க வேண்டும்– இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி. சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா எல்லைக்குள் குறிப்பாக தாண்டிக்குளத்தில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்குமாறு கோரி வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வன்னி மாவட்டத்துக்கு இவ் வருடத்தில் 400 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிலான பொருளாதார மத்திய நிலையம் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. இது போன்ற மத்திய பொருளாதார வலயங்களை நாடு பூராகவும் அமைக்க மைத்திரி அரசு தீர்மானித்திருந்தது.

நாடு பூராகவும் பலபத்து அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறையில் தொடங்கப்பட்ட நிலையில், வவுனியா மொத்த வியாபார நிலையத்துக்கென தீர்மானிக்கப்பட்ட வேலைத் திட்டத்துக்கு உரிய காணி வழங்கல் செய்யாமல் வட மாகாண சபை முடக்கியுள்ளமை கவலைக்குரிய விடயம். கால இழுத்தடிப்புச் செய்து மக்களை போராடும் நிலைக்கு கொண்டு வந்தது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

வவுனியா அரச அதிபர் பணிமனையில் மேற்படி விடய முடிவுகளை எடுப்பதற்காக நடத்தப்பட்ட முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொள்ளாதவர்கள் தங்களது அதிகாரங்களை மக்களிடையே திணிக்க முற்படக்கூடாது. தங்களுக்கான பதவிகள் மக்களின் வாக்குகளால் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை வடக்கு முதலமைச்சர் மறந்துவிடக்கூடாது என்றார்.

(ற-ஜ-21)

## யாழ். போதனா விரிவாக்கம் குறித்து சுகாதார அமைச்சின் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.போதனா வைத்தியசாலையின் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சின் 60 பேர் கொண்ட குழு நேற்று யாழ். வந்துபார்வையிட்டுஆராய்ந்து சென்றுள்ளது. அவர்களுடன் சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசர் காசிமும் வந்திருந்தார் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மகிபால, சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட 60 பேர் கொண்ட குழுவினரே வந்திருந்தனர். அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருவது முன்னரே திட்டமிடப்பட்டிருந்த நிலையில் பிரதி அமைச்சரும் திடீரென இதில் கலந்து கொண்டு வந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் குழுவினர் வைத்தியசாலையில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆய்வு கூடம் உள்ளிட்ட சில பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர். வைத்தியசாலைக்கு 250 மில்லியன் ரூபா பெறுமதியுடைய எம்.ஆர்.ஐ இயந்திரத்தையும் இந்த வருடத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் குழுவினர் உறுதியளித்துள்ளனர். வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை கடும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ள நிலையில் இந்த வருடம் 50 தாதியர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தாதியர்கள் தங்குவதற்கான இடப் பற்றாக்குறை தொடர்பிலும் அவர்களின் கவனத்துக்கு நேற்றும் கொண்டு செல்லப்பட்டது என்று பணிப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத் தொகுதியின் 3 ஆவது மாடியைக் கட்டுவதற்குமான நிதியையும் இந்த வருடத்துக்குள் விடுவிக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என அவர்கள் தெரிவித்தனர் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ற-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் முன் பாய்ந்து யுவதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 8

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலின் முன்னால் பாய்ந்து நேற்றிரவு யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுன்னாகம், சபாபதி வீதியைச் சேர்ந்த லோரன்சன் ரெமின்சனா (வயது - 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

காங்கேசன்துறையிலிருந்து நேற்று இரவு 8 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலின் முன்னால் குறித்த யுவதி பாய்ந்துள்ளார்.

இவ்வாறு குறித்த யுவதி பாய்ந்த ரயிலானது, சுன்னாகம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சிறிது தூரத்தில் சென்றுகொண்டிருந்தமையால் மெதுவாகவே பயணித்துள்ளது. உடனடியாக அது நிறுத்தப்பட்டபோதும், யுவதி விபத்தில் சிக்கிக்கொண்டார்.

இதனால் குறித்த யுவதி படுகாயமடைந்த நிலையில், அந்த ரயிலிலேயே உடனடியாக ஏற்றிச் செல்லப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோதும், அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-வ-101)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,மே 8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆரம்ப மற்றும் அடிப்படைச் சிங்களப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள், 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

மே 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் என யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(தி)



British College of Beauty Studies

இலங்கையின் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக் கலை கல்லூரி. ஒளி அழகன் ஸ்ருடியோவும் பிரிட்டிஸ் கோலிஸ்சும் இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகள்
யாழ் மண்ணில் அழகுக்கலையில் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகம்
புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. பதிவுகளுக்கு முந்துங்கள்

British College. பலாலி வீதி. திருநெல்வேலிச் சந்தி.
076 701 1645

### பதவி வெற்றிடம்

உலகில் பல நாடுகளில் வியாபித்துள்ள DMI நிறுவனத்தில் உங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பு.

ஏன் நீங்கள் எங்களுடன் இணைந்து கொள்ளவேண்டும்.

- ★ 140 நாடுகளுக்கு மேல் உலகம் முழுவதும் வியாபித்துள்ளமை.
- ★ திறமைக்கு மட்டும் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளமை.
- ★ உங்கள் திறமை, விடாமுயற்சி, தியாகம், பயிற்சியுடன் பதவி உயர்வு.
- ★ குறுகிய காலத்தில் கூடிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு (50,000 மேல்)
- ★ உங்களுக்கு என்று ஒரு வீடு, புதிய வாகனமொன்றை பெறும் வாய்ப்பை கூடிய விரைவில் பெறக்கூடியமை.

தாங்கள் O/L, A/L தகைமை இருப்பின் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்.

தொடர்பு: 076 678 1042 077 5566 224

(J 1136)(10.17)

### வேலை வாய்ப்புக்கள்

- ❖ ACCOUNTANT ❖ SUPERVISORS ❖ MANAGER
- ❖ RECEPTIONIST ❖ CASHIER ❖ PHARMACIST
- ❖ EXECUTIVES ❖ PART TIME JOBS

கடந்த வாரம் எம் மூலமாக 10 பேர் வேலை பெற்றுச் சென்றுள்ளனர்
நீங்கள் விரும்பும் வேலை வாய்ப்புக்களைப் பெற
சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்
(பதிவுக்கட்டணம் உண்டு)

WINSTAR JOB BANK

# 106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
(J/1131)(10.17)
T: 021 320 2789
M: 0765450539
Fb:winstarjaffna

### VACANCY

PERSONAL ASSISTANT

TO MANAGING DIRECTOR

* For a UK based Property developing company, carrying out commercial and leisure projects mainly in the North, operating from Jaffna City.
Candidates must be

Computer Literate,
Fluent in English
Should be able to work on their own initiative.

**Salary starts from Rs: 35,000/= commensurate with age and experience**

Forward CV to:
**tilko.tilak@gmail.com**

### நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்

வாடிக்கையாளர்களின் நன்மை கருதியும், அக்ஷய திருதியை திருநாளை முன்னிட்டும் எமது நிறுவனம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரையும் நாளை திங்கட்கிழமை (அக்ஷய திருதியை நாளன்று) காலை 7.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரையும் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இல. 38, 40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7878
நிர்வாகம்

### அறை வாடகைக்கு

கொக்குவில் நந்தாவில் அம்மன் வீதியில் அறை வாடகைக்குண்டு. வேலைக்குச் செல்லும் பெண்கள், பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது.

071 447 1790

### தொழிலாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஜூஸ் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு ஆண், பெண் தொழிலாளர் தேவை.

077 087 9209

### வேலைவாய்ப்பு

யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

077 758 7079
021 222 1155

### வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலிக்கண்மையில் சிறிய குடும்பத்துக்கு ஏற்ப குளியலறை இணைப்பு அற்ற வீடு உடன் வாடகைக்குண்டு
நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 076 981 0316

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

65 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
(ஊசி போட்டது. புத்தகத்துடன் உண்டு)

ம.அருளப்பு
ஏழாலை வடக்கு, ஏழாலை.
021 492 1162

### இலவச கணினி வகுப்புகள்

O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய, பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான

01) Diploma in MS-Office
01) Diploma in Internet Technology

பிரிவு III - ஆரம்பம் 15.05.2016
காலம்: 3 மாதங்கள். பெறுமதிமிக்க சான்றிதழ்
தரம் 10,11, A/L மாணவர்களுக்கான ICT வகுப்புகள்.
இலவச ஆங்கில வகுப்புகள்
பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்

IPS திருநெல்வேலி
தொடர்புகளுக்கு: 076 685 2529

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



10.00 / 1.00 / 7.00 / 4.00
Fri/Sat/Sun 9.30 p.m.

விசாரணை ☎ 021-2227712

### கேள்வி கோரல்
### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

05.05.2016 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி கோரலுக்கு மேலதிகமானது.

கீழ்க் குறிப்பிடப்பட்ட திருத்தங்களுடன் ஏனைய விடயங்கள் நடை முறையில் இருக்கும்.

பந்தி 3இல " C5 " என்னும் சொல் நீக்கப்பட்டு அதற்காக " C6 " பிரதியீடு செய்யப்படுகிறது. பந்தி II இன் கீழ் உள்ள அட்டவணையில் கிரல் 5இல் தேவையான தரம் CIDA: 'C5' என்னும் சொல் நீக்கப்பட்டு அதற்காக " C6 " பிரதியீடு செய்யப்படுகிறது.

நா.வேதநாயகன்,
அரசாங்கஅதிபர்/ மாவட்டச்செயலாளர்,
யாழ் மாவட்டம்.

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வைத்தியசாலை வீதியில், வைத்தியசாலை, பாடசாலைகள் மற்றும் புகையிரத நிலையம் என்பவற்றுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் பழைய பாரம்பரிய முறையில் அமைந்த 6 அறைகள், ஓய்வறை, சாப்பாட்டு அறை, பெரிய சமையலறை, ஒரு மலசலகூடம், ஒரு குளியலறை, விறாந்தை என்பவற்றைக் கொண்ட பெரிய வீடு 4.6 பரப்பில் உள்ளது. தண்ணீர் தாங்கி, வேலையாள்களுக்குத் தனியான மலசலகூடம், குளியலறை என்பன உண்டு.

பெரிய கட்டடங்கள் அமைந்த சனநெருக்கடி கொண்ட மிகவும் பிரபல்யம் வாய்ந்த நகரப்பகுதியில் அமைந்துள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் வியாபார மேம்படுத்தலில் ஈடுபடுவோருக்கு இந்தப் பெரிய அளவான கட்டடம் முழு நன்மைகளைக் கொடுக்கும். வீடு தேவைக்கேற்ற வகையில் சிறிய திருத்தங்கள் செய்ய வேண்டியதுடன் மீள் பெறுமதியிடப்பட்டு விற்பனை செய்வதற்கு தயாராக உள்ளது.

071 376 2021
Email : jaffnahospitalroad@gmail.com

நீர்கொழும்பு
### மொடேன் சிற்றி இன்
(விருந்தினர் விடுதி)

426, பிரதான வீதி, நீர்கொழும்பு.

- ❖ குறுகிய தூரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பஸ் நிறுத்தம்.
- ❖ 15 நிமிட ஓட்டத்தில் விமான நிலையம்.
- ❖ அதிவேக பாதை மூலம் 30 நிமிடங்களில் கொழும்பு நகருக்கு.
- ❖ வசதியான குளிரூட்டப்பட்ட அறைகள் இணைப்பு குளியல் அறை சுடுநீர் வசதியுடன்.
- ❖ மிக நடுத்தரமான கட்டணம்.
- ❖ பஸ்நிறுத்தத்தில் இருந்தும், விமான நிலையத்துக்கும் தேவையான போக்குவரத்து ஒழுங்கு செய்து தரப்படும்.

Family Room for - 4 (Room only) Rs. 4,000/= per day
Double Room (Room only) Rs. 3,000/= per day
Group Conference and Parties- upto 50 persons.

தொடர்புகொள்ள: Mr. Chamith
031 2233967 / 078 4506918 / 031 2231961 / 077 9011900

### பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

செக்ரிட்டி வேலையாள்கள்
S.O Duty
O.I.C Duty (வேலை தெரிந்தவர்களுக்கு முன்னிரிமை)

பின்வரும் வேலையாள்கள் தேவை.

சுத்திகரிப்பாளர்
மேற்பார்வையாளர்
Room boy
Photo Editing வேலை தெரிந்தவர்கள்(பெண்கள்) வரும் போது I.D Copy, குடும்பகாட் கொப்பி, 3படம் ஆகியவற்றுடன் நேரில் வரவும் காலை 9am - 5pm தங்கியிருந்து வேலை செய்பவருக்கு முன்னுரிமை

Parameswary Rest Inn
Kaithady road, Maruthanar madam.
077 891 9367, 076 7060095

### இனி இல்லை மூட்டுவலி


மூட்டுகளில் வலி, இறுக்கம், வீக்கம்

அடிபட்ட காயங்கள், தொற்றுக்கள் என்பவற்றினால் முழங்கால், இடை, முழங்கை, தோள்பட்டை, விரல்கள் ஆகியவற்றில் உட்புறத்தில் ஏற்படும் சிராய்ப்புக்கள், கிழிசல்கள் காரணமாக இவை ஏற்படுகின்றன.

ஒஸ்ரியோ ஆர்த்தரைட்டீஸ், யூரிக் அமிலப்படிவுகள், எஸ்.எல்.ஈ, வாதமூட்டழற்சி, முள்ளந்தண்டு அழற்சி, மென்சவ்வுகளில் ஏற்படும் அழற்சி மூட்டுகளில் வலிக்கான காரணிகளாகும்.

மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினைகளை எமது சிக்கலற்ற ஆயுர்வேத சிகிச்சை மூலம் வலி,வீக்கம் என்பனவற்றை நீக்கி விரைவாக குணப்படுத்தும்

Hotline: 0777555600
0777708310
0777708330




FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.
Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001, 2008 QMS CERTIFIED COMPANY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி இராசநாயகம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் தற்போது குப்பிளானில் வசித்து வந்தவருமான திருமதி கமலாதேவி இராசநாயகம் 30.04.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை - ரோகினியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகநாதர் - இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் எதிர்நாயகம்(கனடா), கமலநாயகம்(ஜேர்மனி), தேவநாயகம்(லண்டன்), வாசுகி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ரேனுகா(கனடா) காயத்திரி(லண்டன்), ரமேஷ்வரன்(கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான பதாம்பிகை, மகாதேவன் மற்றும் மகேந்திரன் (லண்டன்), கனகாம்பிகை(இலங்கை), தவமணி(கனடா), புனிதவதி(ஜேர்மனி), லீலாவதி (இலங்கை), பாபநாதன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சினாதேவி (லண்டன்), அருளானந்தம்(இலங்கை), இரத்தினசிங்கம் (கனடா), உத்தமநாதன்(இலங்கை), ஜெயந்தி (லண்டன்), குணசிங்கம்(இலங்கை), பாலசுப்பிரமணியம்(அப்பன் - கனடா), கெங்காதேவி (இலங்கை), விமலாதேவி(இலங்கை), சத்தியதேவி (ஜேர்மனி)ஆகியோரின் அன்பு மைத்துனியும் லவன், கிசோன், தரணிகா, சஜானா, சதுசன், நவோஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.30 மணியளவில் காளிகோயிலடி குப்பிளான் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காடா கடம்பை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**குப்பிளான் வடக்கு, குப்பிளான்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 321 0947/ 075 088 6256**

---

## ஆறாம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 25 . 11 . 1941



மறைவு 08 . 11 . 2015

### திருமதி இராஜலட்சுமி சிவராஜா

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆறு மாதங்கள் ஆனாலும்
நீர் பூத்த கண்களோடும்
நீங்காத நினைவுகளோடும்
மண்ணில் நாம் வாழும் வரையும் அன்னையே!
பெற்ற பிள்ளைகள் நாம் - நின்
பாசத்தையே நித்தமும் போற்றிப்
பூஜித்திருப்போம் தாயே!
ஆறாத்துயர் கொண்டு இப்பொழுதும்
அழுது புலம்புகிறோம்- ஆனாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழையவீதி, ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

(68750(12.17.18)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

### திருமதி நாகேஸ்வரி இரங்கநாதன்

தோற்றம் 1941 . 08 . 12



மறைவு 2016 . 05 . 04

யாழ்ப்பாணம், ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி இரங்கநாதன் 04.05.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் இரங்கநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தகுமார்(ஜேர்மனி), வசந்தி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினலைலா, சோதிராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவிந், லக்ஷன், மிதுஷன், அருண்யா, லக்சிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற உமாமகேஸ்வரி மற்றும் சந்தானலக்சுமி, சாரதாதேவி காலஞ்சென்றவர்களான ரகுநாதன், ராசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.05.2016) ஞாயிற்றுக்கிழமை சோமராம் தோட்டம் உடுவில் கிழக்கு சுன்னாகம் என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் மு.ப 9.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சோமராம் தோட்டம்,**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

(J 1104)
(14.17.18)


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### Dr. மயிலு குணரட்ணம்

(ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி - யாழ்.போதனா வைத்தியசாலை)



அரியாலை, கண்டி வீதியைப் பிறப்பிடமாகவும், இல.82, புங்கங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. மயிலு குணரட்ணம் 06.05.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாதேவா - கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திராணி யின் அன்புக் கணவரும், சத்தியேந்திரா, புவீந்திரா, யசீந்திரா, சாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்ஜோதியின் அன்புமிகு மாமனும், நேத்தன், டிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், Dr விஸ்வரட்ணம் மற்றும் Dr.செல்வரட்ணம், ஜெயராணி, காலஞ்சென்ற யோகராணி மற்றும் Dr. கணேசரட்ணம், புஸ்பராணி, Dr.செல்வராணி, புனிதராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**82, புங்கங்குளம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 2703**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கை ஆழியானின் படைப்புலகம் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 8

சாகித்தியா ரத்னா தெணியான் தலைமையில் செங்கை ஆழியானின் படைப்புலகம் எனும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45மணிக்கு அல்வாய் கலை அகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'செங்கை ஆழியானும், நானும் என்ற பொருளில் யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் கி.கிருபானந்தாவும், செங்கை ஆழியானின் சிறுகதைகள் என்ற தலைப்பில் ஓய்வு நிலை விரிவுரையாளர் சோ.பத்மநாதனும், செங்கை ஆழியான் என்றொரு படைப் பாளுமை என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், நாவல் படைப்பாக்க முயற்சியில் செங்கை ஆழியானின் இடம் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் உரை நிகழ்த்தவுள்ளனர். (ற-ஐ-ரி)

## விருந்தோம்பல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 8

காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விருந்தோம்பல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

விருந்தோம்பல் கற்கைநெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் ஆகிய கற்கை நெறிகள் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்கான பதிவுகளைநாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை இல. 12 கே.கே. எஸ்.வீதி வீரசிங்கம் மண்டபம் 1 ஆம் மாடியில் அமைந்துள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் மேற் கொள்ளலாம்என்றும்அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் சுய கற்றல் இரசாயன இறுவட்டு வெளியீடு இன்று முற்பகல் 10.45 மணிக்கு கல்லூரியின் பிரதான அரங்கில் நடைபெறவுள்ளது. தேசிய கல்வியல் கல்லூரியின் 15 ஆம் அணி விஞ்ஞானப் பிரிவு ஆங்கில மொழி மூல முகிழ் நிலை ஆசிரியர்கள், இரசாயனவியல் விரிவுரையாளர் திருமதிசுமதிஸ்ரீசுந்தரராஜா ஆகியோரால் பீடாதிபதி சதாசிவம் அமிர் தலிங்கத்தின்வழிகாட்டலில் இந்த இறுவட்டு வெளியிடப்படவுள்ளது.(ற-ஐ-ரி)


### மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் சிவராசா**
**(பொன்சிவாஸ்)**



யாழ் புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் 74/1, விசுவமடு பிரதான வீதி முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவராசா 06.05.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை-ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் மணிவண்ணன் (சுவிஸ்), மலர்விழி (ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பொன்விழி (லண்டன்), கயல்விழி (கனடா),சுடர்விழி (பிரான்ஸ்) ஆகியோரது அன்புத் தந்தையும் நந்தினி (கொழும்பு), வெங்கடறமணா (விரிவுரையாளர்- யாழ் பல் கலைக்கழகம்),சத்தியசீலன் (லண்டன்), பாலகுமாரன் (கனடா),நவநீதராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிசாந்த், தரணிகா, துளசிப்பிரியா, சசிஸ்னுராம், கவிஸ்னு, பவிஸ்னு, அஜித்தா,அரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் நீலாம்பிகை, பத்மராஜா,உமாராணி, செல்வராசா, காலஞ்சென்ற தர்மராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மனோகரன், லீலாவதி, சந்திரமதி, சிவபாலன், சாரதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் விஸ்வமடு 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி +94774324245,
சத்தியசீலன் (லண்டன்) +44751212821,
பாலகுமாரன் (கனடா) 0016478304513,
நவநீதராசா (பிரான்ஸ்) +33667219592

### ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08.11.1938



இறப்பு
08.05.2009

**திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா**
(ஓய்வு நிலை ஆசிரியை)

ஏழாம் ஆண்டு நிறைவு நாளான இன்று
கண்ணீர் சிந்தி பூச்சொரிந்து
வணங்குகின்றோம் அம்மா உங்களை
வேறு என்னதான் செய்யமுடியும் எங்களால்?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(கே.1016) (13.18)
குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
07 . 12 . 1938



இறைவன் அடியில்
09 . 04 . 2016

அமரர்
**திருநாவுக்கரசு ராசரெத்தினம்**
(விஜிதா அரிசி ஆலை உரிமையாளர் - தாவடி)

மண்ணில் பிறந்த மணிவிளக்கே என்னில் இதயம் சுமந்த திருவிளக்கே
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த வாக்கை இதுவென வாழ்ந்து காட்டிய குலவிளக்கே
உயிருக்குயிராக இருந்து எம்மையும் சகோதரர்களையும் பாசத்துடன் காத்த அப்பாவே
இணையில்லா வாழ்வு வாழ்ந்து பாசமழை பொழிந்து பழமரமாய் தாம்
காலூன்றிய வேளை கனவாய் காற்றாய்.... தெய்வம் அழைத்ததென அம்மா எமைப் பிரிந்து
ஆறு திங்கள் ஆகவில்லை அதற்குள் அழைத்தானோ
ஆறவில்லை எங்கள் துயரம் ஆறாத மனத்தோடு நாமிங்கே வாடுகின்றோம் தந்தையே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறையடி பணிகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியினைக் கேட்டு நேரிலும், தொலைபேசி, இணையம் ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், மலர்வளையம் வைத்தும், அனு தாபம் தெரிவித்தோருக்கும் மேலும் பல வழிகளில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (09.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும் வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Dr.சுரேஷ் (பல்வைத்தியர்)
குளப்பிட்டிச்சந்தி,
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு
கொக்குவில்.
(கே/25) (11,17)
குடும்பத்தினர்.

### 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



***ஐயம்பிள்ளை கந்தையா***
(மண்கும்பான் 4ஆம் வட்டாரம் கிழக்கு)

தோற்றம்
1933.05.15

மறைவு
2004.04.21

திதி: துதியை

12 வருட காலங்கள் உருண்டோடிப் போனாலும்
உங்கள் அழியாத நினைவுகள் எம்மை விட்டு நீங்காது ஐயா !
கண்ணில் அழுகை ஓயவில்லை
விழிகள் உம்மை தேடுதே ஐயா
வந்து விடமாட்டீரோ மீண்டும்
பேரப்பிள்ளைகள் தேடுகின்றோம் ஐயா !
எங்கே என்று எங்கே சென்றுவிட்டீர் எம்மை விட்டு
ஒருமுறை திருமுகம் பார்க்க மாட்டோமா
என்று ஏங்கி நிற்கிறோம் ஐயா !
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

தற்காலிக முகவரி
இல.9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மற்றும் பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

### ஆறாம் ஆண்டு திதி

மலர்வு
28
02
1956



உதிர்வு
18
04
2010

**அமரர் திரு. இராமநாதன் புஸ்பயோகேந்திரன்**

திதி : 10.05.2016

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆலவிருட்சமாய் உயர்ந்து நின்றதனை
எப்படி ஐயா மறப்போம் நாம்
ஆறுதல் தரும் நிழலாய் நின்று காத்து அந்தப்
பாசப்பிணைப்பை எப்படி மறப்போம் நாம்.
நித்தம் நித்தம் உங்கள் நினைவில் நனைந்து
ஆறாத்துயரில் அமைதி காணாது துடிக்கின்றோம் நாம்.
நேசம் மறவா நினைவால் ஏங்கி உமது
பாதச் சுவட்டில் பக்குவமாய் பவனிவந்து
வாழும் காலமெல்லாம் வரம்கேட்டு நிற்போம் நாம்.
என்றும் உங்கள் நினைவுடன் வாழும் எம்மை
காலமெல்லாம் வாழ்ந்து மறவா நெஞ்சுடன்
கருத்தொருமித்திருக்க வேண்டுகின்றோம் நாம்.
சித்திரைமாத பூர்வபட்ச சதுர்த்தியில்
ஆண்டவன் அடியில் அடைக்கலம் பெற்றீர்
ஆறாத்துயரில் ஏங்கித்துடிக்கும் அன்பு அம்மா,
அன்புத் துணைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள்.

ஓம் சாந்தி ! சாந்தி !!

தகவல் : இ. சங்கரநாதன் (சர்வா) தொ. பேசி: 0777555391


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரோந்து படகுகள் நைஜீரியாவுக்கு விற்பனை

கடற்படையால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒன்பது கரையோர ரோந்துப் படகுகள் நைஜீரியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. வெலிசறையில் உள்ள படகு கட்டுமானதளத்தில் நடந்த நிகழ்வில், நைஜீரியத் தூதுவர் அகமட்டிடம், கடற்படை அதிகாரிகளால் இந்தப் படகுகள் கையளிக்கப்பட்டன.

ஆறு அரோ ரகப் படகுகளும், வேவ் ரைடர் ரகத்தைச் சேர்ந்த மூன்று கரையோர ரோந்துப் படகுகளுமே, நைஜீரியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், கடற்படை 4.2 மில்லியன் டொலரை வருமானமாகப் பெற்றுள்ளது. கடற் புலிகளுடனான சண்டை அனுபவங்களைக் கொண்டு கடற்படை ஆரோ மற்றும் வேவ் ரைடர் படகுகளை வடிவமைத்திருந்தது. இதுவரை 120 அரோ வகைப் படகுகளை கடற்படை கட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-ஐ-5)

**விற்பனைக்குண்டு**

யாழ்.நகரின் வர்த்தக மையப் பகுதியில் HNB வங்கிக்கு அருகில் மின்சார நிலைய வீதி 175 இலக்க கடை உடன் விற்பனைக்கு உண்டு.

077 475 2535

## பதவி வெற்றிடம்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ்.மாவட்ட கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

* Marketing Executives
* Education Consultant

Qualification

* 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.
* G.C.E. O/L, A/L
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ ஆங்கிலம்)

Benifits :
* Basic Salary
* Traveling Alownce
* Commision Payment
* Telephone Facilities
* Bike Alownce
* Incentive and overseas trip.
* Career Development (Management Position)

Contact - Branch Manager
Mr.G.Anthany
Phone. No : 077 356 6835, 021 567 1130

Address:
Pioneer House,
No 100 2nd Floor
Manipay Road, Jaffna.

www.pioneerhouselearning.com

## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் - 2015

### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு 2015 | 2014 |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து வருமானம் | 5,572,336 | 4,815,193 |
| நிதியியல் கருவிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் | 1,800,326 | 1,591,506 |
| முதலீடுகளைக் கழிவிடுவதன் மூலமான இலாபம் | - | 165,726 |
| **மொத்த வருமானம்** | **7,372,662** | **6,572,425** |
| **செலவினம்** | | |
| வாடகை மற்றும் நிர்வாகச் செலவுகள் | 7,575 | 5,833 |
| வெளியீடுகளுக்கான செலவுகள் | 464 | 524 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பொறிமுறைக் கட்டணங்கள் | 4 | 5 |
| கோரப்படாத உத்தேச வரி வரவு | 333,408 | 215,428 |
| பொருளாதாரப் பணிகள் விதிப்பு | 18,432 | 27,323 |
| பெறுமதி இழப்புச் செலவுகள் | 144,251 | - |
| **மொத்தச் செலவினம்** | **504,134** | **249,113** |
| **வருமான வரிக்கு முந்திய காலப்பகுதிக்குரிய மிகை** | **6,868,528** | **6,323,313** |
| **கழி: வருமான வரிக்கான ஏற்பாடு** | **-** | **242,059** |
| **வருமான வரிக்குப் பிந்திய காலப்பகுதிக்குரிய வருமான மிகை** | **6,868,528** | **6,081,253** |
| **ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் மீள்மதிப்பீடு மூலமான இலாபங்கள்/(நட்டங்கள்)** | **(877,295)** | **1,128,980** |
| **கழி: ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானங்கள் தொடர்பான வரி** | **-** | **-** |
| **வரிக்குப் பிந்திய ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **(877,295)** | **1,128,980** |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | 5,991,233 | 7,210,234 |

### நிதியியல் நிலைமைக் கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| | டிசெம்பர்- 31இல் உள்ளவாறு 2015 | 2014 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| வங்கியிலுள்ள பணம் | - | 347 |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து பெற வேண்டியவை | 1,313,830 | 1,113,613 |
| முதலீடுகளுக்காக செலுத்தப்பட்ட ஒன்று சேர்ந்த வட்டி | 18,900 | 475 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள் | 18,122,923 | 12,561,793 |
| கடன்களும் பெறுதக்கவைகளும் | 6,227,433 | 6,008,942 |
| **மொத்த சொத்துக்கள்** | **25,683,086** | **19,685,170** |
| **பொறுப்புக்கள்** | | |
| சில்லறை கடன்கொடுநர்கள் | 805 | 2,225 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை | 4,973 | 4,564 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **5,778** | **6,789** |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம் | 25,417,929 | 18,549,402 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்குகள் | 259,379 | 1,128,980 |
| **மொத்த உரிமை மூலதனம்** | **25,677,309** | **19,678,382** |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **25,683,086** | **19,685,170** |

மேற்காணப்படும் நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைப்படி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

ஏ ஏ எம் தாசிம்
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

12.04.2016

# பாசிசவாதத்துக்கு செல்லவே பாதுகாப்புக் கோருகின்றனர்

## சாடுகின்றார் விக்கிரமபாகு கருணாரத்ன



கொழும்பு, மே 8

வெறிபிடித்த பாசிசவாதத்தை நோக்கிச் செல்வதற்காகவே இனவாதிகள், மகிந்தராஜபக்சவுக்கு இராணுவப் பாதுகாப்புக் கோருகின்றனர். – இவ்வாறு நவசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகுகருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:- நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தவுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டும். அதனூடாக அவரை நாட்டின் இராணுவத் தலைவராகக் கொண்டுவரவேண்டும். இந்த நிலைப் பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். சிங்கள – பௌத்த சக்தியை இதனூடாக உருவாக்க நடவடிக்கை எடுக்கின்றனர்.

தமிழ் மக்கள் சுயாட்சிக் கருத்தை வலியுறுத்துகின்றனர். இந்தக் கருத்து வலுப்பெறுகின்றது. இதற்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்குவது இனவாதிகளின் நோக்கம். மகிந்தவுக்கு இராணுவ அதிகாரம் பெற்றுக் கொடுப்பது, நாட்டில் தமிழ் மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்துவதற்கு வழங்கும் அதிகாரமாகும். அடக்குமுறைக்கு உள்ளான இனங்களுக்கு உரிமை வழங்க நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிராக பாசிசவாத அதிகாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கை உலகம் முழுவதும் இடம்பெறும் ஒன்றாகும் – என்று தெரி வித்துள்ளார். (ந-ஐ-5)

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து

சாவகச்சேரி, மே 8

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக கைதடி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி ஏற்றும் இடங்கள் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டு அங்கு குறிப்பிடும் நிலையங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகிறது.

தற்போது நிலவும் வெப்பநிலை காரணமாக வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் ஏற்படாமல் தடுப்பதற்காக மேற்கொள் ளப்படும், தடுப்பூசி மருந்து ஏற்றப்படுவதால் அந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றல் நிலையங்களுக்கு வளர்ப்பு நாய்களைகொண்டுசென்றுதடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ந-ஐ-9)

## இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியான விற்பனை கிளையொன்றை

நடத்திக் கொண்டு செல்வதற்கான
யாழ்ப்பாணம் மாநகரசபை உட்பட்ட பிரதேசத்தினுள்
கட்டடம் ஒன்று தேவையாகவுள்ளது

ஆயுர்வேத மருந்து உற்பத்தியின் முன்னோடியான ஒரேயொரு அரச நிறுவனமான இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி விற்பனை கிளை நடத்திக் கொண்டு செல்வதற்கான யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 1000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் தேவையாகவுள்ளது.

அதற்கு விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் கட்டடத்தின் சகல விவரங்களும் குறிப்பிடப்பட்டு 10 நாள்களுக்குள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும். (கடித உறையின் இடது மேல் மூலையில் 'கட்டடம் வழங்கல் - யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம்' எனக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்,
இல.94,பழைய கொட்டாவ வீதி, நாவின்ன -மகரகம


தொலைபேசி இலக்கம் - 011 285 1610
தொலை நகல் - 011 284 4357
மின் அஞ்சல் - ayurvedicdrugs@sltnet.lk
வெப்தளம் -www.ayurvediccorp.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ். மாவட்டத்தில் மதுபான நுகர்வு கடந்த ஆண்டு சடுதியாக அதிகரிப்பு

## குற்றங்கள் அதிகரிப்புக்கு இதுவும் காரணம் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு


சாராயம்




வெளிநாட்டு மதுபானம்



கள்



பியர்



யாழ்ப்பாணம், மே 8
யாழ்ப்பாணத்தில் குறைவடைந்திருந்த மதுபான நுகர்வு, கடந்த ஆண்டு சடுதியாக பல லட்சம் லீற்றர்களால் அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு மதுபான நுகர்வுக்கும் 2015 ஆம் ஆண்டு மதுபான நுகர்வுக்கும் இடையில் 37 லட்சத்து 50 ஆயிரத்து 920 லீற்றர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் மதுப்பாவனை அதிகரித்துள்ளது என்று சமூக ஆர்வலர்கள் பலரும் குற்றம் சுமத்துகின்றனர். அதனாலேயே குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அவர்களது இந்தக் குற்றச் சாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மது வரித் திணைக் களத்தின் புள்ளி விவரங்கள் அமைந்துள்ளன.
பியர் நுகர்வு, 2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு 16 லட் சத்து 54 ஆயிரத்து 340 லீற்றரால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு மதுபான வகைகளின் நுகர்வு, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டு 37 ஆயிரத்து 358 லீற்றரால் கூடியுள்ளது.
சாராயத்தைப் பொறுத்தவரையில், 2014 ஆம் ஆண்டை விட 2015 ஆம் ஆண்டு 11 லட்சத்து 4 ஆயிரத்து 703 லீற்றரால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கள்ளின் நுகர்வு, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டு 9 லட் சத்து 54 ஆயிரத்து 519 லீற்றரால் கூடியுள்ளது.
ஆனால் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டு மதுபான நுகர்வு பல மடங்கு வீழ்ச்சி யடைந்திருந்தது. பியர் 21 லட்சத்து 48 ஆயிரத்து 625 லீற்றராலும், வெளிநாட்டு மது பானங்கள் 32 ஆயிரத்து 253 லீற்றராலும், சாராயம் 10 லட்சத்து 18 ஆயிரத்து 776 லீற்றராலும், கள் 13 லட்சத்து 13 ஆயிரத்து 936 லீற்றராலும் குறைவடைந்திருந்தது.
2013 ஆம் ஆண்டுடன் 2015 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் மொத்த மதுபான நுகர்வு, 82 லட்சத்து 64 ஆயிரத்து 510 லீற்றரால் அதிகரித்துள்ளது.
யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாகச் சமூக விரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. இளம் தலை முறையினரே அவ்வாறான செயற்பாடுகளில் பெரியளவில் ஈடுபடுகின்றனர் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இளைஞர் கள் மத்தியில் போதைப் பொருள் மற்றும் மது பான நுகர்வு அதிகரித்துள்ளமை இதற்கு முக்கிய காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ற-5-101)

## வலி.கிழக்கு வீட்டுத் திட்டத்துக்கு புள்ளிகள் மூலம் 305 பேர் தெரிவு

அச்சுவேலி, மே 8
வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 305 சிமெந்து வீடுகள் ஒவ்வொன்றும் தலா எட்டு லட்சம் ரூபா பெறுமானத்தில் மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**"வீடுகளுக்கான கொடுப்பனவுகள் நான்கு தடவைகளில் வீடு நிர்மாண முடிவுக் கட்டங்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன."**

மீள்குடியேற்ற அமைச்சின் சிமெந்து வீட்டுத்திட்டத்தில் தலா ஏழு லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியில் வளலாய் கிராம அலுவலர் பிரிவு, கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவு, அச்செழு கிராம அலுவலர் பிரிவு ஒவ்வொன்றிலும் தலா 100 வீடுகளும், இந்தியாவில் இருந்து மீள்குடியேறிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஐந்து வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் குடும்ப விவர அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு புள்ளி அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வீடுகளுக்கான கொடுப்பனவுகள் நான்கு தடவைகளில் வீடு நிர்மாண முடிவுக் கட்டங்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. கொடுப்பனவுகள் வங்கிக் கணக்கின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்படும். பயனாளிகளும் குறிப்பிடத்தக்களவு தொகையைத் தமது பங்களிப்பாக வீடு அமைப்பதற்கு பயன்படுத்த வேண்டும்.
வீடுகள் ஒவ்வொன்றும் அமைச்சால் குறித்துரைக்கப்பட்ட விஸ்தீரண மாதிரி அமைப்பில் நிர்மாணிக்கப்பட வேண்டும். வீட்டின் மாதிரி அமைப்பு சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய விதத்திலான வீடுகள் கட்டுவதற்கே அனுமதி வழங்கப்படும் வீட்டு மாதிரி அமைப்பில் மாற்றம் செய்ய அனுமதி இல்லை எனக் கூறப்படுகின்றது. (ற-ஐ-11)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 8
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர் சண்முகன் சங்கீதனின் "தாய்மொழியில் பேச நினைத்ததெல்லாம்'' எனும் நூல் வெளி யீடு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் விலைப்பட்டியல் இருத்தல் அவசியம்

## வர்த்தகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 8

உணவு விடுதிகள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களிலும், மக்கள் பார்க்கக் கூடியதான விதத்தில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுதல் அவசியமாகும்.

அத்துடன் எந்தப் பொருளிலும், அதனை உற்பத்தி செய்யும் நிறுவனம் அச்சிட்டுள்ள லேபிள்களில் வர்த்தகர்கள் மாற்றங்கள் எதனையும் செய்ய முடியாது. - இவ்வாறு யாழ். மாவட்ட வணிகர் கழகம் வர்த்தகர்களுக்குத் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளுக்கும், யாழ். வணிகர் கழகத்தினருக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படும் தண்ணீர் போத்தல்களை வெயிலில் படும்படி வைத்தல் ஆகாது. அரசால் தடைசெய்யப்பட்ட அளவுப் பிரமாணங்களை கொண்ட பொலித்தீன் (சொப்பிங்) பைகளை வர்த்தகர்கள் கொள்வனவு செய்யவோ அல்லது நுகர்வோருக்கு விற்கவோ கூடாது.

நிறுவனங்களால் விநியோகிக்கப்படும்செப்பிங்பைகளின்லேபிள்களில் அளவு பிரமாணத்தைப் பார்த்து அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். நிறுவனங்களால் பொருளுடன், இலவச இணைப்புக்கள் வழங்கப்பட்டிருப்பின் நுகர்வோருக்கு அந்தப் பொருளையும் சேர்த்து வழங்க வேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்காக பயன்படுத்தப்பட்ட பொதிகளில் வேறு பொருள்களையிட்டு விற்பனை செய்ய முடியாது.

காலாவதியான பொருள்கள் எவற்றையும் வர்த்தக நிலையங்களில் வைத்திருக்க முடியாது.

பழங்களை விற்பனை செய்பவர்கள் பழுக்க வைப்பதற்கான இரசாயனப் பதார்த்தத்தை நேரடியாகப் பயன்படுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றைப் புகை வடிவிலோ அல்லது ஆவி வடிவிலோ மட்டுமே பயன்படுத்திப் பழங்களைப் பழுக்க வைத்தல் வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாவனையாளருக்கு மீதியாக சில்லறை வழங்கநேரிடின் அதற்கு பதிலாகப் பொருள்களை வழங்க முடியாது. வங்கிகளில் போதியளவு சில்லறை களைப் பெற்று வைத்திருத்தல் வர்த்தகர்களது கடமையாகும்.

பொதிகளை வெளிநாடுகளுக்கு விநியோகிக்கும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுக்கு, ஏற்படக்கூடிய தாமதங்கள் தொடர்பில் பாவனையாளருக்கு விளக்கமாகக் கூறக் கடமைப்பட்டவர்களாவர். அத்துடன் பழுதாகக் கூடிய பொருள்களை விநியோகிக்கும்போது ஏற்படக்கூடிய தாமதங்கள் பற்றிப் பாவனையாளருக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அந்நியச் செலாவணியில் ஏற்படும் தளம்பல் காரணமாக இறக்குமதியாகும் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில் விற்க முடியாது போகுமானால் அவை பற்றிய விவரப் பட்டியல் வர்த்தகரால் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

சிகையலங்கரிப்பு நிலையங்களை நடத்துபவர்கள் காலாவதியான இரசாயனப் பூச்சுக்களைப் பயன்படுத்தக் கூடாது. மக்களுக்காக விநியோகிக்கப்படும் எந்தவொரு உணவுப் பொருள்களும் பழுதானவையல்ல என்பதை வர்த்தகர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கூட்டுறவுத் துறையினரும் இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். பொருட் காட்சிகளின் போது காட்சிக்கு வைக்கப்படும் அல்லது அங்கு விற்கப்படும் பொருள்களும் அரச தர நிர்ணயச் சட்டங்களுக்கு உட்பட்டவையாகும். உணவு விடுதிகளில் சுகாதாரத்துக்கு கேடான முறையில் வெறுங்கைகளால் உணவுகள் தயாரிப்பதோ, கையாள்வதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பிராந்திய ஒருங்கிணைப்பாளரது இந்த அறிவித்தல்களைக் கவனமாகப் பின்பற்றி அனைத்து வர்த்தகர்களும் செயற்பட வேண்டும்- என்றுள்ளது. (ற-ஐ-ரி)

## மாமனாரைத் தாக்கிய மருமகன் மருமகனைத் தாக்கிய உறவினர்

### நீதிமன்றப் பிணை விவகாரத்தால் அடிதடி

வவுனியா, மே 8

நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை தவணைகளுக்கு ஏன் போகவில்லை என்று மருமகனிடத்தில் கேள்வி கேட்ட மாமனார் தாக்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, மாமனாரைத் தாக்கினார் என்று தெரிவித்து உறவினர்கள் குறிப்பிட்ட அந்த மருமகனைத் தாக்கியதில் மருமகனும், பின்னர் மருமகனுடைய நண்பர்கள் உறவினர்களை தாக்கியதில் ஒருபெண் உட்பட மூவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வவுனியா தரணிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கள்ள மரம் வெட்டினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு சந்தேகத்தின் பேரில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த மருமகன் அண்மையில், வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இதன் போது பிணை எடுப்பதற்கு ஆள்கள் இல்லாது இருந்ததால் மாமனார் பிணை வைத்து மருமகனை மீட்டுள்ளார். பிணையில் வந்த மருமகன் நீதிமன்ற வழக்குகளுக்கு செல்லாது தலை மறைவாகியுள்ளார்.

அதனால் நீதிமன்ற உத்தரவின் பேரில் மருமகனை பிணையில் எடுத்த மாமனாரை வவுனியா பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவருடைய உடல்நிலையைக் கருத்திற்கொண்டு விடுதலை செய்து பொலிஸ் நிலையம் வருமாறு கூறியுள்ளனர். இதனை அடுத்து குறித்த விடயம் மாமியாரால் மருமகனுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மாமனார் பொலிஸாருடன் சேர்ந்து தன்னைக்காட்டிகொடுக்க முயற்சி செய்கின்றார் என்று தெரிவித்த மருமகன் நேற்றுமுன்தினம் இரவு மாமனார் வீட்டுக்குள் சென்று அவரைக் கடுமையாக தாக்கியுள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும், தாக்குதலால் படுகாயமடைந்த மாமனார் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு மாமனார் தாக்கப்பட்டதை தெரிந்து கொண்ட உறவினர்கள் கோபமடைந்து நேற்று முன்தினம் காலை மருமகனைத் தேடிப் பிடித்து தாக்கியதால் மருமகன் படுகாயமடைந்தார்.

அதன்போது மருமகனுடன் நின்றவர்கள் உறவினர்களை ஆயுதங்களால் தாக்கியதில் ஒரு பெண் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர் என்றும் காயமடைந்த அனைவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-21)



மன்னார், முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பி.பி.பொற்கேணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஜும்மா மஸ்ஜிதையை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அத்தோடு அங்கு இடம் பெற்ற முதலாவது ஜும்மாத் தொழுகையிலும் அமைச்சர் கலந்து கொண்டார். (ஐ-56)

## சாவகச்சேரி நகரின் தூய்மைக்கு வரியிறுப்பாளர் ஒத்துழைக்குக

### நகர சபையால் துண்டுப் பிரசுரம்

சாவகச்சேரி, மே 8

குடியிருப்புகள் மற்றும் காணிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வீதிகளில் வீசாமல், வளவுகளில் பாதுகாத்து வைத்திருந்து நகரசபையின் வாகனம் வரும் வேளையில் கையளித்து "நகரைத் தூய்மையாக வைத்திருப்போம்" திட்டத்தைச் செயற்படுத்த சபையின் வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். -இவ்வாறு சாவகச்சேரி நகர சபையால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எமது நகரை தூய்மையாகப் பேண வேண்டிய பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததே. உரிய கழிவுகள் சேருமிடத்து அவற்றைத் தெருக்களிலோ அல்லது பொது [illegible] களைத் தனங்களப்பு வீதியில் உள்ள கழிவுகள் அகற்றும் இடமான திண்மக் கழிவு பராமரிப்பு நிலையத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி தாங்களாகவே பொது மக்கள் - வரியிறுப்பாளர்கள் சேர்ப்பிக்க முடியும்.

அவ்வாறு சேர்ப்பிக்க முடியாதவர்கள் நகரசபையில் அதற்குரிய தொகையைச் செலுத்தினால் சபை வாகனம் மற்றும் தொழிலாளர்கள் மூலம் அவற்றை அகற்றக் கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். அதற்கான ஒழுங்குகள் தற்போது நடைமுறையில் உள்ளன. இவ்வாறான ஒழுங்குகளைப் பேணாது இரவோடிரவாகவும், அதிகாலை வேளையிலும் வீதிகளிலும் பொது இடங்களிலும் குப்பைகளை வீசும் பழக்கத்தைத் தயவு செய்து நிறுத்துமாறு அன்புடன் வேண்டுகிறோம். [illegible] நாமே சீர்படுத்தி அழகாக்கும் கடமையை மறந்து சீரழிக்கும் நிலைக்கு நாம் செல்வதை தொடர்ந்தும் அனுமதிக்கப் போவதில்லை.

எனவே பொதுமக்கள் உரிய வழி முறைகளூடாக ஒழுங்கான திண்மக்கழிவு அகற்றல் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், குப்பைகள் அகற்றல் தொடர்பான மேலதிக தகவல்கள்பெற 0212270806, 0212270284, 0212270041 ஆகிய தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொண்டு தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

வரியிறுப்பாளர்களின் ஒத்துழைப்பினாலேயே நகரைத் தூய் மையாக வைத்திருக்கும் செயற்றிட்டம் வெற்றிபெறும் எனவும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ஐ-9)

## அடிக்கல் நடும் நிகழ்வு

கரணவாய், மே 8

உடுப்பிட்டி இமையாணன் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.25 மணிக்கு இடம்பெறவுள்ளது.

த.பிரபாகரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தின ராக வட மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், க. தர்மலிங்கம், ச.சுகிர்தன் மற்றும் சி.அகிலதாஸ் ஆகியோருடன், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவசிறியும் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-108)

## மருத்துவ முகாமில் 150 பேர் பங்கேற்பு

சாவகச்சேரி, மே 8

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தாவளை - இயற்றாலைப் பகுதியில் சிறுவர்களுக்கான மருத்துவ முகாம் நேற்று முன்தினம் தாவளை - இயற்றாலை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் (அலைன்ஸ்) அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியசாலை மருத்துவ அதிகாரி ஆகியோர் மாணவர்களைப் பரிசோதித்து சிகிச்சை வழங்கினர். (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிமாவட்டம் செல்வோருக்கு மலேரியா தடுப்பு மருந்து அவசியம்

## முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்து

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு, வெளி நாடுகளுக்கு செல்வோர் மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு மலேரியாத் தடுப்பு மருந்துகளைப் பெற்று கொள்ள வேண்டும். அவ்வாறே அங்கிருந்து திரும்பி வருபவர்கள் குருதிப் பரிசோதனைகளையும் செய்து கொள்ள வேண்டும்- இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி விஜிதரன் தெரிவித்துள்ளார்.

மாங்குளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களாக இலங்கை மலேரியாத் தொற்றிலிருந்து விடுதலை பெற்ற நாடாக இருந்து வருகிறது. தொடர்ந்து அவ்வாறு இருப்பதன் மூலம் உலக சுகாதார நிறுவனத்தால் இலங்கை மலேரியா அற்ற நாடாக கணிக்கப்படும்.

> "இலங்கையில் இன்றும் பல இடங்களில் மலேரிய நுளம்பு காணப்படுகின்றது. மலேரியா உள்ள நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் நுளம்பு கடிக்காமல் வலைகளைபாவிப்பதாலும், உடலை மறைத்து நுளம்பு கடியாதவாறு ஆடைகளை அணி வதன் ஊடாகவும் மலேரியா வராது பாதுகாக்கலாம்."

அதற்காக முல்லைத் தீவு மாவட்ட மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறு த்தவரை 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலேரியா நோயாளி என எவரும் இனங்காணப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்ட மலேரியா தடை இயக்கம் என்ற ரீதியில் அதனை தடுப்பதற்காக பல வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றோம்.

முல்லைத்தீவில் மலேரியா இல்லையென்றாலும், எங்களை சார்ந்திருக்கின்ற தென்னாசிய மற்றும் ஆபிரிக்க நாடுநோய்களில் இன்னமும் மலேரியாநோய் காணப்படுகின்றது. ஆகவே முல்லைத் தீவு மாவட்ட மக்கள் வேறு மாவட்டத்துக்கோ அல்லது வெளி நாடுகளுக்குச் சென்று வரும் போது அங்கிருந்து மலேரியாநோய்க்கிருமிகளைக்கொண்டு வரக்கூடிய சாத்தியங்கள் உண்டு. நீங்கள் வெளிநாடுகளுக்குப் போவதற்கு முன்னர் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு மலேரியா தடுப்பு மருந்துகளை பெற்றுச் செல்ல வேண்டும். அவ்வாறே மாவட்டத்துக்குத் திரும்பி வந்தவுடன் மலேரியா தொடர்பான அறிகுறிகள் தென்படுமானால் அதற்குரிய குருதிப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். அப்போது தான் மலேரியாவைத் தடுக்கலாம்.

முல்லைத்தீவைப் பொறுத்தவரை அனைத்து வைத்தியசாலைகளிலும் மலேரியாத் தொற்று உள்ளதா எனப் பரிசோதிப்பதற்கான வசதிகள் உள்ளன. மலேரியா உள்ள நாடு களுக்கு சென்று வரும் போது அதனை வைத்தியருக்கு தெரி யப்படுத்துவதன் ஊடாகவும் தவிர்த்துக் கொள்ளலாம்.

இலங்கையில் இன்றும் பல இடங்களில் மலேரிய நுளம்புகள் காணப்படுகின்றன. மலேரியா உள்ள நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் நுளம்பு கடிக்காமல் வலைகளைப் பாவிப்பதாலும், உடலை மறைத்து நுளம்பு கடியாதவாறு ஆடைகளை அணிவதன் ஊடாகவும் மலேரியா வராது பாதுகாக்கலாம். அப்போது தான் முல்லைத்தீவில் இருந்து முற்றாக மலேரியாவை ஒழிக்கமுடியும். - என்றார். (ற-ஜ-ரி7)

## கலை, இலக்கிய போட்டிகளுக்கான ஆக்கங்கோரல்

யாழ்ப்பாணம், மே 8

கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் நடத்தி வரும் கலை, இலக்கியப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் இந்த வருடமும் கோரப்பட்டுள்ளன என்று யாழ். பிரதேச செயலர் பொ. தயானந்தன் தெரிவித்துள்ளார்.

பாலர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இந்த ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர் பிரிவில் 6 வயது தொடக்கம் 10 வயதுக்கு உட்பட்டவர்களிடம் இருந்து கவிதைப் பாடல் போட்டி மற்றும் கையெழுத்துப் போட்டியும், கனிஷ்ட பிரிவில் 11 வயது தொட க்கம் 15 வயதுக்கு உட்பட்டவர்களிடம் இருந்து கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, கவிதைப் பாடல் போட்டியும், சிரேஷ்ட பிரிவில் 16 வயது தொடக்கம் 18வயதுவரை கட்டுரைப்போட்டி, பாடல் நயத்தல் போட்டி, நாடகப் பிரதியாக்கப் போட்டியும், திறந்த பிரிவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து பாடலாக்கப் போட்டி, நாட்டார் கலைகற்றல் போட்டி, இலக்கிய விவரணம், சிறுகதைப்போட்டி, சிறுவர் கதை ஆக்கம் என்பவற்றுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தாம் விரும்பியபடி தமிழ் அல்லது ஆங்கில மொழியில் ஆக்கங்களை எதிர் வரும் ஜுன் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிரதேச செயலக கலாசாரப் பிரிவில்ஒப்படைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-ஜ-ரி)

## சைக்கிள்களை உரிமை கோரி பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், மே 8

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை உரிமை கோரிப்பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கோரியுள்ளார்.

நெல்லியடிப் பொலிஸாரினால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட 1103096 இலக்கமுடைய கே.டி. வர்க்க ரேசிங் சைக்கிள், இலக்கம் தெளிவற்ற பெண்கள் மற்றும் ஆண்கள் பயன்படுத்தும் லுமாலா சைக்கிள்கள் இரண்டும், 147034 இலக்கமுடைய லுமாலா பெண்கள் சைக்கிளும், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முடிவடைந்த வழக்கிலுள்ள 500 - 3882 கொண்டா வகை மோட்டார் சைக்கிளும், 500 -9912 கொண்டா வகை மோட்டார் சைக்கிளும், என்.பி.ஜே.ஆர். 5082 சுப்பர் கப், என். பி.எம்.எச். 4109, எஞ்சின் இலக் கம் எல்.ஏ.51 எக்ஸ் 1சி1117பி 0002145 என்ற இலக்கங்களை உடைய மோட்டார் சைக்கிளும் மற்றும் என்.பி. ஜே.டி. 2417என்றஇலக்கமுடைய சேதமடைந்த மோட்டார் சைக்கிளும் மன்றில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் எவராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் 14 நாள் களுக்குப் பின்னர்அவை அரசுடைமையாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-ஜ-ரி)

## ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு இவ்வருடம் 2,164 ஆசிரியர்கள் தெரிவு

அச்சுவேலி, மே 8

ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு இந்த வருடம் 2016 - 2017 கல்வியாண்டுக்கு 2 ஆயிரத்து 164 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழ்மொழி மூலம் பயிற்சி பெறுவதற்கு ஆயிரத்து 605 ஆசிரியர்களும், சிங்கள மொழி மூலம் பயிற்சி பெறுவதற்கு 559 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதிவுகள் மே மாதம் 30 ஆம் திகதி அவர்கள் பயிற்சி பெறும் கலாசாலைகளில் நடைபெற விருப்பதோடு, இவர்களுக்கான பயிற்சிகள் ஜுன் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன.

ஆசிரியர் பயிற்சி பெறாமல் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளவர் களுக்கு இரண்டு வருடப் பயிற்சி வழங்குவதற்கு கல்வி அமைச்சு கோரி இருந்த விண்ணப்பத்தின் அடிப் படையில், அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 2016- 2017 கல்வி ஆண்டு பயிற்சிக்கு 2ஆயிரத்து 164 ஆசிரியர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 605 தமிழ் மொழி மூல ஆசிரியர்களில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 440 ஆசிரியர்களும், அட்டாளைச் சேனை ஆசிரிய காலாசாலைக்கு 378 ஆசிரியர்களும், கொட்டக் கலை ஆசிரிய கலாசாலைக்கு 352 ஆசிரியர்களும், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்கு 435 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (து-ஜ-11)

## உரிய நடைமுறைக்கு முரணாக கல்வியியலாளர் நியமனங்கள்

### தடுத்து நிறுத்தக்கோரி ரெலிமெயில்கள் அனுப்பி வைப்பு

அரசியல் பழிவாங்கல் என்ற போர்வையில் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமங்களுக்குப் புறநடையாக கல்வியியலாளர் நியமனங்கள் வழங்குவதற்குக் கண்டனம் தெரிவித்தும், மேற்படி செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் பிரதமர், கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குத் தனித்தனியாக ரெலிமெயில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய, சங்கத்தின் பொதுச் செயலாளர் வணக்கத்துக்குரிய சகத தம்மதேரர் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய ரெலி மெயில்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ரெலிமெயில் போராட்டத்தின் போது யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்களும் ரெலிமெயில்களை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி ரெலிமெயிலில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

"சேவைப் பிரமாணக் குறிப்பை மீறி அரசியல் நோக்குடன் அல்லது அரசியல் பரிந்துரையுடன் கல்வியியலாளர் சேவைக்கு அலுவலர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள், எத்தனங்களுக்கு எமது கண்டனங்களை தெரிவித்து கொள்கின்றோம். மேற்படி பதவி உயர்வுநியமன நடைமுறையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்."எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-ஜ-11)

## தனது நண்பனைக் கத்தியால் குத்திக் கொன்றவருக்குச் சாவுத் தண்டனை

### மட்டக்களப்பு மேல் நீதிமன்று வழங்கியது

அம்பாறை, மே 8

சக தொழிலாளியான தனது நண்பனை நெஞ்சில் கத்தியால் குத்திக் கொன்றவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் சாவுத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சீலாமுனை அமிர்தகழியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி தாக்கல் செய்யப் பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

சம்பவ தினம் மாநகரசபைத் தொழிலாளிகளான இளம் நண்பர்கள் 14 பேர் கடமை முடிந்த பின்னர் ராமச்சந்திரன் என்பவரது காணியில் மண் நிரப்பிவிட்டுப் பின்னர் கொண்டாட்டக்களிப்பில் இருந்துள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து எதிரியான தம்பிராஜா குணேந்திரன் கூரிய கத்தி ஒன்றைக் கையிலேந்தியவாறு சக நண்பர்களை விரட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது. காயங்களுடன் வின்சன் என்பவர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு ஓட்டோவில் கொண்டு செல்லப்பட்ட போதிலும், ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அவர் உயிரிழந்தார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சீலாமுனை அமிர்தகழியைச் சேர்ந்த தம்பிராஜா குணேந்திரன் எனும் மாநகர சபைத் தொழிலாளி, தனது சக நண்பனும், தொழிலாளியுமான துரைராசா வின்சன் என்பவரை நெஞ்சில் கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணை நடைபெற்ற போது இரண்டு பேரின் கண் கண்ட சாட்சிகளும் பதிவாகியிருந்தன.

அதேவேளை தன்னை அதிகமாக மதுவைக் குடிக்க வைத்துச் சுய உணர்வில்லாமல் ஆக்கினர் என்றும், என்ன நடந்தது என்பது தனக்குத் தெரியாது என்றும் எதிரியான தம்பிராஜா குணேந்திரன் விசாரணையில் தெரிவித்ததுடன், அவரது மனைவியும் சாட்சியமளித்தார்.

விசாரணையில் எதிரியின் சாட்சியத்தைப் பொய்ச் சாட்சியமென மேல் நீதிமன்றம் நிராகரித்ததுடன் அவரது மனைவியின் சாட்சியத்தையும் ஏற்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் மேற்படி கொலை வழக்கில், குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் தம்பிராஜா குணேந்திரனுக்குச் சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். (து-ஜ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான இராணுவத் தளபாட வர்த்தகத் தடையைத் தளர்த்தியது அமெ.

கொழும்பு, மே 8
இலங்கை மீதான நீண்டகால இராணுவத் தளபாட வர்த்தகத் தடையை அமெரிக்கா தளர்த்தியுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், பாதுகாப்பு வர்த்தக கட்டுப்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான பாதுகாப்பு ஏற்றுமதிகள் தொடர்பான அனுமதிக் கட்டுப்பாடுகள், மே 4 ஆம் திகதி தொடக்கம் நீக்கப்பட்டுள்ளன. அந்தந்த விடயங்களின் அடிப்படையில், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் மீளாய்வு செய்யப்படும் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், பாதுகாப்பு வர்த்தக கட்டுப்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு, அமெரிக்க நிதிச் சட்டங்களின் கீழ், இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம், பாதுகாப்பு ஏற்றுமதிக்கு அமெரிக்கா உதவி வழங்கத் தடை விதிக்கப்பட்டது. எனினும், கண்ணிவெடி அகற்றல், இடர் மீட்பு, கடல் மற்றும் வான்வழி கண்காணிப்பு தொடர்பான கருவிகளைப் பரிமாற்றம் செய்வதற்கு, மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. (ற-ஐ-5)




# 4 ஆண்டுகளுக்கு இந்த ஆட்சியை அசைக்கமுடியாது

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 8
நாட்டில் இனவாதத்தைப் பரப்பி ஆட்சியைக் கவிழ்க்கச் சிலர் முயற்சிக்கின்றனர். என்னதான் சூழ்ச்சிகளை மேற்கொண்டாலும், அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இந்த ஆட்சியை அசைக்கக்கூட முடியாது. - இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது;-**

**அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் நாடாளுமன்றில் உருவாக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆலோசனைக் குழுவின் தலைவராக என்னை நியமித்துள்ளனர். கடந்த காலத்தில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.**

அதற்கு என்ன ஆனது என்பது எவருக்குமே தெரியாது. இருப்பினும் இந்த முறை அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அதிகாரப் பகிர்வு மற்றும் சுயாதீன ஆணைக்குழு நியமனம் ஆகியவற்றை உறுதிப்படுத்தியுள்ளோம். இது எமக்குக் கிடைத்த வெற்றியாகும். அதிகாரமிக்கத் தலைவர் தனது அதிகாரங்களை குறைக்க இணக்கம் தெரிவித்தமை, அதிகாரங்களை நாடாளுமன்றுடன் சமப்படுத்திப் பலப்படுத்தியமை ஜனநாயகத்தை வெற்றி கொண்டதற்குச் சிறந்த சான்றாகும்.

சர்வதேச மட்டத்திலிருந்த சிக்கல்கள் - அழுத்தங்கள் அனைத்திலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், சர்வதேச நாடுகளை நட்பு நாடுகளாக்கிக் கொள்ளவும் இந்த விடயங்களே சாதகமாக அமைந்தன. ஆட்சி மாற்றம், **கடந்த காலங்களில் எம் மீது இருந்த குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்துகொள்ள வாய்ப்பாக அமைந்தது.**

**தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனநாயகச் செயற்பாடுகள் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும். அதன் மூலம் அரசியல் தீர்வை நிரந்தரமாகப் பெற்றுக்கொள்ளவும் சாத்தியம் உள்ளது.**

இதனை விமர்சிக்கவும் - தடுக்கவும் ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். இனவாதத்தைப் பரப்பி ஆட்சியைக் கவிழ்க்க முயல்கின்றனர். இவர்கள் என்னதான் செய்தாலும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இந்த ஆட்சியை அசைக்க முடியாது. நாம் இப்போது குறைகளை நிவர்த்தி செய்யவே அதிக காலம் எடுக்கின்றோம் - என்றார். (த-ஐ-5)

# மு.காவுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்க்கக் குழு

கொழும்பு, மே 8
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு இடையிலான முரண்பாட்டைத் தணிக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக, மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உயர்பீடமான தாருஸ்ஸலாமில் கடந்த செவ்வாய்க்கிழமை உயர் பீடக் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி மூவர் குழு நியமிக்கப்பட்டது.

கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ், கே.எம்.ஏ.ரஸாக், யூ.எல். எம்.என். முபீன் ஆகியோரே இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் தலைவர் ஹக்கீம் மற்றும் செயலாளர் ஹசன் அலி ஆகியோருக்கு இடையில் நிலவும் இழுபறி, கட்சியின் உயர்பீடத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள மௌலவிமார்கள் விவகாரம் என்பவை குறித்து இந்த மூவர் குழு ஆராயவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### விற்பனைக்கு

48 - XXXX நல்லநிலையிலுள்ள தேக்குமர Body உடன் லொறி விற்பனைக்கு உண்டு.

075 047 0828 /021 222 6884

### விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் பேபி லேத் மெசின் விற்பனைக்குண்டு.

077 900 4593

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் விற்பனைக்குண்டு.

077 758 8834

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கில், இராஜகாரியர் வீதியில் 3¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.(தரகர் தேவை இல்லை. நேரில் தொடர்பு கொள்ளவும்)

076 694 2959

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு சென் மேரிஸ் வீதியில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

K.J. மகேந்திரன் 077 472 2869

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, மட்டுவில், நுணாவில் எல்லை வீதியில் (ராசா கடை முன் வீதி) A9 வீதிக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள 3 பரப்புக் காணியில் குழாய்க்கிணற்றுடன் கட்டிமுடிக்கப்படாத வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

விலை 20 இலட்சம்

072 922 9424

### விற்பனைக்குண்டு

பாவித்த நல்ல நிலையில் உள்ள பனை மரங்களும் ஒடுகளும் விற்பனைக்குண்டு.

075 066 2290

### வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

077 509 5492

### காணி விற்பனைக்கு

077 731 0414

சிறுகைத்தொழில் / பெருங்கைத்தொழில் அல்லது பண்ணைக்கு ஏற்றவகையில் இரண்டு வீடு கிணற்றுடன் கூடிய சுற்றிவர அடைக்கப்பட்ட 8 ஏக்கர் தோட்டக்காணி ஒன்று ஓமந்தை புகையிரத நிலையத்துக்கு எதிராகவுள்ள வீதியில் உடனடி விற்பனைக்கு உண்டு.

### வீடு விற்பனைக்கு

வரணி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில், பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில், பாடசாலை, வைத்தியசாலை, சந்தை என்பற்றுக்கு சமீபமாக, 5 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

077 376 2864

### வீடு விற்பனைக்கு

உரும்பிராய், பலாலி றோட், திருவீதியில் 4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

077 870 2188, 021 225 0970

### விற்பனைக்கு

அலுமினியம் பொடி 16.5 அடித்து ஒரே பாவனையிலுள்ள Comerd model 1112 லங்கா அசோக்லேலண்ட் (Lanka Ashok Leyland) வாகனம் விற்பனைக்குண்டு

077 208 7365

### தேவை

யாழ் நகரில் இயங்கும் சலூன் ஒன்றிற்கு Hair Cutting செய்ய ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 6767 274

### வீடு வாடகைக்குத் தேவை

3 மாதகாலத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. இடம்: கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் யாழ்ப்பாணம்.

077 005 1796 /077 978 7995

### மேசன் வேலையாள்கள் தேவை

கொழும்பில் கட்டட வேலைத்தளத்திற்கு நன்கு வேலை தெரிந்த மேசன் வேலையாள்கள் தேவை. வேலைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

077 817 7864

### மணமகள் தேவை

யாழ்.இந்து Denmark Citizen 37 வயது Doctor மணமகனுக்கு வெளிநாடு செல்ல விருப்பமுடைய நன்கு படித்த பட்டதாரி மணமகள் தேவை.

077 552 8882

### பணிப்பெண் தேவை

கௌரவமான குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. விவரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 028 0271

### பணியாளர் தேவை

பொதி செய்யும் தொழிலகத்துக்கு நிரந்தரப் பணியாளர்கள் தேவை.

1. பாரவூர்தி ஓட்டுநர் (25-50 வயதுக்குட்பட்டவர்கள்)
2. வெல்டிங் வேலை செய்யக் கூடியவர்கள்
3. ஆண் கூலித் தொழிலாளர்கள்.
4. பெண் கூலித்தொழிலாளர்கள். (நாளாந்தம் 300/= வீதம்)

076 900 2015

### சாரதி தேவை

வீட்டு வாகனம்(வான்) ஓடுவதற்கு 45வயதிற்கு மேற்பட்ட சாரதி தேவை.

075 047 0828 /021 222 6884

### மருந்தாளர் தேவை

பிரபல மருந்தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை

077 083 1217

### குருக்கள் தேவை

கொழும்பிலுள்ள பிரபல ஆலயத்திற்கு குருக்கள்மார், மண்டபம் மற்றும் மடப்பள்ளி(ஐயர்)மார் தேவை. தங்கி வேலை செய்ய தனிவீடு கொடுக்கப்படும். சம்பளத்துடன் கொடுப்பனவுகளும் தரப்படும். உடன் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல

077 978 5542/ 072 490 5853

### பணியாளர்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள பிரபல புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள ஆண்/பெண் பணியாளர்கள் தேவை. வடமராட்சி மற்றும் அதன் சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

077 252 1507

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூராட நட்சத்திரத்தில் 1968ஆம் ஆண்டில் பிறந்தவரும் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாகப் பிரித்தானிய நாட்டின் நிரந்தரக் குடியுரிமை பெற்று கட்டடப் பொறியியலாளராகத் தொழில் புரியும் மகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உயர்கல்வி தகைமையும், நற்குணம், நல்லழகும் கொண்ட, 25 வயதுக்கும் 31 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. (குழந்தைகள் அற்ற, விவாகரத்து மற்றும் விதவைகளும் ஏற்கப்படும்.) தரகர்கள் தவிர்க்கவும்.

075 522 1920, 077 510 0703

# ஏனையவை

### யாழ். மாடி வீடு வாடகைக்கு

யாழ். நகர மத்தியில் அனைத்து வசதிகளுடனும் 10 அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு விடப்படும் நீண்டகால அடிப்படையில் அரச மற்றும் பொது நிறுவனங்களிற்கு உகந்தது.

077 298 3727

### வேலைவாய்ப்பு

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள கொம்ரெக் நிறுவனத்துக்கு புளக்கல் அரிய வேலையாள்கள் தேவை. தங்குமிடவசதி உண்டு.

075 024 1371

### தேவை

யாழ்.நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு கணினி முன் அனுபவமுள்ள கணினி மூலம் சிட்டை எழுதுநர் ஆண் தேவை.

077 392 1662

### காணி விற்பனைக்கு

A9 வீதி, நாவற்குழி சந்தியிலிருந்து 3KM தொலைவில் கேரதீவு றோட் கோவிலாக்கண்டியில் கடற்கரையுடன் சேர்ந்த 28 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொழிற்பேட்டை, சுற்றுலாவிடுதி, இறால் வளர்ப்பு அல்லது தென்னந்தோட்டம் அமைப்பதற்கு உகந்தது.

077 674 2302 077 360 5049

### வேலைவாய்ப்பு

Computer காட்சியறைக்கு அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.

i7 Computers
124B, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0777 683676, 021 2224959

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

011 250 4281, 071 299 1256

### வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

077 005 1796 /077 978 7995

### வீடும், காணியும் உடன் விற்பனைக்கு

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியில் பிரதான வீதிக்கு அருகில் பழமரங்கள் நிறைந்ததும் வெட்டுக்கிணறும் குழாய்க்கிணறும், பெரிய தொட்டியும், பழைய வீடும்(பெறுமதியில் அற்றது) நாலுபக்க மதில் கொண்ட காணியும் (4 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை

076 643 6909,077 835 8660

### வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான ஐஸ்கிறீம், ஜாம், சொக்லேட், நூடில்ஸ், பாம்மா, பிஸ்கட், டொபி இவ்வனைத்தும் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலையாளர்கள் தேவை. அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் இலவசம். ஒரு நாளைக்கு 1200/= கிழமை சம்பளம் 10,000/= மாத சம்பளம் 35,000 விரும்பத்தக்கவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். வயது 18 முதல் 55 வரை வயது நாளிலே வேலைக்குச் சேர்க்கப்படும். கீழ்க்காணும் இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

071 147 5324, 077 494 3502

எமது நாட்டின் தலைநகரான கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கிளீனிங், கேட்டரிங், லோன்றி, கிச்சின் போன்ற பகுதிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. முற்கொடுப்பனவு ரூபா 25,000 - 30,000 வரை. மூன்று மாத காலங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45,000 - 75,000 வரை சம்பளம் வழங்கப்படும். வயது 18 - 40.

075 718 4659, 071 921 5892

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். கோப்பாய் தெற்கு. இராச வீதியில் 5 பரப்புக் காணி பாற்பண்ணை வீதிக்கு அருகில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 431 9812

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்க விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மொரட்டுவை

## (திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு)

## தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி -2016

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இரு பாலாரிடமுமிருந்து 2016ம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*தேவையான ஆகக்குறைந்த தகைமைகள்*

01. (அ) ***வயது:***
2016.03.31ம் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வி:***
க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஓர் அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலண்டன் சாதாரண தர பரீட்சையில் ஆங்கிலமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

***விசேட திறமை:***
மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித்தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினை பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

**02 பயிற்சி போதனைகள்:**
சிங்களத்தில் எல்லா பாடநெறிகளும், தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் நடத்தப்படும். (ஆ) இலண்டன் சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழிமூலம் பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**03 நுளைவுத்தேர்வு:**
தேவையான தகைமைகளையுடைய, கீழே 04ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்

***பரீட்சை நிலையம்:***
அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா, ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்து செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்)

***எழுத்துமூல பரீட்சை:***
கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

***04.பரீட்சைக் கட்டணம்:***
விண்ணப்பதாரிகள் ரூபா **500/=** ஐ இலங்கை வங்கிக்கிளையில், கணக்கு இலக்கம்: **681490** மொரட்டுவைக்கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன, மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்கு தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சை கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாக கவனத்திற்கொள்க.

***05. ஆரம்பத் தேர்வு முறை:***
எழுத்துமூல பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது (இவ் வெட்டுப்புள்ளி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

***06. இறுதித் தேர்வு முறை:***
நேர்முகப்பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறைப் பரீட்சையின் 40% உம் நேர்முகப் பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

***07. பயிற்சி நெறி:***

| | | |
|---|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 | ஆண்டுகள். |
| மில்றைற்/வார்ப்பியல் | - 04 | ஆண்டுகள். |
| காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | - 03½ | ஆண்டுகள். |
| வலு மின்சாரவியல் | - 03½ | ஆண்டுகள். |
| ஆயுத இயந்திர வியல் | - 03½ | ஆண்டுகள். |
| மெக்காற்றோனிக் (கைத்தொழில்) | - 03½ | ஆண்டுகள். |
| வாகனமின்சாரவியல் | - 03 | ஆண்டுகள். |
| டீசல் இயந்திரவியல் | - 03 | ஆண்டுகள். |
| உருக்கியிணைத்தல் | - 03 | ஆண்டுகள். |

**பொரளை கிளையில்**

| | |
|---|---|
| வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் | - 03ஆண்டுகள். |
| வாகன மின்சாரவியல் | - 03ஆண்டுகள். |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக்கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவு செய்யப்படும்

***08. பிணை முறி கைச்சாத்திடல்:***
04, 03½, 03 வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் இ.ஜே.தொ.ப.நிறுவகத்துடனும் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்யவென உடன் படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

அத்துடன் பயிற்சியின் பின்னர் கேட்டுக்கொள்ளப்பட்டால் இலங்கை போக்கு வரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

09. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, அதனுடன்
(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி சான்றிதழ்
(இ) இலக்கம் 1இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் **முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2016"** எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளல்**

➢ **www.cgtti.lk** என்னும் இணையத் தளத்திலிருந்து.
➢ நிறுவகத்திற்கு சமுகமளிப்பதன் மூலம்.
➢ பெயர் விலாசமிடப்பட்ட முத்திரையுடனான தபாலுறையினை நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம். 2016.05.06 அரச வர்த்தமானியில் மாதிரி விண்ணப்பப்படிவம் காட்டப்பட்டுள்ளது.

***10. விண்ணப்ப முடிவு திகதி:***
விண்ணப்பங்கள் 2016.06.20ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும் அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**11. பரீட்சை அனுமதிப் பத்திரம்.**
தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2016.08.10ம் திகதியளவில் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப் பெறாதோர் இத்தினத்திலிருந்து 14 நாள்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

**12. பொரளை கிளைக்கு பயிலுனர்களை இணைத்தல்.**
மொரட்டுவை கிளைக்கு பயிலுனர்களை இணைத்துக்கொள்ளப்பட்டு 03 மாதங்களில் மேற்கூறப்பட்ட பரீட்சை விதிகளுக்கேற்ப நடைபெறும்.

**முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,**
**இல.582,காலி வீதி,**
**கல்கிசை.**
**தொலை பேசி - 011-2605625**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந் திருவிழா

சாவகச்சேரி,மே 8
சாவகச்சேரி சப்பச்சி மாவடிப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஜ-9)

## ஆராதனையும் இசைப்பகிர்வும்

ஜபாக்கண்ணுதேசிகரின்நூற்றாண்டு தின ஆராதனையும், இசைப்பகிர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இருபாலை, டச்சு வீதியில் அமைந்துள்ள தேசிகர் இல்லத்தில் லயன் கே.காண்டீபன் தலைமையில்நடைபெறவுள்ளது.

(ந-ஜ-ரி)

## வீடு விற்பனைக்குண்டு

கச்சேரி நல்லூர் றோட்டுக்கு அருகில் 2½ பரப்புக் காணியுடன் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
இடை தரகர்கள் தேவை இல்லை.

077 662 1971, 00 4747 286 853

## காணிகள் விற்பனைக்குண்டு

வடலியடைப்பு, மதவடியில் பிள்ளையார் கோயிலுக்குப் போகும் வழியில் கிணற்றுப் பங்குடன் கூடிய 3½ பரப்புக் காணியும், உடுவில் டச் றோட் கற்பொக்கனையில் குளக்கட்டு தோட்டக் காணி 10 பரப்பும் விற்பனைக்குண்டு.

077 383 4943, 077 318 3972, 077 570 0977

## தேவை

புளியங்குளம், வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனத்திற்கு கள உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதிபெற்ற ஆர்வமுள்ளவர்கள் hr.diceylon@gmail.com அல்லது கீழுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1. கள உத்தியோகத்தர்கள் (field officers):
   விவசாயத்தில் ஆர்வமுள்ள விவசாயம் அல்லது விஞ்ஞானத்தில் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு பெற்ற துடிப்புமிக்க இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் - தகுதிக்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும்

வேலையிடம் : சன்னாசிப் பரந்தன் - புளியங்குளம், வவுனியா

Dai Ichi Ceylon Pvt Ltd
Sannasiparanthan, Puliyangkulam, Vavuniya

டய் இச்சி சிலோன் த/ வ
சன்னாசிப் பரந்தன், புளியங்குளம், வவுனியா

Tel: 024 720 1150 Email: hr.diceylon@gmail.com

## இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல், இசை நாடக அரங்கு - 2016

**08.05.2016 ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை**

நேரம்:- பிற்பகல் - 4.30 மணி

தலைவர்
திரு.கு.பாலஷண்முகன்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

பிரதம விருந்தினர்
திரு.A நடராசன்
(துணைத்தூதர் இந்திய துணைத்தூதரகம்)

- பி.எஸ்.பிச்சையப்பா ரவீந்திரன் குழுவினர் வழங்கும் மங்கல இசை
- மங்கல விளக்கேற்றல்
- திருமுறை :- செல்வி ப.அனோஜா
- ஆசியுரை :- சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள் (பிரதமகுரு - நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயில்)
- வாழ்த்துரை :- திரு.சு.கணபதிப்பிள்ளை (சங்கீத பூசணம். கலாவித்தகர் - ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் - இசைத்துறை, உபதலைவர் - வட இலங்கை சங்கீத சபை)
- தலைமையுரை :- தலைவர்
- சைவவித்தியா விருத்திச் சங்க சைவ சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் குழு நடனம்
  - நட்டுவாங்கம் :- திருமதி யாழினி ரதீஸ்வரன்,
  - பாட்டு :- செல்வி ரா.அறிவழகி, செல்வி சி.கோகிலமதி
  - வயலின் :- திருமதி இந்துமதி தயாபரன்,
  - மிருதங்கம் :- திரு.கே.சிவகுமார்.

பரத கலாகேந்திரம்

- திருமதி வசந்தி குஞ்சிதபாதம் அவர்களின் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி

சாரங்கம் இசைமன்றம் வழங்கும் மதுரகானம்
  - பாட்டு :- திரு.ரஜீந்திரன் சுரசாகித்தியன்
  - வயலின் :- திரு.அ.ஜெயராமன்
  - மிருதங்கம் :- திரு. நல்லை ஜீ.கண்ணதாசன்
- விரலிசை - கீதவாஹினி இசைக் கல்லூரியைச் சேர்ந்த
  - செல்வி பிறிசில்லா ஜோசி
  - செல்வி மதிவதனி குசேலராஜா
  - மிருதங்கம் - திரு. நல்லை ஜீ. கண்ணதாசன்
- ஹிசை மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும் நாட்டிய அர்ப்பணம்
  - நட்டுவாங்கம் :- திருமதி பாலினி கண்ணதாஸ்
  - பாட்டு :- திரு.தவநாதன் றொபேட்
  - வயலின் :- திரு.அ.ஜெயராமன்
  - மிருதங்கம் :- திரு.நல்லை ஜீ.கண்ணதாசன்
- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
- திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'குரு சபதம்' (தென்மோடி நாட்டுக்கூத்து)
- நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் 'வள்ளி திருமணம்' (இசை நாடகம்)
- நன்றி உரை

அனுசரணை: நியூ நதியா நகைமாடம்

# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
# பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2015/2016

நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்/நடனம்/ நாடகமும் அரங்கியலும்/கட்புல,தொழிநுட்பக் கலைகள்) கற்கைநெறிக்குமாணவர்களைத் தெரிவுசெய்வதற்கானசெய்முறைத் திறன்காண் பரீட்சை

விபுலானந்தஅழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்கை நெறிகளை தெரிவு செய்த பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதிவு செய்வதற்கான தகைமைகள்

ஓகஸ்ட், 2015இல் நடைபெற்ற க.பொ.த உயர்தரபரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2015/2016 பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் கைநூலில் 1.2 பிரிவைப் பார்க்கவும், பக்கம் 9) அத்தோடுதாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

### பரீட்சை மொழி

செய்முறைத்திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும். (2015/2016 பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் கைநூலில் 2.2.1 பிரிவைப் பார்க்கவும், பக்கம் 34)

### விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழெகொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொருவிண்ணப்பதாரியும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா. 300/-செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்க வேண்டும். இக்கொடுப்பனவை "சிரேஸ்ட உதவி நிதியாளர், சுவாமிவிபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயருக்கு வங்கிக் கணக்கி லக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி, மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த),க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பத்தேவையில்லை.

பரீட்சார்த்திகள் சுய விலாசம் இடப்பட்டரூபா 30/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடிதஉறை (23x10செ.மீ) யினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்கடித உறை அனுமதி அட்டை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட இருப்பதனால் சரியான அஞ்சல் முகவரி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்திலும் கல்விச் சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரேநபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதி மொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழகஅனுமதியில் மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த),க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்ததிகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில், "சிரேஸ்ட உதவிப் பதிவாளர்,சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு" என்ற முகவரிக்கு 20.05.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் செய்முறைத்திறன் காண் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
செய்முறைத் திறன்காண் பரீட்சை தொடர்பான விபரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.esn.ac.lk) பார்வையிடவும், மாதிரிவிண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்யவும் முடியும். இது தொடர்பில் மேலதிகவிபரங்களைப் பெற்றுக்கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
சுவாமிவிபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
கல்லடி,மட்டக்களப்பு

**SWAMY VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES,
EASTERN UNIVERSITY, SRILANKA.
APPLICATION FOR UNIVERSITY ADMISSIONS-2015/2016
Admission for BFA (Carnatic Music/Dance/Drama & Theatre/Visual & Technological Arts) Degree Programmes**

01. Name of the Applicant: (With Initials)
    Name Denoted by Initials:
    National Identity Card Number:
02. Permanent Address:
    Telephone Number:
    Fax No: (if available)
    E-Mail Address (if available)
03. Result of the G.C.E (Advanced Level) Examination:
    Index Number:
    Z Score:
    General Aptitude Test Marks:

| No | Subjects | Grades | Medium |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

04. Name and Address of Parent/Guardian:
05. Course of Study Applied for University Admission – 2015/2016

| | |
|---|---|
| Music | |
| Dance | |
| Drama & Theatre | |
| Visual & Technological Arts | |

06. Documents to be attached (Please tick the appropriate column)
    1. Paying-in Voucher
    2. Certified Copy of G.C.E (A/L) Certificate/s
    3. Certified Copy of G.C.E (O/L) Certificate/s
    4. Certificate in Proof of Eligibility for University Admission Including ZScore/District
    5. Affidavit in support of any change in names appearing in different Documents/Certificates

I certify that the above particulars furnished by me are true and accurate

Date ............................ Signature of Applicant

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி**
**(2 Weeks Result)**

ஆண், பெண், இருபாலருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

Herbal Whitening Cream Cream விலை 2500/- , 5500/-

முகப்பரு, கண் கருவளையம், முகச்சுருக்கம், உதடு கருப்பு, முதுகு கழுத்து கருப்பு, கை கருப்பு மற்றும் முகம் தாடைகளில் உள்ள தேவையற்ற ரோமங்களை அகற்றும் கிறீம் முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு.

எங்களிடம்
Day, Night, Body Cream, Face Pack, Body Pack உண்டு.

இங்கு Facial செய்யப்படும். 1 Settingயில் அற்புதமான வித்தியாசம்.

**Result இல்லையேல் Money Back**

மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை, டொனிக், பாம்மா, தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.

T.P : 077 210 6155
221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.



## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு, மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல்,திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by :
jeewaka Herbal Products (pvt) Ltd
yakkala

அனைத்து பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
தொ.பே. 021 222 2567



## வீடுவளவு விற்பனைக்குண்டு

*நாவற்குழி கேரதீவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் றோட்டிலிருந்து 3ஆவது காணி 4 பரப்பும் 4.40 குளி காணிக்குள் 4 அறைகள் மற்றும் அடிப்படை வசதி, வான் பயிர்களுடன் கூடிய வீடுவளவும்,

*இராசவீதி 6 ஆம் கட்டை நீர்வேலியிலிருந்து மேற்குப் பக்கமாக அச்செழுவுக்குப் போகும் வீதியில் குழாய்க்கிணறுடன் 21½ பரப்பு தோட்டக்காணியும்,

*இராசவீதி, கோப்பாயில் இராச வீதி ஓரமாக 5 பரப்பு 4.7 குளி நீர்ப்பாசனக் கிணற்று பங்குடன் தோட்டக்காணியும் விற்பனைக்கு உண்டு.

**076 989 5201**



**யாழ்/மாவிட்டபுரம் வீணியவரை**
**ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான**
**மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா (09.05.2016)**

நிகழும் துர்முகி வருடம் சித்திரை மாதம் 26ஆம் நாள் (09.05.2016) திங்கட்கிழமை அன்று மண்டலாபிஷேகப்பூர்த்தி விழா நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

09.05.16 காலை 7.00 மணிக்கு பூஜையைத் தொடர்ந்து விசேட திரவிய ஹோமமும், சகஸ்ர சங்காபிஷேகமும் இடம்பெற்ற பின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 4.00 மணிபூஜையைத் தொடர்ந்து ஸ்ரீசக்கரபூஜை நடைபெற்று 5.00 மணிக்கு " அன்னையின் அருள் அமிர்தம் " எனும் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடப்படும்.

வெளியீட்டுரை: இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

முதற் பிரதி பெறுபவர்: மாண்புமிகு திரு.ஏ.நடராஜன்
யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர்

மாலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து அம்பாள் திருவூஞ்சலும், பூந்தண்டிகையில் வெளிவீதி உலாவும் நடைபெறும்.

10.05.2016 மாலை 5.00 மணிக்கு வைரவர் மடை இடம் பெறும் அடியார்கள் அனைவரும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு அம்பிகையின் திருவருளைப் பெறுவீர்களாக.

ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

தேவஸ்தான ஆதீனகர்த்தா
சிவஸ்ரீம.ஸ்ரீ.துரை.
உதயராகவக்குருக்கள்

**021 224 3399/ 071 810 4588**



# Sylo Ice Cream
# ஷைலோ ஐஸ் கிறீம்



அதி நவீன இயந்திரங்கள் மூலம் சுகாதாரமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு (Hygienic) முறையில் பொதி செய்யப்பட்ட ஐஸ் கிறீம், ஐஸ்சொக், ஐஸ் பழம், தண்டர்கோண் என்பன மொத்தமாக விற்பனை செய்கின்றோம். வியாபார நிறுவனங்கள், நடமாடும் ஐஸ்கிறீம் வாகன வியாபாரிகள் (ஐஸ்கிறீம் வான்) மற்றும் சிறிய பெரிய கடை உரிமையாளர்களும் தொடர்புகொள்ளவும். 25 வீதத்தில் இருந்து 35 வீதம் வரையிலான லாபம் பெறக்கூடிய விலையில் கிடைக்கும்

**ஷைலோ ஐஸ் கிறீம்**
**(Sylo Food & Bavereges pvt ltd)**
76 அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 2003/Hot Line 077 771 0785



# சேவை நலன் பாராட்டு




கடந்த 37 வருடங்களாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையில் அளப்பெரும் சேவையாற்றி 08.05.2016இல் தனது 60 ஆவது அகவையை பூர்த்தி செய்து ஓய்வு பெறும்

**திரு. மார்க்கண்டு ஆனந்தகுமாரசாமி**
(முகாமைத்துவ உதவியாளர்)
அவர்களது ஓய்வுகாலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**உதவிப்பணிப்பாளர் மற்றும் சக உத்தியோகத்தர்கள்**
**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை, யாழ்ப்பாணம்.**

(J/1020)(10.17)



## மணமகள் தேவை

பிறப்பு- 1986 இந்து கௌரவ குடும்பம்
நட்சத்திரம் - பூரம். கிரகபாவம் - 24-
உயரம் - 5'5"
தகைமை - B.Sc.Eng (Mech/Elec) மலேசியா
விருப்பு நட்சத்திரம்:- திருவாதிரை, உத்தரம், அத்தம், சித்திரை, உத்தராடம், பூராடம்.

**தொடர்பு: 075 208 5695**

## மணமகன் தேவை

பிறப்பு- 1990 இந்து கௌரவ குடும்பம்
நட்சத்திரம் - அவிட்டம்
கிரகபாவம் - 38.5, உயரம் - 4' 11"
தகைமை - B.Sc.Genetic, Bio,Chem. Bio Med. M.Sc.Project Management
தொழில் - ஆய்வுகூடம் கொழும்பு.
விருப்புநட்சத்திரம்:- பூசம், ஆயிலியம், திருவோணம், அத்தம், சுவாதி, விசாகம், கேட்டை

**தொடர்பு: 075 208 5695**



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரில் இருந்து பருத்தித்துறை, யாழ். பிரதான வீதியில் முதலாம் கட்டையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 22 இலட்சம். தரகர் தேவையில்லை.

**011 236 5192**



## வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

5 அறைகள், ஒரு வரவேற்பறை, சமையலறை, கிணறு, 2 பரப்புக்காணி ஒன்று வைரவப் புளியங்குளத்தில் 6ஆவது லேனில்' விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**077 109 4085**



## விற்பனைக்கு

வைரப் பனைகள் விற்பனைக்குண்டு.

**077 912 8944**



**PRAMAC**


ஐரோப்பாவின் உயர்தர
# உறுதுணை மின்னோட்ட இயந்திரம்
இத்தாலிய தொழில்நுட்பத்துடனான Pramac மின்னோட்ட இயந்திரம்

**S6500 - 5.9kVA**



- மின் அளவு 230V (1 Phase)
- அதிகபட்ச திறன் 5300W/ 5.9kVA
- இயங்கும் நேரம் 16.44h
- எரிபொருள் கொள்ளளவு 24L
- எரிபொருள் டீசல்
- ஆரம்ப முறை Recoil + Electric
- பரிமாணம் 840x641x696

**WX 7000 - 7.2kVA**



- மின் அளவு 230V (1 Phase)
- அதிகபட்ச திறன் 6500W/ 7.2kVA
- இயங்கும் நேரம் 11.3h
- எரிபொருள் கொள்ளளவு 26L
- எரிபொருள் பெட்ரோல்
- ஆரம்ப முறை Recoil + Electric
- பரிமாணம் 800x698x620
- நியமமான சக்கர தொகுப்பு

24 x 7 சேவை
18 மாத மெட்ரோபொலிடன் உத்தரவாதம்*
நாடளாவிய ரீதியில் வாடிக்கையாளர் சேவை
ஆற்றல்மிக்க எரிபொருள்

3000க்கும் அதிகமான பாவனையாளர்கள்

**metropolitan**
Metropolitan Engineering (Pvt) Ltd.
85 Braybrooke Place, Colombo 2, Sri Lanka.
Email: powersystems@metropolitan.lk
Web: www.metropolitan.lk
தொடர்புக்கு:
**0114 700200 / 071 8643457**

கிளைகள்

| | |
|---|---|
| கண்டி | - 077 7555180 |
| இரத்தினபுரி | - 077 2663588 |
| அனுராதபுரம் | - 077 2662113 |
| யாழ்ப்பாணம் | - 077 7754811 |
| [illegible] | - 077 7767382 |
| மாத்தறை | - 077 2663588 |
| குருணாகல் | - 077 2663578 |
| மட்டக்களப்பு | - 077 2663622 |
| பதுளை | - 071 2748679 |

எம் சென்டர்

| | |
|---|---|
| கொள்ளுப்பிட்டி | - 076 6209075 |
| வத்தளை | - 076 6209171 |
| நுகேகொடை | - 076 6209594 |
| பத்தரமுல்லை | - 076 6209429 |
| மொரட்டுவை | - 076 6209572 |
| நீர்கொழும்பு | - 076 6209734 |
| கண்டி | - 076 6209021 |
| காலி | - 076 6209431 |
| களுத்துறை | - 076 6677261 |
| குருணாகல் | - 076 6209148 |
| மாத்தறை | - 076 6648568 |
| இரத்தினபுரி | - 076 6238570 |
| அனுராதபுரம் | - 076 6649169 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற மோதலில் அறுந்து வீழ்ந்த சட்டைப் பொத்தான்கள் யாருடையவை?

## துஷார எம்.பி. கேள்வி

கொழும்பு, மே 8
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதலின் போது சட்டைப் பொத்தான்கள் அறுந்து வீழ்ந்துள்ளன. இவை யாருடையவை என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். இல்லாவிடில் எதிர்காலத்தில் பொத்தான்களுக்குப் பதிலாக பல்லுகளும், கைகளும் உடைந்துவிழக்கூடும். – இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

என்னிடம் மேற்சட்டைப் பொத்தான் உள்ளது. அது இந்தச் சபையிலிருந்து தான் எடுக்கப்பட்டது. இதன் உரிமையாளர் யார்?

நாம் இளைஞர்களாக இருந்த காலத்தில் மேற்சட்டையின் பொத்தான்களைக் கழற்றிவிட்டுக் கிராமங்களில் சுற்றித்திரிந்தோம். அதன் பின்னரான காலத்தில், நாம் மக் கள் பிரதிநிதிகளாகத்தெரிவுசெய்யப்பட்டோம். தற்போது அவ்வாறு செயற்பட முடியாது. மக் கள் தமது பிரதிநிதிகளாக எம்மை இந்தச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளோம். அனைத்துப் பொத்தான்களையும் போட்டு உயரிய சபைக்கு வருகை தருகின்றோம். ஒழுக்கத்துடன் இருக்கின்றோம். அவ்வாறிருக்கையில் சபையில் உறுப்பினர்களுக்கு இடையிலான மோதலின்போது கழன்று விழுந்த பொத்தான் ஒன்று என்னிடம் உள்ளது. இது யாருடையது என்று கண்டறியப்படவேண்டும். பொத்தான் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இது ஒரு பல்லாக மாறலாம். அல்லது கையாக மாறும் நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம் –என்றார்.

இதன் போது மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி கஜதீர ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். பொத்தானைச் சபையில் சமர்ப்பிக்குமாறு அவர் கோரினார். இதன்போது துஷார சபையில் பொத்தானைச் சமர்ப்பித்தார். (த-ஐ-5)



**உங்களின் ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணம்**
**உங்களுக்கான பிரம்மாண்ட போனஸாக மீண்டும்**

காப்புறுதித் துறையில் இது வரை எவரும் வழங்காத பிரம்மாண்ட ஆயுள் காப்புறுதி போனஸ். காப்புறுதி அரசனிடமிருந்து ரூ.5.4 பில்லியன் பாரிய போனஸ் ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரம்மாண்ட போனஸினை ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு வழங்க இயன்றது இவற்றால் தான்,

- காப்புறுதித் துறையின் ஈடில்லா ரூ.77.8 பில்லியன் ஆயுள் நிதி
- ஆயுள் நிதி மூலம் பெறப்படும் இலாபப்பங்கின் 90% காப்புறுதிதாரர்களுக்கு பகிரப்படும்
- ரூ.167.8 பில்லியன் இணையற்ற சொத்துடன், 54 வருடங்கள் நம்பிக்கையால் நிலைத்த ஒரே அரச காப்புறுதியாளன்

நீங்களும் இன்றே ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் ஆயுள் காப்புறுதியினைப் பெற்று, வருடாந்தம் வழங்கும் பிரம்மாண்ட போனஸினைப் பெற்றிடுங்கள்

மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி முகவர் மற்றும் வாடிக்கையாளர் சேவையை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது அருகிலுள்ள ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.

SMS மூலம் மேலதிக தகவல்களை பெற்றிட REG (இடைவெளி) பெயர் (இடைவெளி) அ.அ.இல 7357க்கு SMS செய்யுங்கள்.

Sri Lanka Insurance
LIFE
357357
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று
www.srilankainsurance.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பசிலுடன் ராணுவ ஜெனரல்கள் இரகசியமாக சந்தித்துப் பேச்சு

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, மே 8

இராணுவ சேவையில் உள்ள நான்கு மேஜர் ஜெனரல்களும், ஓய்வுபெற்ற இராணுவத் தளபதியும், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவைச் சந்தித்துள்ளனர். இந்தத் தகவலை சிங்கள ஊடகமான ராவய வெளியிட்டுள்ளது.

அரசியல்வாதிகள், பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய அரச நிறுவன உயரதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்னர், இராணுவத் தளபதியின் முன் அனுமதியை இராணுவத்தினர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கா புறப்பட முன்னர், அவருடன் நடந்த சந்திப்பின் போது, வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு அமையவே பசில் ராஜபக்சவுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

பசில் ராஜபக்சவைச் சந்தித்த நான்கு மேஜர் ஜெனரல்களும் கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள். கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இவருக்குச் சேவை நீடிப்பு வழங்குவது தொடர்பாக இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

பசில் ராஜபக்சவைச் சந்தித்த மேஜர் ஜெனரல்களில் இருவர், இராணுவத் தளபதியாக நியமிக்கப்படாவிடின், 55


> பசில் ராஜபக்சவைச் சந்தித்த நான்கு மேஜர் ஜெனரல்களும் கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள். கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

வயதை எட்டுவதால், எதிர்வரும் செப்ரெம்பர் 25 மற்றும் செப்ரெம்பர் 30 ஆம் திகதிகளில் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ளனர். கடந்த ஆண்டு நீர்கொழும்பில் நடந்த திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவை, கோத்தபாய ராஜபக்சவின் ஏற்பாட்டில், ஒன்பது மேஜர் ஜெனரல்கள் சந்தித்துப் பேசியிருந்தனர். போர்க் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு வசதியாக தமக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்று இவர்கள் கோரியிருந்தனர்.

இதனை அடுத்தே, இராணுவ அதிகாரிகள், முன் அனுமதி பெற்றே அரசியல்வாதிகள், உயர்மட்டத் தலைவர்கள், அதிகாரிகளைச் சந்திக்க முடியும் என்று இராணுவத் தளபதி சுற்றறிக்கை அனுப்பியிருந்தார். (ரு-ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாளாந்தம் உயர்ந்து செல்லும் பொல்லாப் போக்குகள்...!

குடாநாட்டு மக்களின் வாழ்வியல், திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றதா? இங்கு, அண்மைக்காலமாகக் குற்றச் செயல்கள் கட்டுக்கு அடங்காமல் அதிகரித்து வருகின்றன. அதன் உள்ளார்ந்த நோக்கம் என்னவென்பது குறித்து சந்தேகம் ஏற்படுகின்றது.

இந்த அவல நிலை உடனடியாக நீக்கப்பட வேண்டும். குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு, ஒட்டு மொத்த, சமூகத்தின் விழிப்புணர்வு மிகவும் அவசியம்.

தமக்கு அக்கம் பக்கத்தில் நடைபெறும் குற்றச் செயல்களை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிராது,--

அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு சமூகத்துக்கு உள்ளது; சகல தரப்புகளுக்கும் உண்டு.

மேற்கண்டவாறாகக் கருத்து வெளியிட்டு உள்ளார், யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஆண்டகை.

குடாநாட்டின் பல பகுதிகளிலும், கொலை, களவு, வாள்வெட்டு, குழுச்சண்டை, போதைப் பொருள் பாவனை என்பவை நாளாந்தம், மிக மோசமாக அதிகரித்துச் செல்லும் போக்குகள், மிக வேகவேகமாக உயர்ந்து வருகின்றன.

வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்கள், வேக வேகமாக அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது-- என்றும் ஆயர் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், மிக விரைந்து செயற்பட வேண்டிய, தட்டிக் கழிக்க முடியாத கடமை உள்ளதை மக்கள் நலன்விரும்பும் சகலரும் மனதில் நிறுத்த வேண்டும்--

அத்தோடு, தமக்கு அக்கம் பக்கத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறும்வேளை, வெறுமனே அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அது குறித்துத் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு, சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் உண்டு--

அது தவிர்க்கப்படக்கூடாத பெரும் பொறுப்பு. போர் இடம்பெற்ற வேளைகளில் மக் கள் மத்தியில் காணப்பட்ட அச்சம் மற்றும் பீதி நிலை இப்போது மீண்டும் உயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது--

எங்கள் சமுதாயத்தின் இத்தகு அவல நிலை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சமூக அக்கறை கொண்டவர்களும், புத்திஜீவிகளும், சமூகப் பெரியோர்களும் அதற்கு உதவ வேண்டும்--என்றும் யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் வலியுறுத்தி உள்ளார்.

சிங்கள அரசுகளின், பலதரப்பட்ட அல்லல்களால், பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள் வடக்கு வாழ் தமிழ் மக்கள். அவற்றில் இருந்து மீள இயலாது அல்லலுறும் அவர்களை, பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்த கதை போன்று--

இந்த நாள்களில் பரவலாக இடம்பெறும் கொலை, களவு, கொள்ளை போன்றவை மக்களிடையே மிகுந்த பீதியைத் தோற்றுவித்து உள்ளன.

நாள் முழுக்க உழைத்துக் களைத்து, வீடு வந்து சேர்ந்த பின்னரும் நிம்மதியாக வாழ இயலாத அவல நிலையே மேலெழுகிறது!

இந்தப் பாதக நிலையை "முளையிலேயே" கிள்ளி எறிந்திட அனைவரும் ஒன்று திரள வேண் டிய வேளை இது. அதனைக் கட்டி எழுப்புவதற்கு, அர்ப்பணிப்புடனும் துணிச்சலுடனும் செயற்பட வேண்டியது, சமூக, சமய, நிறுவனங்களினதும், புத்தி ஜீவிகளினதும் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பு.

இத்தகு அவல நிலைமை மேலும் மோசமடையாமல், முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். இல்லையேல், எமது மக்களை எவராலும் காப்பாற்ற இயலாத நிலையே உயர்ந்து செல்லும்.

# காவல் தெய்வமாக மாறுமா காவல்துறை?

சேரலாதன்

ஒரு நாட்டின் காவல்துறையும், நீதித்துறையும் இணைந்து சிறப்பாகச் செயற்படும்போது தான் மக்கள் நிம்மதியாக வாழ முடியும். குற்றங்கள் பெருகாமல் தடுப்பதும் குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்துவதும் காவல்துறையினரின் முக்கிய கடமையாகும். காவல்துறையினர் நேர்மையுடன் பக்கச் சார்பின்றி நடந்து கொண்டால் குற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியும். குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவார்கள். ஆனால், இன்று உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது காவல்துறையினரின் நேர்மை சந்தேகத்துக்கு உரியதாகவே காணப்படுகின்றது. அமெரிக்காவில் கூட கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான மனப்பான்மையுடன் காவல் துறையினர் நடந்து கொண்ட சம்பவங்களைப் பட்டியலிட்டுக்கூறமுடியும். எமது அண்டை நாடான இந்தியாவில் காவல்துறையினருக்கு எதிராக ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எமது நாட்டிலும் இத்தகையதொரு நிலை உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. பிரபல வர்த்தகர் ஒருவரின் கொலையில் காவல்துறையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டிருந்ததால் அவர் இப்போது சிறைக்கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார். அதேபோன்று பிரபல விளையாட்டு வீரர் தாஜீதீனின் கொலையை மறைப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் சிலர் உதவியதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அரசியலில் உயர் நிலையில் இருந்து அதிகாரம் செலுத்துபவர்களாலும் காவல்துறையினர் நேர்மையாகத் தமது கடமைகளை மேற்கொள்ள முடியாததொரு நிலை காணப்படுகின்றது. அரசியல்வாதிகளின் ஏவலர்களாக இருக்கும்வரை காவல்துறையினர் கௌரவமான முறையில் தமது பணிகளைச் செய்ய முடியாது.

### புங்குடுதீவு மாணவியின் படுகொலை

புங்குடுதீவு மாணவி வித்தியா கொடியவர்கள் சிலரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டமை முழு நாட்டையும் மாத்திரமல்லாது வெளிநாடுகளில் வசிக்கின்ற தமிழர்களையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. இந்தச் சம்பவம் இடம்பெற்று பல மாதங்கள் உருண்டோடிய நிலையிலும் அந்த வழக்கின் விசாரணைகளில் முன்னேற்றம் எதனையும் காண முடியவில்லை.

இந்த நிலையில் மேற்படி வழக்கு இறுதியாக இடம்பெற்றபோது நீதிமன்றில் முன்னிலையாகிய குற்றப் புலனாய்வுத் துறையினரை நீதிவான் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார். குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் வித்தியா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் மனைவியுடன் பேசிய விடயத்தையும் நீதிவான் அங்கு பிரஸ்தாபித்துள்ளார். மேலும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முரணான வகையில் பொலிஸார் நடந்து கொள்வது தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குத் தாம் கொண்டுவரவுள்ளதாகவும் நீதிவான் அங்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது குடாநாடு இரவானாலும் முடங்கிப் போவதாகவும் முடங்கினாலும், நித்திரை செய்வதற்கும் அஞ்ச வேண்டியுள்ளதாகவும் யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் கூறுமளவுக்கு குடாநாட்டின் நிலைமை மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. கல்விமான்கள், பண்பாளர்கள், ஆசாரசீலர்கள் நிறைந்த குடாநாட்டில்தான்

> பொதுவாகவே குற்றச் செயல்கள் இடம்பெறும் போது பொதுமக்கள் பொலிஸாருக்கு அது குறித்து அறிவித்தால் அவர்கள் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வருவதில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாகவே காணப்படுகின்றது.

கொள்ளையரும், வாள்வெட்டுச் சூரர்களும் உலவுகின்றனர். சமூக விரோதிகளான ஒரு சிறிய கும்பல் ஒட்டுமொத்தக் குடாநாட்டின் நிம்மதியைக் குலைப்பதோடு கௌரவத்தையும் பாழ்படுத்தி வருகின்றது. இந்தக் கும்பலைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு இருக்கின்ற இயலாத் தன்மை வியப்பை அளிக்கின்றது. குற்றச் செயல்கள் இடம்பெறும்போது பொது மக்கள் பொலிஸாருக்கு அது குறித்து அறிவித்தால் அவர்கள் உடனடி யாகச் சம்பவ இடத்துக்கு வருவதில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாகவே காணப்படுகின்றது. இது தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளனர்.

இதைவிட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்களுடன் காவல் துறையைச் சேர்ந்த சிலர் நெருக்கமான உறவுகளைப் பேணி வருவதாகவும், இதனால் குற்றவாளிகள் சுதந்திரமாகச் செயற்படுவதாகவும் இன்னொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

பொதுவாகவே காவல் துறையினர் லஞ்சம் பெறுவதில் தேர்ந்தவர்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் உள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்றும் அவர்கள் கூறுவதைக் கேட்க முடிகின்றது. இது காவல்துறை அமைக்கப்பட்டதன் நோக்கத்தையே பாழாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. காவல் துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு அந்தத் துறையின் செயற்பாடுகள் அமைந்திருக்க வேண்டும்.

புலிகள் இல்லாத இந்தக் கால கட்டத்தில் கூட அவர்களால் அமைக்கப்பட்டுத் திறமையாகவும், நேர்மையாகவும் செயற்பட்ட தமிழீழக் காவல்துறையைப் பலரும் புகழ்ந்து பேசுவதைக் கேட்க முடிகின்றது. குற்றங்கள் நிகழாது தடுப்பதிலும், குற்றவாளிகளைத் தாமதமின்றிக் கைதுசெய்து தண்டனை பெற்றுக்கொடுப்பதிலும் தமிழீழக் காவல்துறையினர் திறம்படச் செயற்பட்டதே இதற்கான காரணமாகும். புலிகளின் காலத்தில் வீடுகளின் கதவுகளைப் பூட்டி வைப்பதற்கான தேவை இருந்ததில்லை. வீட்டு முற்றத்தில் சாக்குக் கட்டில்களைப்போட்டு படுத்துத் தூங்கியதும் இப்போது நினைவுக்கு வருகின்றது. கள்வர் மற்றும் சமூக விரோதிகளின் பயம் அப்போதெல்லாம் இருந்ததில்லை. தற்போது வரலாறு காணாத கடுமையான வெப்பம் நிலவிவருகின்றது. இதனால் இரவில் படுத்துத் தூங்குவதே இயலாத காரியமாகி விட்டது. வீடுகளின் கதவுகளை மட்டுமல்ல ஜன்னல்களையே திறந்து வைக்க முடியாத நிலை. எல்லாவற்றையும் இழுத்திச் சாத்தி மூடிவிட்டு புழுக்கத்தின் மத்தியில் துவண்டு போய்க் கிடக்கின்ற பரிதாப நிலையில் மக்கள் உள்ளனர். காவல்துறையினர் விழிப்புடன் செயற்பட்டால் இந்த நிலை நீடிப்பதற்கான வாய்ப்பில்லை.

தெய்வங்களில் கூட காவல் தெய்வங்களாகச் சில கருதப்பட்டு வருகின்றன. இவை தமது விக்கினங்களைப் போக்கும் என்பது மக்களின் நினைப்பு. அந்த வகையில் காவல் துறையும் மக்களைக் காவல் செய்கின்ற மகத்தான பணியில் தொய்வின்றிச் செயற்பட்டால் காவல் தெய்வமாகவே மக்களால் மதிக்கப்படும் என உறுதியோடு கூற முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# பாதுகாக்கப்படுமா நாடாளுமன்றத்தின் கௌரவம்

அராஜகமான – அநாகரிகமான ஆட்சி என்றால் என்ன வென்பதை மகிந்தவின் ஆட்சிக்காலத்தில்தான் இந்த நாட்டு மக்கள் அதிகமாக உணர்ந்தனர். மகிந்த அவரது அரசியல் எதிரிகளை எவ்வாறு அடக்கினார்? புதிய எதிரிகளை எவ்வாறு உருவாக்கினார்? அவரது அமைச்சர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த ஆட்சி முறைமை மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்ததால்தான் அவரை மக்கள் வீட்டுக்கு அனுப்பிவைத்தனர்.

குறிப்பாக, எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடகங்கள் போன்றவற்றை அவர் அடக்கி ஒடுக்கிய விதத்தை நாம் அறிவோம். மகிந்தவின் செல்லப் பிள்ளைகளாகத் திரிந்த அரசியல்வாதிகள் பலர் வெளிப்படையாகவே காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.


முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இந்த விடயத்தில் முதலிடத்தில் இருந்தாலும், முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, ஜெகத் புஷ்பகுமார மற்றும் சரண குணவர்தன போன்ற பலர் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் குழப்பத்தில் ஈடுபடும் குழப்பவாதிகளாக இருந்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரின் பிரதான பணி நாடாளுமன்றில் குழப்பம் விளைவிப்பதாகவே இருந்தது.

மேர்வின் சில்வா களனித் தொகுதியில் தனி இராச்சியமே நடத்தினார். அவர் வைப்பது தான் சட்டம் என்ற நிலைதான் அங்கு இருந்தது. ஊடகங்கள் மீது கடும் அடக்கு முறையைப் பிரயோகித்தார். ரூபவாஹினி வளாகத்துக்குள் நுழைந்து அவர் நடத்திய தாக்குதல் நடவடிக்கை மிகவும் பிரபல்யமானது.

மேர்வின் சில்வாவின் அடியாள்கள் பலர் சிரச ஊடக நிறுவனம்மீது கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியதையும் மறந்துவிட முடியாது. சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மரத்தில் கட்டிவைத்து மேர்வின் சில்வா தண்டித்ததையும் மறந்துவிட முடியாது.

அதேபோல், சரண குணவர்த்தனவும் சண்டித்தனங்களில் ஈடுபடுவதும் அதற்காக சிறைக்குச் செல்வதும் அப்போது சாதாரண விடயங்களாக இருந்தன.

இவ்வாறு இவர்கள் நாட்டில் பெரும் அட்டகாசம் புரிந்த அதேவேளை, நாடாளுமன்றத்தையும் விட்டுவைக்கவில்லை. அங்குதான் இவர்களின் அட்டகாசம் அதிகமாக இருந்தது. காலாகாலத்துக்கும் மகிந்தவின் ஆட்சிதான் இருக்கப் போகின்றது என நினைத்துக்கொண்டு இவர்கள் எதிர்க்கட்சிகளை அளவுக்கு அதிகமாகவே அடக்கினர்; கொடுமைப்படுத்தினர்.



ஒரு தடவை மகிந்த பட்ஜட்டை வாசித்துக் கொண்டிருந்தபோது ஐக்கிய தேசியக் கட்சியினர் பதாகைகளை ஏந்தி அமைதியானமுறையில் அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருந்தனர். அப்போது பின்வரிசையில் அமர்ந்திருந்த மகிந்தவின் கட்சிக்காரர்கள் ஓடிவந்து பதாகைகளைக் கிழித்தெறிந்து கைகலப்பில் ஈடுபட்டனர்.

அந்த அமளி துமளிக்கு மத்தியிலும் மகிந்த எதையும் கண்டுகொள்ளாமல் பட்ஜட்டை வாசித்துக்கொண்டே இருந்தார். அவரது கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்த அவர் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

இவ்வாறு தலைவர், அவர்களின் அட்டகாசங்களைக் கண்டுகொள்ளாமல் இருந்ததால்தான் அவர்கள் எல்லை மீறினர். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பது போல் அந்தக் காட்டுமிராண்டித்தனம் இன்றும் தொடரவே செய்கின்றது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற பெயரில் தங்களை அழைத்துக்கொள்ளும் மகிந்த அணியினர், தங்களை இன்னமும் ஆளுங் கட்சிபோல் நினைத்துக்கொண்டு இன்றும் அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பல தடவைகள் அவர்கள் நாடாளுமன்றில் குழப்பங்களில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் கைகலப்பிலும் ஈடுபட்டனர்.

மகிந்தவின் பாதுகாப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதலானது காட்டுமிராண்டித்தனத்தின் உச்சக்கட்டமாகும்.

மகிந்தவின் காலத்தில் எதிர்க்கட்சியினர் இவ்வாறு நடந்திருந்தால் அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்லத் தேவை இல்லை. ஆனால், இந்த அரசு நாகரிகமான – ஜனநாயக அரசு என்பதால் மகிந்த கூட்டத்தினர் அச்சமின்றி ஆடுகின்றனர். நாடாளுமன்றத்தைத் தொடர்ந்தும் நாறடிக்கின்றனர்.

> மகிந்தவின் காலத்தில் எதிர்க்கட்சியினர் இவ்வாறு நடந்திருந்தால் அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்லத் தேவை இல்லை. ஆனால், இந்த அரசு நாகரிகமான – ஜனநாயக அரசு என்பதால் மகிந்த கூட்டத்தினர் அச்சமின்றி ஆடுகின்றனர். நாடாளுமன்றத்தைத் தொடர்ந்தும் நாறடிக்கின்றனர்.

இந்த ஆட்சியிலும் இவ்வாறான காட்டுமிராண்டித்தனம் தொடர்வதற்கு அரசு இனியும் அனுமதிக்கக்கூடாது. இந்த ஆட்சியிலாவது நாடாளுமன்றத்தின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். இந்த நாட்டின் உச்ச கௌரவத்துக்குரிய நாடாளுமன்றம் அசிங்கப்படுத்தப்படுவது ஒட்டுமொத்த நாடும் அசிங்கப்படுத்தப்படுவதற்குச் சமமாகும். ஆகவே, இனிமேலாவது இவ்வாறான அசிங்கங்களை இல்லாதொழிப்பதற்கு இந்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். அந்த விருப்பத்தை அரசு உடன் நிறைவேற்றி இந்த நாட்டின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்.

## இனியாவது சிந்திப்பார்களா?

ஒரு காலத்தில் எமது தமிழ் மண்ணில் மே நாள் கொண்டாட்டமாக இருந்தால் தமிழர் பகுதியில் உள்ள சகல அமைப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டு மிகப் பிரமாண்டமான மேநாள் கொண்டாட்டமாக நடத்தப்பட்டது. எவர் எவர் தமது செய்திகளைச் சொல்ல வேண்டுமோ, ஊக்கிகள் மூலம் ஊர்வலப் பதாகைகள் மூலம் வெளியிடுவார்கள். அங்கு ஓர் ஒற்றுமை வடிவம் காணப்பட்டது. இது சற்றும் மறக்கமுடியாத ஒன்றாகும். இதே போன்று தான் எமது தமிழ் இனத்தின் செயற்பாடுகள் எங்கு இடம்பெற்றாலும் ஒருமித்த குரலிலேயே ஒலிக்கவேண்டும். அந்த வகையிலேயே அண்மையில் இடம்பெற்ற மேதினமும் இடம்பெற்றிருக்கவேண்டும். உண்மையிலேயே இந்த மேநாள் கொண்டாட்டம் ஒரு நாட்டின் தொழிலாளர்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்பும் நாளேயாகும். ஆனால் அது இன்று அரசியல் களமாக மாறிவிட்டது. இதற்கு உதாரணம் தென்னிலங்கையில் நடைபெற்ற மேதின ஊர்வலம் ஒன்றில் எமது தமிழ்த் தலைவர்களுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அங்கு எப்போது பார்த்தாலும் தமிழர் தரப்புக்கு எதிர்ப்புத்தான். ஆனால் எமது தமிழர் தரப்பு அரசியல்வாதிகளும் முற்போக்குச் சிந்தனையாளர்களும் எமது தமிழ் இனத்துக்கு எதிரான கருத்துகளைச் சிந்திப்பதில்லைப் போலும். ஏனெனில் வடக்கு மாகாண பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கும் இடங்களில் மேதினக் கொண்டாட்டம் நடைபெற்றன. இதுவும் 4, 5 பிரிவுகளாக இடம்பெற்றன. இதில் சர்வதேசத்துக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் என்ன என்ன செய்தி சொல்லப்பட்டன?

எமது மக்கள் இன்னமும் போர்வடுக்கள், அச்சம், மீள்குடியேற்ற நிலை இப்படி பல பிரச்சினைகளைச் சுமக்கும் இந்நிலையில் மே நாளைப் பயன்படுத்தி தமது எண்ணக் கருக்களை வெளிப்படுத்தி இருக்கலாம். ஆனால் இங்கு பார்த்தால் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஓரிடத்திலும், ஆசிரியர் சங்கம் ஓரிடத்திலும், கூட்டுறவாளர்கள் ஓரிடத்திலும், ரெலோ கட்சியினர் ஓரிடத்திலும் இன்னும் பல அமைப்புகள் சில இடங்களிலும் இப்படி ஏட்டிக்குப் போட்டியாக மே தினத்தை நடத்தியுள்ளார்கள். இதைவிடுத்து தமிழர்களின் செய்திகள் உலகறியச் செய்யப்பட வேண்டுமானால் ஓர் அணியின் கீழ் நின்று தத்தமது கோரிக்கைகளை முன்வைக்கும் பட்சத்தில் அது ஓர் உந்துசக்தியாக- எவராலும் அசைக்க முடியாத எமது தீர்மானங்களாக அமையும். எதிர்காலத்திலாவது எமது அரசியல் கட்சிகளும் கல்விமான்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் எல்லோரும் ஓர் இடத்தில் [illegible] செய்வார்களா?

– வலிகாமத்தான்

## பூமரத்தை நட்டு வளர்த்தவருக்கு அதன் பங்கு என்றும் உண்டு

இம் மாதம் 4 ஆம் திகதிய உதயன் வாசகர் திருமுகப்பகுதியில் பொ.தவராசலிங்க தின் வேண்டுதலுக்காக

சைவசமயம் ஆதியானது, அதன் தத்துவங்களை மக்கள் முன்பரப்புவதற்காகக் காலத்துக்குக் காலம் பல பக்தர்களும் ஞானிகளும் தோன்றினார்கள், நற்சிந்தனைகளைப் போதித்தார்கள். ஆயினும் பணத்தின் மீது ஏற்பட்ட மோகம், அந்தப் பரிந்துரைகள் யாவற்றையும் பாழடித்துவிட்டது.

இறைவணக்கத்துக்கு உரியது பூ அல்ல. ஒவ்வொருவரும் தத்தம் இதயத்தை மலரவைத்து இறைவனைப் பணிந்து, வணங்கி ஆசி பெற்றுவாழ வேண்டும், ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்பதற்காக, ஆலய தரிசனங்களையும், கிரியைகளையும் ஞானிகள் ஏற்படுத்தினார்கள்.


இறைவணக்கத்துக்கு வகுக்கப்பட்ட முறைகள் நான்கு. அவை யாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையாகும். சரியையில் தொடங்கி யோகத்தில் ஒருவன் சித்தியடையும்போது ஞானம் பிறக்கின்றது.

கிரியை என்பது இறைவனை மற்றவர்கள் வழிபட உதவுவது. சரியை என்பது கிரியை செய்பவருக்கு உதவும் தொண்டாகும். அதன் ஒருபங்குதான், பூமரம் நடுதல், வளர்த்தல், நீர் ஊற்றுதல் மலர் கொய்து இறைவன் சந்நிதிக்கு அர்ப்பணித்தல் போன்றவை. இதில் பூமரத்தை நட்டு வளர்த்தவருக்கு அதன் பங்கு என்றும் உண்டு. காரணம் மலர் கொய்து கொடுப்பவர் மரம் வளர்த்தவருக்கு உதவுகின்றார். வளர்த்தவர் அதை விரும்பாமல் இறைவனிடம் முறையிடும்போது மட்டும் அவருக்குக் கிடைக்க வேண்டிய புண்ணியத்தில் ஒருபகுதி குறைக்கப்படும். ஆனாலும் வளர்த்தவருக்கு உரியபங்கு குறையாது.

– கு.சிவகடாட்சம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு தொண்டாற்றிய முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி



காப்பியதாசன்

"மெய்யுணர்ந்த அறிஞர்க்கு இன்பதுன்பம் என்பவை வாழ்க்கைக் கடலின் இருவகை அலைகள். அவர்கள் அவற்றிடையே குளித்து எழுவர். மற்றவர்களுக்கு இன்பமும் துன்பமும் வாழ்வின் இரு நிலைகள் ஒன்றைக் கண்டேங்கியும் மற்றொன்றைக் கண்டஞ்சியும் மயங்குவர். கற்பனை சிறந்த புலவர்க்கு இவையிரண்டும் இரண்டு வகை விளையாட்டுப் பொருள்கள்."

மேற்கண்ட சான்றோன் மொழிக்கொப்ப பாவலர்கள் தனியுலகத்தில் வசிப்பவர்கள். இவர்கள் இயற்கையோடு ஒன்றிப்புதுப்புது எண்ணங்கள் பெற்றுப் புதுப்பொலிவுடன் இயங்குவார்கள்.

அதே பாங்கில் முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பியும், இயற்கையோடு ஈடுபாடு கொண்டவர். இயற்கை வாழ்வோடு இணைந்து இன்பம் கண்டவர்.

கடற்கரையின் கவினுறு காட்சிகளில் மனம் பறிகொடுத்த அனுபவத்தை அழகாகக் குறிப்பிடுகின்றார் அவர். சுருளலைகள் அவரை வருக வருகவென அழைத்தனவாம்.

தமிழ் முருகன் அவர் உள்ளத்தில் நர்த்தனம் செய்து கொண்டு நின்றானாம். செங்கதிரோன் தன்கதிர் பரப்பிக் கடல் மேலே தோன்றிய காட்சி வெற்றி வேலோன் பவனி வருதல் போன்றிருந்ததாம். இப்படியாகப் பல இயற்கைக் காட்சிகளுடன் இணைந்து இன்ப துன்பங்களைக்கண்டுஏக்கமோ, அச்சமோ அடையாமல் அவற்றை தமது கவித்துவ ஆற்றலுக்குள் சிக்கவைத்துச் சந்தம் நிறைந்த இனிய கவிதைகளைப் படைத்துள்ளார்.

புலவர் அவர்கள் வட்டுக்கோட்டையில் உள்ள சிந்துபுரம் பகுதியில் தோன்றிக் குறுகிய காலம் வாழ்ந்தவராயினும், அந்தக் குறுகிய கால எல்லைக்குள் பலரும் மெச்சும்படி வாழ்ந்தவராயினும், அறிஞன் ஒரு நாட்டின் சொத்து என்பது போல நாட்டு மக்கள் அனைவரும் பயனடையக் காரணமாக விளங்கினார்.

இளமையில் கவிபாடும் வன்மை, நாடகம் நடிக்கும் ஆற்றல் என்பன இவரிடம் காணப்பட்ட திறமைகளாகும். இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது கடமையை ஆரம்பித்தார். இவரது ஆசிரிய சேவையில் சாகிராக் கல்லூரியில் இருந்த காலத்தில் செய்த சேவை உன்னதமானது. ஜனாப் எஸ் கமால்தீன் போன்ற பல சிறந்த தமிழ் அறிஞர்களுக்குத் தமிழ் புகட்டிப் புலமை அடையச் செய்தவர்.

இந்தக் கல்லூரியில் தலைமைத் தமிழ் பண்டிதராகவும், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க பரீட்சகராகவும், இலங்கை வித்தியா பகுதிப் பாடநூற் பிரசுர சபை அங்கத்தவராகவும் கடமை புரிந்தவர். சுவாமி விபுலானந் தரின் நல்லறிஞன் விபுலானந் தர்பால் இவர் கொண்டிருந்த பேரன்பு, கருத்துப்பரிமாறல்களும் சுவையானவையே "…..மனக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப்பாவல என்று அறியாச் செய்யுளான் நற்சான்று பகர்ந்துவிட்டேன். நீங்கள் என்னாளும் தமிழ்த்தொண்டு புரிய வேண்டும்…." தமிழ்ப்புலவராகிய நாம் கம்பரின் வழித் தோன்றல்கள். அவனைப்போல நாமும் மன்னனின் முன்னிலையில் இறுமாப்போடு நிற்க வேண்டும். நூலாய்வதிலும் நூலெழுதுவதிலும் பொழுது கழிக்க வேண்டும் என்று கனிவாகக் கேட்டுக் கொள்கின்றேன் என விபுலானந்த அடிகளார் முதுதமிழ்ப்புலவருக்கு எழுதிய கடிதம் கணிக்கத்தக்கதேயாகும்.

இன்று இவரது நினைவு தினம்

ஈழகேசரி மற்றும் தமிழகம் பத்திரிகைகளில் இலக்கண, இலக்கிய கட்டுரைகளை நிறையவே எழுதியவர். மாணவர் தமிழ் வாசகம் போன்ற பல தமிழ்ப் பாட நூல்களையும் எழுதி வெளியிட்டவர். சிறுவர் பாடல்களை யும் பல தொகுதிகளாக வெளியிட்டவர்.

புலவர், முஸ்லிம் புலவர்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொண்டவர். அவற்றைத் தமது உரைகள் வாயிலாக வெளிப் படுத் தியவர். கரீம்புல வர். பக்கீர் முஹைதீன் புலவர் முதலிய இலங்கைப் புலவர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

1936 ஆம் ஆண்டில் தென்னிந்திய புனித சேத் திரங்களுக்கு யாத்திரையை மேற்கொண்டு இந்தியாவில் பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். சைவ ஆதீனங்களில் அவரது குரல் ஒலித்தது. இவரது நாவன்மைதனையும், பாவன்மைதனையும் வியந்த திருநெல்வேலி தமிழர் கழகத்தார் இவருக்கு 1940 இல் முதுதமிழ்ப்புலவர் என்றும் வரிசை நல்கிக்கௌர வித்தனர். ஈழநாட்டுக்குத் திரும்பிய புலவர் சில ஆண்டுகளின் பின்னர் இலங் கைப் பல்கலைக்கழகத்தில் ஆசானாக இருந்து அரிய சேவை செய்தார். இவரது கவித்துவ ஆற்றலுக்கு எடுத்துக்காட் டாக இலங்கை அரசு நடத்திய மரதன் அஞ்சலோட்டக் க்விதைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டதைக் குறிப்பிடலாம்.

இவர் சிறந்த தமிழறிஞராக விளங்கிய போதும் சிங் களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். தேசிய கீதத்தை முதன் முதலாகத் தமிழில் மொழி பெயர்த்து எழுதியதைக் குறிப்பிடலாம். இன்னொன்று முதுதமிழ்ப்புலவர் அவர்கள் 1955 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் ஆற்றிய உரைக்காக கல்கி ரா.பி.சேதுப்பிள்ளை முதலிய அறிஞர்களால் மெச்சப்பட்டவர். கல்கியும் ரா.பி சேதுப்பிள்ளையும் இவர் இறந்த செய்தி கேட்டு இவரைப் பற்றிப் பத்திரிகைகளில் வியந்து எழுதினார்கள். முத்தமிழ் ஆராய்ச்சி விழாவில் கலந்து கொண்டமையே முதுதமிழ்ப்புலவரின் கடைசிப் பேச்சாகவும் அமைந்தது.

# வடமாகாணம் அவசர அம்புலன்ஸ் சேவை

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்

**அறிமுகம்**

விபத்துக்களின் போதும், அவசர மருத்துவ நிலைகளின் போதும் நோயாளியை இயலுமான அளவு குறுகிய நேரத்துக்குள் வைத்தியசாலையில் அனுமதிப்பதன் மூலம் உயிரிழப்புக்களைக் குறைக்க முடியும். மேலும் அவ்வாறு கொண்டு செல்லும் போது மருத்துவ முதலுதவி வழங்கப்படுமாயின் உயிரிழப்புகளை மேலும் குறைக்க முடியும். இதனைக் கருத்திற் கொண்டே உலகில் பலநாடுகளில் வைத்தியசாலைக்கு முன்னரான சேவை (Pre HospitalCare) உருவாக் கப்பட்டுள்ளது. அதன் ஒரு முக்கிய அங்கமாகவே அவசர அம்புலன்ஸ் சேவை விளங்குகின்றது.

எமது நாட்டில் வைத்தியசாலைக்கு முன்னரான சேவை மேல், தென் மாகாணங்களில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 2006 முதல் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளின் வலைப்பின்னலுடன் போர்க்காலத்திலும், அதற்குப் பின்னரான காலத்திலும் அவசர அம்புலன்ஸ் சேவை இயங்கி வந்தது.

வடமாகாணத்தில் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்தின் எண்ணக்கருவில் உதித்த வடமாகாண அவசர அம்புலன்ஸ்சேவை 06.01.2016 அன்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

**நோக்கம்**

விபத்துக்கள், அவசர மருத்துவ நிலைகள், பிரசவம் போன்ற நிலைகளில் இயலுமான குறுகிய நேரத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பதன் மூலம் உயிரிழப்புக்களைக் குறைத்தல்.

**சேவையைப் பெறும் முறை**

பொதுமக்கள் 021222 4444, 021 222 5555 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் இந்தச் சேவையைப் பெறலாம்.

**சேவையின் பரப்பெல்லை**

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் எப்பகுதியி லிருந்தும் 24 மணிநேரமும் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கட்டணம்- முற்றிலும் இலவசம்.**

அழைப்பு நிலையம் -

இந் தச் சேவைக்குகிடைக்கும் அழைப்புக்களை ஒருங்கிணைத்து சேவையை வழங்கும் பொருட்டு ஓர் அழைப்பு நிலையம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அழைப்பு நிலைய இயக்குநர்கள் 24 மணிநேரமும், சுழற்சிமுறையில் கடமையில் இருப்பர்.

**அம்புலன்ஸ் வலைப் பின்னல்**

வடமாகாண வைத்தியசாலை களில் உள்ள 100 அம்புலன்ஸ் வண்டிகள் இந்த வலைப்பின் னலில் உள்ளன.

**செயற்பாட்டு முறை**

ஓர் அவசர அழைப்புக் கிடைத்ததும் அழைப்புநிலையத்தில் அந்த அழைப்புக் கிடைத்த இடத்துக்கு அருகிலுள்ள வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிச் சாரதிக்கு அந்தநோயாளியை உடனடியாக ஏற்றிவரும்படி தகவல் வழங்கப்படும். அம்புலன்ஸ் சாரதி ஸ்தலத்துக்குச் சென்று நோயாளியை ஏற்றி அவரது நோய் நிலைக்கேற்ப அதற்கு சிகிச்சை வழங்கக்கூடிய அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வார்.

அழைப்புக் கிடைக்கும் இடத்துக்கு அருகினிலுள்ள அம்புலன்ஸ் வண்டியை இனங்காண்பதற்கு GPS தொழில்நுட்பம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு அம்புலன்ஸ் வண்டிகளும் அழைப்புநிலையத்தில் கண்காணிக் கப்படுகின்றன.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது முதல் ஜனவரி மாதம் 76 அழைப்புகளும், பெப்ரவரி மாதம் 103 அழைப்புகளும், மார்ச் மாதம் 115 அழைப்புகளுமாக மொத்தம் 294 அழைப்புகள் கிடைத்துள் ளன. இவற்றில் 67 வீதமான அழைப்புகள் யாழ். மாவட்டத்திலிருந்தும், 12 வீதமான அழைப்புகள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும், 10 வீதமான அழைப்புகள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தும், 7 வீதமான அழைப்புகள் மன்னார் மாவட்டத்திலிருந்தும், 4 வீதமான அழைப்புகள் வவுனியா மாவட்டத்திலிருந்தும் கிடைத்துள்ளன. எனவே யாழ்மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இந்தச் சேவை பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் போதாமலுள்ளது.

முதல் மூன்றுமாதங்களில் கிடைத்த அழைப்புகளில் 20 வீதமான அழைப்புகள் வீதி விபத்துகளின்போதும், 17 வீதமான அழைப்புகள் சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட அவசர நோய் நிலைகளின் போதும், 9 வீதமான அழைப்புகள் நெஞ்சுவலியின் போதும், 8 வீதமான அழைப்புகள் பிரசவத்தின் போதும் ஏனைய அழைப்புகள் பல்வேறு அவசர மருத்துவ நிலைகளின் போதும் விடுக்கப்படுகின்றன.

**விழிப்புணர்வு**

பொதுமக்களின் உயிர்காக்கும் உன்னத இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவையை பொதுமக்கள் பயன்படுத்திப் பயன்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இதற்காக இந்தச் சேவை பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போது வடமாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறும் வீதி விபத்துக்களில் பலர் அநியாயமாக உயிழக்கின்றனர். விபத்து இடம்பெறும் இடங்களில் நிற்பவர்கள் இந்தச் சேவையைத் தொடர்பு கொண்டு காயப்பட்டவர்களை உடனடி யாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவ முடியும்.

**எதிர்காலத் திட்டங்கள்**

இந்தச் சேவையை மேலும் வினைத்திறன் கூடிய சேவையாக மாற்ற அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் , அம்புலன்ஸில் கூடச் செல்லும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் விபத்துக்களின் போதும், அவசர மருத்துவ நிலைகளின் போதும் கொள்ள வேண்டிய சில அடிப்படை யான முதலுதவிகள் பற்றிய பயிற்சிகள் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. மேலும் அவசர நோயாளர்களுக்கான முதலுதவி வழங்குவதற்கான அடிப்படையான மருத்துவ உபகரணங் களும், சாதனங்களும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு வழங்கப் படவுள்ளன.

**முடிவுரை**

குறிப்பாகப் பொதுமக்கள் இந்தச் சேவை பற்றி ஏனையவர்களுக்கும் இதனைத் தெரியப்படுத்தி இந்தச் சேவை பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்த உதவவேண்டும். விபத்துக்களின் போதும், அவசரமருத்துவ நிலைகளின் போதும் இந்தச் சேவையை அழைத்து உயிர் காக்க அனைவரும் முன்வரவேண்டும்.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி




# புது மொந்தையில் பழைய்ய்ய கள்!

## ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி

ஸூடோ ஸ்வாமி

கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடத்தில் நடத்தப்பட்ட மே தின கூட்டத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய பங்காளிக் கட்சிகள் பகிஷ்கரித்திருக்கின்றன. குறித்தகூட்டம்தொடர்பில் தம்மோடு கலந்தாலோ சிக்கப்பட்டிருக்கவில்லை என்றும்– தமக்கு அழைப்பு கிடைக்கவில்லை என்றும்– அக்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளதமிழரசுக்கட்சிக்கும்ஏனைய பங்காளிக்கட்சிகளுக்கும்இடையே சாம்பலில்மறைந்திருக்கும்தணலாகக் தகிக்கும் முரண்பாடு மீண்டும் தலைகாட்டியிருக்கிறது.

அதேவேளை, கடந்த புதன்கிழமை கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் கூடிய முன்னாள்–இந்நாள் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் ஒன்று சேர்ந்து முன்னணி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். ஜனநாயக தமிழ்த்தேசியமுன்னணிஎனப்பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டில், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் என மொத்தமாக 10 பங்காளர்கள் அங்கத்துவம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரை வைத்திருக்கும் ஈ.பி.டி.பி., ஆனந்த சங்கரியை தலைமையாகக் கொண்டியங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரஸ், உதயராசா தலைமை தாங்கும் சிறிரெலோ, ஜனநாயக போராளிகள் கட்சி, சர்வதேச இந்துக் குருமார் அமைப்பு மற்றும் ஜனநாயக மறுசீரமைப்புக்கான அமைப்பு என இதன் பங்காளர்கள் பட்டியலிடப் பட்டிருக்கிறார்கள். இந்த அமைப்பு, எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனும் விரும்பினால் தம்மோடு வந்து சேர்ந்துகொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பங்களிப்புடன் தோற்றம் பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு மறுத்தான் விடுவதற்கு ஆங்காங்கு சில பல முன்னணிகள் பேரவைகள் தோன்றி மறைந்த வரலாறுகள் இருக்கையில் ஏறக்குறைய அதே பழைய உள்ளடக்கங்களுடன் இந்தப் புதிய முன்னணி புலர்ந்திருக்கிறது.

வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு கிழக்குச் சாராத தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் முற்போக்குக் கூட்டணி என்பவற்றுக்கப்பால் வடக்கு – கிழக்கு, மலையகம் மற்றும் இஸ்லாமியர்களையும் உள்ளடக்கிய பெரிய பரப்பொன்றை இந்த புதிய முன்னணி வரையறுக்க முனைவதாகத் தெரிகிறது. தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தலைகாட்டியுள்ள புதிய கூட்டணி, முன்பு தோன்றி பின்னர் முகவரி தொலைத்த கூட்டுக்களையும் ஞாபகப்படுத்தத் தவறவில்லை.

**தமிழ் கட்சிகளின் அரங்கம்!**

சில வருடங்களுக்கு முன்னதாக ஒன்பது தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவுடன், தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்னும் கூட்டு தோற்றம் பெற்றதாக இதேபோன்றுதான் அறிவிக்கப்பட்டது. அதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சிவனேசதுரை சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு, அப்போது சிவாஜிலிங்கம் தலைமை வகித்த மற்றொரு கூட்டணியான தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணி, புளொட், என்பவற்றுடன் ஈ.பி.டி.பியும் பங்கு கொண்டிருந்தது. மட்டக்களப்பில் கொழும்பில் என தொடர் சந்திப்புகளும் நடைபெற்றன. ஒருமுறை அப்போதிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் அரங்கம் சந்தித்திருந்தது. பின்னர் அரங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையேகூடச் சந்திப்பு இடம்பெற்றது. அதன் விளைவாக இருதரப்பும் பங்கு வகிக்கும் உபகுழு ஒன்றும் நிறுவப்பட்டது. எனினும் அடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது பற்றிய விடயம் வந்தபோது, டக்ளஸ் தேவானந்தாவும், பிள்ளையானும் அரசுடன் சேர்ந்து போட்டியிடத் தீர்மானித்ததை அடுத்து, அரங்கம் பிளவு கண்டது. ஆறு மாதம் கூட நீடிக்காத இந்த கூட்டு பின்னர் காற்றோடு கரைந்து காணாமற் போனது. கூட்டணி கூட்டமைப்புக்குள் கரைந்துபோனது.

**தமிழ் - முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு**

கடந்த ஆண்டு ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின்னர் சந்திக்கு வந்த மற்றொரு கூட்டமைப்புதான் தமிழ் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு. ஆனந்த சங்கரியைத் தலைவராகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக்கை மூத்த உபதலைவராகவும் கொண்டு நிறுவப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இந்த கூட்டமைப்புக்குப் பின்னர் என்ன நிகழ்ந்தது என்றே தெரியவில்லை.

கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் எதிர்கொள்ளப்பட்டபோது, ஆனந்த சங்கரி கொழும்பில் சுசில் கிந்தெல்பிட்டியவுடன் இணைந்து தமிழர் விடுதலைக்கூட்டணியாகப்போட்டியிட்டார். ஹூனைஸ் பாருக் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டார். அறிவிக்கப்பட்டிருக்கும் புதிய முன்னணியின் ஆரம்பம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் மௌனித்திருப்பதனால், அந்த மக்களுக்காகக் குரல் தருவதற்காகவே இந்த முன்னணி தோற்றுவிக்கப்பட்டதாக கூறியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அல்லது அவர்கள் நிரப்பத் தவறிய இடைவெளியைத் தாம் முழுமைப்படுத்தப் போவதாகத் தெரிவித்துக்கொள்ளும் பலர் பின்னர் நண்டு நடந்து காட்டிய கதையையே ஞாபகப்படுத்துவதுண்டு. சந்திரகுமாரின் விலகலை சந்தித்திருக்கும் ஈ.பி.டி.பி., தமது முன்னாள் பெருமைகளை கூறிக்கொண்டு வடக்கிலோ அல்லது கொழும்பிலோ தன்னும் ஒரு நாடாளுமன்றக் கதிரையையேனும் தக்க வைப்பதற்கான மக்கள் ஆணையைப் பெற முடியாமலிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றுடன் கைகோர்த்துள்ள ஏனைய சிறு கட்சிகள் அமைப்புக்கள் என்பன ஏதோ ஓர் புள்ளியில் தம்மிடையே ஒற்றுமை கண்டுள்ளன என்பது வரவேற்புக்குரிய விடயம். அவை தனித்தும் த.தே.கூவுடன் இணைந்தும் பணியாற்ற கிரகபலன் மற்றும் ஆயுள் பலன் சரியாக அமைகிறதா என்று பார்ப்போம்!

> வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு – கிழக்குச் சாராத தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் முற்போக்குக் கூட்டணி என்பவற்றுக்கப்பால் வடக்கு- கிழக்கு, மலையகம் மற்றும் இஸ்லாமியர்களையும் உள்ளடக்கிய பெரிய பரப்பொன்றை இந்த புதிய முன்னணி வரையறுக்க முனைவதாகத் தெரிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்னையை மதித்து வணங்குவோம்

மு.ஈழத்தமிழ்மணி

தாயிற் சிறந்த கோயிலுமில்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அன்னை ஓர் ஆலயம் என்றெல்லாம் அகில உலகம் போற்றுகின்ற அன்னையர் தினம் இன்றாகும். அன்னையானவள் தன்பிள்ளையை பத்துத் திங்கள் கருவிலே சுமந்து தாங்க முடியாத வலிகளையும் சோதனைகளையும் தாங்கியே கண்ணின் மணிபோல் காத்து வருபவள்.

அன்னையர் தினமென்பது பெற்ற தாயை ஒவ்வொருவரும் மதிப்பளித்து மனம் குளிர மரியாதை செலுத்தி கௌரவிக்கின்றதொரு சிறப்பான நாளாகவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் தாயைப் போற்றுகின்ற வகையில் கொண்டாடப்படுகின்ற நாளை அமெரிக்காவே உருவாக்கியது. அனாஜார்விஸ் என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வெஜினியா மாநிலத்தில் கிரப்டன் என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். அங்கு இடம்பெற்ற போரில் அமெரிக்கவீரர்கள் பலர் சாவடைந்தனர்.

மரணமான அமெரிக்க வீரர்களின் குடும்பங்கள் சீரழிந்து போயின. அவர்கள் வெவ்வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர். அப்படிப் பிரிந்து சென்ற குடும்பங்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்காக இரவு பகலாகப் போராடினார். அவர்களது ஒற்றுமையைப் பேணவும் சமாதானத்துக்காகவும் கடுமையாக உழைத்தார்.

சமூக சேவகியான அனா ஜார்விஸ் தனது பார்வையற்ற மகளுடன் வாழ்நாள் முழுவதும் சமூக சேவகியாகவே வாழ்ந்து 1904 ஆம் ஆண்டில் காலமானார்.

பார்வையிழந்த மகளான அன்ரீவ்ஸ் ஜார்விஸ் தனது தாயாரின் நினைவாக அவர்களது ஊரில் அமைந்த டிஸ்ட் சர்க்கில் 1908 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓர் தினமான ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தியிருந்தார்.

அன்ரீவ்ஸ் ஜார்விஸ் தனது தாயாரை நினைவுகூர்ந்து போற்றி வழிபட்டதைப் போலவே அனைவரும் தத்தமது அன்னையை கௌரவிப்பதனால் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி ததும்ப வேண்டும் என்ற உள்ளக் கிடக்கை அவரிடம் வெளிப்பட்டது. தனது தாயார் விட்டுச் சென்ற சமூக சேவையை முக்கிய கடமையாக எண்ணினார்.

தனது சொந்த இடத்திலிருந்து வெளியேறி 1913 ஆம் ஆண்டு பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பில்டெஸ்பியாவில் குடியேறினார். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அனைவரும் தத்தமது அன்னையரை கௌரவிக்க வேண்டும் என்பதனை தனது உள்ளக் கிடக்கையை எண்ணத்தை பென்சில் வேனியா மாநில அரசுக்கு வெளிப்படுத்தியிருந்தார். மாநில அரசு அவருடைய கோரிக்கையை பரிசீலித்ததுடன் 1913 ஆம் ஆண்டிலிருந்து அன்னையர் தினத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது.

மட்டற்ற மகிழ்ச்சியடைந்த அன்ரீவ்ஸ் ஜார்விஸ் அன்னையர் தினம் அமெரிக்கா முழுவதும் கொண்டாடப்படவேண்டும். அந்த நாளை அரசின் விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும் என அப்போதிருந்த அமெரிக்க ஜனாதிபதியான உட்ரோவில்சனுக்கு வேண்டுகோள் விடுத்தது மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கான அரசியல்வாதிகளுக்கும் பொதுத் தொண்டு அமைப்புக்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் கடிதங்களை எழுதியிருந்தார். அன்னையர்தினம் கொண்டாடப்பட வேண்டும், அந்த நாளுக்கான விடுமுறையையும் அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அமெரிக்க ஜனாதிபதியான உட்ரோவில்சன் ஏற்றுக் கொண்டார். வருடம் தோறும் மேமாதம் வருகின்ற இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை அதிகாரபூர்வமாக அறிவித்து அன்னையர் தினத்தை பிரகடனப்படுத்தினார்.



அன்னையர் தினத்தை கனடா அரசும் அங்கீகரித்ததைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் தொடக்கம் கோஸ்டாரிகா வரை 46 நாடுகள் இதே நாளை அன்னையர் தினமாக அறிவித்திருந்தது.

அன்னையர் தினத்தை வர்த்தக மையங்கள் வியாபாரப் பேசுபொருளாக மாற்றியதை தெரிந்து கொண்ட அன்ரீவ்ஸ் ஜார்விஸ் மனம் நொந்தார். அன்னையர் தினத்தன்று அன்னையின் படம் பதித்தகொடியை விற்றுப்பணம் சேகரிப்பதையும் எதிர்த்தார். அன்னையர் தினக்கொடியைவிற்றுபணம் சம்பாதிக்கின்ற வர்த்தக அமைப்பு மீது வழக்குத் தொடுத்தார். அன்னையர் [illegible] உணர்வு பூர்மானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமைய வேண்டுமேதவிர, பணம் சேர்க்கின்ற நாளாக இருக்கக்கூடாது எனவும் இதற்கான தடையை விதிக்க வேண்டுமெனவும் வாதாடி இறுதியில் வெற்றியும் கண்டார். அன்னையர் தினமானது உலகம் முழுவதும் கொண்டாடப்படல்வேண்டும். ஒவ்வொரு இல்லங்களிலும் அன்னை யைப் போற்றுகின்ற, வாழ்த்துகின்ற, மதிக்கின்ற நாளாக அன்றைய தினம் சிறப்புறுதல் வேண் டும் என்பது தான் தனது ஆசை என்பதான எண்ணங் களின் உயரிய சிந்தனையோடு அன்ரீவ்ஸ் ஜார்விஸ் மரணமானார். அவருடைய ஆசை நிறைவேற்றப்பட்டது. பல நாடுகளில் வெவ்வேறு திகதிகளில் அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பின்லாந்து, இங்கிலாந்து, டென்மார்க், கனடா, மெக்ஸிக்கோ, சீனா, துருக்கி, இந்தியா போன்ற நாடுகளில்மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இன்றைய நவீன உலகில் அன்னையர்க்கு கிடைக்க வேண்டிய கௌரவமும் மரியாதையும், மதிப்பும், அந்தஸ்தும் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா? குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் அதிலிருந்து விலகிவருகின்றனர்? பெற்ற அன்னையை புறம்தள்ளி ஓரளவு வயதானவர்கூட வெறுமனே ஒதுக்கி வைக்கின்றனர். பெற்ற அன்னையை தங்களால் பராமரிக்க முடியாது எனக் கூறி முதியோர் இல்லங்களில் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி சேர்த்து விடுகின்ற மக்களாகவும் ஒரு பகுதியினர் உள்ளனர். இதில் ஆண்கள், பெண்கள் என வித்தியாசமில்லை. பிள்ளைகளில் சிலர் பெற்ற தாய் பாரமாக தங்களோடு இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடனும் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். உலகத்தில் அன்னையர் தினத்தை மே மாதம் பிரகடனப்படுத்திக் கொண்டாடும் அன்னையருக்கான கௌரவத்தையும், நன்மதிப்பையும் அவர்களுக்கு வழங்கி நாமும் உயர்ந்திடுவோம். அன்னையை வணங்குவதும், போற்றுவதும், பிள்ளைகளுக்கு என்றுமே உயர்வைத்தரும். அன்னையின் கருணையும், இறையருளுக்கு ஒப்பான தாயின் ஆசியும் ஒன்று என்பதை யாவரும் புரிந்து கொள்வோம் அன்னையர் தினத்தைக் கொண்டாடுவோம், அன்னையை மதிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் திரையிசையில் பெண்கள் பற்றிய வர்ணனை



இ.நிஷாந்தன்

தமிழ் திரை இசையில் காலம் காலமாக ஏராளமான பாடல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்பாடல்கள் மெலோடிப் பாடல்கள், சோகப் பாடல்கள், குத்தும் பாடல்கள் என்றெல்லாம் வகைப்படுத்திக் கூறலாம்.
மென்மையான திரை இசைப் பாடல்களில் வர்ணனைப் பாங்குகள் இடம் பெற்றிருக்கும். அதிலும் பெண்களின் அழகு உணர்ச்சிகளை பல பாடல்களில் பாடப்பட்டிருப்பதைக் காணலாம். இலக்கியங்கள் பெண்களின் அழகுச் சிறப்புக்களை மிகை படக் கூறியிருப்பதை நாம் அறிந்திருப்பினும் திரை இசையில் அவ்வாறான பெண்களின் வர்ணனைகள் இடம் பெற்று உள்ளமை பற்றி நாம் அறிந்திருப்பது குறைவாகும். எனவே அந்தச் சிறப்பை இங்கே நோக்குவோம்.



பெண் ஒருத்தியின் அழகை கூறும் பொழுது கண், முகம், மார்பு, இடை, பாதம் என்றெல்லாம் வர்ணிக்கலாம். இங்கே ஒரு பாடலில் பெண்ணின் அங்கஅழகையெல்லாம்அழகுறக்கூறுவதைக் காண்போம். (படம் ஜீன்ஸ், பாடலாசிரியர் வைரமுத்து)

பெண்ணே உனது மெல்லிடை பார்த்
தேன் அடடா பிரம்மன் கஞ்சனடி
சற்றே நிமிர்ந்தேன் தலை சுற்றிப்
போனேன்
ஆஹா அவனோ வள்ளலடி....

இங்கு பெண்ணின் இடையின் சிறுமையை பார்த்து அதைப் படைத்த பிரம்மனை கஞ்சன் எனக் கூறும் நாயகன். பின் சற்று நிமிர்ந்து மேலே பார்த்ததும் பிரம்மனை வள்ளலாக பாடுகிறான்.

அத்துடன் அந்தப் பெண்ணின் அழகானது மேலும்

மின்னலைப் பிடித்து தூரிகை
சமைத்து
ரவி வர்மன் எழுதிய வதனமடி
நூறு அடி பளிங்கை ஆறடியாக்கி
சிற்பிகள் செதுக்கிய உருவமடி...

உயிரோட்டமான பெண்களின் அழுகுணர்ச்சி பொழியும் ஓவியங்களை வரைகின்ற ரவிவர்மன், மின்னலை தூரிகையாக்கி வரைந்த அங்கமாக அந்தப் பெண்ணின் முகமும், சிலைகளை செதுக்கும் சிற்பிகளால் செதுக்கப்பட்ட ஒருபளிங்குச்சிலையாகவும் இந்தப் பாடலில் வரும் பெண் வர்ணிக்கப்படுகிறாள்.
எம்முடைய தவறுகளால் சில சமயங்களில் மின்சாரம் எம் உடலைத் தாக்கும். ஆனால் ஒரு பெண்ணைப் பார்க்கும் போது அது மின்சாரமாக மாறி நெஞ்சைத் தாக்குகின்றதாம்.
வசீகரா எனும் திரைப்படத்தில், ஆஹா என்பார்கள்அடடாஎன்பார்கள்அவளைப் பார்த்த எல்லோரும். மூன்றே வினாடி அவளைக் கண்டாலே நெஞ்சைத் தாக்கும் மின்சாரம்...எனும் பாடலே அது வாகும்.
இந்தப் பாடலில் பெண் ஒருத்தியின் உடல் அங்கங்களின் அழகு நலமனைத்தையும் பாடலாசிரியர்.

போர் கப்பல் போல் இரு இமை
மீன் தொட்டி போல இரு விழி
பால் சிப்பி போல இரு இதழ்
சேர்ந்த அழகி அவள் தான்
மின் காந்தம் போல ஒரு முகம்
ஊசிப்பூ போல ஒரு இடை
தந்தத் தூண்போல ஒரு உடல்
கொண்ட மங்கை அவள் தான்...

என வர்ணிக்கும் தன்மையைக் காணலாம்.
அத்துடன் தமிழ் அகராதியில் அழகு எனும்சொல்லுக்கு வரைவிலக்கணமாக விளங்குவதும் அந்தப் பெண் என இந்தப் பாடல் வரிகள் கூறுகின்றன. (பாடலாசிரியர் பா.விஜய், படம் வசீகரா)
இன்னுமொரு பாடலில் கதாநாயகியை பார்த்து கதாநாயகன் நீ எந்த தேசத்தில் பிறந்தாய், இவ்வளவு பேரழகியாக இருக்கிறாய். என் சுவாசத்தில் கலந்து என் உயிரின் பாதியாக கலந்து விட்டாய் எனக் கூறுகின்றான்.
அந்தப் பாடல் வரிகள்.
எந்த தேசத்தில் தேசத்தில் நீ பிறந்தாய்
அட இத்தனை பேரழகா
எந்தன் சுவாசத்தில் சுவாசத்தில் நீ
கலந்தாய் நீ இன்றி நான் அழகா...
இது மட்டுமல்லாது. பெண்கள் இயல்பாகவே தம் கண்களுக்கு மை இட்டுக் கொள்வது வழமையாகும். ஆனால் இந்தப் பாடலில் வரும் வரிகளில் அந்தப் பெண்ணின் கண்மையை தனக்கு தந்தால் பல காப்பியங்களை அதனைக் கொண்டு எழுதுவேன் என கதாநாயகன் பாடுகிறான்.

உந்தன் கண்கள் ஓரத்தில் தீட்டி
வைத்த மை தந்தால்
ஐந்து அல்ல, ஐந்நூறு
காப்பியங்கள் உண்டாகும்
உன்தன் கூந்தல் ஈரத்தை
தொட்டுப் போன காற்றைத்தான்
கொஞ்ச நேரம் சுவாசித்தால்
எந்தன் வாழ்வில் வரமாகும்.
அன்பே உன் இதழைத் தான்
சிறைகள் என்பேனே,
கனிச்சிறைகள் என்பேனே.
மெலிதான இடையைத்
தான் பிறைகள் என்பேனே
தேய் பிறைகள்
என்பேனே....

இங்கு அந்தப் பெண்ணின் இதழ்கள் (உதடுகளை) சிறைகள் எனவும் அவளது மெலிதான இடையை வானத்தில் தோன்றும்தேய் பிறை எனவும் பாடலாசிரியர் வர்ணிக்கிறார். (படம் பிரியமானதோழி, பாடலாசிரியர் பா.விஜய்)
மற்றுமொரு பாடலில் பெண் ஒருத்தியின் அழகினைக் கண்டு வியக்கும் கதாநாயகன் பின்வருமாறு பாடுகிறான்.
மின்னலைப் பிடித்து மின்னலைப் பிடித்து மேகத்தில் துடைத்து
பெண்ணென்று படைத்து வீதியில் விட்டுவிட்டான் இப்படி இன்னொரு பெண்மையை படைக்க தன்னிடம் கற்பனை தீர்ந்ததை எண்ணித் தான் பிரம்மனும் மூர்ச்சையுற்றான்.
அதாவது உயிர்களை படைப்பது பிரம்மதேவர். அவரே படைப்புக் கடவுளாவார். அவ்வாறு பிரம்மனால் தன் முழுக் கற்பனையும் ஒன்று சேர்ந்து படைக்கப்பட்ட பெண்ணாக இந்தப் பாடல் வரிகளில் வரும் கதாநாயகி குறிப்பிடப்படுகிறாள். மேலும் அந்தப் பெண் உடல் உறுப்பு அழகுணர்ச்சியையும் நயம் மிக்கதாக பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார்.
நிலவின் ஒளியை பிடித்து பிடித்து
பாலில் நனைத்து பாலில் நனைத்து
கன்னங்கள் செய்து விட்டான்.
உலக மலர்கள் பறித்துப் பறித்து
இரண்டு பந்தல் அமைத்து
அமைத்து பெண்ணை சமைத்துவிட்டான்...
இங்கு கதாநாயகியின் கன்னங்கள் நிலவின் ஒளியை பாலில் நனைத்தால் எவ்வாறு இருக்குமோ. அவ்வாறு இருக்கின்றதாம்.

(37 ஆம் பக்கம் பார்க்க)

**" பெண்கள் எவ்வாறு தான் எத்தனை விதமான ஆடைகள் அணிந்தாலும் பாவாடை தாவணி பெண்களுக்கு பல படி அழகை சேர்த்து விடும் ஒரு சிறப்புடையதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதன்

## பரவாயில்லை ரகம்

சினிமா

சில்லறை வழக்கில் சிக்கிய வருக்குபெயில்வாங்கித்தரக் கூட வக்கற்ற ஒரு கற்றுக் குட்டி வழக்கறிஞர், இந்தியாவின் முதல் தர வழக்கறிஞரைத் தோற் கடிக்க நடத்தும் அறப் போர்தான் 'மனிதன்'.

பொள்ளாச்சி வழக்கறிஞர் சக்தியின் (உதயநிதி ஸ்டாலின்) திறமையின் மையை மீறி அவரைக் காதலிக் கிறார் முறைப்பெண் ப்ரியா (ஹன் சிகா). சக்தியின் அசட்டுத்தனங் களும் தோல்விகளும் அவரது காத லில் நெருடலை ஏற்படுத்த, தன்னை நிரூபித்துக்காட்டுவதற்குச் சென் னைக்கு வருகிறார் சக்தி.

இவர் வந்த நேரத்தில் மாநிலமே எதிர் பார்க்கும் ஒரு வழக்கு பரபரப்பாகி றது. குற்றம் சுமத்தப்பட்ட பெரிய இடத்துப் பையன் விடுவிக்கப்படு கிறார். தனது வாதத் திறமையால் அவரை விடுவித்தவர் இந்தியாவின் முன்னணி வழக்கறிஞரான ஆதி சேசன் (பிரகாஷ்ராஜ்) ஆவார்.

ஏதாவது பெரிய வழக்கில் வக்கீலா னால்தான் கவனத்தைப் பெறமுடி யும் என்று நினைக்கும் சக்தி, நடைபாதைவாசிகள் ஐந்து பேர் மீது கார் ஏற்றிக் கொன்ற அந்த வழக் கைக் கையில் எடுக்கிறார். வழக்கு மறுபடியும் சூடுபிடிக்கிறது. அனுப வம் கொண்டவரான ஆதிசேசனுக் கும் கற்றுக்குட்டி சக்திக்கும் ஏற்படும் மோதல்தான் மீதிக்கதை.

'ஜாலி எல்.எல்.பி.' என்னும் இந்திப் படத்தில் சிற்சில மாற்றங்கள் செய்து 'மனிதன்' ஆக்கியிருக்கிறார் இயக்கு நர் ஐ.அகமது. எவ்வளவு பெரிய குற்றவாளியாக இருந்தாலும் பண பலமும் செல்வாக்கும் இருந்தால், ஆதாரங்களையும் சாட்சியங்களை யும் அழித்துவிட்டுத் தப்பிவிட வழிவகுக்கும் ஊழல் புரையோடிய அமைப்பின் மீதான விமர்சனத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைக் கிறது படம்.

பெரிய வக்கீல் எனப் பெயரெடுத்த வரும் எமது அமைப்பின் ஓட்டை களைப் பயன்படுத்திக்கொண்டே வெல்கிறார்கள் என்பதை அப்பட்ட மாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். கற்றுக்குட்டி வக்கீல் கொஞ்சம் கொஞ்சமாக வலுப் பெறும் விதம் நம்பும்படி இருக்கிறது. வழக்கின் திருப்பங்கள் விறுவிறுப் பாக உள்ளன. பிரகாஷ்ராஜ் முன்னி றுத்தும் சாட்சியை உதயநிதி உடைக் கும் காட்சியும் கமலக்கண்ணனிடம் நடக்கும் விசாரணையும் நீதிமன்றத் தைப் பின்புலமாகக் கொண்ட படத் துக்கான சிறப்பு முத்திரைகள்.

காவற்துறையில் உயர் பதவி ஏலம் விடப்படும் காட்சி, அத்துறையின் அபாயகரமான பரிணாமத்தை அம் பலப்படுத்துகிறது. வழக்கறிஞர் தொழிலின் அல்லாட்டத்தைச் சொல் லும் இந்தப் படம், அதே வழக் கறிஞர் பிரபலமாகிவிட்டால் எப்படித் தந்திரமா கப் பணம் பிடுங்கலாம் என்பதையும் காட்சிப்படுத்துவது நெத்தியடி. நீதி பதிகளின் அணுகு முறையை வடிவமைத்த விதத்திலும் நேர்த்தி.

நீதி விசாரணையையும் அதற்கு இடமளிக்கும் நீதிமன்ற வளாகத்தை யும் கதைக்களமாகக் கொண்ட ஒரு திரைக்கதையில், நாயகன் தனது சட்ட அறிவாலும் வாதத் திறமை யாலும் வென்றிருக்கவேண்டும். நாயகன் வெல்வது புலனாய்வுத் திறமையால்தான். சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும் இடம் தவிர மற்ற இடங்களில் வாதத் திறமைக்கு இடமில்லை.

நீதி தேவதை கண்ணைக் கட்டியி ருக்கலாம். ஆனால் நீதிபதி கண் களைத் திறந்துதான் வைத்திருக்கி றார் என்னும் வசனம் முக்கியமா னது. வழக்கு நீதிமன்றத்துக்கு வரும் போதே என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், சட்டத்தின் ஓட்டைகளால் உண்மை அம்பலம் ஏற முடியாமல் போகிறது என்பதை நீதிபதியின் வாயாலேயே சொல்ல வைத்த இயக்குநருக்கு ஒரு பாராட்டு.

நீதிமன்ற வளாகத்தில் ஆவக்காய் ஊறுகாய் விற்கும் விலைபோகாத வக்கீல் கதாபாத்திரத்தில் வரும் விவேக், உடல் பருமன் கொண்டவர் களைப் பரிகசிக்கும் அவலத்தை இதிலும் தொடர்கிறார். தொலைக் காட்சிச் செய்தியாளர் ஐஸ்வர்யா ராஜேஷ் கொடுத்த வேலையை ஒழுங்காகச் செய்திருக்கிறார்.

மதியின் ஒளிப்பதிவுப் படத்துக்குப் பலம் சேர்த்த அளவுக்கு சந்தோஷ் நாரயணனின் பின்னணி இசை உதவவில்லை. பாடல்கள் கவர்ந் தாலும் ஒரே சாயலுடன் ஒலிக்கின் றன.

உண்மைச் சம்பவங்களை நினைவு படுத்தும் கதையைத் திரைக்கதை யாகத் தந்த விதத்தில் முதல் பாதி சுணக்கம். இரண்டாம் பாதி விறு விறுப்பு. பணப் பையிலிருந்து பெருச்சாளிகள் ஓடுவது, ஸ்நூக்கர் மேஜையில் சிதறியிருக்கும் பந்து கள் பிரகாஷ்ராஜ் கண்களுக்கு எலிகளாகத் தெரிவது போன்ற காட்சிகளில் ஜொலிக்கும் இயக்கு நர், முதல் பாதியின் இழுவையைக் குறைத்திருந்தால் 'மனிதன்' இன் னும் மரியாதைக்குரியவனாக மாறியிருப்பான்.



# ஒன் சுடரில் தோன்றும் உயிர்

அமெரிக்காவில் North Western பல் கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மனிதனில் கருத்தரிக்கும் போது ஒளிச்சுடர்கள் உருவாவதை அண்மையில் அவதானித்து உள்ளனர். எல்லா உயிரியல் செயற்பாடுகளும் விந்து முட்டையுடன் இணையும் போதே ஆரம்பிக்கின்றன. இந்தக் கண்டு பிடிப்பானது மருத்துவ உலகில் மிகவும் முக்கியமான தாக கருதப்படுகின்றது. செயற்கைமுறைக் கருத்தரிப் பின் போது ஆரோக்கியமான கருவைத் தெரிவு செய்ய கருவுறும்போது உருவாகும் ஒளியின் பிரகாசம் கருத்தில் எடுக்கப்படுகின்றது. கூடிய பிரகாசமான ஒளியை வெளிவிடும் கருமிகவும் ஆரோக்கியமானதாக இருக் கும். இது செயற்கை முறை கருத்தரிப்பில் தற்போது ஏற்படும் 50 வீத பயனின்மையை நிவர்த்தி செய்யும். அடுத்ததாக கருக்கலைப்பு தவறானது என்பதும் சமய ரீதியில் நோக்க வைக் கும். கருவுருவாகும்போது ஒளிச்சுடர் உருவாவது விந்து சுரோணிதத் துடன் (முட்டை) இணை யும் போது சுரோணிதத் தினுள் செல்லும் கல்சியம் அயன்களின் செறிவு சுரோணிதத் தின் உள்ளிருந்து நாக (Zn) அயன்களை வெளியே பாய்ச்சுகின்றது. இவை ஒளிச்சுடர்கள் உருவாக ஏதுவாக அமைகின்றன. ஒளிச்சுடர்களின் உருவாக்கத்தின்போது ஐதரசன், ஹீலியம் ஆகிய அணுக்கள் உருவாகின்றன. இவையே உயிரின் முதல் அணுக்களாக அமைகின்றன. கரு உருவாகும் போது உள்ள ஒண்சுடரினை மனிதரில் மட்டு மல்லாது ஏனைய உயிரினங்களிலும் விஞ்ஞானிகள் அவதானித்து உள்ளனர். இவை எமது ஆன்மிக சிந்த னையை மிகவும் கெட்டியாகக் கொள்ள வைக்கின்றன. உடம்பு உருவாதலைத் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்று மவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும் எண் சாணது வாகுமே.

(திருமந்திரம் 464)

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும் என கரு உரு வாகும் போது தெரியும் ஒளியை இன்றைய விஞ்ஞானி கள் the dim after glow of that seminal light எனவும், Genesis in cosmic microwave background எனவும் விபரிக்கின்றனர். உண்மையில் ஆத்மாவின் பௌதிக உயிரியல் பரிமாணத்தை சிந்திப்பவர்களுக்கு இந்தக் கண்டுபிடிப்பு ஒரு திறவுகோலாக அமையும். தெள்ளத் தெளிந்தார்க் குச் சீவன் சிவலிங்கம் என்ற திரு மூலரின் வாசகங்கள் மெய்யுணர்வை எமக்கு ஊட்டு கின்றன. இதனையே இன்றைய விஞ்ஞானமும் எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த வாரம்

**08.05.2016 முதல் 14.05.2016 வரை**

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, சுக்கிரன், கேது அதிக நன்மை தருவர். இந்த வார நிகழ்வுகள் இனிய அனுபவம் தரும். பணிகளை மிகவும் உற்சாகமாகத் தொடங்குவீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள், உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்று முன்னேறுவர். உடல்நிலை பலம் பெறும். வாழ்க்கைத் துணைவரின் செயல்கள், நல்லவிதமாக அமையும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் கவனமுடன் பாதுகாக்கவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படி செயற்படுவது பிரச்சினையைக் குறைக்கும். பெண்கள், பிள்ளைகளின் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறப்பிடம் பெறுவர். சாஸ்தா வழிபாடு, இடர் நீக்கும்.

### இடபம்

சுக்கிரன், சந்திரன் நற்பயன் தருவர். எதிர்பார்த்த சில பண வரவுகள் கிடைக்க தாமதமாகலாம். மன அமைதியைப் பாதுகாக்க பேச்சைக் குறைக்கவும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். புத்திரர்கள் அதிருப்தி மனப்பாங்குடன் பேசுவர். குடும்பச் செலவு அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவர் பெருந்தன்மையாக நடந்து கொள்வார். உடல்நிலை பலம்பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்கள் கடும் முயற்சி செய்து வேலைப் பளுவைச் சமாளிப்பர். பயணங்களால் அதிக பயன் இருக்காது. பெண்களுக்கு வீட்டுச்செலவுக்கு தட்டுப்பாடு வரலாம். மாணவர்கள் சுமாராகப் படிப்பர். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

### கடகம்

சூரியன், புதன், குரு அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சில் நிதானம் இருக்கும். அக்கம் பக்கத்தவர் அன்பு கொள்வர். மனிதாபிமான சிந்தனையுடன், உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வீடு, வாகன வகையில் உரிய பாதுகாப்பு வேண்டும். பூர்வச் சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். புத்திரர்களின் செயல்கள் மன வருத்தத்தை தரலாம். சுகமான நித்திரை இருக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி உருவாகும். பணியாளர்கள் திறமையாகப் பணியாற்றி நற்பெயர் பெறுவர். பெண்கள், உறவினர் குடும்ப மங்கள நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவர். லட்சுமி, நரசிம்மரை வழிபடுவது நல்லது.

### மிதுனம்

குரு, கேது தவிர, மற்ற கிரகங்கள் அதிகளவு நன்மை தருவர். சிறு செயலும் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும், புகழும் தேடி வரும். புதிய வீடு வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பூர்வச் சொத்தில் பணவரவு அதிகரிக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். வழக்கு, விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். வாழ்க்கைத் துணைவரின் அன்பு நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் செழிக்க, புதியவர்கள் உதவுவர். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், தாராள பணவசதியுடன் சந்தோச வாழ்வு நடத்துவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு பெறுவர். சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். நம்பிக்கையுடன் செயற்படுவதால் மட்டுமே, உரிய பயன் கிடைக்கும். புதிய வீடு, இடம் வாங்குபவர்கள் ஆவணங்களைக் கவனமுடன் சரி பார்க்கவும். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து கொள்வர். படிப்பிலும் நல்ல முன்னேற்றம் காணலாம். பயணங்களின்போது பாதுகாப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்ய நிதி உதவி கிடைக்கும். இளமைக்கால நண்பரைச் சந்திக்க வாய்ப்பு வரும். பணியாளர்கள் சிறந்த பணிக்காகச் சன்மானம் பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

### கன்னி

சூரியன், குரு, ராகு தவிர மற்ற கிரகங்கள், தாராள நன்மை வழங்குவர். உடன்பிறந்தவர்களுக்கு மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. குடும்பத் தேவையைத் தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் பெற்றோரின் இலட்சியத்தை நிறைவேற்ற முயற்சிப்பர். வாழ்க்கைத் துணைவர் குடும்ப ஒற்றுமை நிலைக்க பணி மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்புக் கூடும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். பெண்களுக்கு நகை, பணம் சேரும். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். பெருமாள் வழிபாடு செல்வ வளத்தை அதிகரிக்கும்.

### துலாம்

குரு, ராகு, சந்திரனால் நன்மை உண்டாகும். நன்றாகப் பழகியவர்களிடம் கூட நிதானித்துப் பேச வேண்டும். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு வரும். உடன்பிறந்தவர்களின் உதவி, மனதுக்கு உற்சாகம் தரும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். பொது விவகாரங்களில் தலையிட வேண்டாம். புத்திரர்களின் திட்டங்கள் நிறைவேற உதவுவீர்கள். பயணங்களால் நன்மை இருக்காது. வாழ்க்கைத் துணைவருடன் கருத்து வேறுபாடு வரலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் இருக்கும். பணியாளர்கள், பணவரவில் முன்பை விட முன்னேற்றம் காண்பர். பெண்கள் வீட்டுச் செலவுக்கு திண்டாடுவர். மாணவர்கள் பொது அறிவில் மேம்படுவர். சிவன் வழிபாடு சகல நன்மை தரும்.

### தனுசு

கேது, சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் முன்னேற்றம் பெறும். மனக் கவலை நீங்கும். குடும்பத்துக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வாகனப் பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்களின் செயற்பாடு நல்லவிதமாக அமையும். வாழ்க்கைத் துணைவரின் செயல்களில் அதிருப்தி வரலாம். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும். பெண்கள், அடுத்தவர் விடயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். முருகன் வழிபாடு, நம்பிக்கை வளர்க்கும்.

### விருச்சிகம்

சூரியன், புதன், சந்திரன் நற்பயன் வழங்குவர். உடன்பிறந்தவர்கள் உதவி கேட்டு அணுகுவர். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் வகையில் மருத்துவச் செலவு வரலாம். சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தரக்கூடாது. சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள். பகையாளிகளால், சில பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. கவனம். மனைவி வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடு வரலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் பிரச்சினை வரலாம். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்குப் போதுமான பணம் இருக்கும். மாணவர்களுக்கு நினைத்த கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்க போராட வேண்டி வரும். வைரவர் வழிபாடு, வெற்றி தரும்.

### மகரம்

செவ்வாய், சனி, புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். முக்கியமான பணி நிறைவேறும். வாழ்க்கை நடைமுறை சிறப்பாகும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் அறிவாற்றலில் மேம்படுவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு கூடும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணி புரிந்து சலுகை பெறுவர். பெண்கள், உறவினர் வருகையால் மகிழ்வர். மாணவர்களுக்கு நினைத்த கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்கும். அம்பிகை-வழிபாடு, மகிழ்ச்சி தரும்.

### மீனம்

சந்திரன், சுக்கிரன், ராகு ஓரளவு நன்மை தருவர். தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபடக் கூடாது. கொடுக்கல், வாங்கலில் நிதானம் வேண்டும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு அவசியம். புத்திரர்களின் செயல் மனவருத்தம் தரலாம். உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவியின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டியால் இலாபம் குறையலாம். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடிக்கச் சிரமப்படுவர். பெண்கள் சமையலறைப் பணியில் கவனமாக இருக்கவும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். துர்க்கை வழிபாடு, தைரியம் தரும்

### கும்பம்

சூரியன், குரு, சுக்கிரனால் நற்பயன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். உறவினர்களால் நன்மை கிடைக்கும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் அறிவார்ந்த செயலால், பெருமை தேடித் தருவர். கடன் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். உடன்பிறந்தவர்களுடன் சுமுக உறவு இருக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். பணவரவு கூடும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழல் உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். மாணவர்கள் எதிர்காலம் பற்றி சிந்திப்பர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கள வாழ்வு தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“ ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பாலின இடைவெளி யற்ற சமச்சீர் வளர்ச்சியாகத் தான் இருக்க வேண்டும். பெண்களால் ஆணுக்கு நிகராகப் பணியாற்ற முடியுமா என்ற கேள்வியே தேவையில்லாதது.

## பெண்களின் வாழ்க்கை

# பெண்ணின் மாயத்தோற்றம்



இன்று பெண்கள் எல்லா நிலைகளிலும் ஆண்களுக்குச் சமமான இடத்தை எட்டி விட்டதைப் போன்ற மாயத் தோற்றம் ஏற் படுத்தப்பட்டு வருகிறது. உண்மையில் குடும்ப அமைப்புக்குள் தொடங்கி சமூகத்தின் ஒவ் வொரு நிலையிலும் பெண், ஆணுக்கு அடங்கி நடக்க நேரிடையாகவும், மறைமுகமாகவும் நிர்ப்பந்திக்கப்படு கிறாள். சமூகத்தின் பண்பாடு, தூய்மை, புனிதம், கௌர வம் அனைத்துமே பெண்களின் மீதும் அவர்களுடைய செயற்பாடுகளின் மீதும் திணிக்கப்படுவதைக் காட்டிலும் பெண்ணடிமைத்தனத்துக்கு வேறென்ன சாட்சி வேண்டும்?

குறிப்பாக, பெண்கள் மீது நிகழ்த்தப்படுகிற அடக்கு முறைகள் எல்லை கடந்துள்ளன. மனிதனால் உரு வாக்கப்பட்ட ஒவ்வொரு அம்சத்திலும் ஆணுக்கு முன் னுரிமையும் பெண்ணுக்கு உரிமை மறுப்புமே தொடர்ந்து வருகிறது. ஆனால், அந்த உரிமை மறுப்பைக்கூடப் பெண்கள் தங்களுக்கான தனித்துவமாக நினைத்து மகிழ்கிற அளவுக்கு அவர்களுக்குத் தெளிவும், புரிதலும் இல் லாமல் பார்த்துக் கொள்வதில் தான் ஆணா திக்கவாதிகளின் வெற்றியும் அடங்கியிருக் கிறது. திணிக்கப்பட்ட நியதிகளை ஏற்றுக் கொண்டு எதுவும் பேசாமல் இருக்கிறவரை எதுவும் பிரச்சினை இல்லை. ஏன் என்று எதிர்க் கேள்வி கேட்கிற போதுதான் அடக்குமுறை யின் கோர முகம் வெளிப்படுகிறது. பெண் கள் தங்கள் மீது திணிக்கப்படுகிற சங் கிலிகளைத் தகர்த்தெறிய முற்படும் போதெல்லாம் அச்சுறுத்தப்படுகிறார் கள் அல்லது தண்டிக்கப்படுகிறார்கள். அடிப்படைக் கல்வி மறுப்பு, வேலை மற் றும் ஊதியப் பாகு பாடு, குடும்ப வன் முறை கள், பாலியல் அச்சுறுத்தல்கள் என்று பல் வேறு போராட்டங்களுக்கு நடுவே தான் ஒருபெண் இங்கேவாழவேண்டியிருக்கிறது.

■ இணையவள்

பெண்கள் பல்வேறு துறை களிலும் புகுந்து புறப் படுகின்றனர். ஆனால், காலம்காலமாகப்பெண்கள்செய்துவரும் வேலைகளைச் செய்வதில் ஆண் களுக்கு இருக்கும் தயக்கம் இன்னும் தகர்ந்தபாடில்லை. மகப்பேறு, குழந்தை வளர்ப்பு போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தாண்டி, பெண்கள் தங்கள் பணியை ஆண்களைவிடச் சிறப்பாகவே செய்கின்றனர்.

ஆணின் வாழ்க்கை முறையையும் பெண்ணின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு, வேறுபாடுகளை உணர்ந்து அதற்கேற்ப பெண்ணுக்குச் சமத்துவம் அளிக்கப்பட வேண்டும். அலுவலகப் பணிகளும், வேலை நேரமும் பெண் என்பதற்காக எந்த விதத்திலும் குறைக் கப்படுவதும் இல்லை, மாற்றப்படுவதும் இல்லை. காலையில் வீட்டு வேலை களை முடித்துவிட்டு அரக்கப் பரக்க அலுவலகத்துக்கு ஓடும் அவள், எந்த விதத்திலும் பணியில் சமரசம் செய்து கொள்வதில்லை. கடமை என்று வந்து விட்டால் கவனம் திருப்பாமல் முழு மூச்சாகப் பணியாற்றுபவள். அவளை உற்சாகப்படுத்தி மேம்படுத்த வேண்டி யது இந்தச் சமூகத்தின் கடன்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பாலின இடைவெளியற்ற சமச்சீர் வளர்ச்சியா கத்தான் இருக்க வேண்டும். பெண் களால் ஆணுக்கு நிகராகப் பணியாற்ற முடியுமா என்ற கேள்வியே தேவையில் லாதது. ஒரே நேரத்தில் பல வேலை களைச் செய்யும் பன்முகத் திறன் பெண்ணுக்கு உண்டு. இயற்கையாக அவ ளுடைய உடலில் ஏற்படும் மாற்றங் களை உணர்ந்து அதற்கேற்ப வாய்ப்பு கள் வழங்கப்பட வேண்டும்.

இன்று பல இடங்களிலும் பெண்கள் வீடு, பணியிடம் இரண்டு இடங்களிலும் பெருமளவு உழைப்பைச் செலுத்துகின்றனர். பணியிடத்தில் மற்ற வர்களைப் போலவே பெண்ணுக்கும் நியமிக்கப்பட்ட வேலை உண்டு. ஆனால் வீட்டில் அனைத்து வேலைகளை யும் பெண்களே செய்கின்றனர். பெண்ணுக்கு நிகராக ஏன் ஆண் வீட்டு வேலைகளைச் செய்வதில்லை? பணிகளைப் பகிர்ந்துகொள்வதில்லை? ஆணும் பெண் ணும் சரிநிகர் சமானம் என்பது அலுவலகத்தில் மட்டு மல்ல, வீட்டிலும்தானே? பெண்களுக்கான பணித் தளர்வை விடுங்கள்.

இந்தக் காலத்துப் பெண்கள், தங்கள் வேலையில் உள்ள பொறுப்புக்களை உணர்ந்து, தெளிவாகச் செயற்படுகிறார் கள். எந்தக் காரணத்துக்காகவும் தங்கள் பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பதில்லை. பெண்ணை அவள் சிந்திக்கும் போக்கில் விட்டுப் பார்த்தால் தான் அவர்களால் எவ்வளவு சாதிக்க முடியும் என்பது தெரியும்.

ஆண்களுக்கு அலுவலக வேலை மட்டும்தான் இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு அலுவலகம், வீடு என்று இரட்டைச் சுமை இருக்கிறது. எனவே அவர்களால் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரி பணிபுரிய முடியாது. இதைப் புரிந்துகொள்ளா மல் பெண்களை வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டும் என்று சொல்வது அப்பட்டமான ஆணாதிக்க குரூர மனப்பான்மை தான். பெண்களின் சுமையைப் பகிர்ந்து கொள்ள ஆண்கள் முன்வராத வரை இந்த நிலை மாறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதற்கு நாள்கள் ஆகலாம்!

நெடுந்தீவு மகேஷ்

திருமுகம் தனது வீட்டுக்கு வெளியே செல்வதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டான். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறானே அவனுக்கு என்ன நடந்தது? திருமுகத்தின் மாமனார் மாமியார் தொடக்கம் அடுத்தவீட்டு அருணாசலம் வரை இதே கேள்வியைக் கேட்டுக் கொண்டே அடிக்கடி திருமுகத்தின் மனைவி மங்களத்தை நச்சரித்தாரகள். அவளுக்கும் இப்பொழுது திருமுகம் ஏற்படுத்திக்கொண்டுள்ள நடத்தைகள் பற்றி எதுவுமே தெளிவாகவில்லை. அவளோ வேலைக்குப் போய் வருகிறாள். அவளுடைய கேள்விகளுக்கும் திருமுகம் தருகின்ற பதில் பொருத்தமானதாகத் தெரியவில்லை. அயலவர்களின் கேள்வியால் திருமுகத்தின் மீது பதிந்து உயர்ந்து நின்ற சந்தேகம் இப்பொழுது மங்களத்தையும் நிம்மதி இழக்கச் செய்திருந்தது. இவருக்கு என்ன நடந்தது?

திருமுகம் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தான். இப்பொழுது சில நாள்களாகவே அவனது நடத்தையில் பெரிதாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. வீட்டுக்கு வெளியே போவதில்லை. தனிமையில் இருந்து யோசிப்பதும் எதற்கோ பயந்து கண்கள் விரிய அங்குமிங்கும் பார்ப்பதுமாகத் திருமுகத்தின் செய்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அவனைச் சுழ்ந்திருக்கும் அனைவருக்குமே இவை ஆச்சரியத்தைத் தந்தன.

தனது அறைக்குள்ளே நுழைந்ததும் கதவைச் சாத்திக் கொள்வான். அறையின் உள்ளே இருக்கும் கட்டிலில் வீழ்ந்து சரிந்து படுப்பதுமாகப் பகற் பொழுதில் நீண்ட நேரத்தையும் கழித்தான். இரவிலோ தூக்கம் தொலைத்து விழித்திருப்பதும் பலமுறை வெளிச்சத்தைப் போட்டு அமர்ந்திருப்பதும் சில நாள்களுக்குள்ளேயே அவனது பழக்கமாகிவிட்டன. அவனது வாய் எதையோ சொல்ல அசைந்தாலும் சத்தம் வெளியே வருவதாய் இல்லை.


உடல்நலமின்றி இருப்பதாகப் பாரத்தாலும் காய்ச்சல் தலைவலி எதனையும் வெளிப்படுத்தும் வகையையும் காணோம். "என்னப்பா உங்களுக்கு என்ன செய்யுது? ஏன் வேலைக்குப் போகாமல் நிற்கிறீர்கள்?"என்று கேட்கும் மங்களத்திற்கும் அவனது பதிலோ "போகவில்லை" என்ற ஒரே சொல்லுடன் தரித்து நின்று விடுகிறது.

"வேலைக்குப் போகாவிட்டால் பரவாயில்லை, ஏன் அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கிறீர்கள்?" அதற்கும் திருமுகத்திடமிருந்து சரியான பதிலெதனையும் பெறமுடியவில்லை. திருமுகத்தின் செய்கையால் மனம் குழம்பிய மாமனார் சிதம்பரம் சில வேளைகளில் மருமகன் திருமுகத்தின் முன்பாகவே "இப்படி அறைக்குள்ளேயே கிடக்கிறானே!" என்பார். ஆனால் திருமுகமோ எவரது வார்த்தைகளையும் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இவனுடைய செய்கைகள் வீட்டிலுள்ளோர் அனைவருக்குமே கவலையையும் கலக்கத்தையும் ஏற்படுத்தின. பல நாள்களாகத் தனது கணவரை அவதானித்த மங்களம்,"என்னப்பா உங்களுக்கு என்ன செய்யுது சொல்லுங்கோ" என்று பலமுறை வேண்டியும் கேட்டாள். எதற்குமே பதிலில்லை. இப்பொழுது தன்னைப் பார்க்க வருபவரை முறைத்துப் பார்ப்பதும் சுவரை வெறித்துப் பார்ப்பதும் எனச் செய்கைகள் வேறுபட்டன. திருமுகமோ எதற்கோ பயந்திருப்பது தெரிந்தது. அந்தப் பயமே அவரை வெளியே செல்லவும் விடவில்லை. எவராலும் மகிழ்வோடு சந்திக்கவும் விடாது தவிர்த்தது.

இந்த நிலையில் திருமுகத்திற்கு ஏற்பட்டிருக்கும் உளப்பாதிப்பை இனங்காணவும் இயலவில்லை. "இவனுக்கு வேலைக்குப் போக விருப்பமில்லை அதுதான் இவன் சும்மா நடிக்கிறான் போல..." என்று சொல்பவர்களும் இவனுக்குப் பைத்தியந்தான் என்று சொல்பவர்களும் அதிகரித்துக்கொண்டே வந்தார்கள் திருமுகத்தின் இந்தச் செய்கைகளை அறிந்த தூரத்து உறவினரான அகிலா ஒருநாள் திருமுகத்தைப் பார்க்க வந்தார். அவர் ஓர் ஆசிரியர். இரண்டு நாள்கள் அங்கே தங்கி நின்று திருமுகத்தை அவதானித்தார். அதன் முடிவாக இவரை ஓர் உளவளத் துணை ஆலோசகரிடம் அழைத்துச் செல்வது நன்றெனச் சிந்தித்தனர். திருமுகமோ வீட்டுக்கு வெளியே செல்லப்பயந்து அவர்களின் வேண்டுகோள்களுக்கு அசைந்து கொடுப்பதாகக் காணவில்லை.

பலமுயற்சிகளின் பின்னர் கிடைத்த வெற்றியினால் வீட்டுக்கு வந்த உளவளத் துணை ஆலோசகர் ஒருவாரகாலமாகத் திருமுகத்துடனேயே தங்கியிருந்தார். பல்வேறு உளச்சீராக்க ஆலோசனைகளை வழங்கினார். அவருடனேயே அந்த அறைக்குள்ளேயே இவரும் அடைந்து கிடந்தார். பயம்! பயம்! கடத்திச்சென்று கொலை செயயப்பட்டவர்கள் யார்? காணாமற்போனோர் எங்கே? எவ்வாறு இவர்கள் காணாமற் போகிறார்கள்? பள்ளிக்குப் போனவன் திரும்பவில்லை! வேலைக்குப் போனவனைக் காணவில்லை! யாரோ அடையாளந் தெரியாதவன்! எவனோ முகந்தெரியாதவன் சுட்டுக் கொன்றான்! வெட்டிக் கொன்றான் என்றெல்லாம் விரியும் செய்திகள். உளவுப் பிரிவினர் எனச் சொல்லிக்கொண்டு விசாரணைக்கென அழைத்துப் போனவர்களின் வரவோ பொய்யானது. காணாமற்போனவர்கள் பலரும் எமக்கான பாதுகாப்புக்கென எமைச் சுழ நின்ற பலராலும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். பலர் பிணங்களாகிக் கிணற்றினுள்ளும் பற்றைக்குள்ளும் நாறிக்கிடக்கக் கண்டெடுக்கப்பட்டார்கள். இவர்களை ஏன் கொண்டு போனார்கள்? எவ்வாறு இவர்களைக் கொலை செய்தார்கள்? போன்ற எல்லாச் செய்திகளுமே

பயம் ! பயம்! கடத்திச் சென்று கொலை செய்யப்பட்டவர்கள் யார்? காணாமற் போனோர் எங்கே? எவ்வாறு இவர்கள் காணாமற் போகிறார்கள் பள்ளிக்குப் போனவன் திரும்பவில்லை!. வேலைக்குப் போனவனைக் காணவில்லை!. யாரோ அடையாளங் தெரியாதவன! எவனோ முகம்தெரியாதவன் சுட்டுக் கொன்றான்!



திருமுகத்தாரின் உள்ளத்தை உறுத்தும் செய்திகளாகி அவரைப் பயந்தொதுங்கப் பணித்தன. பயமுறுத்தின! அவர் வீட்டுக்கு வெளியே வரப் பயந்தார். வழங்கப்பட்ட உளவள ஆலோசனைகள் ஒரு வாரகாலமாக அவரை அறைக்கு வெளியே கொண்டு வரவும் அவரின் பயத்தைத் தெளிவிக்கவும் பயன் தந்ததாகச் சொன்னபோது மங்களம் மகிழ்ந்து போனாள்.

திருமுகத்தின் பயம் தெளிந்து விட்டது. அறைக்கு வெளியேயும் வீட்டுக்கு வெளியேயும் நடமாடுவதற்கான உளத் துணிவு அவருக்கு ஏற்பட்டு விட்டது. இனிப்பயமில்லை, மிக விரைவிலேயே அவர் வேலைக்குத் திரும்பி விடுவார்.

திருமுகத்திற்கு ஏற்பட்டிருந்த உளப்பாதிப்புக்கு ஆலோசகரின் மனச் சுகம் தரும் வழிகாட்டல்கள் உதவி நின்றதை எண்ணி யாவருமே மகிழ்ச்சியடைந்தனர். இப்பொழுது திருமுகத்தின் பார்வையில் பயம் கலைந்த தெளிவு! பயப்படுவது கோழைத்தனம் என்பதான சிந்தனைத் தெளிவு. ஆலோசகருடன் தனது மனந்திறந்து பேசும் துணிவும் பிறந்திருந்தது.

(30 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூட்டமைப்புக்கு எதிரான சக்திகளின் நோக்கம் நிறைவேறுமா?

சேரலாதன்

வடக்குகிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அரசியல் பாதுகாப்பு அரணாக விளங்குவது கூட்டமைப்பு என அழைக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை அனைவரும் அறிவார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழர்களுக்கென ஓர் அரசியல் கட்சியை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது சிங்களவர்கள் மத்தியிலும் புகழும், செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்த புகழ்பெற்ற சட்டவாதியான ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரில் அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்தார். தந்தை செல்வநாயகமும் இந்தக் கட்சியில் இணைந்து தமது அரசியல் பணிகளை ஆரம்பித்தார்.

**ஜி.ஜி.யுடன் செல்வா முரண்பாடு**

ஜி.ஜி.பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில். மலையகத் தமிழர்களுக்கு எதிரான தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதற்கு ஆதரவு தெரிவித்ததன் காரணமாக தந்தை செல்வநாயகம் அவருடன் முரண்படுவதற்கான சூழ்நிலையொன்று உருவானது. இதன் காரணமாக அவர் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார். இதைச் சமஷ்டிக் கட்சி என்றும் அழைப்பார்கள். தந்தை செல்வநாயகம் சமஷ்டிக் கொள்கையில் பற்றுறுதியுடன் செயற்பட்டதால் சமஷ்டி என்ற சொல் பிரபல்யம் பெற்றது. தமிழர் பிரதேசங்களில் தமிழ்க்காங்கிரஸும் தமிழரசுக்கட்சியும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்கின. நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறும்போது தமிழர் பகுதிகள் விழாக்கோலம் பூணுவது வழமையாக இருந்தது. ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தல் மேடைகள் அமைக்கப்பட்டு பரப்புரைகள் இடம்பெறுவதும் மக்கள் தாம் ஆதரிக்கின்ற கட்சிக்கூட்டங்களில் திரளாகக் கலந்துகொள்வதும் கண்கொள்ளாக் காட்சிகளாகக் காணப்பட்டன. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்காமல் கட்சி அடிப்படையில் ஒருவரையொருவர் தரக்குறைவாகப் பேசுவதையும் பரப்புரைக் கூட்டங்களில் காண முடிந்தது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவைப் பேணிவந்தது. ஐ.தே.க. அரசில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலம் அமைச்சராகவும் இருந்துள்ளார். ஆனால், தமிழரசுக் கட்சி அவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுப்பதில் கவனமாக இருந்தது. ஒருமுறை ஐ.தே.க அரசில் தமிழரசுக் கட்சி இணைந்திருந்ததும், அந்தக் கட்சியைச் சேர்ந்த எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பணிபுரிந்ததும் நினைவுக்கு வருகின்றது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தமிழர் கட்சிகள் உறவைப் பேணுவதற்கு எப்போதுமே பின்னடித்து வந்துள்ளன. அந்தக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் இனவாதச் செயற்பாடுகளே இதற்கான பிரதான காரணமாகும்.

**உதயமானது தமிழர் விடுதலைக் கூட்டணி**

இந்த நிலையில்தான் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பான சிந்தனைகள் எழுந்தன. நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் தமிழ்க் காங்கிரஸும், தமிழரசுக் கட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானது. இதன் தலைவர்களாக ஜி.ஜி.பொன்னம்பலமும், தந்தை செல்வநாயகமும் பதவி வகித்தனர். ஒரு கட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எஸ்.தொண்டமானும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

**கூட்டமைப்பை அழிக்க முடியாது**

தொடர்ந்து இடம்பெற்ற போர் காரணமாக தமிழர் அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழர் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக விடுதலைப் புலிகளே திகழ்ந்தனர். தற்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ என்பன ஆரம்பத்தில் அங்கம் வகித்தன. ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் ரெலோவும் இயக்கங்களாக இருந்து பின்னர் அரசியலில் கால் பதித்தமை குறிப்பிடத்தக்கது. மாகாண சபைத் தேர்தலின்போது ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும், தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் உம் கூட்டமைப்பில் இணைந்து கொண்டன. தற்போது தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகியன கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது கூட்டமைப்பில் விரிசல் ஏற்பட ஆரம்பித்தது. வேட்பாளர் தெரிவின்போதும், மாகாண அமைச்சரவை நியமனத்தின்போதும் இது வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது. பின்னர் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே சிறிய சலசலப்புத் தோன்றியது. தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றத் துக்கு உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்திலேயே பிணக்கு ஆரம்பமானது. அது இன்னமும் நீறு பூத்த நெருப்பாக இருப்பதைக் காணமுடிகின்றது.

அண்மையில் மருதனார்மடத்தில் இடம்பெற்ற கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தை தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் புறக்கணித்ததைத் தெளிவாகக் காணமுடிந்தது. இது கூட்டமைப்புக்கு நேர்ந்த பெரிய அவமானமாகும். ஒவ்வொருவரும் தத்தமது இஷ்டத்துக்கு ஏற்றவாறு கருத்துக்களைக் கூறிக்கொண்டாலும் கூட்டமைப்பு எதிர்காலத்திலும் நிலைத்து நிற்பதற்கு விருப்புடன் செயற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தென்பகுதி இனவாதிகள்கூட கூட்டமைப்பு நீடித்து நிலைப்பதை விரும்புவதில்லை. ஆனால் தமிழர்கள் சிலரே அதை அழித்து விடுவதில் முனைப்புடன் செயற்படுவதுதான் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இவர்களில் சிலர் தமது பதவிகளுக்காக மட்டுமே கூட்டமைப்புடன் ஒட்டிக் கொண்டிருப்பது அருவருக்கத்தக்கது. பதவி என்பதற்கும் மேலாக தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் நிறையவே உள்ளன. இதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சில தமிழ் ஊடகங்கள் சமீப காலமாக கூட்டமைப்புக்கும் அதன் முக்கிய தலைவர்களுக்கும் எதிரான கருத்துக்களைப் பரப்புவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் நோக்கம் என்னவென்று புரியவில்லை.

எவர் எதைக் கூறினாலும் கூட்டமைப்பு என்ற அந்தப் பெரிய விருட்சத்தை அழிக்கப் புறப்பட்டவர்களின் நோக்கம் நிறைவேறப் போவதில்லை. அவ்வாறு ஏதாவது நிகழ்ந்து விட்டால் அது தமிழ் மக்களுக்குச் செய்த துரோகமாகவே வரலாறு கூறும்.

> “கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தை தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் புறக்கணித்ததைத் தெளிவாகக் காணமுடிந்தது. இது கூட்டமைப்புக்கு நேர்ந்த பெரிய அவமானமாகும். ஒவ்வொருவரும் தத்தமது இஷ்டத்துக்கு ஏற்றவாறு கருத்துக்களைக் கூறிக்கொண்டாலும் கூட்டமைப்பு எதிர் காலத்திலும் நிலைத்து நிற்பதற்கு விருப்புடன் செயற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதற்கு நாட்கள் ஆகலாம்!

(தொடர்ச்சி)


இத்தனைக்கும் ஆலோசகரின் மென்மையான மனங் கவரும் வழிநடத்தல்களே திருமுகம் வீட்டுக்கு வெளியே செல்வதற்கு உதவியதாக எண்ணினார். இப்பொழுது அவரிடம் பயமே இல்லை என்று உறுதிபடக் கருதினர். இவற்றை அவதானித்தவாறு வாய்திறந்த ஆலோசகர், "நான் அடுத்த வாரம் உங்களை வந்து சந்திக்கின்றேன். பயமின்றி நீங்கள் வேலைக்குப் போகலாம்!" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுப் போனார். அவரை மலர்ந்த முகத்துடன் வழியனுப்பி வைத்தார் திருமுகம். மங்களத்திற்கும் திருமுகத்தின் மாமனார் மாமிக்கும் மகிழ்ச்சிக்கோ அளவில்லை. ஓரிரு நாள்கள் செல்ல அவரை வேலைக்குப் போகச் சொல்லலாம் என எண்ணியிருந்தவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்தைப்போல ஓரிரு தினங்களில் நிகழாதிருப்பது கண்டு அச்சம் ஏற்பட்டது. திருமுகம் வீட்டுக்கு வெளியே போக இன்னமும் ஏன் துணியவில்லை? ஆலோசகர் வழங்கிய ஆலோசனைக்குப் பின்னரும் ஒரு வாரத்துக்கும் மேலாக அவர் வீட்டுக்கு வெளியே போகவே இல்லை.

மீண்டும் ஆலோசகர் வந்தார்.

திருமுகத்துடன் தனது ஆலோசனைகளை மீட்டுப் பார்த்தார். "பயம் உங்களை விட்டுப் போய்விட்டதல்லவா? ஏன் நீங்கள் வேலைக்குப் போகாமலிருக்கிறீர்கள்?" ஆலோசகர் கேட்டார். திருமுகம் சொன்ன பதிலால் ஆலோசகர் அதிர்ந்து போனார்.

"எனக்குப் பயமென்பதில்லை. ஆனால் பயமுறுத்தல்கள் என்னைச் சூழ்ந்து இருக்கின்றன. தொலைந்துபோன அப்பாவிகளைக் காணாமற்போகச் செய்தோரையும் கொலைகாரரையும் அவ்வாறு செய்யவேண்டாமென்றோ அல்லது இந்தக் கொடியவர்களை எமது சுற்றாடலில் இருந்து அகன்று போகும்படியோ அவர்களுக்கு அறிவுரை வழங்கிவிட்டீர்களா?" என்று திருமுகம் எந்தச் சலனமுமின்றித் திருப்பிக்கேட்டார்.

"அவர்கள் என்னைச் சூழ இருப்பதுதான் எனக்குப் பயத்தை ஏற்படுத்துகிறது! இந்தக் கொடியவர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்கி அவர்களை இல்லாதொழிப்பது யார்?" திருமுகத்திடமிருந்து வந்த இந்தச் சிந்தனையைத் தூண்டிய வினா, பயத்துக்கான காரணம் திருமுகத்திடமல்ல வெளியிலேதான் இருக்கிறது என்பதை உறுதி செய்தது. அதுவே திருமுகத்தின் விபரீதத்துக்குக் காரணமானது. அதனை ஒழிக்காமல் எவ்வாறு திருமுகத்தின் அச்சத்தை நீக்குவது? உளவள ஆலோசகரின் மனம், திருமுகத்தினை வருத்தும் நோயைத் தீர்க்கும் மருந்தைத் தேடிச் சிந்தனையை விரித்தது. அது, விடைகாண இயலாத வினாக்களையே தோற்றுவித்தன. திருமுகம் வேலைக்குப் போகத் தயாராக இன்னமும் நாள்களாகலாம்...!





# ராசி இல்லாத ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

"எடக்கோதாரி! படம் ஓடத்துவங்கீட்டுது. இனி உந்த இருட்டுக்கைபோய் தேடிப் பிடிக்கவேணுமே! கொஞ்சம் வேளைக்கு வந்திருந்தால் எங்கையேன் வடிவான பெட்டையளிருக்கிற பக்கம் பார்த்து இருந்திருக்கலாம். சரி பரவாயில்லை. பகல்படம்தானே! அவ்வளவு இருட்டாயிருக்காது. எங்கையெண்டாலும் போய் ஓரிடத்திலை குந்துவம். பிறகு வசதியைப் பார்த்து இடத்தை மாத்துவம்."

நினைத்தபடி திரையரங்குக்குள் சென்று எப்படியோ ஒருசீற்றைப் பிடித்துவிட்டேன். படம் ஓடிக்கொண்டிருந்தது. படத்தில் யார் யாரோ வருகின்றான் போகின்றன். அடிதடி பொலிஸ்பட்டாளமென்று ஒரே அமர்க்களமாயிருந்தது. என்னவும் நடக்கட்டும். எனக்கு இப்போது வேண்டியது படமல்ல. என்னைக் காதலிக்கக்கூடிய அழகான வசதியுள்ள ஒருத்தியை சந்தித்து விட்டால் திருப்தி. அதுவேபோதும். திரையில் என்ன படம் ஓடுகின்றதென்பது கூடத்தெரியாது. அதை அறிய வேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் திரையிலிருந்து அடிக்கடி வரும் ஒளியின் மூலமாக ஆங்காங்கே அமர்ந்திருப்பவர்களைப் பார்க்கக் கூடியதாயிருந்தது.

மறு வரிசையில் நான்கைந்து பெண்கள் கூட்டமாக அமர்ந்திருந்து படத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். அங்கே போகக் கூடாது. நான்கைந்து பெண்களிடமிருக்கும் இடத்தில் போய் எதுவும் செய்ய முடியாது. தனியாக யாராவது அமர்ந்திருந்தால் அங்கே போய் முயற்சி செய்து பார்க்கலாம். கண்ட இடமெல்லாம் மனத்தை அலைய விட்டால் வீணாக வாங்கிக் கட்ட வேண்டி வரும்; வேண்டாம். பொங்கி வந்த ஆசை வெள்ளத்துக்குஅணை போட்டுவிட்டு இருக்கையில் அமர்ந்திருந்தேன்.

திரையரங்கில் இருந்து வெளியான வெளிச்சத்தில் இப்போதுதான் பார்த்தேன். எனது முன்வரிசையில் எனக்கு நேராக ஒரு நாகரிக யுவதி தனியாகவே அமர்ந்திருப்பது எனது குருட்டுக் கண்களுக்குப் புலப்பட்டது. அட! கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யைத்தேடி அலைந்திருக்கின்றேனே! என்னுடைய மடமையை எண்ணி எனது தலையில் நானே இரண்டு குட்டுக்கள் போட்டேன். மகேசன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. தியேட்டரில் தனியாக இருப்பவளிடம் மட்டும் முயற்சி செய். கூட்டமாயிருப்பவர்களிடம் வால் காட்டாதே என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டான். சரி போகட்டும். இப்போது முன்வரிசையில் ஒருத்தி தனியாகவே இருக்கின்றாள். அடுத்தடுத்த சீற்றுக்களிலும் சில ஆண்களிருக்கின்றார்கள்.

அலையலையாய் நீண்ட கூந்தல். சிவப்பு நிற ரீசேட் அணிந்திருந்தாள். செக்கச் செவேலென்று இலட்சணமாயிருந்தாள். கழுத்தில் தங்கச் சங்கிலியொன்று தகதகவென மின்னிக் கொண்டிருந்தது. அவளுக்கு அருகிலிருந்தவர்கள் அனைவரும் படத்திலே லயித்திருந்தனர். ஏன்! இவளும் தன்னை மறந்து படத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

என்னுடைய தவிப்பு அவளுக்கெங்கே புரியப் போகின்றது. ஏதாவது பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்றால் எங்கே! திரையில் ஒலிக்கும் சத்தத்தினால் எதுவும் பேசமுடியாது. அத்தனை இரைச்சலாகவும் சத்தமாகவும் இருந்தது. இருந்தும் என்னால் இனியும் பொறுமை காக்க முடியவில்லை. வருவது வரட்டும் என எண்ணியபடி அவளுடைய கதிரையின் பின்புறத்தால் மெ...ல்...ல... மெ...ல்....ல... எனது காலை நீட்டி அவளின் ஒரு காலை மெல்லத் தொட்டுக் கொண்டேன். என்னுடைய தொடுகைக்குத் தடை போட்டாள் போலவேயிருந்தது. மீண்டும் ஏதோ எதேச்சையாகக் காலை நீட்டுபவன்போல் மெல்ல நீட்டிப் பார்த்தேன். இந்தத் தடவை அவள் காலை எடுக்காது என்னுடைய தொடுகைக்காகக் காத்திருப்பது போன்றிருந்தது. சற்றுத் துணிவு பிறந்தநிலையில் இப்போது அவளின் காலுடன் எனது காலை அப்படியே தொடர்ந்து வைத்திருந்தேன். அவளிடமிருந்து எந்தவித எதிர்ப்பும் கிளம்பவில்லை. அதனைச் சாதகமாக்கிக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாரானேன். காலுக்கு மேல் காலை வைத்துக்கொண்டிருந்து எதுவும் நடக்காது மெதுவாகப் பாதத்தில் அவளின் பாதத்தை உராசிப் பார்த்தேன்.

(37 ஆம் பக்கம் பார்க்க)

நகைச்சுவைத் தொடர் 10



"என்னுடைய தவிப்பு அவளுக்கெங்கே புரியப் போகின்றது. ஏதாவது பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்றால் எங்கே! திரையில் ஒலிக்கும் சத்தத்தினால் எதுவும் பேசமுடியாது. அத்தனை இரைச்சலாகவும் சத்தமாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெக்கையை எதிர்கொள்வோம்!

■ கு.கணேசன்

அக்னி நட்சத்திர (அக்னி நாள்) வெயில் ஆரம்பித்துவிட்டது. இந்த ஆண்டில் கோடை காலம் தொடங்கியதை அடுத்து என்றுமில்லாதபடிக்கு நாடு வெக்கையால் பெரும் அவதிப்படுகின்றது. வடமத்திய மாகாணத்தில் பாடசாலைகளை நண்பகலுடன் மூடும் அளவுக்கு வெயிலின் கொடுமைமோசமாக உள்ளது. வடக்கில் பாடசாலைகள் மூடப்படவில்லையாயினும் இங்கும் வெக்கை தாங்க முடியாததாகவே இருக்கிறது.

பத்திரிகைகளில் வெளியாகும் சாவு அறிவித்தல்களின் எண்ணிக்கையில் கடந்த சில நாள்களாகத் திடீர் அதிகரிப்பைக் காண முடிகின்றது. இவர்கள் வெக்கையின் நேரடிப் பாதிப்பால்தான் இறந்தார்கள் என்று சொல்வதற்குச் சான்றுகள் இல்லையாயினும் திடீர் இறப்பு அதிகரிப்புக்கும் வெக்கை அதிகரிப்புக்கும் இடையே ஒரு நூலிடைத் தொடர்பு இருக்கும் என்பதை நிராகரித்துவிடவும் முடியாது. மருத்துவத் துறையினரே சரியான ஆய்வுகளின் மூலம் இந்த சாவுகளின் திடீர் அதிகரிப்புக்கான காரணத்தைச் செம்மையாக விளக்க முடியும். இப்போதே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தால், உயிரிழப்புகளைப் பெருமளவு தடுக்க முடியும்.

**வெப்பத் தளர்ச்சி**

வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும்போது உடலின் வெப்பம் சிலருக்கு 106 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் ஆகிய அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக உடலின் உப்புக்கள் வெளியேறிவிடுவதால், இந்தத் தளர்ச்சி ஏற்படுகிறது. இதற்கு வெப்பத் தளர்ச்சி (Heat Exhaustion) என்று பெயர்.

நீண்ட நேரம் வெயிலில் நிற்பவர்கள், வேலைசெய்பவர்கள், சாலையில்நடந்து செல்பவர்கள் திடீரென மயக்கம் அடைவதை அறிவீர்கள். இது வெப்ப மயக்கத்தின் (Heat Syncope) விளைவு. 'சன் ஸ்ட்ரோக்' என்று அழைப்பது இதைத்தான். வெயிலின் உக்கிரத்தினால் தோலிலுள்ள குருதிக் குழாய்கள் அதீதமாக விரிவடைந்து இடுப்புக்குக் கீழ் குருதி தேங்குவதற்கு வழிசெய்துவிடுகிறது; இதனால், இதயத்துக்குக் குருதி வருவது குறைந்துவிடுகிறது. குருதி அழுத்தம் கீழிறங்குகிறது. மூளைக்குப் போதுமான குருதி கிடைப்பதில்லை. உடனே, தலைச்சுற்றல், மயக்கம் உண்டாகிறது. சிலருக்கு இறப்பு ஏற்படுகிறது.

வெப்ப மயக்கம் ஏற்பட்டவரைக் குளிர்ச்சியான இடத்துக்கு மாற்றி, ஆடைகளைத் தளர்த்தி, காற்று உடல் முழுவதும்படும்படிசெய்யவேண்டும். அவரைச் சுற்றிக் கூட்டம் சேர்வதைத் தவிர்க்க வேண்டும். தண்ணீரில் நனைத்த துணியால் உடலைத் துடைக்க வேண்டும். மயக்கம்தெளிந்ததும் குளுக்கோஸ் தண்ணீர், பழச்சாறு அல்லது நீர்மோர் கொடுப்பது அவசியம். இது மட்டும் போதாது. அவருக்கு மருத்துவ உதவி கிடைப்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

**புற ஊதாக் கதிர்களின் ஆபத்து**

இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளில் கோடை வெயிலில் வெளிப்படுகின்ற புற ஊதாக் கதிர்களால் ஏற்படுகிற உடல் பாதிப்புகள் அதிகம். இந்தக் கதிர்களில்'ஏ', 'பி' என்று இரு வகை உண்டு. 'ஏ' வகைக் கதிர் கள் இளங்காலையிலும் மாலைப் பொழுதிலும் வெளிப்படும். இவை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை தாக்கும் வெயிலில் 'பி' வகைக் கதிர்கள் வெளிப்படும். இவை 'சன் ஸ்ட்ரோக்' முதல் தோல் புற்றுநோய் வரை உடலில் பலவித பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

முக்கியமாக, தோலுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாமல் வெயிலில் அதிக நேரம் அலைகிறவர்களுக்குச் சருமம் கறுப்பாகிவிடுவதைக் கவனித்திருப்பீர்கள். இதற்குக் காரணம், சூரியக் கதிர்கள் அதிக வெப்பத்துடன் நேரடியாக சருமத்தைத் தாக்கும்போது, அதிலுள்ள 'பி' வகை புற ஊதாக் கதிர்கள் சருமத்தின் செல்களில் உள்ள டி.என்.ஏக்களை அழிக்கின்றன. அந்த அழிவை ஈடுகட்டுவதற்காகச் சருமத்துக்குக் கறுப்பு நிறம் தருகின்ற மெலனின் நிறமிகள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இதன் விளைவால், சருமம் கறுத்துவிடுகிறது.

அக்னிநட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது 42 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெயில் கொளுத்தும். அப்போது புற ஊதாக் கதிர்களின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல், தோலும் அதைச் சார்ந்த குருதிக் குழாய்களும் விரிந்து சிவந்துவிடும். அந்த வேளையில் சிஎக்ஸ்சிஎல்—5 (CXCL5) எனும் புரதம் தோலில் உற்பத்தியாகும். இது அருகிலுள்ள நரம்புகளைத் தூண்டும். இதன் விளைவால் சருமத்தில் எரிச்சல், வலி, வெப்பப் புண்கள் (Sun Burn) ஏற்படும். பலருக்கு சூரிய ஒளியே ஒவ்வாமையை உண்டாக்கும். வெயில் பட்டாலே உடலெங்கும் அரிக்கத் தொடங்கிவிடும். தோல் சிவந்து வட்ட வட்டமாகத் தடிப்புகள் தோன்றும். அவற்றில் நீர் கோத்துக் கொள்ளும். இதைத் தொடர்ந்து சருமம் உரியும். இதற்கு சூரியஒளி நச்சு அரிப்பு (Solar Urticaria) என்று பெயர். இவை தவிர, கோடையில் பொதுவாகத் தாக்கும் நோய்கள் வியர்க்குரு, வேனல் கட்டி, தேமல் தொற்று, அக்கி, அம்மை, வாந்தி, வயிற்றுப்போக்கு, நீர்க்கடுப்பு எனப் பட்டியல் நீளும்.

**வெப்பத்தைத் தணிக்க**

கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்கவேண்டும். மூன்றிலிருந்து ஐந்து லீற்றர் தண்ணீர் குடிப்பது அவசியம். ஐஸ் தண்ணீரைவிட, மண் பானைத் தண்ணீர் நல்லது. எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சீனி அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், 'கிரீம்' மிகுந்த 'பேக்கரி' பண்டங்கள், 'பர்கர்', 'பீட்ஸா', 'ஐஸ்கிரீம்' போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது. அதேபோல், சூடான, காரமான, அதிகம் கறித்தூள் கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

இட்லி, இடியப்பம், தயிர் சாதம், கம்பங்கூழ், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கரட், பீற்றூட், பீர்க்கங்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடலை, அவரை, முட்டைக்கோஸ், வாழைத் தண்டு, தக்காளிச் சம்பல் முதலியவை சிறந்த கோடை உணவுகள். மாலை வேளைகளில் வெள்ளரி சாலட், தர்பூசணி சூப், தக்காளி சூப் வகைகளைச் சாப்பிடலாம். திராட்சை, உள்ளூர் தோடம்பழம், ஒரேஞ்ச், எலுமிச்சை, மாதுளை, முலாம் பழம், அப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் அருந்தலாம். நுங்கு, கிர்ணி, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும். கோப்பி, தேநீர் மற்றும் குளிர் பானங்கள் குடிப்பதைக் குறைத்துக் கொண்டு, இளநீர், நீர்மோர், பானகம், பதநீர் முதலியவற்றை அதிகமாகக் குடிக்கலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கல்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்ப நிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

**வெயிலைச் சமாளிக்க**

கோடை காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்கவேண்டும். பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. பகலில் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக்கொள்ள வேண்டும். அல்லது குடை கொண்டு செல்லவேண்டும். கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்துகொள்ளலாம்.

தோலில் 'சன் ஸ்கிரீன் லோசன்' பூசிக் கொள்ளலாம். சுத்தமான தண்ணீரை எப்போதும் கூடவே வைத்துக்கொள்ள வேண்டும். காற்றோட்டமான பருத்தி ஆடைகள் கோடைக் காலத்துக்கு ஏற்றவை. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிவது முக்கியம்.

ஒவ்வொரு வருடமும் அதிகரித்துவரும் வெயில் ஒரு சவால்தான். ஆனால், அதில் இருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்துகொண்டால், அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். நம் ஆரோக்கியம் நம் கையில்!

(கட்டுரையாளர் அனுபவம்மிக்க மூத்த பொதுநல மருத்துவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொக்லேட் கேக்

## தேவையான பொருள்கள்

மைதா மா - அரைக் கப்
பேக்கிங் சோடா கால் கப்
புளித்த தயிர் 2 கரண்டி
கொக்கோ பவுடர் 1 கரண்டி
கருப்பட்டி அரைக் கப் (பொடி செய்தது)
எசன்ஸ் அரைக்கரண்டி
வெண்ணெய் கால் கப் (உருக வைத்தது)
தண்ணீர் கால் கப்

செய்முறை

முதலில் பேக்கிங் சோடாவை, புளித்த தயிரில் சேர்த்து கலந்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் மைதா மாவில் கொக்கோ பவுடரைப் போட்டுக் கலந்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு ஒரு கப் தண்ணீர் ஊற்றி, மைக்ரோ ஓவனில் வைத்து ஒரு நிமிடம் சூடேற்றி இறக்க வேண்டும். பின்னர் அதில் கருப்பட்டி மற்றும் உருக்கி வைத்துள்ள வெண்ணெய் சேர்த்து கட்டிகள் சேராதவாறு கிளறி விட வேண்டும்.

அடுத்து அதில் மைதா கலவை, தயிர் கலவை மற்றும் எசன்ஸ் ஆகியவற்றை மெதுவாக சேர்த்து மென்மையாக கிளறிவிட வேண்டும். இறுதியில் பேக்கிங் தட்டில் எண்ணெய் தடவி, பின் கிளறி வைத்துள்ள மாவை ஊற்றி, மைக்ரோ ஓவனில் வைத்து 4 நிமிடங்கள் பேக் செய்து இறக்கி, 10 நிமிடங்கள் கழித்து பரிமாறினால், சொக்லேட் கேக் ரெடி!



# அழகான கூந்தலுக்கு...

தலையின் வறட்டுத் தன்மையைப் போக்கி, ஜொலி ஜொலிக்க வைக்கிறது தோடைத் தோல் சிகிச்சை. உலர்ந்த தோடைத் தோல், துண்டுகளாக்கிய வெட்டிவேர், சம்பங்கி விதை, பூலான் கிழங்கு, கடலை பருப்பு, பயந்தம் பருப்பு, கசகசா... இவை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து, அரைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பவுடரை வாரம் ஒரு முறை தலைக்குத் தேய்த்து குளியுங்கள். இப்படி செய்து வந்தால் முடி பளபளப்பாகவும், வாசனையாகவும் இருக்கும். இதையே உடம்புக்குத் தேய்த்துக் குளிக்கும் வாசனை பவுடராகவும் பயன்படுத்தலாம். தலை எப்போதும் சுத்தமாக இல்லாவிட்டால், அது குப்பைக் கூடையாகி அரிப்பு ஏற்படும். இந்த அரிப்பை அடியோடு அகற்றுகிறது.

**தோடை மசாஜ் சிகிச்சை.**

உலர்ந்த தோடை தோல் 100 கிராம், வெந்தயம் 100 கிராம், பிஞ்சு கடுக்காய் 10 கிராம், வால் மிளகு 10 கிராம், பச்சை பயறு கால் கிலோ... எல்லாவற்றையும் கலந்து அரைத்துக்கொள்ளுங்கள். இதை வாரம் இரு முறை தலையில் நன்றாகத் தேய்த்துக் குளியுங்கள். அரிப்பு போவதுடன் சுத்தமும், வாசனையுமாகக் கூந்தல் காணப்படும்.



# முகம் பொலிவடைய வேண்டுமா?

1. ஒரு தேக்கரண்டி ஓட்ஸ், இரண்டு தேக்கரண்டி தக்காளிச்சாறு, இரண்டு தேக்கரண்டி கரட் சாறு ஆகியவற்றைக் கலந்து முகத்தில் தடவி , அரை மணி நேரத்துக்கு பின் கழுவவும்.
2. தோல் நீக்கிய திராட்சையை முகத்தில் தடவி சிறிது நேரம் சென்ற பின் கழுவுவதும் முகத்துக்கு பொலிவைத் தரும்.
3. முகத்திலுள்ள பருக்களை நீக்க ஒரு பல் பூண்டு அல்லது துண்டு கராம்பை அரைத்து அதை விரல் நுனியில் தொட்டு பரு மீது வைத்தால், அது அப்படியே அமுங்கி விடும்.
4. முகத்தை அடிக்கடி ப்ளீச்சிங் செய்வது சரியானதல்ல. ஏனெனில் சிலவிதமான ப்ளீச்சிங்கில் அடங்கியுள்ள அமோனியா போன்ற இரசாயனப் பொருள்கள் முக சருமத்துக்கு கேடு விளைவிக்கக்கூடும். குறிப்பாக முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இது ஒவ்வாமையை விளைவிக்கும். மேலும், ப்ளீச்சிங் அதிகமானால், முகத்தில் சுருக்கங்கள் ஏற்படவும் காரணமாகிறது.
5. அடிக்கடி முகத்தைக் கழுவுவதனால், முகச் சருமத்தின் இயல்பு மாற்றமடையக் கூடும். குறிப்பாக சோப்பு உபயோகித்து இப்படிக் கழுவுவதால், சோப்புகளில் உள்ள காரத் தன்மை சருமத்தை வறட்சிக்குத் தள்ளிவிடும்.
6. எண்ணெய் மயமான சருமம் உடையவர்கள் முகம் கழுவும் போது பச்சைப் பயறு மாவு உபயோகிப்பது நல்லது. இரவு உறங்கச் செல்லும் முன்னர் முகத்தை சுத்தமாகக் கழுவுவது நல்லது. எண்ணெய்ப் பசை உள்ள சருமத்தில், முகப் பருக்கள் ஏற்பட சாத்தியம் அதிகம். தினமும் அல்லது அடிக்கடி முருங்கைக்கீரை உணவுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். பொரித்த மற்றும் வறுவல் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
7. சிலருக்கு சருமம் வறட்சியாக இருக்கும். சோப்புகளை அடிக்கடி மாற்றுவது சருமத்தின் வளர்ச்சியைக் கூட்டக்கூடும். இவர்கள் அரிசி மா, பால், கஸ்தூரி மஞ்சள் போன்றவற்றை கலந்து முகத்தில் பூசிக் கொள்வதால், வறட்சியைத் தடுக்கலாம்.



# கண்கள் புத்துணர்ச்சி பெற.....

கண்களின் கீழ் கருவளையம் வருவதற்கு காரணம் தூக்கம் இன்மை, ஒழுங்காகச் சாப்பிடாமல் இருப்பது. தண்ணீர் அதிகமாக குடிக்காமல் இருப்பதாலும், அதிகமாக தொலைக்காட்சி பார்ப்பது, இவை எல்லாம் காரணம் ஆகிறது. கருவளையம் வராமல் தடுக்க, குறைந்தது 8 மணி நேரம் ஆழ்ந்த நித்திரை இருக்க வேண்டும். தூங்கும் போது எந்த விதமான மன உளைச்சல்களும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

படுப்பதற்கு முன் சூடான பாலில் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நல்ல தூக்கம் வரும். மனதையும், உடலையும் பதற்றமாக வைத்துக் கொள்ளா மல் ஓய்வாக இருப்பதும், நல்ல தூக்கத்துக்கு வழி செய்யும்.

சாப்பிடும் உணவில் அதிகமாக காய்கறி, கீரை வகைகளை அதிகமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக அதிக நார்சத்து உள்ள காய் கறிகளை சேர்த்துக் கொள்வது நல்லது. வெள்ளரிகாய், உருளைகிழக்கு, தக்காளி ஆகியவற்றை மெலிதாக கட் செய்து கண்களுக்கு மேல் வைக்கவும், இதனால் கண்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2014 இல் மகிந்த தரப்பினர் எங்கே? போயிருந்தார்கள்

சிங்களமொழி மூலம் மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ

இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும்போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென 2014 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடபகுதியில் பற்றவைக்கப்பட்ட முதலாவது அரசியல் குண்டு அதுவாகும். அத்தோடு போரில் உயிரிழந்தோரை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபியொன்று அமைப்பதற்கான பிரேரணையும் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அது சர்வதேச விசாரணை தேவை என்ற அரசியல் குண்டை விட பாரதூரமானதொரு குண்டாகும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட இரண்டு பிரேரணைகள் குறித்தும் அவ்வேளையில் சிங்களமொழி ஊடகங்கள் எதுவும் விமர்சனம் மேற்கொண்டதில்லை. இன்று சமஷ்டி ஆட்சிமுறை தேவையென வடமாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் குறித்து துள்ளிக் குதித்து கூப்பாடுபோடும் சிங்களமொழி ஊடகங்கள் 2014 ஜனவரியில் வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய பிரேரணைகள் குறித்து சிறு செய்தியாகத் தானும் பிரசுரிக்கவில்லை. தினமும் காலையில் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் குறித்து செய்தி வெளியிடும் இலத்திரனியல் ஊடகங்கள் கூட அவ்வேளையில் மாகாண சபையின் தீர்மானங்கள் குறித்து வாய் திறந்ததில்லை. அந்தவேளையில் ஜனாதிபதியாக மகிந்தவும், பாதுகாப்புச் செயலராக கோத்தபாயவும், விமல்வீரவன்ச அரசில் அமைச்சரொருவராகவும் இருந்த போதிலும் வடக்கு மாகாண சபையின் அவ்வேளைய தீர்மானங்கள் குறித்து அவர்களில் எவரும் எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறையின் அவசியம் குறித்து 1948 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தமிழ் அரசியல்வாதிகளால் கோரிக்கை எழுப்பப்பட்டு வந்துள்ளது. போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியமென பிரேரணை நிறைவேற்றப்பட்ட போதுகூட, அதனால் நாட்டுக்குப் பாதிப்பேதும் ஏற்படப்போவதில்லை என வாயடித்து வந்த மகிந்த தரப்பினர், தற்போது வடக்கு மாகாண சபையால் சமஷ்டி ஆட்சிமுறை தேவை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து நாட்டுக்கு ஆபத்து நேர்ந்துள்ளது எனக் கூப்பாடு போட ஆரம்பித்துள்ளனர்.

இன்று மகிந்த தரப்பினருக்கு இரத்த தாகம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் வடபகுதியில் இரத்தம் சிந்தப்படுதைக் காண அவர்கள் விரும்புகின்றனர். ஏனெனில் இந்த அரசைத் தம்மால் பதவியிலிருந்து அகற்ற இயலாதெனவும், அதை விடுதலைப் புலிகளாலேயே செய்ய இயலுமென்பதையும் மகிந்த தரப்பினர் நன்கறிந்துள்ளனர். எனவே தற்போது வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கும் இடையே கருத்து வேறுபாடு முற்றிப் பிளவு ஏற்படுமானால் அது மகிந்த தரப்பினருக்கான வாய்ப்பாகி விடும். இன்று விக்னேஸ்வரன் மற்றும் சம்பந்தன் தரப்பினர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே வடக்கில் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. புலம்பெயர் தமிழ்ப் புலிகள் தரப்பினரை வழிநடத்தும் விடுதலைப் புலிகள் ஆதரவு அரசியல்வாதிகள், சம்பந்தன் தரப்பினர் தமிழ் மக்களை மைத்திரி – ரணில் அரசிடம் அடைவுவைத்துச்செயற்படமுனைவதாகச்சம்பந்தன்தரப்பினர் மீது குற்றம் சாட்டி வருவதே அதற்கான காரணமாகும். எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கும் நிலையிலும், தமிழ் மக்களுக்கு சம்பந்தன் தரப்பினரால் எந்தவித நன்மையும் கிட்டவில்லை. தமிழ் மக்களது பாரம்பரிய நிலங்களை அபகரித்துள்ள இராணுவத்திடமிருந்து அவைகளை மீட்டெடுக்கக்கூட இவர்களால் இயலாது போயுள்ளதே? என விடுதலைப் புலிகளது ஆதரவாளர் தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர். இதைக் கண்டு அடுத்துவரும் தேர்தலில் தமது வெற்றி வாய்ப்புப் பாதிக்கப்பட்டு விடுமோவென சம்பந்தன் தரப்பினர் அச்சமடைய ஆரம்பித்துள்ளனர். இதனால் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களது நிலங்களை விடுவித்துக் கொள்வதற்காக இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள சம்பந்தன் தரப்பினர் முயற்சிக்கின்றனர். இதற்காக இராணுவ முகாம்களுக்கு அவர்கள் செல்வதன் மூலம் சுயபிரபல்யம் தேட முனைகின்றனர். இத்தகைய விதத்தில் விக்னேஸ்வரன் தரப்பினரும், சம்பந்தன் தரப்பினரும் மைத்திரி-ரணில் அரசுடன் கருத்து முரண்பாடுகளை வளர்ப்பதை புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் விரும்புகின்றன. எதிர்வரும் நாள்களில் சம்பந்தன் கைது செய்யப்படுவாரானால் அது புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கு அதிர்ஷ்ட[illegible] றமை போன்றதாக அமையும். அதேபோன்று அரசால் வடக்கு மாகாண சபை கலைக்கப்படுமானால் அது புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கு மகிழ்ச்சி தருமொன்றே.

தற்போது வடபகுதியில் பேச்சுச் சுதந்திரம் கிடையாது. ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க இயலாது போயுள்ளது. நாம் வேண்டிய நிதியுதவி செய்கிறோம். ஆயுதப் போராட்டத்தை ஆரம்பியுங்கள் எனக்கூற புலம்பெயர் புலி ஆதரவு தரப்பினர் தயாராகி வருகின்றனர். பற்றி எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றி வளர்க்கும் விதத்தில் மகிந்த தரப்பினரும் அவர்களுக்கு ஆதரவான ஊடகங்களும் இதனை ஊதிப்பெருப்பித்து வருகின்றன. நான் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழையவில்லை. பேச்சுக்களை மேற்கொள்ளவே சென்றேன் என சம்பந்தன் தமது கருத்தை மாற்றிக் கூறியபோதிலும் மகிந்த தரப்பினர் சம்பந்தன் அத்துமீறியே இராணுவ முகாமுக்குள் சென்றதாகக் கூப்பாடு போடுகிறார்கள்.

நான் அத்துமீறித்தான் இராணுவ முகாமுக்குள் சென்றேன். அது எமது மக்களுடைய நிலம். அவற்றை விடுவிப்பதற்கு எமது மக்களை ஒன்று கூட்டிப் போராடப் போகிறோம் என்று சம்பந்தன் கூறியிருந்தால் அரசு அது விடயத்தில் தீர்மானமொன்றை மேற்கொண்டாக வேண்டியிருந்திருக்கும். ஆனால் சம்பந்தன் அத்தகைய கருத்தெதனையும் வெளியிடவில்லையே? தாம் அங்கு செல்லவிருப்பது குறித்து இராணுவத்துக்கு முற்கூட்டியே தெரிவிக்கத் தவறியதாகவல்லவா அவர் கூறியிருக்கிறார். ஆனால் மகிந்த தரப்பினரோ, இந்த விடயத்தை ஊதிப் பெருப்பித்து, வடபகுதியில் குழப்பமொன்றை உருவாக்கவே முயற்சிக்கின்றனர். அதன் மூலம் ராஜபக்சவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி அது. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பிரபாகரனது வலதுகரமாகச் செயற்பட்ட கே.பி என அழைக்கப்பட்ட குமரன் பத்மநாதனை இராணுவப் பாதுகாப்புடன் வடபகுதிக்குச் செல்ல உதவியதுடன், அரச சார்பற்ற நிறுவனமொன்றை வடபகுதியில் ஏற்படுத்தப் பல ஏக்கர் காணியை வழங்கிய மகிந்த அரசின் செயற்பாடு அந்தவேளையில் அவர்களால் நாட்டுப் பற்றுச் செயற்பாடொன்றாக அடையாளப்படுத்தப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல் அங்கியில் இருந்த வெடிமருந்தைப் பயன்படுத்தி குண்டொன்றைத் தயாரிக்க அவர்களால் இயலாது போய்விட்டதே! சம்பந்தன் இராணுவ முகாமுக்குள் பிரவேசித்தபோது அதற்கு இடமளிக்க இயலாதெனக் கூறி இராணுவத்தினர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்திருக்க வேண்டுமல்லவா?

ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதாகக் கனவு காணும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், மதமுலனையில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகள் நாட்டை நாசப்படுத்துவதாகக் கனவு காணும் மகிந்த தரப்பினரும் தமது மனவெப்பியாரத்தைப் போக்கிக் கொள்ள வெளியிடும் கருத்துக்களே மேற்கண்டவை. சம்பந்தன் ஒருபோதுமே ஆயுதமேந்திச் செயற்பட்ட ஒருவரல்ல. விக்னேஸ்வரனோ போர் இடம்பெற்ற காலகட்டத்தில் கொழும்பில் உயர்நீதிமன்ற நீதியரசராகப் பணியாற்றிய ஒருவராவார். இன்று மகிந்த தரப்பினரது பார்வையில் இவர்கள் இருவரும் தற்கொலைப் புலிப் போராளிகளாகத் தோன்றுகின்றனர். சம்பந்தனோ விக்னேஸ்வரனோ இன்றோ நாளையோ மகிந்தவுக்கு ஆதரவான கருத்தை வெளிப்படுத்துவார்களேயானால் அவர்கள் சிங்கள இனப்பாதுகாவலர்களாக மகிந்த தரப்பினரால் அடையாளப்படுத்தப்படுவர்.

அன்று போரை ஆரம்பிக்க மகிந்த இராணுவத்தைத் தயார்ப்படுத்திய அதேவேளையில், தனது செயலாளர் லலித் வீரதுங்கவை இரகசியமாக வன்னிக்கு அனுப்பி வைத்ததை போர் முடிவடைந்த பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் லலித் வீரதுங்க பகிரங்கப்படுத்தியிருந்தார். மகிந்தவுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட முன்வருமாறு தாம் தமிழ்ச்செல்வன் ஊடாகப் பிரபாகரனுக்குச் செய்தியொன்றை அனுப்பி வைத்ததாகவும் லலித் வீரதுங்க உண்மையைப் போட்டுடைத்திருந்தார். அந்த வேளையில் பிரபாகரன் தமது கோரிக்கையை ஏற்றுச் செயற்பட்டிருந்தால் போரே இடம்பெற வாய்ப்பு அற்றுப் போயிருந்திருக்கும் எனவும் லலித் வீரதுங்க கூறியிருந்தார்.

நீங்கள் நாட்டின் தென்பகுதியை நிர்வகியுங்கள். நான் வடபகுதியை நிர்வகிக்கின்றேன். ரணிலையும் ஐ.தே. கட்சியையும் ஒட்டுமொத்தமாக நான் ஒழித்துக் கட்டித் தருகிறேன் என அன்று பிரபாகரன் பதிலளித்திருந்தால் இன்று மகிந்த தரப்பினருக்கு பிரபாகரன் புலியாகவன்றி பூனைக்குட்டி ஒன்றாகவே தோன்றியிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை வாழ்வதற்கே!

ஒவ்வொருவரின் தற்கொலைக்குப் பின்புலத்திலும் ஏதோ காரணங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டே வருகிறது. ஆனால் இந்த அஸ்வினி தனது தற்கொலை முயற்சிக்காக முன்வைத்த நியாயங்கள் எல்லாமே பொருத்தமானதாக உறவினர்களுக்குத் தெரியவில்லை. அவளைத் தற்கொலை செய்யத்தூண்டியது எது?

பலரும் பள்ளிக் காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமையை ஏற்றுக்கொள்ள இயலாமல் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். அனுபவம் பெருகாத இளமைக் காலத்தில் காதல் தோல்வியைத் தாங்கிக்கொள்ள இயலாதவர்களாகித் தற்கொலை செய்து கொள்வோருமுண்டு. பெற்றோரின் கண்டிப்பும் ஏச்சும் பேச்சும் சிலரைத் தற்கொலைக்குத் தூண்டி விடுகின்றன. இவை எல்லாமே அறியாமையால் ஏற்பட்ட ஆற்றாமையினால் விளைந்தவையே! ஆனால் அஸ்வினி தனது தாய் தந்தையரைச் சகோதரரை உறவினரை வெறுத்து இந்தத் தற்கொலைக்கு முயற்சிக்கவில்லை. சமூகம் தனது செயற்பாடுகளில் தவறு கண்டு கேலி செய்தபோது மனம் சோர்ந்து போனாள். எதற்கும் தற்கொலை மருந்தாகப் போவதில்லையே. அவள் இப்பொழுதுதான் சிந்திக்கிறாள். ஊரும் உலகமும் எம்மைப் பார்த்துப் பரவசிக்க வேண்டியவைகளைப் புறந்தள்ளி எங்கோ மறைந்து கிடக்கும் ஒரு சிறு துளி தவறைச் சுட்டி நின்று கூத்தடித்துக் கூக்குரலிடும் போதுதான் மனம் வெந்து போகின்றது. அஸ்வினி அழகானவள். பள்ளியில் அவளது நடத்தைகளில் எவருமே குற்றமோ குறையோ சொன்னதில்லை. ஆசிரியர்களிடத்திலும் அவளுக்கு நல்லதொரு பார்வையுண்டு. படிப்பில் அவள் சுட்டி என்று சொல்லிக் கொள்ள முடியாவிட்டாலும் பாடங்களில் ஓரளவு புள்ளிகளால் வகுப்பில் சித்தியடைவதிலிருந்து அவள் தவறியதில்லை.

விளையாட்டில் அவள் முன்னணியிலேயே திகழ்ந்தாள். விளையாட்டுக்காக அவள் தன்னை ஆயத்தம் செய்வதில் கூடிய கவனமாகவே இருப்பாள். அவளது சிறப்பான உற்சாகமான பயிற்சிகளால் முன்னணியில் திகழ்ந்தாள். அவள் மீது அன்பு செய்தவர்கள் அனைவருமே அவளைப் பாராட்டினார்கள். ஆனால் சமூகம் ஏனோ இந்தப் பெண்கள் விடயத்தில் தமது பார்வையைப் பொறாமையோடும் பல வேளைகளில் ஏளனத்தோடுமே செலுத்துகிறது. அஸ்வினி விளையாட்டு வீராங்கனையாகப் புகழப்படுவதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் உன்னதமான கலாசாரம் அழிந்து போனதாகக் குறைசொல்லிய சமூகத்தை அவளால் அலட்சியம் செய்ய முடியவில்லை.

"அவளைப் பாரடா ஆம்பிளைப் பொடியன்களைப் போல வெட்கம் ரோசம் இல்லாமல் அரைக் காற்சட்டையும் பெனியனும் போடுறாள்", "மார்பை நிமிர்த்திக் கொண்டு ஓடுறாள்", "இப்பத்தக் காலப் பெட்டயளுக்கு அரைகுறையா உடுப்புப் போடுறதில இப்பிடி ஒரு ஆசை", "நடுக்கிறவுண்டில நிண்டு கொண்டு உடுப்பு மாத்திறாள் பாத்தியளோ!" அவளைச் சுற்றிச் சுழன்று சுறுக் சுறுக்கென்று குத்தின வார்த்தைகள்.

அந்த மாவட்ட மட்ட விளையாட்டுக்களின்போது கவட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் பெண்களில் அநேகர் இவ்வாறுதான் பலருடைய விமர்சனங்களுக்கும் உள்ளாகின்றனர். எனினும் இந்த அஸ்வினி மீதில் ஆத்திரம் கொண்ட சிலர் அவளை நேரில் கைகாட்டிக் காட்டியே இப்படிப் பேசினார்கள். போதாக்குறைக்கு "இவளின் அப்பன் ஒரு குடிகாரன். தாய் பத்து வீட்டில் சமையலுக்குப் போய்த்தான் சாப்பாடு தேடி வாறாள். இவளைப் பார்த்தால் பெரிய ஆள் மாதிரி ஆட்டமும் ஓட்டமும்!" என்றெல்லாமும்கூடப் பேசிக் கொண்டார்கள்.

நல்ல திறமைகொண்ட விளையாட்டு வீராங்கனை அவள். விளையாட்டின் மூலம் பெற்ற வெற்றிகளும் அவற்றிற்குக் கிடைத்த சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் அவளை மாத்திரமல்ல அவளது பெற்றோர் உறவினர் யாவரையுமே மகிழ்ச்சியில் மூழ்கச் செய்திருந்தன. ஆனாலும் சமூகத்தில் ஒரு சிலர் கூறிய கேவலமான் வார்த்தைகள் அவளைத் துயரத்தில் ஆழ்த்தின.

அவை யாவுமே அவளது காதுக்கு வந்தபோது துவண்டு போனது மனது. ஆனால் உறவைப் பற்றிச் சிந்திக்காது சாவுக்குத் துணிந்து போன அவளது மனதை எண்ணியபோது அவளது தாயும் தந்தையும் அவளருகிலேயே நின்று புலம்பினார்கள்.

"ஏனம்மா இப்படிச் செய்தனி?" அன்னையின் கண்களில் தேங்கிய கண்ணீர் கன்னங்களில் பாய்ந்தது. அவளது ஒரேயொரு அண்ணன் அக்யன் அவளின் அயலிலேயே நின்று அவளைப் பரிவோடு பார்த்திருந்தான்.

மருத்துவர் வந்து பார்த்துப் போனார். தாதியர்கள் அஸ்வினியின் அருகிலேயே நின்று அவளைக் கவனித்துக் கொண்டார்கள். தனது தவறை அவள் உணர்ந்து கொண்டாலும் வேதனை அவளை வாட்டியது. எனக்கென வாழும் உறவுகளும் என் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட பெற்றோரும் இருக்கும்போது ஏன் நான் சுயநல எண்ணத்தோடு உயிரை மாய்த்துக் கொள்ள முந்தினேன். அந்தச் சிந்தனையே இப்போது அவளை வாட்டி வதைத்துக் குடையத் தொடங்கியது.

அஸ்வினியின் உடல் தேறிவிட்டது. ஆனாலும் நஞ்சுண்டதால் மயக்கமுற்று வீழ்ந்தவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்த பெற்றோரும் உறவுகளும் அவளுக்கு இந்தச் சமூகத்திலும் மேலானவர்களாகத் தோன்ற அஸ்வினியின் மனது இன்னமும் குணமடைய மறுத்தது.

ஒருயிரின் மீட்புக்காக இத்தனைபேர் எத்தனையோ ஆசைகளோடு சூழ்ந்திருக்க நான் ஒருசிலரின் வார்த்தைகளுக்காக ஏன் உயிர் துறக்க வேண்டும். வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் இந்த வையகத்தை நோக்கி ஏன் நான் பயந்தொதுங்க வேண்டும்? பரீட்சையில் தோல்வியடையலாம் ஆனால் வெற்றி பெற உயிரோடுலவும் காலங்களைக் காத்துக்கொள்ள வேண்டாமா?

குடும்பத்தில் குழப்பங்கள் நிலவலாம். அவற்றைச் சீர் செய்ய வாழ்தலில் துணிவு வேண்டாமா?

உலகம் ஆயிரம் சொல்லட்டும் உனக்குள்ளே வாழும் நீதியும் துணிவும் நிலைத்திருக்க முன்னேறு! தற்கொலை உன் நடத்தைகளைக் கேவலப்படுத்தி விடும். அஸ்வினி துணிவு பெறவேண்டும்.

அந்தத் துணிவை அவளுக்கு ஊட்டி விடுவதற்காகத்தான் அவளைச் சுற்றி இவ்வளவு சொந்தங்களும் நட்புகளும் இருக்கின்றனவே. அவள் விரைவில் மனதாலும் குணமடைந்துவிடுவாள்.

வாழ்க்கை வாழ்வதற்கே!

# களம்

## மற்றொரு பேய்ப் படம்

ஒரு பழைய ஜமீன் வீட்டை அபகரிக்கும் கட்டுமான தொழிலதிபர் தாதா (மதுசூதன் ராவ்), அமெரிக்கா விலிருந்து திரும்பும் தனது மகனுக்கு (அம்ஜத் கான்) அதைப் பரிசளிக்கிறார். அம்ஜத், தன் மனைவி (லட்சுமி ப்ரியா), பத்து வயது மகள் ஆகியோருடன் அந்த வீட்டில் வசிக்கத் தொடங்குகிறார். அங்கே அமானுஷ்ய சக்திகள் இருப்பதை லட்சுமிப்ரியா உணர்கிறார். முதலில் அதை நம்ப மறுக்கும் அம்ஜத், பிறகு கண் கூடாகக் கண்ட பிறகு அந்த வீட்டிலிருந்து வெளியேற முடிவு செய்கிறார். மந்திரவாதி சீனிவாசனும் கலையரங்கத்தின் பொறுப்பாளர் பூஜாவும் அவர்களுக்கு உதவ முன்வருகிறார்கள். அந்த அமானுஷ்ய சக்திகள் யார்? அம்ஜத் குடும்பத்தால் வெளியேற முடிந்ததா? படத்தின் திரைக்கதை சரியான பாதையில் பயணிக்கிறது. பயணத்தின் முடிவில் வரும் திருப்பமும் அட என்று சொல்ல வைக்கிறது. ஆனால் பயமுறுத்தும் காட்சிகளில் புதுமை இல்லை. தவிர, ஒரே மாதிரியான பூச்சாண்டிக் காட்சிகள் திரும்பத் திரும்ப வருகின்றன. 103 நிமிடங்களே ஓடும் படம் இப்படிப் பொறுமையைச் சோதிப்பதால் படத்தின் முடிவில் வரும் திருப்பம் போதிய வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்தாமல் போகிறது.

அசரவைக்கும் இறுதிக் கட்டத் திருப்பத்தை வைத்துக் கொண்டு எதற்கு முக்கால்வாசிப் படத்தின் திரைக் கதையை தயார்ப்படுத்தல்களிலேயே கதாசிரியர் சுபிஷ் சந்திரனும் இயக்குநர் ராபர்ட் ராஜும் வீணடித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த வீட்டில் தனியாகத் தங்கும் மதுசூதன் ராவுக்கு ஏற்படும் அனுபவம் மட்டுமே கவனத்தை ஈர்க்கிறது.

நட்சத்திரத் தேர்வு சரியாக அமைந்துள்ளது. அனேகமாக எல்லாக் கதாபாத்திரங்களுக்கும் உரிய முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது. தாதாவாகவும் முரட்டு அப்பாவாகவும் மதுசூதன் ராவ், அப்பாவின் செயற்பாடுகள் பிடிக்காமல் ஒதுங்கிய மகனாக அம்ஜத் கான், அந்நியர்களை எளிதில் நம்பி விடும் லட்சுமிப்ரியா, வேலைக்காரியாக வரும் கனி, நவீன பேயோட்டியாக சீனிவாசன், அமானுஷ்ய சக்திகளைப் பற்றி விளக்கும் பூஜா என அனைவரும் தத்தமது கதாபாத்திரத்தை உணர்ந்து கச்சிதமாக நடித்திருகிறார்கள். திடீர் ஆச்சரியமாக நாசர் தோன்றும் ஓரிரு காட்சிகள் அழுத்தமாக மனதில் பதிகின்றன. தரமான திகில் படம் தர முயன்ற இயக்குநர் புதிய காட்சிகளையும் விறுவிறுப்பான சம்பவங்களையும் உருவாக்கத் தவறிவிட்டார். கடைசிக் கட்டத் திருப்பம், கலை இயக்கம், நடிப்பு ஆகியவை படத்தை ஓரளவு காப்பாற்றுகின்றன. ஆனால் மற்றொரு பேய்ப் படம் என்றதைத் தாண்டி ஆர்வமூட்டக்கூடியளவுக்குப் படத்தில் ஒன்றுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. அதிக வேகமாக ஓடக்கூடிய பறவை எது ? தீக்கோழி
02. சூரிய ஒளி பூமியை அடைய எடுத்து கொள்ளப்படும் நேரம் எவ்வளவு நிமிடம்? 6 நிமிடம்
03. வானவில்லில் அதிகமாக ஒளி விலகலடையும் நிறம் எது ? ஊதா
04.பாம்புகளே இல்லாத கடல் எது? அட்லாண்டிக் கடல்
05. பென்சில் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் எது? காரியம்
06. காளான்களில் எத்தனை வகை? 70,000 வகைகள் உள்ளன
07 மின்சாரக் கருவிகளில் தாமிரதக்குப் பதிலாக பயன்படுத்தப் படும் உலோகம் எது ? அலுமினியம்



## வரலாற்றில் இன்றைய தினம்

1821 – கிரேக்க சுதந்திரப் போராட்டம்; கிரேவியா இன் சண்டையில் துருக்கியை கிரேக்கம் தோற்கடித்தது.
1842 – பாரிஸில் புகையிரதம் ஒன்று தடம்புரண்டு தீப் பிடித்ததில் 52 தொடக்கம் 200 பேர் வரை சாவு.
1886 – கோககோலா எனும் பெயரிலான வடிபொருள் ஜோன் பெம்பேர்டன் எனும் மருத்தாளரால் முதன்முதல் விற்பனைக்கு இடப்பட்டது.
1912 – பரமவுண்ட் பிக்ஸர்ஸ் தொடங்கப்பட்டது.
1933 – மோகனதாஸ் காந்தி 21 நாள் சுயதாஸ் தாக்கலைத் தொடங்கி வைத்ததுடன் தாழ்த்தப்பட்ட மக்களும் உதவும்ஒரு வருட பரப்புரையையும் தொடங்கினார்.
1945 – பிரான்ஸ் இராணுவப் படையால் நூற்றுக் கணக்கான அல்ஜீரியக் குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
1962 – இந்தியாவின் பிரபல்யமான பல்கலைக் கழகங்களில் ஒன்றான ரவீந்திர பாரதி பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
1972 – வியட்நாம் போர். வட வியட்நாமில் ஆயுதங்களும் பொருள்களும் குவிவதைத் தடைசெய்ய வடவியட்நாம் துறைமுகங்களில் கண்ணி வெடிகளை வைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி றிச்சார்ட் நிக்ஸன் கட்டளை பிறப்பித்தார்.
1972 – பயங்கரவாதிகள் நால்வரால் சபேனா விமானம் 571 கடத்தப்பட்ட நிலையில், அடுத்த நாள் இஸ்ரேல் சயறேள் மாற்கல் கொமாண்டோக்களால் அது மீட்கப்பட்டது.
1980 – சின்னமுத்து முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவிப்பு.
1984 – லோஸ் ஏஞ்சலில் இடம்பெறும் கோடைகால ஒலிம்பிக்கை புறக்கணிக்கப் போவதாக சோவியத் ஒன்றியம் அறிவிப்பு.
2003 – ஹங்கேரியில் பயணிகள் பஸ்ஸை மோதியது ரயில். 30 பேர்; சாவு.
2003 – சார்ஸ் நோய்க்கு சீனாவில் 500 பேர் சாவு.



பு.சந்தோஷ்,
தரம் –3
யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தி.



சு.நிலானி,
தரம் – 4
யா/ஏ.மே.சைவ சன்மார்க்க வித்தியாசாலை.



## தமிழ் படிப்போம்

வாருங்கள்! வாருங்கள்!
வண்ணத் தமிழ் படிப்போம்.
வசீகரத் தமிழ் படிப்போம்.
வளமான தமிழ் படிப்போம்.

ஆரியத்தின் மூலமொழி
திராவிடத்தின் தாய் மொழி.
உலக முதன் மொழியென்று
மொழிந்தார் பாவாணர்.

ஔவை மொழி பயில்வோம்.
வள்ளுவர் மொழி படிப்போம்.
கள்ளமற்ற நல்வழியால்
வெள்ளை மனமாய் வாழ்வோம்.

வளர்ப்பது தமிழெனும் எண்ணத்தால்
வளமான தமிழ் பாய்ச்சுவோம்.
வாக்குத் திறமை கூட்டி
வசீகரத் தமிழாய்க் கொட்டுவோம்

# பேனா செய்த மாயம்!

ஒன்பதாம் வகுப்பு மாணவி செல்வராணி. இரக்க குணம் கொண்டவள். தன்னோடு படிக்கும் நண்பர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், தன்னால் முடிந்த உதவியைத் தயங்காமல் செய்வாள். புத்தகப் பையில் எப்போதும் ஒன்றிரண்டு பேனா, பென்சில் வைத்திருப்பாள். சக மாணவர்கள் எவராவது பேனா இல்லாமல் வந்தால், பையிலிருந்து பேனா ஒன்றை எடுத்துக் கொடுப்பாள்.

அதுபோல், அவளது அப்பா அவ்வப்போது கொடுக்கும் சில்லறையைச் செலவழிக்காமல் சேமித்து வைப்பாள். அந்தப் பணத்தில் நோட்டுப் புத்தகங்கள் வாங்கி, இல்லாத மாணவர்களுக்குக் கொடுப்பாள்.

இதனால், செல்வராணியை நண்பர்கள் உதவி ராணி என்றே அழைத்தார்கள்.

ஒரு நாள் –

வீட்டின் மொட்டை மாடியில் நின்றுகொண்டிருந்தாள் செல்வராணி.

திடீரென்று வானம் பலமாக இடிஇடித்தது. மின்னல் வெட்டியது.

வானிலிருந்து ஒளிக் கீற்றொன்று மின்னியது. அந்த ஒளிக்கீற்று அப்படியே கீழிறங்கி, மொட்டை மாடிக்கு வந்தது. என்ன இது என்று கூர்ந்து பார்த்தாள் செல்வராணி. ஓர் அழகிய பேனா அங்கே காணப்பட்டது.

ஐயோ!..பேனா எவ்வளவு அழகாயிருக்கு! என்று ஆச்சரியத்தோடு கையிலெடுத்தாள் செல்வராணி.

அப்போது, வானிலிருந்து குரலொன்று எதிரொலித்தது.

மகளே... எவருக்கும் கிடைக்காத மாயப் பேனா. இதைக் கொண்டு காற்றில் நீ எதை வரைகிறாயோ, அது அப்படியே உயிர் பெற்று உண்மையான பொருளாக மாறிவிடும். இதை வைத்துக்கொண்டு பலருக்கும் நீ உதவி செய்யலாம். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. இதை நீ எப்போதாவது உன் சுயநலனுக்காகப் பயன்படுத்தினால், அதற்குப் பிறகு இந்த மாயப் பேனா உன்னைவிட்டு மாயமாகிவிடும் என்று



அந்தக் குரல் சொன்னது.

செல்வராணிக்கு பலத்த சந்தோசமாகிவிட்டது.

மாயப் பேனா கிடைத்ததும் முன்னைவிட அதிகமாக அனைவருக்கும் உதவிகள் செய்ய ஆரம்பித்தாள். எவராவது பேனாவோ, நோட்டுப் புத்தகமோ வேண்டுமென்று கேட்டால், தனியே சென்று மாயப் பேனாவால் காற்றில் பேனா போன்று வரைவாள். அது அப்படியே அசல் பேனாவாக மாறிவிடும். கேட்டவர்களுக்கு அதைக் கொடுத்துவிடுவாள் செல்வராணி.

அன்று பள்ளியில் அழுதுகொண்டிருந்தான் ரவி. காரணம் கேட்டதற்கு, எங்கம்மாவுக்கு உடம்பு முடியலே. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போக பணம் இல்லை என்றான். ரவி சிறு குழந்தையாய் இருக்கும் போதே அவனது அப்பா இறந்துவிட்டார். அவர்களுக்கு உதவி செய்ய வேறு எவருமில்லை.

வகுப்பறைக்குச் சென்று, மாயப் பேனாவை எடுத்து, காற்றில் ரூபாய் நோட்டுக்களை வரைந்தாள் செல்வராணி. அவை அப்படியே உண்மையான ரூபாய் நோட்டுக்களாக மாறி விட்டன.

அந்தப் பணத்தை ரவியிடம் கொடுத்து, அம்மாவை ஆஸ்பத்திரிக்குக் கூட் டிட்டுப் போகச் சொன்னாள்.

அன்றைக்கு பள்ளியில் அரையாண்டு அறிவியல் பரீட்சை. எல்லா மாணவர்களும் பத்து மதிப்பெண் கேள்வியொன்றுக்கு பதில் தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தார்கள். இந்திராவுக்கும் பதில் தெரியவில்லை. தேர்வு அறையே இறுக்கமாக இருந்தது.

ஆகா, நான் மட்டும் சரியாக இந்தக் கேள்விக்குப் பதிலை எழுதிவிட்டால், சுளையாகப் பத்து மதிப்பெண் கூடுதலாகக் கிடைத்துவிடும். அரை யாண்டுத் தேர்வில் வகுப்பில் முதல் மாணவியாக வரலாமே என்கிற ஆசை செல்வராணிக்கு வந்தது.

என்ன செய்யலாம்? என்று சற்று நேரம் யோசித்தாள். அப்போது, திடீரென்று குறுக்கு யோசனையொன்று அவளுக்குத் தோன்றியது.

மாயப் பேனாவால் அறிவியல் பாடப்புத்தகமொன்றை வரைந்தால், அது உண்மையான புத்தகமாக மாறிவிடும். அந்தப் புத்தகத்திலிருந்து சரியான விடையைப் பார்த்து எழுதிவிட்டால், அவள்தான் வகுப்பில் முதல் மாணவி!

நினைக்கும்போதே அவளால் சந்தோசத்தைத் தாங்க முடியவில்லை.

வேறெதையும் எண்ணாமல், யோசித்த அடுத்த கணமே, பைக்குள் மறைத்து வைத்திருந்த மாயப் பேனாவை எடுத்து, ஒன்பதாம் வகுப்பு அறிவியல் பாடப் புத்தகத்தைக் காற்றில் வரையத் தொடங்கினாள்.

பட்டென்ற சத்தத்தோடு மறைந்து போனது அந்த மாயப் பேனா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சமஷ்டி தொடர்பான விளக்கத்தை

# இனவாதிகள் ஏற்பார்களா?

வந்தியத்தேவர்

தெற்கில் மகிந்தவும் வடக்கில் முதல்வர்விக்னேஸ்வரனும் இனவாதப் போக்கில் செயற்படுவதாகவும் அதனைத் தோற்கடிக்க வேண்டும் எனவும் கூறியிருக்கும் ஜே.வி.பியின் ரில்வின் சில்வா வடக்கில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்று கொடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் குறிப் பிட்டுள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டியது மிகவும் இன்றியமையாத அரசியல் கடமை. அதனைச் செய்யத் தவறியதால் இலங்கை கண்ட பின்னடைவு எவ்வளவு என்பதை நியாயமான உலகம் ஒப்புக்கொள்ளும். இப்போது அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது பொதுவாக உணரப்பட்டாலும் அது ஒரு நீதியான தீர்வாக இருக்குமா என்பதும் கேள்விக்குரியதே. பிரச்சினைக்குரியவர்கள் தமக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும், எதிர்காலத்துக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறி அப்படியான தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்த வலியுறுத்தும்போது பெரும்பான்மை இனம் அது குறித்தும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் அரசியல் நடைமுறைகள் குறித்தும் அறிந்து கொண்டு அதே போன்ற ஒரு தீர்வின் அடிப்படையில் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் அறுபது ஆண்டு காலத்துக்கும் மேற்பட்ட இலங்கையின் துயரம்நிறைந்தவரலாறுமுழுந்தகதையாகி புதிய விடிவுக்கு வழியமைக்க ஏதுவாகும். எனினும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் கோரும் தீர்வுத் திட்டம் குறித்தும் அதனை வழங்க முன்வருவது குறித்தும் இன்னமும் தயார் நிலைக்கு வரவில்லை.நாட்டின் எதிர்காலம் எப்படியானாலும் பரவாயில்லை. எனது எதிர்காலம் உச்சமாக அமைய வேண்டும் என்பதிலேயே தென்பகுதி அரசியல்வாதிகள் குறியாக உள்ளனர். இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் எனக்கோரிப் போராட்டம் நடத்திய ஏழு கட்சிகளின் தலைவர்களை இரா.சம்பந்தன் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதன்போது கிளிநொச்சி இராணுவ முகாமுக்குச் சென்றது தொடர்பாக உரிய விளக்கத்தை அவர்களுக்கு அளித்திருந்தார். அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் காணிகளைக் கூட அரச அதிபர் ஊடாக மக்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுள்ளனர். இந்தச் சந்திப்பினூடாக தமிழ்த் தலைமைகள் தமது கோரிக்கைகளை நியாயமான முறையிலேயே முன்னெடுத்து வருகின்றனர் என்ற உண்மையை சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைமைகள் ஒப்புக்கொண்டுள்ளதாகவே உணர முடியும். சமஷ்டிக் கோரிக்கையும் இது போன்று நியாயமானதே. அதனால் தான் சமஷ்டிபற்றியும் தென்பகுதி மக்களுக்குப் புரியும்படி விளக்குங்கள் எனவும் அவர்கள் சம்பந்தனைக் கேட்டுள்ளனர்.

சிங்களத் தலைமைகளால் அறிமுகப் படுத்தப்பட்ட சமஷ்டி குறித்து எந்த ஒரு சிங்களத் தலைவர்களோ அல்லது சிங்கள மக்களோ அந்தக் கோட்பாடு தவறான ஒன்று என இதுவரை காலமும் எடுத்துக் கூறியதாக இல்லை. இனப்பிரச்சினையை ஊதிப்பெருப்பிக்க வேண்டும்என்ற நோக்கமும் அதன் மூலமாகத் தமது பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற குறுகிய சிந்தனைகள் என்று தோற்றம் பெறத் தொடங்கியதோ அன்றுதான் சமஷ்டி பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது. அதுவே பின்நாளில் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கத் தடையான ஆயுதமாகச் சிங்களத் தலைமைகளுக்கு உதவியது. இத்தனைக்கும் ஒரு சாதாரண சிங்களக் குடிமகனாவது சமஷ்டி ஆட்சியில் சிங்கள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னது கிடையாது. இப்போது தென்னிலங்கை அரசியல்வாதிகளே மக்களைத் தூண்டிவிடுவதற்கு சமஷ்டியை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.சமஷ்டி பற்றி தெற்குக்குப் புரியும்படி விளக்குங்கள் என இந்த ஏழு கட்சித் தலைவர்களும் சம்பந்தனிடம் கேட்டுள்ளனர். அது நியாயமானதாக இருந்தாலும் தெற்குக்குப் புரியும்படி விளக்குவதற்கு முன்னதாக தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு இது தொடர்பாக வகுப்பு நடத்த வேண்டியது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு அவசியமாகிறது. வடக்கு மாகாண சபை வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி ஆட்சி அலகு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கூறும் தீர்வு வரைவை முன் வைத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறிக்கோளும் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அரசே. இன்று நேற்று தமிழ்த் தலைமைகளால் முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல சமஷ்டி. பண்டார்ரநாயக்க பிரதமராக இருந்தபோது இது தொடர்பாக தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் கலந்துரையாடி பிரேரணை நாடாளுமன்றத்திலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் அப்போது ஐ.தே.க.அதற்கு எதிராக செயற்பட்டதால் அதுகைகூட முடியவில்லை. பின்னாளில் மகிந்த ஆட்சியில் வடக்கு, கிழக்கு இணைவதற்கான தடையை, அவரது அபிலாசையை நிறைவேற்றும் வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இப்போது மேல் மாகாணசபை சமஷ்டிக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. நூற்றி நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் அன்றைய தினம் 21 பேர்கள் மாத்திரமே சமூகமளித்திருக்கிறார்கள்.தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்பதை மட்டுமே தமது கட்சிக் கோட்பாடாக வைத் துள்ளது அங்குள்ள எந்தக் கட்சியுமே தமிழ் மக்களுக்கான சரியான தீர்வு எது என்பதை வெளிப்படுத்த முடியாத நிலையில் வெறுமனே இன வாதத்தைத் தூவிக் கொண்டிருக்கிறது. சம்பந் தனைச் சந்தித்த ஏழு கட்சிகள் மட்டுமே சமஷ்டி பற்றித் தெளிவுபடுத்தக் கேட்டுள்ளன. அதற்கு எதிரான கருத் தைக் கொண்ட மகிந்தவோமற்றும்அவருடன் இணைந்த அணியினரோ சமஷ்டி பற்றியும் அது பற்றித் தெளிவுபடுத்துமாறும் எந்தக் கட்டத்திலும் கோரியதில்லை. ஏழு கட்சிகளின் கோரிக்கையைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும்கூடத்தெரிவிக்கவில்லை. சமஷ்டி குறித்து அரசியல் தலைமைகளுக்கு வகுப்பு நடத்த சம்பந்தன் தயாராகவே இருப்பார். அதில் கலந்து கொள்ள தென்பகுதி அரசியல்வாதிகள் முக்கியமாக எதிரணி என்று கூறிக் கொள்பவர்கள் தயாராக உள்ளனரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி இல்லாத ராசா....

(30 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கும் அவளிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பவில்லை. ஓ.கே! இப்போது லைன் கிளியர். மனம் சொல்லிக் கொள்ளத்துணிவு பிறந்தது. எனது முதுகில் எனது கையால் நானே தட்டிக் கொடுத்து என்னை நானே உற்சாகப்படுத்தி விட்டேன்.

சற்றும் எதிர்பார்த்திராத வகையில் இப்போது எனனுடைய பாதத்தை அவள் சீண்டி உராசி விளையாடத் தொடங்கினாள். எனக்கு உடலெல்லாம் மின்சாரம் பாய்ந்தது.

"பிள்ளையாரப்பா! கை விட்டிடாதை. எல்லாம் உன்ரை புதுமைதான். இந்த விடயம் மட்டும் சரி வந்திட்டுதெண்டால் நூற்றெட்டுத் தேங்காயு முடைச்சு உனக்கு நல்லதொரு மோதகப் பூசையும் செய்வன். என்னைக் காப்பாற்றிக் கொள்." வாய்விட்டுக் கேட்டுக்கொண்டேன். என்னுடைய சட்டைப் பைக்குள் கண்டோஸ் இருந்தது. நினைவுக்குவர அவளிடம் அதை நீட்டினேன். மறுப்புக்களெதுவுமின்றி அதையும் வாங்கிவிட்டாள். எனக்கென்று ஐம்பது ரூபா கொடுத்து வாங்கிய கண்டோஸ். சரி நான் சாப்பிட்டால் என்ன அவள் சாப்பிட்டாள் என்ன நாங்கள்தான் ஒன்றாகப் போகின்றோமே! இதில் எல்லாம் செலவு களைப் பார்க்க முடியாது.

என்னுடைய காதலுக்கு ஓரளவு சம்மதச் சமிக்ஞையாகவே இது காணப்பட்டது. இடைவேளை வந்தவுடன் நேரடியாகப் பேசலாம்தானே. எனக்குப் படத்தில் கொஞ்சமும் ஆர்வம் இருக்கவில்லை. என்னுடைய முழுச்சிந்தனையும் எனக்கு முன்னேயிருக்கும் என்னுடைய வருங்காலக் காதலியைப் பற்றியே!

சட்டையின் மறு பையைத் தட்டிப் பார்த்தேன். நல்லகாலம் கடலைப் பக்கெற் ஒன்று தட்டுப்பட்டது. அதையும் அவளிடமே கொடுத்தேன். கூச்சமெதுவுமின்றி கை நீட்டிவாங்கி அதேவேகத்தில் வாயில் போட்டுக்கொண்டாள். பாவம் நல்ல பசியாயிருக்கும் போலை....! படத்துக்கு வரும் ஆர்வத்தால் காலையில் ஒன்றும் சாப்பிடாது வெறும் வயிற்றுடன் வந்திருப்பாள்போலும். சரி இடைவேளைக்கு அவளுக்கு விருப்பமான எல்லாவற்றையும் கேட்டுக்கேட்டு வாங்கிக் கொடுக்க வேண்டும். அவளுக்கில்லாதது எனக்கெதற்கு!

ஐயோ இந்த இடைவேளை எப்பதான் வரப்போகுது! வந்தவுடனை நான் அவளின்ரை முகத்தைப் பாக்க அவள் என்ரை முகத்தைப் பாக்க ஒரே முசுப்பாத்தியாய்த்தானிருக்கப் போகுது. கடவுளே இவ்வளவு நேரமும் காலாலை செய்த வம்பு வேலையளை நினைக்க வெக்கம் வெக்கமாயெல்லோ வரப்போகுது. சே! என்னைப் பற்றி என்ன நினைச்சாளோ! இடைவேளை வந்தவுடன் முதலிலை அவ ளின்ரை பேரைக் கேட்கவேணும். பிறகு ரெலிபோன் நம்பரை மறக் காமல் கேட்டுவாங்கிப் போடவேணும். வாங்கிப் போட்டால் அடிக்கடி அதிலை பேசிப் பேசிப் பம்பல் அடிக்கலாம்.

எப்படியுமின்னும் ஐந்து நிமிடங்களில் இடைவேளை நேரம் வந்து விடும் என்பதற்குக் கட்டியம் கூறும் வகையில் சோடா, பீடா, கச்சான், கடலை வியாபாரிகளின் முன்ஆயத்தங்கள் தொடங்கிக் கொண்டிருந்தன. இதோ எதிர்பார்த்த இடைவேளையும் வந்துவிட்டது.

கடவுளே! எனக்குக் கையும் ஓடவில்லைக் காலுமோடவில்லை. என்னுடைய காதல் தேவதை எப்படியிருப்பாளோ! எப்படியெல்லாம் பேசப்போகின்றோமோ உடல் வெடவெடுத்தது. இருளில் வைத்துக் கால்களினால் எத்தனை சில்மிங்கள் செய்திருப்பேன். சந்தித்த முதல் நாளே இப்படியென்றால் போகப்போக .....சே! என்னையொரு தரங் கெட்டவனாக நினைத்து விடுவாளோ எனக்கு வெட்கமாயிருந்தது. வாலிப வயதில் சாதாரணமாக இளவட்டங்கள் செய்யும் குறும்பு கள்தானே! ஏன் அவள் மட்டும் என்னவாம்! ஒரு கன்னிப்பெண்! அதுவும் முன்பின் பரிச்சயமில்லாத என் மீது ஆசைப்பட்டு என்னுடைய கால்களை அவள் படுத்திவிட்டபாடு கொஞ்சமா! இதில் குற்றம் குறை சொல்வதற்கோ வெட்கப்படுவதற்கோ ஒன்றுமில்லை. மொத்தத்தில் நாங்களிருவரும் நாளை ஒன்றிணைந்து வாழப்போகும் தம்பதிகள்தானே! இதற்குள் வீக்கதூக்கம் பார்க்க முடியுமா? இதோ என்னுடைய அழகு தேவதை இருக்கையை விட்டெழுந்து விட்டாள் ஆவலுடன் அவளை நோக்கினேன். அவளும் என்னை நோக்கினாள். இதென்னடா இது! தாடி மீசையோடை! எட இது பெட்டையில்லையடா. குடும்பி வளர்த்த பெடியனடா. கடவுளே இதென்ன சோதினை! நல்லாய் ஏமாந்து போனன். அவன் பாவி என்ரை காலைச் சுரண்டிச் சுரண்டிக் கடைசியாய் ஆசையாய் நான் வாங்கிவந்த கண்டோஸ் கடலைப் பொரி எல்லாத்தையும் திண்டு தள்ளிப்போட்டான், அந்தப் பட்டினிப் பரதேசி. கடவுளே இப்பிடி நம்பிமோசம் போட்டனே!

இருக்கையை விட்டெழுந்தவன் ஏளனமாக என்னைப் பார்த்துத் தனது நண்பர்களுக்கு ஏதோ சொல்லிச் சிரித்தான். அவனுடைய முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அந்தளவுக்கு வெட்கமும் ஏமாற்றமும் என்னைத் துண்டு துண்டாகப் பிய்த்துத் தின்றன. இருந்தும் மீண்டுமொருமுறை அவனைக் கள்ளத்தனமாகப் பார்த்தேன்.

படுபாவிப் பயல்! பல்லுக்குள் தீக்குச்சியொன்றை வைத்துக் குத்தியபடி நண்பர்களுடன் ஏதோ கதைத்துக் கும்மாளமடித்தான். என்னிடம் வாங்கித் தின்ற கண்டோஸ், கடலைப் பொரியெல்லாம் பற்களின் ஈறுகளுக்குள் சிக்கிவிட்டன போலும். அவைகளை அனாயாசமாகத் தட்டியெடுத்துக் கொண்டிருந்தான்.

பரதேசி! உவன் இண்டைக்கு நரி முகத்திலை முழிச்சுக்கொண்டு வந்து.... சே! எவ்வளவு அவமானமாய்ப் போச்சுது. இனியுமங்கே நிற்கப் பிடிக்கவில்லை. இடைவேளையுடனே நான் மெல்ல எஸ்கேப் ஆகி வீட்டுக்கு வந்து விட்டேன்.



# தமிழ் திரையிசையில் பெண்கள் பற்றிய வர்ணனை

(தொடர்ச்சி)

இயல்பாகவே நிலவின்ஒளிவெண்மையாக இருக்கும். அதுபோல் பாலும் வெள்ளையாக இருக்கும் இரண்டும் சேரும்போது இன்னும் வெண்மை நிறத்தைப் பெறும் என்ன ஒரு கற்பனைத்திறன். (படம் சாஜகான். பாடலாசிரியர் வைரமுத்து) மேற்குறித்த பாடலில் நிலவின் ஒளியை பாலில் நனைத்ததாகப் பார்த்தோம். இதுபோலவே சற்று வேறு விதமான கற்பனை ஒன்று மற்றுமொரு பாடலில் வெளிப்படுவதனைக் காணலாம். அந்தப் பாடலில் நிலவின் தேனில் ஊறவைத்து செய்த உடல் பாகமாக அந்தப் பாடலில் வரும் பெண்ணின் கன்னம் விளங்குகின்றது.

வெண்ணிலாவை தேனிலே ஊற வைத்து வாங்கியே
தட்டி தட்டி செய்ததாய் அவளின் கன்னம் தோன்றுமோ...

இது மட்டுமல்லாது இந்தப் பாடலில் வரும் தொடர்ச்சியான வரிகளிலும் அந்தப் பெண்ணின் அழகு நயமுற வெளிப்படுகின்றது.

தங்கக் கட்டி கொண்டு தான் கேள்விக்குறியை
செய்ததாய் ஒட்டி வைத்த பாகமாய் அவளின் செவிகள் தோன்றிடுமோ
பழமுதிர்ச் சோலை கனி சேர்ந்து அவளின் இதழாய் இருந்திடுமோ
திருக்குறள் போலே சிக்கனமாய் அவளின் இடையும் இருந்திடுமோ....

இங்கு திருக்குறள் நூல், பாடல் வரியில் வருகின்றது. ஈரடிகளில் சுருக்கமான அமைப்பாக விளங்குவது திருக்குறள். அது போல பெண்கள் இடையும் மெல்லியதாக காணப்படும். கிட்டத்தட்ட இலக்கியப் புலவர்கள் பாடிய அணிச் சிறப்புக்களை இந்தப் பாடல் வரிகளில் காணக்கூடியதாக உள்ளதல்லவா? இது மட்டுமா, இன்னுமொரு பாடலில் வரும் பெண் பௌர்ணமி நிலவாகவும், பல்லவ மொழிகள் சேர்ந்து செதுக்கிய சிலை எனவும் வர்ணிக்கப்படுகின்றாள் மேலும் அவளது கண்கள் தூண்டில் எனவும் அதில் சிக்கிய மீன் தான் என கதாநாயகன் பாடுவது நயக்கத்தக்கதாகும்.பாடல் வரிகள்.

பௌர்ணமி நிலவை மிக அருகினில் பார்த்தேன்
பரவசக் கடலில் நான் படகாய் ஆனேன்
தேவதை கண்ணில் இரு தூண்டிலைப் பார்த்தேன்
மாட்டிய மீனாய் நான் ஆனேன், ஆனேன்
பல்லவ மொழிகள் கூடி செதுக்கிய சிலை தானா
பிரம்மனும் சிலையைப் பார்த்து ஜீவனைக் கொடுத்தானா



பொதுவாக பெண்கள் கண்களை மீன்கள் எனவும் இலக்கியங்கள் வர்ணித்துள்ளன. ஆனால் இந்தப் பாடலில் பாடலாசிரியர் அந்தப் பெண் கண்களை தூண்டிலாக வர்ணித்துள்ளார்.

இவ்வாறு மேலுமொரு பாடலில் ஒரு பெண் பற்றிய வர்ணிப்பு, அந்தப் பெண் அழகுச் சிறப்பு ஒரு சேர வெளிப்படுவதை காணலாம். பூப்பறிக்க வருகிறோம் எனும் திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் இதமான வரிகளை கொண்டமைந்த அந்தப் பாடல்.

எட்டில் அழகு பதினெட்டில் அழகு
எந்தப் பெண்ணும் இருபதில் இரட்டையழகு....

எனத் தொடங்கும் நயமான பாடலாகும்.

இந்தப் பாடலில் வரிகளை தொடர்ச்சியாக நோக்கும் போது...
உதட்டை மூடி சிரிப்பதழகு, உதிரிப் பூக்கள் தொடுப்பதழகு
வானொலியோட பாடும் அழகு, பாடிக் கொண்டே சமைப்பதழகு
தாமரை இலையில் நீர் அழகு அட தாவணிப் பெண் போல்
யார் அழகு. இங்கு பெண்கள் உள்ளூறச் சிரிப்பது அதாவது வாயை மூடிச் சிரிப்பதை இயல்பாகவே காணலாம். அதே போல் பாடல்களை வாயில் முணுமுணுத்துக் கொண்டு வேலைகளை செய்வதும் பெண்களில் ஓர் இயல்பு. மேலும் பெண்கள் எவ்வாறு தான் எத்தனை விதமான ஆடைகள் அணிந்தாலும் பாவாடை தாவணி பெண்களுக்கு பல படி அழகை சேர்த்து விடும் ஒரு சிறப்புடையதாகும். அவ் அழகு தாமரை இலையில் நீர் இருப்பதனை போன்ற அழகுடையது என பாடலாசிரியர் பாடுகின்றார். இவ்வாறு தமிழ் சினிமாவில் வெளிவந்த எண்ணற்ற பாடல்களில் பெண் பற்றிய வர்ணிப்பு இழையோடி இருப்பதை மேல் கூறிய சில பாடல்கள் வெளிப்படுவதாய் அமைந்துள்ளன.

எனினும் எமது தமிழ் இலக்கியங்களில் கம்பர், இளங்கோ, திருவள்ளுவர், புகழேந்தி, பாரதி போன்ற இலக்கியப் புலவர்கள் பாடிய பலவிதமான அழகு மிளிரும் வர்ணனைச் சிறப்புக்களில் பெண்கள் பற்றிப் பாடுவதற்கு தவறவில்லை. அந்த வழியை ஒட்டி திரை இசை பாடலாசிரியர் தம் கற்பனைத் திறன்களின் வாயிலாக தம் பாடல்களில் பெண் பற்றிய வர்ணிப்புச் சிறப்புக்களை அழகுற வெளிப்படுத்தியுள்ளனர்.இவ்வாறான பாடல்கள் என்றும் கேட்பதற்கு மனதுக்கு இனிமையும் ஓர் இரசனையையும் உண்டு பண்ணுபவை. இவ்வாறான கற்பனைப் படகில் நாமும் பயணம் செய்வதாய் ஓர் உணர்வு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோயில்களில் கொலை என்பது பற்றி நுட்ப நியாயங்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. "கொலை என்றால் எல்லாம் கொலைதான். ஆட்டை கோயிலில் வெட்டினாலும் கொலை தான் கொல்களத்தில் வெட்டினாலும் கொலைதான். இதில என்ன கோதாரி வந்திட்டுது. பசுமாட்டை அறுக்கிறாங்கள். அதைத் தடுக்க வக்கில்ல, கிடாய் அறுக்கிறதுதான் இவங்களின்ர கண்ணுக்குத் தெரியுதோ...." அவரிடமிருந்து வார்த்தைகள் சூடாகின்றன.



# தடைப்பலி!

ந.லோகதயாளன்

"இதைச் செய்தவர்கள் பாடையில போக." தாடி தலை முடியெல்லாம் வெளுத்திருக்க பழுப்பேறிய சாரத்துடனும் கடின உடல் உழைப்புக்குக் கட்டியங் கூறும் மேற்சட்டையுடனும் அந்தப் பெரியவர் மனசாரத் திட்டி னார். ஆண்டாண்டு காலமாகத் தன்னுடைய வழிபாட்டுக்குத் தடையை ஏற்படுத்தியவர்களை தன்னுடைய இறைவனை அழைத்து அவர் திட்டினார். அவரைப்பொறுத்த வரையில் பலியிடல் ஒரு வழி பாட்டு முறை. அப்படிப் பலி கொடுத்தால் மட்டுமே தன்னுடைய சுற்றமும் உறவும் குடும்பங்களும் வன்சாவுகளில் இருந்து காப்பாற்றப்படும் என்கிற ஆழ்ந்த நம்பிக்கைக்குள் அவர் மூழ்கிப்போயுள்ளார்.

பிரான்பற்று அம்மன் ஆலய வேள்வித் திருவிழா நீதிமன்றத் தடையினையடுத்து நிறுத்தப்பட்டதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது தெய்வக்குற்றம் நிந்தனைக்குரியது என்று நம்புகிறார். இதைச் செய்தவர்களை அந்தத் தெய்வம் கண்டித்து, தண்டித்து, நிந்தித்து அடுத்த வருடத்திற்குள் மீண்டும் பலிக்கு அனுமதிகொடுக்க வைக்கும் என்றும் உறுதியோடு இருக்கிறார்.

கோயில்களில் கொலை என்பது பற்றி நுட்ப நியாயங்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. "கொலை என்றால் எல்லாம் கொலைதான். ஆட்டை கோயிலில் வெட்டினாலும் கொலைதான் கொல்களத்தில் வெட்டினாலும் கொலைதான். இதில என்ன கோதாரி வந்திட்டுது. பசுமாட்டை அறுக்கிறாங்கள். அதைத் தடுக்க வக்கில்ல, கிடாய் அறுக்கிறதுதான் இவங்களின்ரை கண்ணுக்குத் தெரியுதோ...." அவரிடமிருந்து வார்த்தைகள் சூடாகின்றன.



அவர் என்னதான் கொதித்துக் கொந்தளித்தாலும் பிரான்பற்று அம்மன் ஆலயத்தில் இந்த வருடம் வேள்வி நின்றுதான்போய்விட்டது. வேள்வி என்ற பெயரில் மிருக பலிக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருப்பதால், கொண்டுவரப்பட்ட ஆடுகள் ஆலயத்தின் முன்பாக வெட்டப்படவில்லை. சில உரிமையாளர்களாலேயே திருப்பிக்கொண்டு செல்லப்பட்டன. வேறு சில வழக்கம்போல ஆலய வளாகத்திலேயே விற்கப்பட்டன.

நேற்று நள்ளிரவு முதலே அந்தப் பகுதி முழுவதும் பதற்றத்தில் துடித்துக் கொண்டிருந்தது. வேள்வி நடக்குமா நடக்காதா? பலி கொடுக்கப்படுமா இல்லையா? இரகசிய வேள்விக்கு ஏதாவது ஏற்பாடுகள் இருக்கின்றனவா? என்ற கேள்விகளுடன் மக்கள் மட்டுமல்ல பொலிஸாரும் அவர்களின் புலனாய்வாளர்களும் தகவல் சொல்லிகளும் பரபரத்துத் திரிந்தார்கள்.

சீருடையில் வெளிப்படையாகவும் கோயில் வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது. வழக்கம்போலவே நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னரான அதிகாலை வேளையிலிருந்தே ஆட்டுக் கடாக்கள், ரியூப்லைற் வெளிச்சம் போடப்பட்ட டிராக்டர்களில் காட்சி ஊர்வலமாக ஆலயம் நோக்கி வரத் தொடங்கியபோது பதற்றத்தில் எல்லோரும் பரபரத்துக் கொண்டிருந்தனர்.

ராஜகம்பீரமாக அழகு பொங்கி வழிய நின்றுகொண்டிருந்த கடாக்களை ஏற்றிய வாகனங்கள் மெல்ல நகர்ந்து வர அவற்றின் முன்பாக இசை வாத்தியக் கருவிகள் முழங்கின. நவீன தாரை தப்பட்டைகள் தூள் பறத்தின. சீனப் பட்டாசுகளுக்கும் பஞ்சம் ஏதுமில்லை. வீதியோர இரவுகளைப் பகலாக்கின. ஊர் மக்கள் கூடி நின்று ஆச்சரியத்துடன் வேடிக்கை பார்த்தனர். பலியிடல் மட்டுமல்ல, சட்டத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையிலான பரந்த மோதலும் இந்த வேள்வியில் கலந்து கிடந்ததால் எந்த வகையில் குருதி ஆறு ஓடும் என்பதை அறிவதில் அவர்களுக்குள் ஒருவித இனம்புரியாத கிளர்ச்சி இருந்தது.

இளசுகளிடம் அச்சத்துடன் கூடிய சிலிர்ப்பும் கிளர்ச்சியும் விரவிக் கிடந்தன. பெரிசுகளில் பலர் அடுத்தவர் காதுகளில் இரகசியம் பேசினர். முணுமுணுப்புக்கள் அதிகம் இருந்தன.

இவற்றின் மத்தியிலேயே ஆட்டுக் கடாக்களின் ஊர்வலம் நகர்கின்றது. எல்லாவற்றையும் பார்த்தபடியும் கேட்டபடியும் நாமும் கூடவே நகர்கிறோம். செய்தியாளர்கள் என்கிற அடையாளம் எல்லாவற்றையும் ஓரங்கட்டி வைத்துவிட்டு வேள்வியை வேடிக்கை பார்க்க வந்த பாவனையில் சுற்றிக்கொண்டிருக்கிறோம். பலியிடல் தடைப்பட்டதால் ஆத்திரம் கொண்டியங்கும் கூட்டம் எங்கே செய்தியாளர்கள் என்று அடையாளம் கண்டு எங்களையும் சேர்த்தே பலியிட்டுவிடுவார்களோ என்ற அச்சம் உள்ளூரப் பரவி உதறலெடுக்க வைத்தாலும், கடவுளையும் கூடவே துணைக்கு அழைத்துக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

ஊர்வலம் ஆலயத்தினை நெருங்குகின்றது. அங்கே முதியவர், இளையவர் என்றதற்கப்பால் பெண்கள், சிறுவர்கள் என நூற்றுக்கணக்கில் கூட்டம் குவிந்துள்ளது. அனைவர் முகத்திலும் அச்சம் கலந்த எதிர்பார்ப்பு தெரிகின்றது.

ஆலயத்தில் பூசை வழிபாடுகள் வழக்கம்போலவே எந்தவிதக் குறைகளும் இன்றி நிறைவடைகின்றது. கடா அறுப்பு நேரம் நெருங்க நெருங்க குசுகுசுப்புகள் அதிகரிக்கின்றன. எங்கே எங்கே என்று அலைபாய்வதற்குத் தயார் நிலையில் நிற்கிறது கூட்டம். பலி நடக்குமா நடக்காதா? வதந்திகளுக்குப் பஞ்சமில்லை. "ஒரு கடா ஆலயத்தின் முன்பாக வெட்டப்படப்போகின்றதாம், ஏனையவை வயல் வெளியிலாம்." சரசரவென்று பற்றிப் பரவுகிறது கதை. அது அந்தப் பக்கம் போவதற்குள், "இல்லை, இல்லை பொலிஸ் நிற்பதால் ஒரு கோழியே கோயிலில் வெட்டுறதாம், மற்றதெல்லாம் இரகசியமா நடக்குமாம்." அடுத்த தகவல்கால்கள் இடையே உருண்டோடியது. இந்தவேளையில் ஆலய பூசையும் நிறைவுறுகின்றது . இரண்டொருவராக நின்ற சீருடைப் பொலிஸாரின் எண்ணிக்கை திடீரென பத்து இருபதாகின்றது. ஏதோ நடக்கத்தான் போகிறது என்ற பதற்றமும் பரபரப்பும் உச்சத்தை எட்டுகின்றன. சில பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் தலைகளும் தெரிகின்றன. ஆலயத்தின் ஒலிபெருக்கி கர கரக்கிறது. எல்லோர் கவனமும் அந்தப் பக்கமாகவே திரும்புகிறது. உத்தியோக பூர்வ அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

மாவட்ட மேல் நீதி மன்றத்தின் உத்தரவினை மீறமுடியாத சூழலில் தமது விருப்பம் இன்றியே ' நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் ' இந்த ஆண்டு ஆடுகளின் பலியிடல் நிறுத்தப்பட்டுள்ளது என்கிறது அந்த அறிவிப்பு.

(45 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ அதிரன்

# கொள்கையற்ற தமிழக தேர்தல் கூட்டணிகள்

தமிழகத் தேர்தல் பற்றிய கூட்டணி குழப்பங்களும், கூப்பாடுகளும் ஒருவாறு முடிவுக்கு வந்து விட்டன. ஆளும் அதி.மு.க, தி.மு.க, தே.மு.தி.க. - மக்கள் நலக் கூட்டணி, பா. ம.க, நாம் தமிழர், பா.ஜ.க. என்று ஆறு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

.எதைப் பற்றியும், எவரைப் பற்றியும் கவலைப்படாமல் ஆளும் அ.தி.மு.க., ஆறு கூட்டணிக் கட்சிகளுக்கு ஏழு இடங்களை அறிவித்து விட்டு, மற்ற இடங்களில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. முதல்வர் ஜெயலலிதா தம் பரப்புரையைத் தொடங்கி விட்டார். கடைசி வரை எதிர்பார்த்த தமிழ் மாநில காங்கிரஸ் வேறு வழியில்லாமல் மக்கள் நலக் கூட்டணியில் சேர்ந்துள்ளது.

ஐந்து முறை ஆட்சியமைத்த தி.மு.க. இந்த முறை காங்கிரஸ் கட்சிக்கு 41 இடங்களை ஒதுக்கிக் கொடுத்து விட்டு,தேர்தல் அறிக்கையும் வெளியிட்டுள்ளது. இந்தக் கூட்டணி பேரத்தின் காரணமாக தே.மு.தி.கவில் பிளவு ஏற்பட்டு மக்கள் தே.மு.தி.க. முளைத்துள்ளது. தமிழ் மாநிலக் காங்கிரஸின் சில மூத்த தலைவர்கள் பிரிந்து மறுபடியும் தாய்க் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

தமிழக வாழ்வுரிமை கட்சியும், மற்றும் சில உதிரிக் கட்சிகளும் கூட்டணியில் சேர இடம் தேடி அலைகின்றன. இவை போதா என்று நடிகர் கார்த்திக் தலைமையில் ஒரு கூட்டணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத் தேர்தல் வரலாற்றில் மட்டுமல்ல, இந்தியத் தேர்தல் வரலாற்றில் தனியொரு கட்சியின் ஆட்சி மறைந்து கூட்டணிக் கட்சிகளின் ஆட்சி தலைதூக்கும் காலம் இது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

அரசியல் கட்சிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து போய் விட்டனர். அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் இல்லை. தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களைத் தேடி வருவதும், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பிறகு மக்களை மறந்து விடுவதும், மக்களின் வெறுப்புக்குக் காரணம்.

திராவிடக் கட்சிகள் எனப்படும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் மாறி மாறி தமிழக அரியணையைப் பிடித்து ஆட்சி புரிந்தார்கள். இரண்டு கட்சிகள் மீதும் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டபோது மூன்றாவது நம்பிக்கையான ஒரு கட்சி கண்ணுக்குத் தெரியவில்லை. இந்நிலையில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதாவும், பாட்டாளி மக்கள் கட்சியும், மக்கள் நலக் கூட்டணியும் அந்த மூன்றாவது இடத்தைப் பிடிக்க முயல்கின்றன.

ஆட்சியைப் பிடிப்பதும், பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்வதும், பணம் சேர்ப்பதுமே ஒரே கொள்கையாகக் கொண்டு கூட்டணிகள் அமைப்பது வேடிக்கையாக இருக்கிறது. இதனை நல்லவர்களும், நடுநிலையாளர்களும், மக்களாட்சியின் மேல் நம்பிக்கை கொண்டவர்களும் வேதனையோடு வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

கட்சிகளை உடைப்பதையே கலையாகக் கொண்ட சில கட்சிகள் பணம், பதவி இவற்றைக் காட்டி, செல்வாக்கு மிகுந்தவர்களை இழக்கும் நிலை இப்போது அதிகரித்துள்ளது. கொள்கைகளைப் பற்றிக் கவலைப்படாத போக்கு இதற்கு எண்ணெய் ஊற்றி எரியச் செய்கிறது.

தேர்தல் ஆணையம் பல கடுமையான சட்டதிட்டங்களைப் பிறப்பித்துள்ளது. தமிழகத்தில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்த உறுதி கொண்டுள்ளோம் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் நஜீம் ஜைதி தெரிவித்துள்ளார். இதனையே தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானியும் வழிமொழிந்துள்ளார். சட்டப்பேரவைத் தேர்தல் ஏற்பாடுகள்பற்றிசென்னையில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் இரண்டு நாள்களாக ஆலோசனை நடத்திய பிறகு இவ்வாறுதெரிவித்துள்ளார். தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலின்போது பண நடமாட்டத்தைக் கண்காணிக்க வலிமையான கண்காணிப்பு அமைப்பு தேவைப்படுகிறது என்றும், இந்த அமைப்பில் மத்திய - மாநில அரசுகளின் அதிகாரிகள் இடம் பெறுவது அவசியம் என்றும், இந்த அம்சங்களைஅடிப்படையாகக்கொண்டு புதிய உத்திகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையம் உருவாக்கும் புதிய உத்திகளுக்கேற்ப அதனை முறியடிக்கும் உத்திகளையும் அரசியல் கட்சிகள் கண்டுபிடித்துக் கொண்டே போனால், இந்த மக்களாட்சி முறை எங்கே போய் முடியும்? நாகரிகமுள்ள ஒரு சமுதாயம் இதனை எத்தனை காலம் அனுமதிக்கப் போகிறது? வாக்காளர்களை வறுமையின் உச்சத்தில் வைத்துவிட்டு வாங்காதே என்றால் தடுக்க முடியுமா?

அரசியல் என்பது மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற பெரிய நோக்கத்தில் உருவானது. தேச நலனுக்காக உடல், பொருள், உயிரை அர்ப்பணித்த தியாகிகளின் குருதியால் எழுதப்பட்ட பிரகடனம் அது. இப்போது அது எப்படிப் போய்விட்டது? இன்று அரசியல் என்பது முதல் போடாமல், அதிக முயற்சியில்லாமல் செய்யப்படும் வணிகமாகிஷவிட்டது. அரசியலில் ஈடுபடுவதன் நோக்கமே பணம், பதவி, உல்லாசம் என்று ஆகிவிட்ட பிறகு எல்லா நெறிமுறைகளும் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. நல்லவர்களால் இந்தப் போட்டியில் ஈடு கொடுக்க முடியவில்லை.

தமிழகத் தேர்தல் களமும் இதனையே எமக்கு உணர்த்துகின்றது. நம் நாட்டிலும் இவற்றுக்குப் பஞ்சமில்லை என்பது சொல்லித் தெரியவேண்டிய தொன்றல்ல.

" இன்று அரசியல் என்பது முதல் போடாமல், அதிக முயற்சியில்லாமல் செய்யப்படும் வணிகமாகி விட்டது. அரசியலில் ஈடுபடுவதன் நோக்கமே பணம், பதவி, உல்லாசம் என்று ஆகிவிட்ட பிறகு எல்லா நெறிமுறைகளும் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. நல்லவர்களால் இந்தப் போட்டியில் ஈடு கொடுக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறைச் சரி செய்வீர்கள். பெண்கள் அழகு சாதனப் பொருள் வாங்குவர். மாணவர்கள் பெற்றோரின் அன்பைப் பெறுவர்.

**இடபம்:** குறிக்கோளுடன் பணியாற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி உருவாகலாம். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர்.

**மிதுனம்:** உறவினர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். மனதில் தர்ம சிந்தனை மேலோங்கும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பைப் பெறுவர்.

**கடகம்:** எதிரி இடம் மாறிப் போகும் நன்னிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். போட்டி, பந்தயத்தில் வெற்றி பெற வாய்ப்புண்டு.

**சிங்கம்:** பிறர் சொல்லும் விமர்சனத்தால் மனம் தளர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். வருமானம் உயரும். குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கன்னி:** பொது விவகாரத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். தாராளமாக சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும்.

**விருச்சிகம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி எளிதாக நிறைவேறும். வருமானம் படிப்படியாக உயரும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**தனுசு:** நேர்மையுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியம் பலம்பெறும்.

**மகரம்:** அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழிலில் வளர்ச்சிப் பணியை பூர்த்தி செய்வீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

**மீனம்:** உங்களின் கடும் பேச்சால் சிரமம் உருவாகலாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு குழந்தை வளர்ப்பில் பொறுமை தேவைப்படும். உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

## புதுமுகங்கள் நடிப்பில்
# எல்லாமே நீ தான்

"மைதிலி குமாரி புரடெக்ஷன்ஸ்" என்ற பட நிறுவனம் தயாரிக்கும் படம் "எல்லாமே நீதான்". இந்தப் படத்தின் கதையை எழுதி, இயக்கி தயாரித்து, நாயகனாக அறிமுகமாகிறார் கே.எஸ்.சிவா. கதாநாயகிகளாக புதுமுகங்கள் நம்ரதா, நட்சத்திரா நடிக்கிறார்கள். இவர்களுடன் வில்லனாக ஜிந்தா நடிக்கிறார். இந்தப் படம் குறித்து கே.எஸ். சிவா கூறும்போது, "மருத்துவக் கல்லூரி மாணவரான சிவா பொறியியல் கல்லூரி மாணவி மைதிலியைக் காதலிக்கிறார். சுக்ரீவாவைச் சந்திக்க மைதிலி காத்திருக்கும்போது போதை ஆசாமிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறாள். தேடிப் போன சிவாவை ஆசாமிகள் கத்தியால் குத்த, அதிலிருந்து தப்பிப் பிழைத்து காதலியைக் கொன்றவர்களைப் பழிவாங்கத் துடிக்கிறார் சிவா. மைதிலியைக் கொன்றவர்களை சிவா பழி வாங்கினாரா? சிவாவின் காதல் என்ன ஆனது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தரும் படமே "எல்லாமே நீ தான்". இந்தப் படத்துக்கு குட்லக் ரவி இசை அமைக்கிறார். தசரதன் ஒளிப்பதிவு செய்துள்ளார். காதல் கதையாக உருவாகியுள்ள படத்தை விரைவில் வெளியீடு செய்யவிருக்கிறோம்" –என்றார் கே.எஸ்.சிவா.












S@n+OsH

உழைப்பவர்களை ஏளனமாகப் பார்த்து, கொள்ளையர்களை உயர்வாகப் பார்க்கும் சமுதாயத்தில் இருக்கிறோம் நாம்...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 5 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 | 3 | 2 |
| 8 | 7 | 6 | 4 | 3 | 2 | 9 | 1 | 5 |
| 2 | 6 | 8 | 9 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 9 | 3 | 4 | 7 | 6 | 5 | 8 | 2 | 1 |
| 1 | 5 | 7 | 3 | 2 | 8 | 4 | 9 | 6 |
| 6 | 9 | 2 | 1 | 8 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 8 | 3 | 2 | 5 | 4 | 1 | 6 | 9 |
| 5 | 4 | 1 | 6 | 9 | 3 | 2 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

இவர்– "நாங்கள் ஏழு பேர் ஒரே குடையின் கீழ் நடந்து சென்றோம். ஆனால் ஒருத்தர் கூட நனையவில்லை" மற்றவர் "அது எப்படி?" இவர் "அப்போது தான் மழையே பெய்யவில்லையே...."

ஒருவன் "படகில் ஏறி பாக்கலாமா?" மற்றவன் "அது முடியாது. ஏரியில தான் படகைப் பார்க்க முடியும்"

ஆசிரியர் "ஏண்டா நாய் படம் போட்டுட்டு வாய் மட்டும் வரையாமல் விட்டு வைச்சிருக்கிறாய்?" மாணவன் "அது வாயில்லாப் பிராணி சேர்" ஆசிரியர் "வேடந்தாங் கலுக்கு வருகிற பறவைகள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன?" மாணவன் "முட்டையிலிருந்து தான் சேர்"

படித்ததில் பிடித்தது


ஆசிரியர் "உலகில் எங்கெல்லாம் பெற்றோல் கிடைக்கிறது?" மாணவன் "எல்லாப் பெற்றோல் நிலையத்திலும் சேர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**நாளை**
**சித்திரை-26**
திங்கட்கிழமை 09.05.2016
திதி: திருதியை
மு.இ.07.17 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பி.இ.04.36 வரை
ராகுகாலம்:
07.24-08.54 வரை
சுபநேரம்:
11.54-01.24 வரை
அக்ஷய திருதியை

# சுத்தம் செய்யும் எலுமிச்சை



- பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்ட எலுமிச்சையை வைத்து வீட்டைச் சுத்தப்படுத்தலாம்.
- ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், சோடா உப்பையும் கலந்து வைத்து கொள்ளுங்கள், இதனைக் கொண்டு சுத்தம் செய்தால் ஜன்னல் பளிச்சென மின்னும்.
- தரையை சுத்தம் செய்யும் போது, எலுமிச்சை பழத்தை சில துளிகள் பிழிந்து ஈரத்துணி கொண்டு துடையுங்கள், பின்னர் பத்து நிமிடங்கள் கழித்து வினிகர் மற்றும் உப்புக் கலந்த தண்ணீரைக் கொண்டு துடைக்க வேண்டும்.
- வீட்டின் கழிவறையைச் சுத்தம் செய்ய சிறிது எலுமிச்சை தண்ணீரைத் தெளித்து பின்னர், வினிகர் தெளித்து சுத்தம் செய்தால் பளபளவென மின்னும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 40 | – | 40 | 80 |
| கத்தரி | 100 | 80 | 100 | 100 | 100 | 80 | 70 | 40 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 80 | 100 | 170 | 120 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 120 | 100 | 60 | 90 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 120 | 120 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 70 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 70 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 120 | 100 | 120 | 100 | 140 | 100 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 40 | 15 | 20 |
| தக்காளி | 120 | 120 | 120 | 200 | 140 | 160 | 120 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 | 40 | 30 | 35 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 10 | 25 | 30 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 120 | 80 | 100 | 100 | 100 | 60 | 60 |
| புடோல் | 60 | 50 | 80 | 60 | 50 | 100 | 30 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 100 | 100 | 100 | 80 | 70 |
| வெண்டி | 80 | 60 | 80 | 120 | 100 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 240 | 160 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 220 | 120 | 120 | 140 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 40–50 | 40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 100–140 | 90 | 120 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 420 | 400 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 100–120 | 80 | 110 | 60 |
| இராசவள்ளி | 150 | 150 | 160 | 160 | 140 | – | 80 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 200 | 150 | 300 | 240 | 160 | 300 |

# உளுந்து லட்டு



**தேவையான பொருள்கள்**

உளுத்தம் பருப்பு – 2 கப்
அரிசி – 2 தேக்கரண்டி
சீனிப் பவுடர் – 2 கப்
நெய் – தேவையான அளவு

**செய்முறை**

சட்டியை அடுப்பில் வைத்து தனித்தனியே பருப்பு மற்றும் அரிசியை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும்.
இரண்டையும் தனித்தனியாகத் தூளாக அரைத்து கலந்து கொள்ளவும்.
சட்டியில் நெய் விட்டு அது காய்ந்ததும் அரைத்து வைத்திருக்கும் மாவைச் சிறிது சிறிதாகக் கொட்டிக் கிளறவும்.
நன்கு கிளறியதும், சட்டியை அடுப்பில் இருந்து இறக்கி சூடாக இருக்கும் போதே லட்டுகளாக உருட்டிக் கொள்ளவும்.






நூல் வளையல் அறிமுகமாகியுள்ளது. அலங்காரமான வேலைப்பாடுகளுடன், வர்ண நூலால் அலங்காரம் செய்யப்பட்டு இந்த வளையல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவை 400 ரூபாவில் இருந்து 650 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 500 | 300 | 350 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 600 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | 500 |
| சீலா | 300 | 500 | 400 | 450 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 250 | 400 | 400 | 350 |
| நகரை | 250 | 250 | – | 250 | 300 | 300 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | 350 | 300 | 400 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 350 | 400 | 500 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையைச் சுற்றவைக்கும் கோக்லியின் வருமானம்

உலகளவில் பிரபலமான கிரிக்கெட் வீரர்கள் ஒரு நிமிடத்துக்கு எவ்வளவு ஊதியம் வாங்குகின்றனர் என்ற பட்டியல் வெளியாகியுள்ளது. இவர்களின் விராட் கோக்லியே முதலிடத்தில் உள்ளார். இதன்படி அவர் இந்திய மதிப்பில் ஒரு நிமிடத்துக்கு 5 ஆயிரத்து 811 ரூபாய்களை ஊதியமாகப் பெறுகிறார். இரண்டாவது இடத்தில் டோனி உள்ளார். அவர் 3 ஆயிரத்து 638 ரூபாய்களை ஊதியமாகப் பெறுகிறார். மூன்றாவது இடத்தில் கெயில் உள்ளார். அவர் 950 ரூபாய்களைப் பெறுகிறார். அடுத்த இடத்தில் அப்ரிடி உள்ளார். அவர் 798 ரூபாய்களைப் பெறுகிறார். ஐந்தாவது இடத்தில் வற்சனும், வில்லியர்ஸும் உள்ளனர். அவர்கள் 696 ரூபாய்களைப் பெறுகின்றனர்.

அப்படியாயின் கோக்லி ஒரு மணி நேரத்தில் 3 லட்சத்து 48 ஆயிரத்து 660 ரூபாய்களை ஊதியமாகப் பெறுகிறார். இவர்களின் இந்த எல்லையற்ற வருமானத்துக்கு பிரதான காரணம் ஐ.பி.எல். தொடரே. ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணியை தலைவராகப் பிரதிநிதித்துவம் செய்ய கோக்லிக்கு 50 நாள்களில் 12.5 கோடி ரூபாய்கள். அதாவது ஆயிரத்து 250 இலட்சங்கள் கொடுக்கப்படுகின்றன.





# ரியோ டி ஜெனிரோவில் ஒலிம்பிக்கின் தீபம்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒலிம்பிக் தீபம் அதை நடத்தும் நாடான பிரேஸிலை கடந்த 5ஆம் திகதி சென்றடைந்துள்ளது.

தொன்மையான கிரேக்க ஆலயமொன்றிலிருந்து சுவிட்சர்லாந்துக்குச் சென்ற தீபம், அங்கிருந்து பிரேஸிலியா நகரைச் சென்றடைந்தமையைத் தொடர்ந்து, ஒலிம்பிக்குக்கான மூன்று மாத காலம் ஆரம்பித்துவிட்டது. உலங்கு வானூர்தி ஒன்றின் மூலம் கொண்டுசெல்லப்பட்ட தீபம், பின்னர் குதிரையில் வைக்கப்பட்டு, பிரேஸிலின் பாரம்பரிய சடங்குகளைத் தொடர்ந்து, அந்த நாட்டின் தலைநகரான பிரேஸிலியா விலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி டில்மா றூசெப்பினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறான நெருக்கடிகளைச் சந்தித்துள்ள பிரேஸிலுக்கு, அவற்றிலிருந்து கவனத்தைத் திருப்புவதற்கான சந்தர்ப்பமாக ஒலிம்பிக் தொடர் அமையுமென்று கூறப்பட்ட போதிலும், ஒலிம்பிக் தீபம் குறித்து உள்நாட்டவர்கள் பெருமளவில் ஆர் வத்தை வெளிப்படுத்தவில்லை.

# அபராதங்களை அள்ளிய ஆட்டம்

ஐ.பி.எல். தொடரில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற கொல்கத்தா, பெங்களூர் அணிகள் மோதிய ஆட்டத்தில் கிட்டத்தட்ட 85 லட்சம் ரூபாய்களுக்கு (இந்திய மதிப்பில்) அதிகமாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் அணி இரண்டாவதாகப் பந்து வீசியது. தாமதமாக பந்துப் பரிமாற்றங்களை நிறைவு செய்ததால் பெங்களூரின் தலைவர் என்ற வகையில் கோக்லிக்கு 24 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அந்த அணியின் ஏனைய வீரர்களுக்கு ரூபா 6 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த குற்றத்துக்காக பெங்களூர் அணியால் 84 லட்சம் ரூபா அபராதம் செலுத்தப்பட்டுள்ளது.



குறித்த ஆட்டத்தில் கொல்கத்தா வெற்றிபெற்ற தருணத்தில் அந்த அணியின் தலைவரான கம்பீர் நாற்காலியை எட்டி உதைத்ததால் குறித்த ஆட்டத்துக்கான அவரது ஊதியத்திலிருந்து 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஆட்டத்தில் விதிக்கப்பட்ட அபராதங்களைச் சேர்த்தால் அது 85 லட்சம் ரூபாக்களை தாண்டுகிறது.

# சிகாவில் இருந்து தப்ப சீருடை தென்கொரியாவின் தயாரிப்பில்

பிரேஸிலில் நடப்பு வருடத்தில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக்தொடரில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகள், சீகா வைரஸைப் பரப்பும் நுளம்பால் கடியுறுவர் என்ற அச்சம் நிலவுகின்ற நிலையில், அதிலிருந்து தப்புவதற்கான சீருடையை தென்கொரியா தயாரித்துள்ளது. இதன்படி ஒலிம்பிக் தொடரில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகள், முழுக்கையுடைய மேலாடைகளையும் கால்கள் முழுவதையும் மறைக்கின்ற ஆடைகளையும் அணியவுள்ளனர். இதற்கு மேலதிகமாக, அந்த ஆடைகளில், நுளம்புகளை விரட்டும் மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதன் மூலம், நுளம்புக்கடியிலிருந்து அவர் தப்பமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சிகளில் ஈடுபடும் ஆடைகளும், ஆரம்ப, இறுதி நிகழ்வுகளில் அணியும் ஆடைகளுமே இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. விளையாடும் பொழுது பயன்படுத்தும் ஆடைகளை நுளம்புகளை விரட்டும் வடிவில் வடிவமைக்க முடியாது என்பதால், அவற்றில் மாற்றங்களைச் செய்யவில்லை எனத் தெரிவித்துள்ள தென்கொரிய தடகளச் சம்மேளனம், எனினும் நுளம்புகளை விரட்டும் மருந்துகளை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.



## சரியப்போகிறது சச்சினின் சாதனை


இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவரான குக் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் ரெண்டுல்கரின் சாதனையை ஒன்றை முறியடிக்கப் போகிறார். 31 வயதாகும் குக் டெஸ்ட் போட்டிகளில் 10ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்ட இன்னும் 36 ஓட்டங்களே தேவை. இந்த மைல்கல்லை சச்சின் டெண்டுல்கர் 2005ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் எட்டினார். அப்போது அவருக்கு 32 வயது. இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக நடக்கவுள்ள டெஸ்ட் தொடரில் குக் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டும்பட்சத்தில் குறைந்த வயதில் இந்த மைல்கல்லை எட்டிய சச்சினின் சாதனையை அவர் முறியடிப்பார். மேலும், டெஸ்டில் 10ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையும், ஒட்டுமொத்தமாக 12ஆவது வீரர் என்ற பெருமையும் அவருக்கு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரொயிட் சுரப்பி

## தொடர்பான நோய்களும் அதற்கான தீர்வுகளும்

மருத்துவர் எம்.அரவிந்தன்




**1. தைரொயிட் சுரப்பி தொடர்பான நோய்கள் பற்றிச் சிறிது கூறுங்கள்?**

தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் நோய்கள் பல்வேறு வகைப்படும்.

தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரப்பதனால் ஏற்படுகின்ற நோய் (Hypothyroidism). தைரொயிட் சுரப்பி அதிகமாகச் சுரப்பதால் ஏற்படுகின்ற நோய் (Hyperthyroidism) ஆகும். மற்றும் தைரொயிட் சுரப்பியில் ஏற்படுகின்ற பல வகையான புற்று நோய்கள் இவற்றுக்கு உதாரணங்களாகும்.

**02. தைரொயிட் சுரப்பு குறைவாகச் சுரத்தல் முக்கியமான ஒரு நோயாக உள்ளது. இது பற்றிச் சிறிது விளக்கமாகக் கூறவும்?**

தைரொயிட் சுரப்பு குறைவாக சுரக்கும் நோயானது எமது நாட்டிலும் காணப்படுகின்ற மிகப் பிரதானமான தைரொயிட் தொடர்பான நோயாகும். இந்த நோயாளர்கள் கழுத்தில் கழலையோடோ, கழலையின்றியோ இருக்கலாம். சோர்வு, பகல் நேரத்தில் அதிக தூக்கம், உடற்பருமன் அதிகரித்தல், மலச்சிக்கல், குளிர் தாங்க முடியாமல் இருத்தல் மற்றும் பெண்களில் மாதவிடாய் அதிகமாக இருத்தல் போன்ற குணங்குறிகள் இந்த நோயாளர்களுக்கு இருக்கும். இவர்களின் குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோன் அளவை (Free T4, TSH) பரிசோதிப்பதன் மூலம் நோயை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். கழுத்தில் கழலை போன்ற வீக்கமுள்ளவர்களுக்கு ஸ்கான் பரிசோதனை மற்றும் இழையப் பரிசோதனை (FNAC) போன்றவை மேற்கொள்ளப்பட நேரிடுகின்றது.

**03. தைரொயிட் சுரப்பு குறைவாகச் சுரப்பதாகக் கண்டறியப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் வைத்திய சிகிச்சையைப் பற்றி எடுத்துக் கூறுங்கள்?**

இவர்களுக்கு தைரொயிட் மருந்தானது அவர்களின் உடல் நிறை மற்றும் வேறு நோய்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தேவையான அளவில் வைத்தியர்களால் வழங்கப்படுகின்றது. இவ்வாறான நோய் ஏற்பட்டதற்கான காரணத்தை அறியும் சோதனைகளும் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை தைரொயிட் ஹோர் மோனின் அளவை (TSH) மதிப்பிடுவதன் மூலம் தைரொயிட் மருந்தின் அளவானது தேவைப்படின் மாற்றப்படுகின்றது. தைரொயிட் மருந்து உட்கொள்பவர்கள் அதனை அதிகாலையில் வெறு வயிற்றில் உட்கொள்வது அவசியமானதாகும். இதன் பின்னர் அரை மணித்தியாலத்துக்கு உணவு மற்றும் தேநீர் போன்றவற்றை உள்ளெடுக்கக் கூடாது. அத்துடன், கல்சியம், இரும்புச்சத்து மருந்து போன்றவற்றையும் தைரொக்சினுடன் சேர்த்து உள்ளெடுக்கக் கூடாது. இவ்வாறு உள்ளெடுக்கும்போது தைரொக்சினின் அகத்துறிஞ்சலானது குறைவடைய நேரிடுகிறது.

**04. தைரொயிட் சுரப்பி அதிகளவில் சுரக்கும் நோயின் அறிகுறிகள் யாவை?**

தைரொயிட் சுரப்பி அதிகளவில் சுரக்கப்படும்போது உடலில் பல்வேறுபட்ட குணங்குறிகள் ஏற்படுகின்றன. படபடப்பு, கைநடுக்கம் ஏற்படுதல், அதிகளவு வியர்வை ஏற்படுதல், அடிக்கடி மலம் கழித்தல், அதிக வெப்பத்தைத் தாங்கமுடியாமல் இருத்தல், உடல் மெலிவடைதல் மற்றும் பெண்களில் மாதவிடாய் ஒழுங்கற்று காலப்பகுதி குறைவடைதல் என்பவை இதன் அறிகுறிகளாகும். இந்த நோயாளருக்கும் தைரொயிட் ஹோர்மோன் அளவை (Seram Free T4, TSH) குருதியில் பரிசோதிப்பதன் மூலம் நோயை உறுதிசெய்து கொள்ளமுடியும். சில நோயாளருக்கு கண்கள் வெளித்தள்ளி கண் உருட்டுதல், பார்வை இரண்டாகத் தெரிதல் போன்ற பிரச்சினைகளும் ஏற்பட நேரிடலாம். கழுத்துப் பகுதியில் தைரொயிட் பெரிதாகி கழலை ஏற்பட்டு இவ்வாறான கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படுவது Graves disease என அழைக்கப்படுகின்றது. தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரப்பதற்கும் பல காரணங்கள் உள்ளன.

**5. தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரக்கும் ஒருவருக்கு வழங்கப்படும் வைத்திய சிகிச்சைகள் பற்றி விளக்கிக் கூறவும்?**

கார்பிமஸோல் (Carbimazole) எனப்படும் குளிகையானது இந்த நோயைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகின்றது. வைத்திய ஆலோசனையின்படி நோயாளியின் குணங்குறிகள் மற்றும் குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவு என்பவற்றைக் கருத்திற் கொண்டு இந்த மருந்தின் அளவு (dosage) தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவைப் பரிசோதித்து அதற்கேற்ப கார்பிமஸோல் மருந்தின் அளவு மருத்துவர்களால் மாற்றப்படுகின்றது. இந்த மருந்தைப் பாவிக்கும்போது ஏற்படும் சில பக்க விளைவுகள் சம்பந்தமாக மருத்துவர்கள் எடுத்துக் கூறுவார்கள். கார்பிமஸோல் மருந்தைப் பொதுவாக 18 முதல் 24 மாதங்களுக்கு உள்ளெடுக்கும்போது இந்த நோயானது முற்றிலும் குணமடையும் வாய்ப்பு அதிகமாகும். சில வகையான தைரொயிட் சுரப்பு அதிகரிக்கும் நிலைமைகளின்போது கார்பிமஸோல் மருந்தை இரண்டு வருடங்கள் பயன் படுத்திய பின்னரும் நோயானது குணமடையாமல் இருக்கும். இந்த நோயாளருக்கு சத்திர சிகிச்சை மற்றும் கதிர் வீச்சு மருந்தை உட்கொள்ளும் சிகிச்சை (Radio iodine treatment) போன்றவை வழங்கப்பட நேரிடுகின்றது.

**06. தைரொயிட் தொடர்பான பிரச்சினையுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றி எடுத்துக் கூறவும்?**

தைரொயிட் சுரப்புக் குறைபாடுடைய (Hypothyroidism) பெண்மணியொருவர் கர்ப்பம் தரித்தலை உறுதிப்படுத்திய உடனேயே தனது தைரொக்ஸின் மருந்தின் அளவை 25mg இனால் அதிகரித்தல் அவசியமாகும். இதன் பின்னர் வைத்திய ஆலோசனைப்படி பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்தின் அளவை மாற்றுதல் அவசியமாகும். கர்ப்பம் தரித்து முதல் 3 மாத காலப்பகுதி மிகவும் முக்கியமானதொரு காலப்பகுதியாகும். சிசுவின் உடல் அங்கங்களின் வளர்ச்சியும், மூளை வளர்ச்சியும் இந்தக் காலப்பகுதியிலேயே ஏற்படுகின்றன.

எனவே வைத்திய ஆலோசனையின்படி தேவையான அளவு தைரொக்ஸின் மருந்தை எடுக்காது விடும்போது, பல்வேறுபட்ட குறைபாடுகள் சிசுவில் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. இதேபோல தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரக்கும் பிரச்சினையுள்ள பெண்மணியொருவர் கர்ப்பம் தரிக்கும்போதும் அவரது மருந்தின் அளவு வைத்திய ஆலோசனையின்படி மாற்றப்பட (adjustment) நேரிடுகிறது. கர்ப்பத்தின் முதல் 3 மாதங்களின்போது (1st trimester) Propyl thiouracil என்ற மருந்தே Carbimazole க்குப் பதிலாக வழங்கப்பட வேண்டும். எந்தவொரு தைரொயிட் நோயுள்ள கர்ப்பிணிப் பெண்ணுக்கும் மாதாந்தம் தைரொயிட் ஹோர்மோன் நிலையானது பரிசோதிக்கப்படுவது அவசியமாகும்.

**07. தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் புற்று நோய்கள் யாவை?**

தைரொயிட் சுரப்பியில் கழலை ஏற்படும்போது சில சந்தர்ப்பங்களில் குணங்குறிகள் மற்றும் கழலையின் தன்மை என்பவற்றைக் கொண்டு புற்று நோய் இருக்கின்றதா என மருத்துவர்கள் சந்தேகிப்பார்கள். இந்த நோயாளருக்கு ஸ்கான் பரிசோதனை மற்றும் இழையப் பரிசோதனை (FNAC) என்பவற்றின் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் புற்று நோய்கள் பல வகைப்படும். இவற்றுக்கான சிகிச்சை முறைகளும் புற்றுநோயின் தன்மைக்கேற்ப வேறுபட நேரிடுகின்றது.

**08. இறுதியாக, தைரொயிட் தொடர்பான நோய்களால் பாதிக்கப்படும் எமது மக்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

தைரொயிட் தொடர்பான பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொண்டு அதற்கான சிகிச்சையை ஒழுங்காகப் பெற்றுக் கொள்ளுமிடத்து, அந்த நோயிலிருந்து குணமடைய அல்லது அதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. எமது யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள அகஞ்சுரக்கும் தொகுதியியல் (ஹோர்மோன்கள் தொடர்பான) சிகிச்சை நிலையமானது வடமாகாணத்திலுள்ள சகல மக்களுக்குமான ஒரேயொரு ஹோர்மோன்கள் தொடர்பான சிகிச்சை நிலையமாகும். தேவையேற்படுகின்ற நோயாளர் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் எமது சிகிச்சை நிலையத்தை அணுகுவதன் மூலம் தேவைப்படும் தரமான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி,
விசேட வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் பக்தியை பறைசாற்றும் "அவர்கள் மூன்று சிறுவர்கள்" நூல் வெளியீடு

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*

மே மாதம் 13ஆம் திகதி, பத்திமா அன்னையின் பெருவிழாவும் யாழ். ஆயரின் பிறந்த தினமும் ஆகும்.

யாழ். மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மரி அன்னையின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் யாத்திரைத்தலப் பெருவிழா மே மாதம் 13ஆம் திகதியாகும். யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பிறந்த தினமும் அன்றே ஆகும். இதனாலேயே மரி அன்னை வழி இயேசுவிடம் என்ற விருது வாக்கை அவர் யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்கும்போது எடுத்துக்கொண்டார். தனது பிறந்த தினத்தில் யாழ். ஆயர் மேற்படி யாத்திரைத் தலப் பெருவிழாவில் கலந்து கொள்வதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. முதலில் யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்குப் பிறந்த தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். யாழ். மறைமாவட்டத்தை சிறப்பாக வழிநடத்த இறைஆசீர் வேண்டுவோம்.

### பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் பதியில் அருள்திரு கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார்

மரி அன்னை வழி இயேசுவிடம் என்ற விருது வாக்குடன் யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றுள்ள ஆயரின் ஆளுகையில், மரி அன்னைப் பக்தி யாழ். மறைமாவட்டத்தில் சிறப்புற்று வளரப் போகிறது என்பதற்கு கட்டியம் கூறுவது போல, தேவ அன்னையில் அதீத பற்றுக்கொண்ட அருள்திரு கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரை பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் பதிக்கு நிர்வாகியாக நியமித்து அதனை விருத்தி செய்யும்படி யாழ். ஆயர் வேண்டியுள்ளார். அருள்திரு கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் செய்த முதல் முக்கிய முயற்சி கனன் பாத்தாஸ் அடிகளாரால் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டு, சாள்ஸ் சூசைப்பிள்ளை ஆசீர்வாதம் அ.ம.தி அடிகளாரால் தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டு 1949ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற கிறிஸ்தவ இலக்கிய நூலை அப்படியே மறுபதிப்புச் செய்ததாகும். தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதற்கும் பண்டத்தரிப்பின் பற்றிமா கிரியிலிருந்து வெளியிடப்பட்ட "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற நூலூடாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு பத்திமா மாதா காணப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் அந்த அன்னை வழியாக தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஆன்மிக மகிழ்ச்சியையும் நிறைவையும் காண வேண்டும் என்ற பேரவாவிலும், இந்த நூலை இந்தத் திருப்பதியின் நிறுவுநர் கென்றி ஜெலான் அ.ம.தி. அடிகளார் (1948-1953) வெளியிட்டார் என பத்திமா மாதா யாத்திரைத்தலத்தின் பரிபாலகர் அருள்திரு கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் பதிப்பாசிரியரின் முகவுரையில் தெரிவிக்கிறார். 322 பக்கங்களைக் கொண்ட "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற புத்தகம் 6 அதிகாரங்களைக் கொண்டது. அன்றைய யாழ். ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் ஆண்டகையின் பணியின் 25ஆவது ஆண்டு நிறைவில் அவரின் முன்னுரையுடன் வெளியிடப்பட்ட மேற்படி நூலை வெளியிடுவதற்கான யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அனுமதி நூலில் வெளியிடப்பட்டுள்ளது. ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் ஆண்டகை 1949 ஆம் ஆண்டு எழுதிய தமது முன்னுரையில் " இந்த மூன்று இடையர்கள் செபமாலையைச் செபித்துப் பாவிகள் மனம் திரும்ப மன்றாடல், தபமும் பரித்தியாகக் கிரிகைகளும் புரிவதில் பயிற்சி பெறல் – தேவ சித்தத்துக்கு அமைதல் ஆகிய புண்ணியங்களில் விசேட முன்மாதிரிகைகளாய் இருக்கிறார்கள்" என்று நூலை வெளியியிடுவதற்கான நோக்கைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

> ஜரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் சமூக ஆன்மிக மாற்றங்களில் பத்திமா அன்னை எவ்வாறு பங்காற்றினாரோ அவ்வாறே தமிழ் பேசும் மக்களின் அரசியல் சமூக ஆன்மிக வாழ்வின் மறுமலர்ச்சிக்கு பத்திமா அன்னை பேரருள் புரிவாராக

### ஜீவா போல் அ.ம.தி. அடிகளார் வெளியீட்டு உரை


"அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற கிறிஸ்தவ இலக்கிய நூலின் வெளியீட்டு உரையை நிகழ்த்திய ஜீவா போல் அ.ம.தி அடிகளார், "ஓர் அம்மம்மா கதை சொல்வதைப்போல் இனிய தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று சிறுவர்களின் காட்சிக்கு அவர்களின் பெற்றோரும் உறவினரும் சிறுவர்களின் உள்ளத்தை ஆன்மிக ரீதியாகப் பண்படுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஏழைச் சிறுவர்களுக்கு இறை அன்னை எவ்வாறு காட்சி கொடுக்க முடியும் என்ற உண்மை அவ்வூர் மக்களுக்கும் அந்நாட்டு அரசுக்குமே ஒரு பெரும் சவாலாகவும் குழப்பமாகவும் எழுந்தது. இதன் பொருட்டு 3 சிறுவர்களும் எதிர்கொண்ட தியாகங்களும் சொல்லொண்ணாத் துன்பங்களும் ஒரு சோகக்கதையே. இந்த வரலாற்றுக்கு ஆன்மிகவியற் பொருள் கொடுத்து எம் ஈழமண்ணின் ஒரு கிராமத்தின் பின்புலத்தில் இடம் பெற்றது போல யதார்த்தமாக மொழி பெயர்த்திருப்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இதனை மொழி பெயர்த்த சு.ஆசீர்வாதம் அ.ம.தி. அடிகளாரது தமிழ்ப் புலமை போற்றுதற்குரியது. 322 பக்கம் கொண்ட அந்நூலை படிக்கும் பொழுதுதான் அவ்ஆக்கத்தின் சுவையை அறிந்து கொள்ள முடியும்" என்று கூறினார்.

### மூன்று இடைச் சிறுவர்களுக்கு தேவ அன்னை காட்சி

1917ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா பதியில் தேவ அன்னையின் காட்சிகள் அருளப்பட்ட லூசியா, யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய மூன்று இடைச் சிறுவர்களின் அனுபவங்களை சித்திரிப்பதே இக் கிறிஸ்தவ இலக்கிய நூலின் சாரமாகும். மரி அன்னையின் காட்சிகள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் 13ஆம் திகதி ஆறு மாதங்களுக்கு நீடித்தது. இக்காட்சி நடைபெற்று 3 ஆண்டுகளின் பின்னர் யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய இருவரும் இறந்து போனார்கள். லூசியா கார்மேல்சபை அருட்சகோதரியாகி 97 வயதுவரை வாழ்ந்து 2005 ஆம் ஆண்டு இறந்து போனார். யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய இருவருக்கும் திருத்தந்தை இரண்டாம் யோண் போல் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கினார்.

### தேவ அன்னையின் காட்சிகளில் மூன்று பத்திமா இரகசியங்கள்

தேவ அன்னையின் காட்சிகளின்போது மூன்று பத்திமா இரகசியங்கள் வெளியிடப்பட்டன. முதல் இரண்டு இரகசியங்கள், முதலாவது உலக யுத்தத்தின் முடிவையும் இரண்டாம் உலக யுத்தத்தின் ஆரம்பத்தையும் பற்றியதாகும். மூன்றாவது இரகசியம் 2002இல் வெளியிடப்பட்டது. அது திருத்தந்தை இரண்டாம் யோண் போல் அவர்கள் 1981 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியால் சுடப்பட்டு தெய்வாதீனமாக பாதுகாக்கப்பட்டதைக் குறித்திருந்தது. 1981ஆம் ஆண்டு வத்திக்கான் சதுக்கத்தில் முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியின் 9 கலிபர் துப்பாக்கிச் சன்னங்கள் இரண்டு திருத்தந்தையின் உடலைத் துளைத்தன. 5மணி நேர சத்திர சிகிச்சையின் பின்னர் டாக்டர்கள் தெரிவித்த விடயம் ஒரு புதுமை நடந்துள்ளது என்பதாகும். முக்கிய உறுப்புக்களைத் தாக்காமலும், அவரைக் கொல்லாமலும், நிரந்தர உடற் பாதிப்புக்களை ஏற்படுத்தாமலும், அவரது உடலைத் துளைத்த சன்னங்களை யாரோ வழி நடத்தியுள்ளனர் என்று தெரிவித்தனர். 1983 ஆம் ஆண்டு தாம் சுடப்பட்ட இரண்டு அரை ஆண்டுகளின் பின்னர் திருத்தந்தை இரண்டாம் யோண் போல் அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று தம்மைச் சுட்டுக் காயப்படுத்திய முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியைச் சந்தித்துப் பேசினார். அப்போது முகமது அலி அக்கா "எனது குறி ஒருபோதும் தப்பாது. நீங்கள் தப்பியது எப்படி?" என்ற கேட்டார். அதற்குத் திருத்தந்தை துப்பாக்கியை இயக்கியது ஒரு கை சன்னத்தை வழி நடத்தியது வேறொரு கை எனத் தெரிவித்தார். 1982 ஆம் ஆண்டு பத்திமாபதி ஆயர் திருத்தந்தையைச் சந்தித்த திருத்தந்தை தமது உடலில் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தை ஆயரிடம் கொடுத்து அதனைப் பத்திமா அன்னையின் பதியில் வைக்கும்படி வேண்டினார். ஆயர் அச்சன்னத்தை பத்திமா அன்னையின் திரு முடியில் பொறித்து வைத்துள்ளார். தாம் சுடப்பட்ட அடுத்த ஆண்டு அதே தினத்தில் 1982ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி திருத்தந்தை இரண்டாம் யோண் போல் அவர்கள் பத்திமா பதிக்குச் சென்று பத்திமா அன்னைக்கு நன்றி செலுத்தினார். 10 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் 1991ஆம் ஆண்டு பத்திமா பதிக்குச் சென்றுள்ளார். தமது உயிரைப் பாதுகாத்ததற்காக மட்டுமல்ல தமது பதவிக்காலம் முழுவதும் துணை நின்றதற்கும் 1989 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்திலும் கிழக்கு ஜரோப்பாவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக நாஸ்திகவாதம் வீழ்ச்சியுற்றதற்காகவும் அன்னைக்கு நன்றி செலுத்துவதாக 2000ஆம் ஆண்டில் முத்திப்பேறு பெற்ற பட்டத்தை யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய இருவருக்கும் வழங்கிய [illegible] உள்ளார்.



### திருத்தலத்தின் நிறுவுநர் கென்றி ஜெலான் அ.ம.தி. அடிகளார்

கென்றி ஜெலான் அ.ம.தி. அடிகளார் (1948-1953) பண்டத்தரிப்பு வாழ் மக்களை முன்னேற்றும் நோக்குடன் இந்த பாத்திமா கிரியை தோற்றுவித்து மரியன்னை வழி இறைவனின் அருட்பொழிவு இனமத பேதமின்றி எல்லா மக்களையும் சென்றடைய வழி கோலினார். கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளார் பண்டத்தரிப்புப் பகுதியில் போத்துக்கேயரால் நடப்பட்ட இராச முருக்கு மரத்தடியில் பேய்கள் உலவுவதாகப் பரவி வந்த பாரம்பரியக் கதையால் மக்கள் அங்கு போவதற்குப் பயந்திருந்த நிலையில், அதனை நிறுத்தி அங்கு பத்திமா அன்னையின் பக்தியைப் பரப்பும் நோக்குடன் பெரும் தூபி ஒன்றை 1949இல் நிறுவி அதன் உச்சியில் பத்திமா அன்னையின் சொருபத்தை நிறுவினர். யாழ். நகரின் பிரபல சிற்பியான மனுவல்தம்பி அவர்களால் செதுக்கப்பட்ட பத்திமா அன்னையின் சொருபத்தை இன்றும் இராச முருக்குப் பகுதியில் காணலாம். பின்னர் இராச முருக்குப் பக்கமாக இருந்த பற்றைக் காடுகளை வாங்கியும், இலவசமாகப் பெற்றும் கொட்டில் கோவில் அமைத்ததோடு பத்திமா அன்னையின் ஆலயப் பணிகள் ஆரம்பமாகின. ஞானரத்தினம் அடிகளார் (2000-2005) காலப்பகுதியில் இன்று அழகுறக் காட்சி தரும் ஆலயம் கட்டப்பட்டு, ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 2003ஆம் ஆண்டு நேர்ந்தளிக்கப்பட்டது. அவ்வாண்டின் திருநாள் திருப்பலியை முன்னைநாள் பங்குத்தந்தையாக இருந்த ஓய்வு நிலை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை ஒப்புக் கொடுத்தார்.

எவ்வாறு ஜரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் சமூக ஆன்மிக மாற்றங்களில் பத்திமா அன்னை பங்காற்றினாரோ, அவ்வாறே தமிழ் பேசும் மக்களின் அரசியல் சமூக ஆன்மிக வாழ்வின் மறுமலர்ச்சிக்கு பத்திமா அன்னை பேரருள் புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைப்பலி

(38ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடுகளுக்கு மஞ்சள் தண்ணீரைத் தெளித்து மீண்டும் வீடுகளுக்கே கொண்டு செல்லலாம் என்று தொடர்கிறது அந்த அறிவித்தல்.

கூட்டம் வெகுண்டு தங்கள் ஆத்திரத்தையும் கோபத்தையும் திட்டுக்களின் மூலமும் ஏச்சுக்களின் மூலமும் வடிகால் கட்டுகிறது. அங்கே கூடியிருந்த எவருக்கும் பலியிடல் நிறுத்தப்பட்டதில் உடன்பாடில்லை என்பதை அவர்களின் முகங்கள் வெளிப்படுத்திய உணர்ச்சியும் உமிழ்ந்து துப்பிய வார்த்தைகளும் பட்டவர்த்தமாகத் வெளிப்படுத்தின.

ஆலய வழிபாடு நிறைவுற்றது. அழைத்து வரப்பட்ட கடாக்கள் வெளியேறத் தயாராகின. திடீரென ஆலய முன் பக்கத்தில் சன நெரிசல். பொலிஸாரும் அவசர அவசரமாக நகர்கின்றனர். எல்லாத் தடைகளையும் தாண்டி கடாய் வெட்டிவிட்டார்களாக்கும் என்ற நப்பாசையில் கூட்டமும் அலைமோதுகின்றது. நாமும் அத்திசைக்கு விரைகின்றோம். அங்கே... பலியல்ல; நடப்பது ஒத்திவைக்கப்பட்ட பலி என்பது புரிகிறது. ஆடுகளைப் பலர் விலை பேசுகின்றனர். பச்சைத் தாள்களும் வெள்ளாடுகளும் கைமாறுகின்றன. பெரிய கடாக்களைக் கொண்டு வந்தவர்கள் அவற்றை விற்கத் தயாராக இல்லை. "வெட்டினால் நாங்களே வெட்டுவோம். வேறு யாருக்கும் கொடுக்கமாட்டோம்" என்கிறார்கள். அவர்களின்



ஆடுகள் மீண்டும் ட்ராக்டர்களில் ஏற்றப்பட்டு வீடுகள் நோக்கித் திரும்புகின்றன. "அடுத்த முறையாவது வெட்டுவோம்" என்கிற நம்பிக்கை வார்த்தைகளை உதிர்த்தபடியே அவற்றுடன் நகர்கிறார்கள் உரிமையாளர்கள்.

அந்த ஆடுகளுக்கு ஆயுள் கெட்டி. ஆனால் எல்லா ஆடுகளுக்கும் அல்ல. "நாங்கள் பலி கொடுக்க முடியாததால் விற்கிறோம்; அடிப்பதில் எங்களுக்கும் ஒரு பங்கு தரவேண்டும்" நிபந்தனைகளுடன் பல ஆடுகளின் விதி அங்கேயே தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் மெல்லக் கலையத் தொடங்கியது இனியென்ன இந்த மக்கள் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு மிகச்சிறப்பாக நடந்து கொண்டார்கள்; எல்லாமும் சுமுகமாக முடிந்தது என்ற நினைத்துக் கொண்டு நாமும் வெளியேறநினைத்து சைக்கிள்களை எடுக்கப் போனோம். கூடி நின்ற சிலர், நடந்து முடிந்தவற்றைத் தீவிரமாக அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். "ஆடுகளைக் கோயிலில் வெட்டிணாலாவது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பார்த்த பின்புதான் வெட்ட அனுமதிக்கப்படும். இப்ப இங்க வாங்கிக் கொண்டு போறவன் எங்க வச்சு எப்படி வெட்டப் போறானோ! யார் அதைப் பாக் கப்போகினம்" என்று ஒருவர் கவலைப் பட்டார்.

"உதையெல்லாம் பாத்துக்கொண்டு சும்மா இருக்கேலாது. இது காலம் காலமா நடக்கிறது. சுப்பிறீம் கோட்டுக்குப் போயெண்டாலும் அடுத்த வருசம் பலிக்கு அனுமதி வாங்கிப்போடவேணும். இவங்கள் சும்மா விளையாடுறாங்கள்" என்றார் மற்றொருவர். "பின்ன... சும்மா விடேல்லாது தானே!" என்று ஒத்தூதினார் மற்றொருவர்.

இந்தப் பிரச்சினை இப்போதைக்கு ஓயாது என்ற பொறி தட்ட, அடுத்த வருடமும் செய்திக்காக இங்கேயே வர வேண்டியிருக்கும் என்பதால் நாங்கள் யார் என்று அடையாளப்படுத்தாமல் பேச்சுமூச்சின்றி சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினோம். பிராத வீதியை அடைந்தபோது முதியவர்கள் சிலர் கூடி நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். மெல்ல அவர்கள் அருகே சென்று கதைகொடுத்தோம். முதலில் எம்மைச் சந்தேகத்துடன் பார்த்தாலும் பின்னர் புதினம் பார்க்க வந்த பெடியள் என்ற நம்பிக்கையுடன், ஆசைக்கு ஆட்டை ஆலயத்திற்கு கொண்டுவரலாம், ஆனால் பலியிடப்படக்கூடாது என்றது தான் தங்களுடைய நீண்ட கால விரும்பம்; அது இப்பத்தான் நிறைவேறி இருக்கிறது என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அந்தச் சூழலுக்குள்ளேயே தடைக்கு ஆதரவும் இருக்கத்தான் செய்கிறது என்ற மகிழ்ச்சியுடன் வேகமாக சைக்கிள்களை மிதிக்கையில், உற்சாகக் கூச்சலுடன் பறந்து வந்துகொண்டிருந்த சில இளசுகளின் சைக்கிள் கான்டில்களில் தொங்கிய சொப்பிங் பாக்குகளில் இருந்து செங் குருதி தெறித்துப் பறந்தது. "எங்கேயோ வெட்டிப்போட்டாங்கள்." மனம் பதைபதைக்கிறது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 419

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| | ■ | 20 | | | ■ | 21 | |
| ■ | 22 | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:......................................................

பூரணமான தபால் விலாசம்: ..........................................

.......................................................................

கையொப்பம்:.............................................................

### இடமிருந்து வலம்

1.செருக்கு
6. ஒரு கிரகம்
7. ஒரு திசையின் குறுகிய சொல்
8. தாண்டு
9. அளவுக்கு மீறிப் பேசுதல்
11. சாதாரண அப்பாவி மனிதன்
13. நோவு
14. ரகம்
15. என்று
17. சிரசு
18. ஆசைப்பாடல்
20. துன்பம் இழக்கும் செயல்
21. சேர்
22. திடீரென
23. கற்கை

### மேலிருந்து கீழ்

1. சம்பவிக்கக் கூடாதது
2. பழம்
3. புலவன்
4. தேர் இழுக்கும் கயிறு
5. சமுத்திரம்
8. ஒரு வாழைப் பழ ரகம்
9. இரும்புப் பொருள்களைத் தீட்டிக் கூராக்குவது இதில்
10. உலகம்
12.குழந்தை
15. சேற்றில் ஒய்வெடுக்கும் மிருகம்
16. சங்கீதத்தில் சரணம் வரிசையில் ஒன்று
18. தங்குமிடம்
19. வெளிச்ச வேளை
20. வழங்கு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 417 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1)சிவப்பு (4)கமுகு 7)மிகை (8)ராஜா (10)தலை (11)புணர்தல் (13)கிரகம் (16)கல் (17)அதிபன் (19)மசி (20)துணை (21)கன (22)சயனம் (23) சர்வ (24) கும் (25)பிராமகர்

### மேலிருந்து கீழ்

(1)சிமிக்கி (2)வகை (3)புராணம் (5)முதல் (6)குலை (9)ஜார் (11)புகல் (12)தந்தி (14)ரகசியம் (15) மன்னவர் (17)அணை (18)பகர்க (19)மசகு (20) தும்பி (23) சம

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.419
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(18.05.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 417 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
அ.பரராசசிங்கம்,
மாதகல் கிழக்கு,
மாதகல்.

**2 ஆம் பரிசு**
வே.நயனீசன்
உப தபாலக வளவு,
புளியம்பொக்கணை, பரந்தன்.

**3 ஆம் பரிசு**
சி.பிரியராஜ்,
யோக பவனம், நாவலர் மடம்,
நெல்லியடி, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
இ.ராஜசந்திரன்,
கண்ணபுரம், நாவாந்துறை தெற்கு,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
க.ராதாதேவி,
தபாலக வீதி,
சாவகச்சேரி.

### பாராட்டுப் பெறுவோர்

பா.பாலேஸ்வரன்,
தேசிய வீடமைப்பு,
அபிவிருத்தி அதிகார சபை,
முல்லைத்தீவு.

யே.சி.அ.யேசுதாசன்,
இல.83/1 கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

உமாசுதன் யதுலன்,
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

சொற்சிலம்பம் போட்டி இல.419இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.05.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 417 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் [illegible] அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் வைத்தியரினால் நடத்தப்படுகின்ற முதியோர் இல்லம் வைத்தியர் தாதியர் வசதியுடன் அனைத்து விதமான நோயாளர்களையும் சகலவசதியுடன் குறைந்த கட்டண வசதியுடன் பராமரிக்கப்படுகின்றது.

**077 916 8275**

## வீட்டுப் பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் நான்கு பேருக்கு சமையல் செய்வதற்கு பெண் தேவை. காலை வந்து மாலை போகலாம் சம்பளம் மாதமொன்றுக்கு 15,000/= ரூபா வழங்கப்படும்.

(ஜே 579)(2.8)

**077 361 1282**

## Machine Operator தேவை

Ryobi (றையோபி) Offset Printer இயக்குநர் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

**Cont: 071 415 0302**

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள குறுகிய காலம் பாவித்த குளிர்சாதனப் பெட்டி (Hisense) விற்பனைக்குண்டு.

**077 978 9752**

## பணியாள்கள் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு

- விற்பனையாளர்
- கணக்காளர்
- சிட்டை எழுதுனர்
- உதவியாளர்

மேற்பார்வையாளர் இருபாலார்களும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 361 1282**

## விற்பனையாளர்கள் தேவை (Sales Rep)

எமது உற்பத்திப் பொருள்களான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்வதற்கு யாழ்.நகரப் பகுதி, வலிகாமம், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சிப் பிரதேசங்களுக்கு விற்பனை செய்யக் கூடிய விற்பனையாளர்கள் (Sales Rep) உடன் தேவை. அடிப்படைச் சம்பளத்துடன் 5% விற்பனை கமிஷனும் வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

**Sylo Food & Bavereges pvt Ltd**
No 76, Amman Kovil Street. Kokuvil, Jaffna.
**077 771 0785**

## சமையலாளர் தேவை

ஆண் அல்லது பெண் விண்ணப்பிக்கலாம்

**con: 071 427 3035**

## USA GREEN CARD - 2017

அமெரிக்க கிறீன் கார்ட் விசா 2017இற்காக விண்ணப்பித்தவர்களில் அதிர்ஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றிய விபரம் இம் மாதம் 3ஆம் திகதி வெளியாகியுள்ளது. கிறீன் கார்ட் விசாவுக்காக விண்ணப்பித்து அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டிய விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு 2003ஆம் வருடம் முதல் தொடர்ச்சியாக அமெரிக்க கிறீன் கார்ட் விசா லொத்தர் விண்ணப்பம் தொடர்பான சேவையை மிக வெற்றிகரமாக வழங்கிவரும் எமது நிறுவனத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பிரதிநிதியின் ஆலோசனையைப் பெறுவதற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

Reg. W/A 44843

**BRISTOL CYBER CAFE**
No. 8/3/4, Bristol Street, Colombo 01. Tel. 0112 393 919
Mobile : 077 4276579 www.bristolcc.biz

## நாகபூஷணி திருமண சேவை

**மணமகள் மாருக்கு பதிவுக்கட்டணம் இலவசம்**
**(08.05.2016 இலிருந்து 14.05.2016 வரை)**

டாக்ரர்கள், எஞ்சினியர்கள், எக் கௌண்டன்கள், அரச உத்தியோகத்தர் தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு , வெளிநாட்டு மணமக்களை மிகப்பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

**ஏழு நாள்களும் திறந்திருக்கும்**

**383/14B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் கோவில் வடக்குப் பக்கம்)**
T.P: 021 222 9306, 077 138 7596
Email: nakapoosanywedding@gmail.com

## KRYPTON

1000 948 734

### விநியோகஸ்தர்கள் தேவை.
### (DISTRIBUTORS)

உயர் நம்பிக்கை, பாதுகாப்புடன் தயாரிக்கப்படும் **KRYPTON** சுவிச் மற்றும் உதிரிப்பாகங்கள் NATIONAL PVC நிறுவனத்தின் மற்றுமோர் தரமான உற்பத்தியாகும்

எமது **KRYPTON** உற்பத்திகளை விநியோகிப்பதற்கு **யாழ்பானம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களிற்கு** விநியோகஸ்தர்கள் தேவை.

**தேவையான தகுதிகள்**

- வங்கி உத்தரவாதம்
- களஞ்சியசாலை வசதி
- பொருட்களை விநியோகிப்பதற்கான வாகனம்

**எம்மிடமிருந்து உங்களுக்கு**

- கூடிய அனுகூலங்கள்
- விற்பனை, விற்பனை அபிவிருத்தி ஊழியர்கள்
- உங்கள் வியாபார நிலையத்திற்கே பொருட்கள் விநியோகிக்கப்படும்.

10 நாட்களுக்குள் கீழ் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விற்பனை முகாமையாளர்
**Central Industries PLC** (Reg No. PQ 121)
இல. 312, நாவல வீதி, நாவல, இராஜகிரிய.
தொலைபேசி இலக்கம் : 0773 580 017, 011 530 3000, 530 3005
தொலைநகல் : 5303031
மின்னஞ்சல் : info@nationalpvc.com
இணையத்தள முகவரி : www.nationalpvc.com

National

## அறிவித்தல்

**சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்.** TR/21/2016

மறவன்புலவு அருள்மிகு வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் பரம்பரை வழிவகு அறங்காவலர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் மேற்குறிப்பிட்ட வழக்கின் மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனங்களைக் குறித்த ஆலயத்தின் தேவை கருதி விற்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்திலே விண்ணப்பம் செய்துள்ளார். அதனடிப்படையில் குறித்த கோயிலில் வழிபடுவோர் மற்றும் பொதுமக்களுக்கு குறித்த விற்பனை தொடர்பில் அறியத் தரப்படுவதோடு குறித்த விற்பனை தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை 30.05.2016 இற்கு முன்பாக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி
கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்
மனுதாரர்.

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்

மாரடைப்பு, பக்கவாதம், பார்வைஇழப்பு, உயர் குருதி அழுத்தம், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்த காரணமான நீரிழிவு நோய் உங்களை பீடித்துள்ளதா? இல்லையா? என்பதை உடன் அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாய் பரிசீலித்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

சீனி கொல்லும்
Suger Kills

**யாழ்/ நீரிழிவு அஷோசியேஷன்**
J/ Diabetes Association
T.P: 077 666 9055

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி. நல்லம்மா முத்துத்தம்பி**
**உதிர்வு 10.04.2016 (ஞாயிற்றுக்கிழமை)**

மீசாலையை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து அன்னாரது 98வது வயதில் சிவபதமெய்திய **முத்துத்தம்பி (சின்னராசா) நல்லம்மா (முத்தம்மா)** அன்னையாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட; இலங்கை மற்றும் உலகின் பல பாகங்களிலிருந்தும் தங்களின் அனுதாபத்தை தொலைதொடர்பு மூலமாகவும் தெரிவித்துக் கொண்ட உற்றார், உறவினர் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

2016.05.10 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் 31ம் நாள் ஆத்ம சாந்தி கிருத்தியத்தில் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றியேகுமாறு உற்றார் உறவினர் அன்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"மீண்டும் யாரை அம்மாவென அழைப்போம்"**

| பிள்ளைகள் : | தொடர்பு: |
|---|---|
| இராசகோபால், சரஸ்வதி | 0773236041 |
| வீரசிங்கம், இராசேஸ்வரி | 0776365722 |
| ஊரெல்லை வீதி, மீசாலை மேற்கு. | 0773604113 |

## Study in Europe

- Choose your own career path
- Select from a variety of recognized European Universities at affordable cost
- Visa Guaranteed
- Part time work opportunities
- Better work opportunities within the European union




"Join hands with Red Cross to build your career path"

**Red Cross Student Consultancy Services**
Consultancy arm of the Sri Lanka Red Cross Society
3rd Floor, Red Cross BLDG, No. 106, Dharmapala Mawatha, Colombo-07
Email: admission@rrscu.lk, Web: www.rcscu.lk

## நாங்கள் தேடுவது உங்களை...

இலங்கையின் முதல்தர நிறுவனமான எங்கள் நிறுவனத்திற்கு

**கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கீழ்காணும் துறைக்கு விண்ணப்பங்கள்**

### கோரப்படுகின்றன.

**விற்பனை முகாமையாளர்.**

- கல்வித்தகைமை க.பொ.த.சா தரம்./க.பொ.த.உ. தரம்
- சந்தைப்படுத்தும் அனுபவம்
- குழு நடைமுறைப்படுத்தல் அனுபவம்
- அடிப்படை சம்பளம்/ விசேட கொடுப்பனவுகள்
- குறிப்பு: சிங்களம் பேசத்தெரிந்தவர்கள்

**விற்பனையாளர்.**

- பட்டா லொறி உடையவர்கள்
- விற்பனை செய்யும் தகுதி உடையவர்கள்
- சம்பளம் / கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அலுவலக சேவைக்கு இரு பாலரும் தேவை.**

- கல்வித்தகைமை க.பொ.த.சாதாரணதரம்
- 18 - 30 வயது
- கணனி பக்க வடிமைப்பாளர்கள்

குறிப்பு :- சிங்களம் பேசத்தெரிந்தவர்கள்.

(கே. 46) (13.17.18)

VACANCY

Wijithacm@gmail.com
072- 0852101 / 011- 4062027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தின் 27ஆம் மாடியில் உள்ள மத்திய பின்நிலைய காரியாலயத்தில் அதன் உதவிப் பொது முகாமையாளர் ஏ.டபிள்யூ.விதானகே தலைமையில் கடந்த புதன்கிழமை தமிழ் - சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடைபெற்றன. இதில் வங்கியின் பொது முகாமையாளர் டி.எம்.குணசேகர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ)



பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இம்பெற்றது.இதில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி பணிப்பாளர், இந்து - கிறிஸ்தவ மத குருக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



வடமாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சின் நிதியுதவியுடன், நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆடுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பவற்றைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கால்நடைகளைப் பயனாளிகளிடம் வழங்கி வைத்தார். (ஐ)



யாழ்ப்பாணம், அத்தியடி விநாயகர் கோயில் வருடாந்தத் திருவிழாவின் ஐந்தாம் நாள் 'பக்தி முத்தி பாவனா ' உற்சவம் நடைபெற்ற போது ஓதுவார் இ.சண்முகராசாவுக்கு சுபா குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (ஐ)



தெற்கு புன்னாலைக்கட்டுவன் தாழையம்பதி ஸ்ரீ அன்னமாமகேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற அலங்கார உற்சவத்தில் பன்னிரண்டு நாள்கள் 'சிவலீலை' பற்றி தெய்வீகத் தொடர், இசைச் சொற்பொழிவாற்றிய கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் ஆனந்தராசா நித்தியானந்த சர்மாவுக்குப் பொன்னாடை போர்த்துவதையும், தனாதிகாரி மலர் மாலை அணிவித்து, கௌரவிப்பதையும் காணலாம். (ஐ)




மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற சமூக நல்லுறவு அமைச்சின் ஏற்பாட்டில் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கைவிசேடம் வழங்கலும், பெரியோரைக் கௌரவித்தல் நிகழ்வும் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் புதுக்குடியிருப்பு 'ஒளிரும் வாழ்வு' இல்ல பயனாளிகள் நான்கு பேருக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (ஐ)







தந்தை செல்வா அகில இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தால் தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு முதியோர் சங்க மூத்த பிரசைகளுக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும், ஊன்றுகோல்களும் வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ஐ)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர், சைவப்புலவர் சி.க.கமலநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவதையும், கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறுவதையும் காணலாம். (ஐ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைக் காரியாலயத்தில் வைத்து, பாடசாலை மாணவர்கள் நான்கு பேருக்கு சைக்கிள்களும், ஒருவருக்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)



மிருசுவில் அ.த.க. பாடசாலையில் 5.5. மில்லியன் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வாரம் அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர். (ஐ-9)



மிருசுவில் அ.த.க.பாடசாலை மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ-9)



அனலைதீவு, புளியந்தீவு நாகதம்பிரான் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற பொங்கல் உற்சவத்தில் பொங்கலிட்ட பானையை , பனையோலை கடகங்களில் வைத்து பூசிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரணி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டார். (ஜ-122)



'எமது சிறுவர்களைப் பாதுகாப்போம்' எனும் அழகிய சித்திரம் ஈச்சமோட்டை சாம்றோக் கல்வி நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. (ஜ)



கிளிநொச்சி- பூநகரி பிரதேசத்தில் போரால் பாதிக்கபட்ட 'சோலை நிலா' எனும் சிறிய கிராமத்தைச் சேர்ந்த பொருளாதார நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தால் ரூபா 25 ஆயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஜ)





வரணி வடக்கு கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது... (ஜ-122)



கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் சிறந்த செயற்பாட்டு விருத்தியைப் பெற்றுக் கொண்ட அதிபர், ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர். (ஜ)





[illegible] மடிஹே பஞ்சசீஹ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது... (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ES Printers

Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print

## ES GiftZ

உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்

**www.esgiftz.com**

info@esgiftz.com




சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

(C/29555)(10.17)




#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472

esprintersjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்புனித நீராட்டு விழாவில் மாயமாகியது பரிசுப் பணம்

முள்ளியவளை,மே 8
பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பரிசாக வழங்கப் பட்ட ஒரு தொகைப் பணம் மாயமாகக் காணாமற்போன சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை தண்ணீர்ஊற்றுப் பகுதியில் உள்ள கு.மனோகரன் என்பவரது வீட்டில் நேற்றுப் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பிற்பகல் 3.30 மணியளவில் பரிசாக வழங்கப்பட்ட ஒருதொகைப் பணம் மாயமாகியுள்ளது. மணவறைக் குப்பின்னாலுள்ளயில் வைக்கப்பட்டிருந்த பணத்தை அவதானித்த நபர் மணவறையின் பின்னால் கட்டப்பட்டிருந்த கம்பளத்தைக் கிழித்துப் பரிசாக வழங்கப்பட்ட சுமார் 5 இலட்சத்துக்கு அதிகமானது என மதிப்பிடப்படும் பணத்தைக் களவாடிச்சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த வீட்டுக்குச் சென்ற முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-102)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வைரமுத்து நடராசா**

**தோற்றம்**
**30.03.1948**

**மறைவு**
**08.04.2016**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா!

தட்டாங்கலட்டி தெற்கு,
கைதடி.

பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### திருமதி அமுதவல்லி இராஜசுந்தரம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் இல.10, மூளாய் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதவல்லி இராஜசுந்தரம் நேற்று (07.05.2016) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசுந்தரத்தின்(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்-றாகம) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஓவசியர் தம்பையா-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் சுதர்சன் (லங்கா சிமெந்து தொழிற்சாலை k.k.s),காயத்திரி, யுவராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அப்பாத்துரை,பத்மநாதன், செல்வரட்ணம் (கனடா), சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற புஸ்பராணி, செல்வராஜா, சற்குணம் ஆகியோரின் அன்பு சகோதரியும் வசந்தியின் (கனடா)அன்பு மாமியாரும் பிரமோத், விதர்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புஸ்ப தனராஜன், திசாந்தினி, கிருபாயினி ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

T.P **077 618 1216, 004165300819**



## மரண அறிவித்தல்

### நாகேந்திரர் கணபதிப்பிள்ளை
**விதானையார் நெடுந்தீவு**

**பிறப்பு**
**05 . 06 . 1926**



**இறப்பு**
**07 . 05 . 2016**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் இல.58. மருதடி வீதி. நல்லூர். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரர் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர். முன்னாள் தலைவர் இலங்கை செஞ்சிலுவை சங்கம். நெடுந்தீவு) நேற்று (07.05.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவு சுப்பிரமணியம் நாகேந்திரர் (கொடிவேலி விதானையார்). திருமதி நாகேந்திரர் செல்லம்மா (முன்னாள் கிராம சபைத் தலைவி - நெடுந்தீவு) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும். காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேலுப்பிள்ளை சின்னையா திருமதி சின்னையா முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். திருமதி சற்குணத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும். காலஞ்சென்ற அமிர்தரட்ணராஜா மற்றும் இராமநாதன். காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் இராஜேஸ்வரி. நாகேஸ்வரி. நவயோகம். இராமச்சந்திரன். இலட்சுமணராசா ஆகியோரின் சகோதரரும். சின்னையா. இராசநாயகம். காலஞ்சென்ற திருமதி பூமணிமார்கண்டு ஆகியோரின் மைத்துனரும். காலஞ்சென்ற கிருஷ்ணவேணி மற்றும் கமலவேணி. உதயவேணி. குமாரசூரியர். லோகீஸ்வரநாதன். சிவஞானவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும். மகேஸ்வரன். இராசேந்திரன். குருபரன். சத்தியபாமா. வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும். கிரிசாந்தி. சிந்துசெந்தூரன். சோபியா. சகானா. மதன்ராஜ். பிரியாங்கா. பிரியன். பிரவீன். துஷாரா. வினோதா. நேருஜா. ஜனார்த். ஜனார்த்தனி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே.இ: 021 222 0322**
**ராசன் - 021 561 1151**
**நாதன் - 075 959 2424**
**மதன் - 071 240 0001**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(J/1138) (10,17)



## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி சச்சிதானந்தம்

**மண்ணில்**
**05 . 04 . 1946**



**விண்ணில்**
**07 . 05 . 2016**

நல்லூர். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தச்சந்தோப்பு நாவற்குழியையும். 366. கோயில் வீதி. நல்லூரையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சச்சிதானந்தம் நேற்று (07.05.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் சத்தியபாமா. நாகராசா. ருக்குமணி. காலஞ்சென்ற நல்லையா மற்றும் குணரெத்தினம். சோமலிங்கம். இந்திராதேவி. பாலராஜா. புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும். திருநாவுக்கரசு. தில்லையம்பலம். குமாரலிங்கம். செல்வராசா.கோமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும். ரதி. கௌரி (ஆசிரியை - யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை). ரவிச்சந்திரன். ரவிக்குமார். ரவிசங்கர். ரவிதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும். நந்தகுமார். யோகேந்திரன். வாசுகி. அமரா. மகிழ்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும். பிரதீப். ஹரிஸ். அபினா. மோனிக்கா. மதுஷன். மயூரிக்கா. ரஞ்சித். சஞ்சீவ். வாகீசன். அபிஷன். அஸ்மி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**நா.யோகேந்திரன்**
**(மருமகன்)**

**366, கோயில் வீதி,**
**நல்லூர்.**

**077 940 2892**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புக் குறித்து கருத்தறியும் குழுவின் அறிக்கை தயாரானது

## நாளைமறுதினம் அரசிடம் கையளிக்கப்படும்

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் குழுவின் அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அறிக்கையை அரசிடம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அந்தக் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜே நாயக்க குறிப்பிட்டார். அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையைச் செம்மைப்படுத்தும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் சுட்டிக்காட் டினார். இந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரிடம் அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட விடயங்களைத் தங்களின் இணையத் தளத்தின் ஊடாக வெளியிடுவதற்கும் எண்ணியுள்ளோம் என்று சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துக்களை கேட்டறியும் குழுவுக்கு, நாடளாவிய ரீதியில் சுமார் 5 ஆயிரம் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

(ற-ஐ-5)

# ஐ.நா. சிறப்பு அமர்வில் சந்திரிகா பங்கேற்பார்

நியூயோர்க்கில் நாளை மறுதினம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் ஐ.நா. பொதுச் சபையின் சிறப்பு அமர்வு நடை பெறவுள்ளது. அதில் இலங்கையின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க பங்கேற்கவுள்ளார்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகத்தின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க இந்த அமர்வில், அரசால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க வேலைத் திட்டங்கள் தொடர்பாக உரையாற்றவுள்ளார்.

இதற்கான அழைப்பை ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் மோஜென்ஸ் லை கெற்றோவ்ட்டின் விடுத்துள்ளார். உலக அபாயங்களில் அமைதிக்கான கடப்பாடு என்ற தொனிப் பொருளில் இந்தச் சிறப்பு அமர்வு இடம்பெறவுள்ளது.

அதில், ஐ.நா. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், கண் காணிப்பாளர்கள், ஐ.நா. பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஆய்வாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

(ற-ஐ-5)

# அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிடம் கையளிக்கப்படாது

## துறைமுக அதிகாரசபை தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிடம் முழுமையாக கையளிக்கப்படவுள்ளதுஎன்று வெளியாகும் தகவல்கள் பொய்யானவை என்று துறைமுக அதிகாரசபை தலைவர் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்வகிக்கும் செயற்பாட்டில் சீனாபங்காளராகவேஇணைத்துக் கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான, இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையிலான பொருத்தமான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர் பாக இரண்டு நாடுகளும் ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. இது பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் இதற்கான உடன்பாடுகள் செய்து கொள்ளப்படும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டுவதற்கு சீனாவின் எக்சிம் வங்கியிடம் இருந்து, 1.2 பில்லியன் டொலர் கடன்பெறப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கடன்களின் அளவுக்கு துறைமுகத்தில் இருந்து வருவாய் கிடைக்கவில்லை.– என்று தெரிவித்துள்ளார்.

(ற-ஐ-5)

# கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னி தொண்டராசிரியர்களுடைய தொடர் போராட்டங்களைத் தொடர்ந்து தற்போது அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கே இந்த கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்று தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயராசா தெரிவித்தார். (ற-ஐ-2)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி விசாலாட்சி நடராசா



யாழ்ப்பாணம் மாதகல் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி நடராசா நேற்று (07.05.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் கந்தசாமி, தேவராசா (ஜேர்மன்), காலஞ்சென்ற வசந்தராணி மற்றும் விஜயராசா (கனடா), தயாசலா (கனடா), மகாயுவராசா (பிரான்ஸ்) ஆனந்தராஜினி (இலங்கை) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் கலைஞானபேபி, விஜயகுமாரி, சிவபாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி நீதி மன்றம் கிளிநொச்சி),கலாவதி, சிவபாலகிருஷ்ணன், ராஜநாயகி (ராஜி), பாலசச்சிதானந்தேஸ்வரன் (ரவி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனேஸ், சாளினி, ஜனார்த்தனன், திலக்சி, துவாரகா, துர்க்கா, சபேசன், நிசாந்தினி, பிரபாகரன்,லக்சினி, சயந்தினி, லிகிதரன், பவிசான், மிதுஷன், சபிதா, சுறேக்கா, திருவரங்கன், திவியா, கௌத்தம், திலக்சன், பிரகாஷ், அக்ஷயா, பகிஷா, இந்துஷா, புகழிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சஞ்சிதன், கிருஷ்ஷிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் போதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

மாதகல் வடக்கு,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 7066890

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் வினாசித்தம்பி

பிறப்பு 30.05.1941 இறப்பு 07.05.2016



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வினாசித்தம்பி நேற்று (07.05.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் உருத்திரதாசன், காலஞ்சென்ற மதனதாஸ் மற்றும் மதிவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழ்மை மு.ப 10.00 மணியளவில் நீர்வேலியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு (நீர்வேலி) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நீர்வேலி வடக்கு,
கதிர்காமர் கோயில் வீதி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லத்துரை இராசதுரை

(ஓய் வடைந்த பொறியியலாளரும், முகாமையாளரும் NATIONAL HOUSING DEVELOPMENT AUTHORITY)



கொக்குவில் கிழக்கு (காராளி கடை) பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசதுரை நேற்று (07.05.2016) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், ஸ்ரீகாந்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி-கமலாசனி தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற விநாயகமூர்த்தியின் சகோதரனும், நடேசன், சாந்தி, ஜெயந்தி, கணேசன் ஆகியோரின் மைத்துனரும், சுதர்சினி ( Accounts Executive), சுதர்சன் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. தமயந்தியின் மாமனும், சிறீஹரியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நல்லூரிலுள்ள அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


246/3, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.சுதர்சன் (மகன்)
0774166380

### மரியதாஸ் ராஜநாயகம்

(பூபாலசிங்கம்)

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)



பிறப்பு:10. 04.1944
இறப்பு: 28.04.2016

ஊர்காவற்துறை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் கனடா Ajax வதிவிடமாகவும் கொண்டிருந்த மரியதாஸ் ராஜநாயகம் (பூபாலசிங்கம்) 28.04.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து மேரி மாகிறேட் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளைறோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நீற்றம்மா (சறோசா) அவர்களின் அன்புக் கணவரும் மலரம்மா, புனிதசீலி காலஞ்சென்ற ராசபுஸ்பம், அமிர்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் றொகான் (கனடா),றொஷானி (பிரான்ஸ்), பீற்றர்ஸன் (றொசான்- பிரான்ஸ்), லோஜினி (சுவிஸ்), டிலோஜினி(பிரான்ஸ்), இன்பன்ரன்(கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் தனுஷா(கனடா),றாஜன்(பிரான்ஸ்), லூஜானி (பிரான்ஸ்), ஜெனி(சுவிஸ்), ரமேஸ்(பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமனாரும் இறிஸ், யூலியன், அன்ரநிக்ஷா, அன்டினோஷன், யூறிஸ், ஆரியா, றேயா, அன்றியன், ஜெருன், றெயான், அவேனா ஆகியோரின் பாசமிகு பேரனும் மற்றும் காலஞ்சென்ற லூர்து பிலோமினா, காலஞ்சென்ற ஜோசப்யோண் மற்றும் மலர், றோஸ், மேரி, சந்தியாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.05.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் B2/F20 புளுமெண்டால் தொடர்மாடி, கொட்டாஞ்சேனையில், அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (09.05.2016) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
011 233 5553

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை



சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை நேற்று (07.05.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா மாணிக்கம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து -சிவகாமிப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சரவணமுத்து மற்றும் சின்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், கங்காதேவி, திருமதிதேவி, அருந்தவநாதன் (ஜேர்மனி), தர்மதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீஸ்கந்த ராஜா, சசிகலா (ஜேர்மனி), இராஜேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமியும், ராதாகிருஸ்ணன் (ஜேர்மனி) ராகிசன் (ஜேர்மனி), அபிராமி, நர்த்தனன், சயோனா (ஜேர்மனி), சபேசன் (கனடா), புவனி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற் றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(J/1126) (10,17)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரவுடிகள்

பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்களில் ஒருவர் சிவிலுடையில் நின்ற பொலிஸாருக்கு வாளால் வெட்ட முற்பட்டபோதே கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
யாழ்.நகரில் வைத்து குறித்த ஐவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். நகர் சிவன் கோவிலடிப் பகுதியில் வைத்து 26 வயதுடைய இளைஞர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டார். அவரே சிவில் உடையில் நின்றிருந்த பொலிஸாரை வாளால் வெட்ட முற்பட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து ஏனைய 4 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.
(த-வ-4-106)

## தமிழரின்

தமிழக சட்டசபைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதற்கான பரப்புரைகள் தமிழகத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பாரதிய ஜனதாக் கட்சி சார்பில், தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றார். ஓசூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது இந்தியப் பிரதமர் தனது உரையில்,
இலங்கையில் இருக்கும் தமிழ்ச் சகோதரர்களின் நிலையை எண்ணிப் பார்த்தால் கவலைக்கிடமாக இருந்தது. அதனால் அவர்களின் துன்பத்தைப் போக்க இலங்கையுடன் நல்லுறவை ஏற்படுத்தி யாழ்ப்பாணத்துக் குச் சென்ற முதல் இந்தியப் பிரதமர் நான்தான். அதேபோல் இலங்கை அரசு டன் நல்லுறவை ஏற்படுத்தித் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகின்றது.
சென்னையில் வெள்ளத்தால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது, விரைந்து வந்து உதவிகள் செய்தேன். இலங்கையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட 5 தமிழர்களைக் காப்பாற்றினேன்.
இந்தியர்களின் கடுமையான உழைப்பால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து வருகின்றது. உலகப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தபோதும், இந்தியாவின் பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது – என்றார்.
(த-வ-5)

## அறிக்கை

கூரே, பேரவைச் செயலகத்தைக் கோரியுள்ளதாக நம்பரகமாகத் தெரிய வருகின்றது.
வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்டம், தென்பகுதியில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ள நிலையில், வடக்கு மாகாண ஆளுநர், இவ்வாறு அமர்வு அறிக்கையைக் கோரியுள்ளார்.
வடக்கு மாகாண அரசின் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் அமர்வு, கடந்த மாதம் இரண்டு நாள்கள் நடைபெற்றது. கடந்த மாதம் 7 ஆம் திகதியும், 22 ஆம் திகதியும் இது இடம்பெற்றிருந்தது. இதனை விட கடந்த மாதம் 12 ஆம் திகதி அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பிலான விசேட அமர்வு இடம்பெற இருந்தது. இருப்பினும் அன்றையதினம் அரசியல் தீர்வுத் திட்ட விடயங்கள் ஆராயப்படாமல் சாதாரண அமர்வாக அது நடைபெற்றது.
இவ்வாறான நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கடந்த மாதம் இடம்பெற்ற அரசியல் தீர்வு தொடர்பான அமர்வின் அறிக்கைகளைக் கோரியுள்ளார்.
அறிக்கை கோரிய கடிதம், வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் கடிதம் பேரவைச் செயலகத்தினால், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தினால் ஆளுநருக்கு இதற்குரிய பதில் (அறிக்கை) இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.
(த-வ-5)

## தீர்வு

ருந்தது. தீர்வுத் திட்டம், எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவிருந்தது.
இதற்கிடையில், கடந்த மாதம் 28 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தீர்வுத் திட்டத்தை அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவரும் சபாநாயகருமான கரு ஜயசூரியாவிடம் கையளித்திருந்தார்.
இவ்வாறானதொரு நிலையில், கடந்த வாரம் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, வடக்கு முதலமைச்சரைத் தொடர்பு கொண்டு, வடக்கு அரசின் தீர்வுத் திட்டத்தின் பிரதி ஒன்றைத் தனக்குத் தரமுடியுமா என்று கேட்டிருக்கின்றார்.
எனினும் இதுவரை தீர்வுத் திட்டப் பிரதி, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு வழங்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. (த-வ-5)

## காணாமற்போனோர்

பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக் குழுவின் 109 ஆவது அமர்வு, நாளை தொடக்கம், 18 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதில், 40 நாடுகளில் இடம் பெற்ற 800 சம்பவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.
அத்துடன், காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களையும், பல்வேறு நாடுகளின் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் ஐந்து சுதந்திர மனித உரிமை நிபுணர்கள்.
மேலும் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், இந்தக் குற்றங்கள் இடம்பெற்ற சூழ்நிலைகள் குறித்தும் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படும்.
காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக ஆராயும், எதிர்காலப் பயணங்கள் குறித்தும் இந்த அமர்வில் கலந்துரையாடப்படுவதுடன், ஆண்டறிக்கையும் நிறைவேற்றப்படும்.
இலங்கை மற்றும் துருக்கிக்குப் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக் குழுவின் நிபுணர்கள் மேற்கொண்ட பயணங்கள் தொடர்பாகவும் இந்த அமர்வில் விவாதிக்கப்படும்.
இந்த அமர்வு தனிப்பட்ட அமர்வாகவே நடைபெறும். அமர்வின் முடிவில், மே 18 ஆம் திகதி அறிக்கை வெளியிடப்படும்.
(த-வ-5)

## ரயில்

வில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் குறிப்பிட்டனர்.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ரயில் தொடர்ந்து கே.கே.எஸ் நோக்கிப் பயணித்தபோதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதில் இருபாலை வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த எம். நிசாந்தன் (வயது – 20), திருநெல்வேலியைச் சேர்ந்த ப.ரெஜிராம் (வயது -18) ஆகியோரே உயிரிழந்தனர்.
கோண்டாவில் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அங்கு நின்றவர்களால் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்து இடம்பெற்ற பகுதியில் இரு இளைஞர்களும் தண்டவாளத்தில் உறங்கிய நிலையில் இருந்தனர் என்றும், இதன் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றபோதும் அதன் உண்மைத் தன்மை புலப்படவில்லை. உயிரிழந்தமைக்கான காரணமும் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதால் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
குறித்த 2 இளைஞர்களும் எதற்காக அங்கு சென்றிருந்தார்கள் என்பது தெரியவில்லை. சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் சடலங் களை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.
(த-வ-4-101-106)

## கைதுகள்

செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஆணைகொண்ட ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் மெண்டஸ் மற்றும் நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரத்துக்கானஐநாஅறிக்கையாளர்மோனிகா பின்ரோவும் கலந்துகொண்டனர்.
இந்த மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில்கள் வருமாறு:-
**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் கடந்த 37 நாள்களில் 30 இற்கும் மேற்பட்ட கைதுகள் இடம்பெற்றுள்ளன என்று தகவல்கள் கிடைத்துள்ளன. இதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் தளபதிகள் சிலரும் அடங்குகின்றனர். கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் பலரும் இராணுவத்தின் புனர்வாழ்வுப் பயிற்சியைப் பெற்று விடுவிக்கப்பட்டவர்கள். நீங்கள் இங்கு வந்திருந்த காலத்திலேயே இப்படியான கைதுகள் இடம்பெற்றுள்ள நிலைமை – அதுவும் கடத்தல் பாணியில் இடம்பெற்றிருப்பது குறித்து உங்களின் கருத்து யாது?
**பதில்:-** இந்த விடயங்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தினோம். சில தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் இதனை எம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது. நாம் சம்பந்தப்பட்டவரிடம் நேரடியாகவோ அவரது குடும்பத்தினரிடமோ பேசவில்லை. ஆனாலும் கூட அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுடனும் பேசியிருந்தோம். இதனடிப்படையில் இந்தத் தகவல்கள் உண்மையென நாம் நம்புகின்றோம்.
ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட்டுக் கூறவேண்டும். யாரேனும் கடந்த காலத்தில் புனர்வாழ்வு பெற்றிருந்தால் அவர்கள் புதிய சூழ்நிலையில் கைது செய்யப்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளும் விலக்களிக்கப்பட்ட நிலையை வழங்கி விடாது.
வெளிப்படைத்தன்மையின்றிய நிலையிலும், பொறுப்பு வாய்ந்த பொலிஸ் அதிகாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்தாத நிலையிலும், வன்முறை சிறிதளவில் பாவிக்கப்பட்டும், நபர்கள் பல நாள்களாகப் பின்தொடரப்பட்டு அயலவர்களிடம் விசாரிக்கப்பட்ட நிலையிலும் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ள பாங்கு குறித்துக் கரிசனையுள்ளது. நாங்கள் அவதானம் செலுத்திய சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்கள் தடுப்பில் இருப்பதை உறுதிப்படுத்த முடிந்தது. அவர்களைக் குடும்பத்தினர், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள், சட்டத்தரணிகள் ஆகியோர் சந்தித்துள்ளனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற சட்டவிரோத கைதுகள் அதன் பின்னர் நடைபெற்ற காணமற்போதலில் இருந்து மாறுபட்டவை. இருந்தபோதிலும் கைது நடவடிக்கை மேற்கொள்வதற்கான அவசியம் இருப்பின் அது மிக வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம்.

**சித்திரவதைகள்**
**தொடர்கின்றன**

இதேவேளை, போர்க் காலத்துடன் ஒப்பிடுகையில் சித்திரவதைகள் குறைவடைந்துள்ள போதிலும், அந்த நடவடிக்கைகள் முழுமையாகக் குறைவடையவில்லை என்று இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதத்தன்மையற்ற கீழ்த்தரமான செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஆணைகொண்ட ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் மெண்டஸ், நீதித்துறையின் சுயாதீனம் பற்றி ஆராய்வதற்கான ஆணை பெற்ற ஐ.நாவின் விசேட நிபுணர் மொனிக்கா பின்டோ ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.
பொலிஸார் மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணைகளின்போது தொடர்ந்தும் சித்திரவதைகள் காணப்படுகின்றன என்று அவர்கள் சுட்டிக் காட்டினர்.
இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தை பின்பற்றுவதில்லை எனவும், நீதிமன்றமும் அவர்களின் தகவல்களை ஏற்றுக் கொள்கின்றமை பிழையான விடயம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசின் கடமை என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.
அத்துடன், இலங்கையில் தொடர்ந்தும் புனர்வாழ்வு நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும், அது சிறந்த நடவடிக்கை அல்ல எனவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.
தாம் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு பயணம் செய்திருந்ததாகவும், அங்கு 40 பேர் தங்கியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.
அவர்களில் 39 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர் என்று சுட்டிக்காட்டிய ஐ.நா. நிபுணர்கள், அது மிக மோசமான நிலை எனவும் கூறினர்.
இதேவேளை, இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளை எடுத்துக்கொண்டால், சிறையொன்றில் 500 வீதமான சிறைக்கைதிகள் உள்ளனர் என்று குறிப்பிட்ட அவர்கள், அது மோசமான நிலை எனவும் சுட்டிக்காட்டினர். சிறைச்சாலைகளின் மோசமான நிலையை வர்ணிக்க வார்த்தைகளே வர மறுக்கின்றன என்றும் கவலை வெளியிட்டனர். சிறைச்சாலைகள் பழைமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றன எனவும், அவை இடிந்து விழும் நிலையில் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர். சிறைச்சாலைக் கூடங்களில் ஒருவர் இருக்கவேண்டிய இடத்தில் 5 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும், இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
மேலும், அரசமைப்புச் சபை மிகுந்த சிறந்த சேவையை நாட்டுக்கு வழங்கும் என தாம் நம்புவதாகவும் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்தனர்.
தமது பயணத்தின்போது தயாரிக்கப்பட்ட அறிக்கையை எதிர்வரும் ஓரிரு மாதங்களில் இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.
இதேவேளை, இலங்கையில் அண்மைய மற்றும் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தீர்வுகளை நாடுவதற்கு நிலை மாற்று நீதிப் பொறிமுறையை அரசு நாடி நிற்கின்றது. இந்தவகையான பொறி முறைகள் எதிர்காலத்திற்கு முக்கியமானவை என்று சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதத்தன்மையற்ற கீழ்த்த ரமான செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஆணைகொண்ட ஐ.நா.வின் சிறப்பு நிபுணர் ஜுவான் மென்டஸ் தெரிவித்தார்.
காயங்களை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்தப் பொறிமுறை வழங்கக்கூடியது. இது தொடர்பில் எத்தகைய தீர்மானங்களை எடுத்தாலும் அரசு உருவாக்க எத்தனித்துள்ள கட்டமைப்பு மற்றும் இருக்கின்ற கட்டமைப்புகளில் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றவர்கள் இருப்பதையும் அரசு உறுதிப்படுத்தவேண்டும். சமூகத்தினரால் எவ்வித கேள்விகளுக்கும் இடமற்றவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும். சட்டத்தை நன்கு கற்றறிந்தவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும் – என்று அவர் மேலும் கூறினார். (த-வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனத் ஜெயசூரிய போல் மிரட்டுவார் சங்கக்காரவின் இடத்தை நிரப்புவார்

## திரிமன்னேயில் சில்வா நம்பிக்கை

இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா, சமீப காலமாகவே தொடர்ந்து தடுமாறி வரும் திரிமன்னேயை முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியவுடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் மற்றும் ஒரு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்த நிலையில் தொடர் தொர்பாக சில்வா தெரிவிக்கையில் - சில வீரர்கள் முன்பு நன்றாக செயற்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து சிறப்பாக செயற்பட கால அவகாசம் வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக சனத் ஜெயசூரியாவை எடுத்துக் கொள்ளலாம். அவர் அணிக்கு வந்த போது தொடர்ந்து தடுமாறியபடியே இருந்தார். அவரது ஆரம்பகால சாதனை என்பதும் மிக மிகக் குறைவுதான். ஆனால் அதன் பிறகு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. சில வீரர்களை பொறுத்தவரை நாம் அமைதி காக்கத்தான் வேண்டும். ரசிகர்கள் திரிமன்னேயை விமர்சிப்பது சரியல்ல. நாம் தான் அவர் திறமையான வீரர் என்று அப்போது நம்பினோம். சங்காவின் இடத்தை நிரப்ப பொருத்தமானவராக அவர் இருக்க முடியும். என்றார். (ம)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 8

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வரணி ஈஸ்வரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வரணி யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.லூசியா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**இமையாணன் மத்தியின் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமைபிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணி க்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு ரோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (ம-108)

# சென்.ஜோன்ஸ், மத்தி. ஆதிக்கம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கராத்தே தொடரின் குமித்தேப் பிரிவில் சென்.ஜோன்ஸ், யாழ். மத்திய கல்லூரிகளின் மாணவர்கள் பெரும் ஆதிக்கம் செலுத்தினர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுவேந்திரன், இரண்டாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வி.திருசாந், மூன்றாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கபிநாஸ் ஆகியோர் தமதாக்கினர்.

17வயதுப் பிரிவினருக்கான போட்டியில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜே.சீலன், இரண்டாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.றேனிசன், மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏ.சாள்ஸ் ஆகியோர் கைப்பற்றினர்.

19வயதுப் பிரிவினருக்கான போட்டியில் முதலாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஏ.தனுசன், இரண்டாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ். எழிலன், மூன்றாமிடத்தை நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜே.நிசாந் ஆகியோர் தமதாக்கினர். (ம-422)

# இளைஞர் கழகங்களின் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டம், கரம், கயிறிழுத்தல் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன. (ம)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம்

கரணவாய், மே 8

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்தும் மாவட்ட மட்ட பூப்பந்தாட்டம் மற்றும் மேசைப்பந்தாட்டத் தொடர்கள் அரியாலை சரஸ்வதி விளையாட்டரங்கிலும் திருநெல்வேலி இந்து வாலிபர் விளையாட்டரங்கிலும் இம்பெற்று வருகின்றன.

திருநெல்வேலியில் இன்று இடம்பெறும் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணியும் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

அரியாலை உள்ளரங்கில் இடம்பெறும் ஆண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணைப் பிரதேச செயலக அணியும், மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-108)

# இலங்கைக்கு எதிராக டெஸ்ட்; சிம்பாப்வேயின் துணிகர முடிவு

இலங்கைக்கு எதிராக டெஸ்ட் தொடரில் விளையாடுவது என முடிவு செய்துள்ளது சிம்பாப்வே கிரிக்கெட் சபை.

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 3 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரும், 3 ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரும் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து சிம்பாப்வே அணி இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுடன் குறுகிய டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் என உறுதிப்படுத்தப்படாத அறிவிப்பு அண்மையில் வெளிவந்திருந்தது. இந்த டெஸ்ட் தொடர்களை ஒருநாள் தொடராக அல்லது ரி-20 தொடராக மாற்ற சிம்பாப்வே விருப்பம் தெரிவிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் அடுத்த மாதம் இந்தியாவுக்கு எதிராக நடைபெறவிருந்த ஓர் டெஸ்ட் ஆட்டத்தைத்தான் 3 ரி-20 ஆட்டமாக மாற்றும் படி அந்த கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால் இலங்கைக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பங்கேற்க சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஆனால் எப்போது தொடர் என்று அறிவிக்கப்படவில்லை. எனினும் விரைவில் இந்த அறிவிப்பு வெளியாகும். (ம)

# பாக். பயிற்சியாளராக மிக்கி ஆர்தர் நியமனம்

பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்சியாளராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மிக்கி ஆர்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யூனிஸ் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, புதிய பயிற்சியாளராக வெளிநாட்டினரை நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்திருந்தது. இதனையடுத்து நடத்தப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், அணியின் தலைமைப் பயிற்சியாள ராக மிக்கி ஆர்தர் தெரிவு செய்யப்பட்டார். இந்த மாத இறுதியில் மிக்கி ஆர்தர் பாகிஸ்தான் அணியுடன் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2005 முதல் 2010ஆம் ஆண்டு வரை தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக மிக்கி ஆர்தர் செயல்பட்ட போது, அந்த அணி அனைத்து வடிவிலான ஆட்டங்களிலும் முதலிடத்தை எட்டிப்பிடித்தது. தென்னாபிரிக்க அணிக்குப் பிறகு, ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக 2011ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஆர்தர் செயற்பட்டிருந்தார். (ம)

# சச்சின் இந்தியாவின் அடையாளம் கோக்லியுடன் ஒப்பிடுவது சரியல்ல - யுவராஜ்

விராட் கோக்லியை சச்சின் ரெண்டுல்கருடன் ஒப்பிட்டு பேசுவது சரியல்ல என்று சக வீரர் யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு 'ரன் மிசினாக' இருக்கும் கோக்லி விரைவில் முன்னாள் ஜாம்ப வான் சச்சின் ரெண்டுல்கரின் சாதனையையும் முறியடிப்பார் என்று ரசிகர்களால் நம்பப்படுகிறது. இது குறித்து யுவராஜ் சிங் தெரிவிக்கையில் - விராட் கோக்லி இந்த தலைமுறையின் சிறந்த வீரர். அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. ஆனால் அவரை சச்சினுடன் ஒப்பிட்டு பேசுவது சரியானது அல்ல. சச்சின் இந்தியாவின் அடையாளம். ஆனால் ஒருநாள் சச்சின் போன்ற சிறந்த ஒரு வீரராக கோக்லி உருவெடுப்பார் - என்றார். (ம)

# மனோகரா, டயமன்ஸ் அணிகள் அரையிறுதிகளுக்கு முன்னேற்றம்

கரணவாய், மே 8

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்களுக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் என்பன தகுதி பெற்றுள்ளன.

**கலைமதி - மனோகரா**

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த காலிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் மனோகராவின் சார்பாக கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார் ஜெகதீஸ். மாற்றங்கள் இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. மனோகராவின் ஆதிக்கத்துடனே ஓடி மறைந்தது இரண்டாம் பாதி. முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

**டயமன்ஸ் - நவஜீவன்ஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டு கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ரவிசாந்தின் உதவியுடன் ஆட்டத்தின் ஆரம்பத்துடன் நவஜீவன்ஸ் அணியின் ஆதிக்கமும் ஆரம்பமானது. பதிலடி கொடுக்க வேண்டுமென்ற டயமன்ஸின் முயற்சிகள் பலனளிக்காது போக 1:0 முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 13 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸின் ஏக ஆதிக்கத்துக்கு முடிவு கட்டினார் மது. வேறெந்த மாற்றமும் இல்லாமல் 1:1 என்று முடிவடைந்தது. இதனால் வெற்றியாளரை சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் தீர்மானிக்க வேண்டிய நிலமை ஏற்பட முடிவில் 4:2 என்று வெற்றிபெற்றது டயமன்ஸ். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - வடமேல் மத்தி. ஆட்டம் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், மே 8
19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் மாகாண மட்டத் துடுப்பாட்டத் தொடரில் வடக்கு, வடமேல் மாகாண மத்திய அணிகளுக்கு இடையில் நேற்றும், நேற்றுமுன்தின மும் நடைபெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற வடக்கு அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வடமேல் மாகாண மத்திய அணி 171 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டி சில்வா ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களையும் ரண்டிக 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வடக்கு மாகாணத்தின் சார்பாக கபில்ராஜ் 4 இலக்குகளையும், மதுசன் 3 இலக்குகளையும், சிறிவர்தன 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய வடக்கு 124 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக ருசாந்தன் 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வடமேல் மாகாண மத்திய அணியின் சார்பாக லகுரு டில்சான் 3 இலக்குகளையும், சயித் சமீர 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய வடமேல் மாகாண மத்திய அணி 207-6 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக ரனுக்க டாபறி 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வடக்கின் சார்பாக சிறிவர்தன 3 இலக்குகுளை வீழ்த்தினார்.

255 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய வடக்கு மாகாண அணி 100-6 என்ற நிலையில் இருந்தபோது நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது. (ம-23)



# சாம்பாவின் சந்தேகத்தை தீர்த்தார் விராட் கோக்லி

## மீண்டும் அபார சதம்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற புனே, பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றி பெற்றது பெங்களூர்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. சிக்சர், பவுண்டரி என அமர்க்களமாக ஆரம்பித்தார் கவாயா. அவர் 6 பந்துகளில் 16 ஓட்டங்களை எடுத்திருந்தபோது பின்னியால் ரண்அவுட் செய்யப்பட புனேயின் முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. ரகானே, திவாரி இணைய இலக்குச் சரிவு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. பந்துப்பரிமாற்றத்துக்கு பத்து ஓட்டங்கள் என்றவாறாக இன்னிங்ஸ் நகர்ந்துகொண்டிருந்தது. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் புனேயின் சார்பாக பதிவான ஆகச் சிறந்த இணைப்பாட்டமாக இதைக் குறிப்பிடலாம். அணியின் ஓட்ட எண்ணிக்கை 132 ஆக இருந்த போது 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் திவாரி. ரகானேயின் நிதானம் மறுமுனையில் நீடித்துச் சென்றது. டோனி, பெரேரா, பெய்லி மூவரும் பெரிதாக ஓட்டங்களைக் குவிக்கவில்லை. ரகானே 48 பந்துகளில் 74 ஓட்டங்களைப் பதிவுசெய்ய முடிவில் புனே 191-6.

பந்துவீச்சில் பெங்களூரின் சார்பாக வற்சன் மூன்று இலக்குகளையும், ஜோர்தான், சாஹல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது பெங்களூர். ஆரம்ப வீரராக கோக்லி மற்றும் லோகேஸ் ராகுல். நிதானம், அதிரடி என்றவாறு ஓர் சொல்லால் சொல்லமுடியாத இணைப்பாட்டம் ஒன்று அரங்கேறியது. இலக்கை எட்டக்கூடிய அடித்தளம் என்றால் மிகையாகாது. பவர் பிளே முடிவில் இலக்குச் சரிவின்றி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது பெங்களூர். சாம்பா வீசிய 12ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அணியின் ஓட்டம் 94ஆக இருந்தபோது 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராகுல். அதே பந்துப்பரிமாற்றத்தில் வில்லியர்ஸும் வெளியேறினார். சாம்பாவை எதிர்கொண்டார் கோக்லி. சில தினங்களுக்கு முன்பு கோக்லியை யார் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் கேட்டிருந்தார் சாம்பா. இதற்கான பதில் நேற்று அவருக்கு கிடைத்தது. பவுண்டரிகளாகப் பதிவாகின. பெரேராவின் பந்துப்பரிமாற்றம் ஒன்றில் 20 ஓட்டங்களை விளாசினார் வற்சன். இறுதி 4 பந்துப்பரிமாற்றங்களில் 47 ஓட்டங்களைப் பெற வேண்டுமென்ற நிலமை. வற்சனின் ஆட்டமிழப்பை சிறிதும் பொருட்படுத்தவில்லை கோக்லி. மீண்டும் வசமாக மாட்டினார் சாம்பா. அடுத்தடுத்து இரு சிக்சர்களுடன் கோக்லியின் சதம் பதிவானது. முடிவில் 3 பந்துகள் மீதிமிருக்க புனேயை வீழ்த்தியது பெங்களூர்.

பந்துவீச்சில் புனேயின் சார்பாக சாம்பா 2 இலக்குகளையும், ஆர்.பி.சிங் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



# சம்பியனானது சண்டிலிப்பாய்

யாழ்ப்பாணம், மே 8
யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் பெண்கள் பிரிவினருக்கிடையே நடத்தப்பட்ட கபடித் தொடரில் சண்டிலிப்பாய் இளைஞர் கழக அணி சம்பியனானது. அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இளைஞர் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாண இளைஞர் கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இளைஞர் கழக அணி 45:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

# சமநிலையில் முடிந்தது நண்பர்களின் சமர்

முல்லைத்தீவு, மே 8
நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படும் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அணிக்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய (ஸ்ரான்லிக் கல்லூரி) அணிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

வித்தியானத்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்ரான்லிக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தக் கல்லூரி அணி 94 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக பவின்சன் 26 ஓட்டங்களையும், அஞ்சயன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரையும் தவிர வேறெந்த வீரர்களும் ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை. பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரியின் சார்பில் விதுசன் 7 இலக்குகளையும், சுஜீவன், டிலக்சன், லோறன்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலக்சன் 33 ஓட்டங்களையும், பிரசாந் 23 ஓட்டங்களையும், லோகதர்சன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வித்தியானந்தக் கல்லூரியின் சார்பாக அஞ்சயன் 4 இலக்குகளையும், அருணா 3 இலக்குகளையும், பீற்றர் 2 இலக்குகளையும், நிரூஜன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



21 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த வித்தியானந்தக் கல்லூரி 189-8 என்ற நிலையில் இருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அருணா 65 ஓட்டங்களையும், அஞ்சயன் 33 ஓட்டங்களையும், தர்சன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரியின் சார்பில் விதுசன், பிரசாந், லோகதர்சன் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க ஸ்ரான்லிக்கு இலக்காக 169 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 63-4 என்றிருந்தமையையடுத்து நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக பிரசாந் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்துவீச்சில் வித்தியானந்தக் கல்லூரியின் சார்பில் அஞ்சயன், பீற்றர் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

சிறந்த பந்துவீச்சாளராக விதுசன், சிறந்த துடுப்பாட்ட வீரராக அருணா, சிறந்த களத்தடுப்பாளராக சுயிகரன், சகலதுறை வீரராக அஞ்சயன், ஆட்டநாயகனாக விதுசன் தெரிவானார்கள். குறித்த இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்களுக்கான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

(ம-102-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல். கிண்ணம்




# டெல்லியை வீழ்த்தியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பஞ்சாப் - டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 9 ஓட்டங்களால் வென்றது பஞ்சாப்.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. பஞ்சாப் அணியில் இருந்து வோக்ரா வெளியேற்றப்பட்டு பதில் வீரராக அம் லா இணைக்கப்பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக ஸ்றொய் னிக்ஸ் மற்றும் முரளி விஜய். வழக்கத்துக்கு மாறாகச் சிறப்பாக அமைந்தது பஞ்சாப்பின் ஆரம்பம். அணியின் ஓட்ட எண்ணிக்கை 45 ஆக இருந்தபொழுது 25 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் முரளி விஜய். திடீர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தென்னாபிரிக்காவிலிருந்து அழைக்கப்பட்ட அம்லாவால் முடிந்தது ஓர் ஓட்டம் மட்டுமே. ஸ்றொய் னிஸ், சாகா இணை சில பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடிக்க மேலதிக இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களைத் தொட்டது பஞ்சாப். ஸ்றொய்னிஸின் அரைச்சதம் 42 பந்துகளிலும், சகாவின் அரைச்சதம் 29 பந்துகளிலும் பதிவானது. இருவருமே 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஸ்றொய் னிஸை வீழ்த்தியவர் சகீர்கான், சகாவை வீழ்த்தியவர் சமி. வழக்கம்போல பஞ்சாப் பின் இன்னிங்ஸை அதிரடியுடன் முடித்தார் அக்சர் பட்டேல். அவர் 5 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் பஞ்சாப் 181-5.

பந்துவீச்சில் டெல்லியின் சார்பாக மொறிஸ் 2 இலக்குகளையும், சமி, சகீர்கான் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக்களமிறங்கியது டெல்லி. அந்த அணியின் நட்சத்திர வீரரான குயின்டன் மீண்டும் அணிக்குத் திரும்பியிருந்தமையால் டெல்லியின் துடுப்பாட்டவரிசை பலமானதாகவே அமைந்தது. குயின்டன், சாம்சன் இணை அடித்தளத்தைப் பலமாக அமைத்தது. பவர் பிளே முடிவில் டெல்லி 51-0. 27 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் குயின்டன். 52 ஓட்டங்களுடன் குயின்டனுக்கு முடிவு கட்டினார் ஸ்றொய்னிஸ். குயின்டன் விட்டுச் சென்ற பணியை செவ்வனே செய்தார் சாம்சன். இருப்பினும் ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவறவிட்டார். சாம்சனின் ஆட்டமிழப்புடன் சராசரியில் வீழ்ச்சி ஏற்பட பஞ்சாப்புக்குமான வாய்ப்பு இருக்கத்தான் செய்தது. இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்கள் 40 ஓட்டங்கள் தேவை என்ற நிலைமை. 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 3 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார் மொகித் சர்மா. முடிவில் 9 ஓட்டங்களால் வென்றது பஞ்சாப்.

பந்துவீச்சில் பஞ்சாப்பின் சார்பாக ஸ்றொய்னிஸ் 3 இலக்குகளையும், கரியப்பா, சன்டீப் சர்மா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## சிவன் - கைதடி சரஸ்வதி இறுதியில் இன்று மோதல்

சாவகச்சேரி சரசாலை வடக்கு சனசமூக நிலைய உதய நிலா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவந்த துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி அணி மோதவுள்ளது. உதய நிலா வி.கழக மைதானத்தில், இன்று பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-9)

ஐ.பி.எல். கிண்ணம்




**விற்பனைக்கு**

35 நாள் நிரம்பிய பொமேரியன் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. சனல் ஆடுகளும் விற்பனைக்குண்டு.

077 101 6407

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் சந்திக்கும் இராஜவீதி சந்திக்கும் இடையில் பழனியாண்டவர் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்பும் 11 குழி காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 703 7058

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 077 281 4020

**காணி தேவை**

திருநெல்வேலி, உரும்பிராய், கோண்டாவில், கல்வியங்காடு, கொழும்புத்துறை, ஆறுகால்மடம் ஆகிய இடங்களை ஒட்டி பாதை வசதியுள்ள 1½ பரப்பு காணி விற்பனைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும். (1½ பரப்பு)

தொடர்பு: 077 869 3370

**விற்பனை பிரதிநிதி தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவை. தகைமையுடையவர்கள் எதிர்வரும் 09.05.2016 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

Jaffna Electricals,
94(6) Stanly Road, Jaffna
021 222 2353
Fax No : 021 222 4302

**காணி தேவை**

நல்லூர் சுற்று வட்டாரத்தில் வீட்டுடன் அல்லது வெறும் காணி உடனடியாக (2 பரப்பு) தேவை.

077 951 5721

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1980இல் பிறந்த சதய நட்சத்திரம் 30 கிரகபாவமுடைய கட்டட ஒப்பந்த துறையில் சொந்த தொழில் நிர்வாகியும் உரிமையாளருமாகிய மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

077 450 7446

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாடம், இலத்திரனியல் காட்சியறைக்கு

Sales Boy தேவை.

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்துக்குச் சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

Smart Kinges pvt (Ltd)
No 12, Point Pedro Road, Jaffna
021 454 6699

**தென் இந்திய திருத்தல யாத்திரை**

நாள்கள்: 16 யாத்திரிகர்கள்: 10
ஆரம்பம்: 25.05.2016

தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய 5 மாநிலங்களுக்கு ஊடான யாத்திரை. 60 இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம். உணவு, தங்குமிடம், போக்குவரத்து, விமான ரிக்கற் அனைத்தும் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு சில ஆசனங்கள் மட்டுமே இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்.

குறிப்பு: யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான (இரு வழியும்) போக்குவரத்து இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரங்கநாதன் 077 768 0102
ராஜன் (மகன்) 077 736 2154
FB:Sridevisriranganathan.thuraiappa

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் மொழியை இலகுவழியில் நீண்டகாலமாக யாழ். மண்ணில் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஒரே ஒரு நிறுவனம் எமது கல்லூரியே ஆகும்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பதிவுகளுக்கு முந்துங்கள்

ஆரியகுளம் சந்தி (புத்த விகாரைக்கு எதிரே)
2ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

C/2(110)(10.17)

077 970 7322

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981ஆம் ஆண்டு, பூராடம் 2ஆம் பாதம் 27¾ கிரகபாவமுடைய உயர்பதவி வகிக்கும் மணமகளுக்கு உயர் பதவியிலுள்ள மணமகன் தேவை.

077 117 8176

ஆயிரக்கணக்கான வரன்களுடன்

அருந்ததி
இணைய திருமணசேவை

www.arunthathee.com

541/2, காலி வீதி,
வெள்ளவத்தை. 011 40 63 282

20, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம். 021 49 27 527

**பணிநிலை வேண்டுகை**

கொழும்பில் அமைந்துள்ள தளபாட, இலத்திரனியல் காட்சியறைக்கு

1. Electrician
2. Furniture Fittings
3. Sales Boys தேவை.

தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் கீழ்க்காணும் யாழ்ப்பாண முகவரியில் 9.30A.m - 12.00P.m சமுகமளிக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு

SMART KINGS PVT(LTD)
NO12, POINT PETRO ROAD, JAFFNA
021 454 6699

**காணி விற்பனைக்கு**

தாவடி சுதுமலை வீதியில், மின் மாற்றி அமைந்துள்ள இடத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையிலிருந்து பிரிந்து வடக்கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 12 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

(ஜ/579)(2.8)

தொடர்பு: 077 245 9262

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af

பிரெஞ்சு மொழி

* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.

* இலவசம்: பாடங்களின், PHOTOCOPIES, பழக்கதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..

CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF)

யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

உடன் பதிவதும்.
021 222 8093

**வேலைஆள்கள் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்தகத்துக்கு ஆண்/ பெண் வேலையாள்களும், Pharmacist ஒருவரும் தேவை. (முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) முழுநேர, பகுதிநேர வேலையும் உண்டு.

077 474 3355








இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் வாங்க உகந்த நாள்




அக்ஷய திருதியை அன்று தங்க நகைகள் வாங்கினால், மேலும் மேலும் தங்கம் சேரும் என்பது நம்பிக்கை. வைகாசி மாதம் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) திருதியை திதியைத்தான் அக்ஷயதிருதியை என்கிறோம். இது வருடத்துக்கு ஒருமுறை தான்வரும். இந்தத் தினத்தைப்போன்றே, தங்க ஆபரணங்கள் செய்து அணிவதற்கு ஏற்ற மற்றொரு புண்ணிய தினமும் உண்டு. அதை, முழுமுதற்கடவுளான விநாயகரின் திருப்பெயரால் 'தங்க கணபதி தினம்' என்றே சிறப்பித்திருக்கிறார்கள் நம் முன்னோர். இந்த தினம், வருடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறை வரும் என்பது கூடுதல் சிறப்பு! தங்கத்தை விரும்பாத மனிதனே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அனைவருக்கும் தங்கத்தின் மீது பற்று உண்டு. வெறும் அழகு ஆபரணங்களாக மட்டுமே இல்லாமல், சேமிப்புக்குத் தகுதியான பொருள் அது. அவசர கால பொருளாதாரத் தேவைக்கும் தங்கம் பயன்படும். அப்படிப்பட்ட தங்கத்தைச் சேமிக்கவும், சிறுகச் சிறுக சேமித்துத் தங்க ஆபரணங்கள் வாங்கி அணிந்து மகிழவும் உகந்த தினம் தான் தங்க கணபதி தினம்.

பொதுவாக தங்கம் வாங்கி அணிவதற்குத் திங்கள், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைளும், பிரதமை, பௌர்ணமி, சஷ்டி, ஏகாதசி, பஞ்சமி, தசமி ஆகிய நாள்களும் சிறப்பானவை என்கின்றன ஞானநூல்கள். அதிலும், குறிப்பிட்ட இந்த நாள்களில் அமிர்தயோகம் மற்றும் சுக்ர ஹோரைகளில் புதிய ஆபரணம் அணிவதால், ஆபரண யோகம் பெருகும். இதுபோன்று பயன் அருளும் புண்ணிய தருணங்களை மிகத் துல்லியமாக அறிந்து வைத்திருந்தார்கள் நம் முன்னோர். முற்கால அரசர்கள் பலரும், சாஸ்திர அறிஞர்கள் அறிவுறுத்தும் இந்தத் தருணங்களில் கிரீடமும், நகைகளும் செய்து அணிந்து பயன் பெற்றிருக்கிறார்கள். அப்படியான ஒரு சிறப்புத் திருநாள் தான் தங்க கணபதி தினம்.

நியூ உதயா வின்
மின்னி ஜொலிக்கும் தங்கத்தால்
அட்சய திருதியையை வரவேற்போம்.

தங்கம் வாங்கும் போது சகல ஐஸ்வர்யங்களையும் தரும் சுபதினமான அட்சய திருதியையில் தேர்ந்தெடுக்க நவீன டிசைன்களிலான ஆபரணங்களை எம் உறவுகளுக்கு நியூ உதயா ஏற்படுத்தியுள்ளது.



தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்



காலங்கள் மாறலாம் அதுபோல் நாமும்
புதிய பழக்கவழக்கங்கள் அனுபவங்கள்,
அங்கீகாரங்கள்,பொறுப்புக்கள்,
இந்த மாற்றங்கள் எல்லாம்
வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும் இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்

ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...

தங்கப்பவுண் நகை வியாபாரம்

நாங்கள் நம்புகிறோம்...
ஒவ்வொரு உறவும்
தங்கமான உறவு என்று

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும்
5 அதிர்ஷ்ட சாலிகளுக்கு
தங்க நாணயங்கள் வழங்கப்படும்.
மற்றும் மேலும் பெறுமதி மிக்க பரிசில்களுடன்...

மூன்று பவுணுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு
லக்ஷ்மி பென்ரன் இலவசமாக வழங்கப்படும்.

நியூ உதயா ஜுவல்லர்ஸ
NEW Uthayaa
JEWELLERS


Carat Machine

021 222 2031
newuthayajwellrs@gmail.com
Jaffna
Newuthaya Jwellrs
uthaya.new

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை சிறப்பிதழ்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உ

அக்ஷய திருதியை திருநாளிலே தங்க நகைகளை வாங்கி ஐஸ்வரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி

## SRI SIVANCHCHUNA Jewellery

தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers Gold Jewels

149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 9227, 077 711 0220



அக்ஷய திருதியை திருநாளிலே தங்க நகைகளை வாங்கி ஐஸ்வரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## பொன்னரசி நகை அகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

Bonnarasy Nakaijagam Manufacturers Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

76, Kasthuriar Road, Jaffna.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 7648, 077 706 6427



அட்ஷய திருதியை அழைப்பு - 09.05.2016

சிறி அமலாவின்

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

ஆயிரக்கணக்கான நகைகளின் கண்கவர் அணிவகுப்பு

அக்ஷய திருதியை தினத்துக்காக

அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு நம்ப முடியாத விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

அன்றைய தினத்தில் உங்கள் சிரமத்தை தவிர்க்க முன்கூட்டியே ஆபரணங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

அன்றைய தினம் நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விஷேட பரிசுகள் காத்திருக்கின்றன.

158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8334/077 773 0567



நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் சித்திரைத்திங்கள் 26ஆம் நாள் (09.05.2016) திங்கட்கிழமை அன்றைய நாளிலே அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை எனும் திருநாளிலே தரம், நம்பிக்கை, கைராசி அனைத்திற்கும் உரித்தான உங்கள்

## மயூரன்ஸ் நகை மாளிகை

ஸ்தாபனத்தில் தங்க நகைகளைப் பெற்று என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட அன்போடு அழைக்கின்றோம்.

அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்பவர்களுக்கு பெறுமதி வாய்ந்த அன்புப் பரிசுகள் வழங்கப்படும்.

இல.95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP: 077 651 0251



அக்ஷய திருதியை அழைப்பு
09.05.2016

## ஸ்ரீதேவி ஜுவலர்ஸ்

பெற்றுக் கொள்ளும் நகைகளுக்கு உரிய தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.



பொன் சேரும் பொன்னான நன்நாளாம்
அக்ஷய திருதியை
உங்கள் எண்ணம் போல் தரம், நம்பிக்கை,
நவநாகரிகத்துக்கு ஏற்ப என்றும் மாறாத
ஸ்ரீதேவி யுவலேர்ஸ் உடன்
கொண்டாடி மகிழுங்கள்

இல. 80/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1787, 077 104 2848

அட்ஷய திருதியை அழைப்பிதழ்
09.05.2016

அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

## சிங்கப்பூர் ஜுவல்லறி

## Sinkapoore Jewellery



நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷம் சித்திரை மாதம் 26ஆம் நாள் (09.05.2016) திங்கட்கிழமை அட்ஷய திருதியை என்னும் பொன்னான நாள் வருகின்றது. அன்றைய தினம் நீங்கள் வாங்கும் நகைகள் என்றும் உங்கள் வாழ்க்கையில் நிலைத்து நிற்கும். நாமும் இந்த அட்ஷய திருதியை வரவேற்க இருப்பதனால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அட்ஷய திருதியையன்று நகைகளை கொள்வனவு செய்யும் அன்பான வாடிக்கையாளர் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும் பொன்னான திருநாள் அட்ஷய திருதியையன்று சொந்தமாக்கிடுங்கள் சிங்கப்பூர் ஜுவல்லறியின் தங்க நகைகளை

021 4590 260 / 021 222 3327

இல.28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

No.28, Kasthuriar Road, Jaffna.

என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை அள்ளித் தரும் அக்ஷய திருதியை திருநாளாம் 09.05.2016 அன்று எமது வினோ நகைப் பூங்காவில் தங்க நகைகளை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை அள்ளிச் செல்ல அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

## வினோ நகைப் பூங்கா



அக்ஷய திதி அன்று காலை 7 மணிமுதல் மாலை 9 மணிவரை வாடிக்கையாளரின் நன்மை கருதி கடை திறந்திருக்கும்.

குறிப்பாக 08.05.2016 அன்று வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021 222 5394
021 222 9494

Fax: 021 222 2824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தின் மதிப்பு

தங்கத்தின் கரட் என்ற அலகால் மதிப்பிடப்படுகிறது. 24 கரட் என்பது சுத்தத் தங்கமாகும். இதில் ஆபரணங்கள் செய்ய முடியாது. 22 கரட் முதல் 9 கரட் வரை தங்க நகைகள் செய்யப்படுகின்றன. 22கரட் தங்கம் என்பது 91.6 சதவீதம் தங்கமும், 8.4 சதவீதம் செம்பு, வெள்ளி போன்ற மற்ற உலோகமும் கலந்ததாகும். 18 கரட் என்பது 75 சதவீதம் தங்கமும், 14 கரட் என்பது 58.5 சதம் தங்கமும், 9 கரட் என்பது 37.5 சதவீதம் தங்கமும் கலந்ததாகும். சேர்க்கப்படும் உலோகங்களுக்கேற்ப தங்கத்தின் மதிப்பு கிடைக்கிறது. 22 கரட்டில் செய்யும் தங்க நகைகள் எளிதில் சேதம் அடையக்கூடியவை. கரட் குறையக் குறைய தங்க நகைகளின் தன்மை கெட்டியாகவும், உறுதியுடனும் இருக்கும்.

# இதையும் கவனியுங்கள்

1. தங்கம் வாங்கும் போது அதன் தூய்மை, தரம் மற்றும் விலை போன்றவற்றை ஆராய்ந்து வாங்க வேண்டும்.
2. தூய்மை-தங்கத்தின் தூய்மையை கரட் எனப்படும் அலகால் தெரிந்து கொள்ளலாம். தூய தங்கம் மிகவும் மிருதுவானது என்பதால் தங்க நகைகளாகப் பயன்படுத்த முடியாது. எனவே வெள்ளி, செம்பு, நிக்கல் மற்றும் துத்தநாகம் போன்ற கலவையை தங்கத்துடன் சேர்ப்பதால் நகைகள் வலிமையுடனும் நீண்ட நாள் பயன்படுத்துவதாகவும் உள்ளது.
3. விலை-தங்க நகைகளின் விலை தங்கத்தின் தூய்மை, அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள கலவை, அதன் வேலைப்பாடுகள், செய்கூலி போன்றவற்றை பொறுத்து உறுதி செய்யப்படும்.
4. நிறம்-மஞ்சள் நிற தங்கம்,வெள்ளை நிற தங்கம் மற்றும் ரோஸ் தங்கம் என தங்கத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. நீங்கள் தங்கத்தை பல நிறங்களின் கலவையாக பெற விரும்பினால், வேறுபட்ட இரண்டு நிறங்களின் கலவையை பயன்படுத்தலாம். சுத்தமான தங்கத்துடன் மற்ற உலோகத்தை கலப்பதால், வேறுபட்ட நிறங்கள் கொண்ட தங்கத்தை பெறலாம். பலாடியம் மற்றும் வெள்ளி போன்ற வெள்ளை உலோகங்களை கலப்பதால் வெள்ளை நிற தங்கம் உருவாகிறது. இது பெரும்பாலும் அமெரிக்காவில் திருமண நகைகளாக பயன்படுகிறது. தங்கத்துடன் செம்பு கலப்பதால் மென்மையான பிங்க் நிறம் கொண்ட ரோஸ் தங்கம் கிடைக்கிறது. பச்சை, ஊதா மற்றும் கறுப்பு போன்ற நிறங்களிலும் தங்கம் தயாரிக்கப்படுகிறது. ஆனால், உலகம் முழுவதும் மஞ்சள் நிற தங்கம் அனைவராலும் கவரப்படுகிறது. மேலும் இதுவே உயர்ந்த மற்றும் விலைமதிப்பற்ற ஒன்றாகும்.
5. அடையாளங்கள்-இந்தியா உட்பட்ட பல நாடுகளில் ஒவ்வொரு தங்க நகைகளும் கரட் அல்லது அதன் தூய்மையை ஒரு தெளிவான முத்திரையால் குறிப்பிடுகிறார்கள். பிரபலமான தங்க நகை கடைகள் அவர்களது முத்திரை மற்றும் அடையாள முத்திரைகளை அவர்களே தங்க நகைகளில் முத்திரையிடுகின்றனர்.
6. நகைகடைகளின் நற்பெயர்-தங்கத்தை ஒரு நம்பிக்கையான கடையில் தான் வாங்க வேண்டும். அந்த நகை கடையுடன் ஒரு நீண்ட கால உறவு இருக்க வேண்டும். நம்பகத் தன்மை மற்றும் போலி இல்லாத, நிரூபிக்கப்பட்ட தங்கம் கொண்ட கடைகளாக இருக்க வேண்டும்.

நிஷானந்தா ஜுவல்லறியின்
அக்ஷய திருதியை அழைப்பு
நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் (09.05.2016) திங்கட்கிழமை
என்றும் குறையாத ஐஸ்வரியத்தை
அள்ளித்தரும் அக்ஷய திருதியை
என்னும் திருநாளிலே தரம்,
நம்பிக்கை,கைராசி
அனைத்திற்கும் உரித்தான உங்கள்
நிஷானந்தா
ஜுவல்லறியில்
தங்க நகைகளை வாங்கிச்
சென்று என்றுமே
குறையாத இன்பத்தைப்
பெற்றிட உங்களை
அன்போடு
அழைக்கின்றோம்.



அக்ஷய திருதியை திருநாளிலே எமது நிறுவனத்தில் தங்கத்தைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு பெறுமதியான அன்பளிப்புக்கள் காத்திருக்கின்றன.
தாங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
இல.51, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்
அ.ஆனந்தன்
தொலைபேசி: 021 222 7985, 077 503 5549



அக்ஷய திருதியை அழைப்பு நாளை 09-05-2016
மைதிலி நகைமாடம்
Maithily Jewellers
89V, Kasthuriyar Road, Jaffna. Tel: 021-222 7902
குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசய திருநாளாம் அட்சய திருதியை எதிர்வரும் 09.05.2016 திங்கட்கிழமை அன்று வருகின்றது. இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை **கொழும்பில் யாழ்.மைதிலி ஜுவல்லறியிலும் யாழ்ப்பாணத்தில் மைதிலி நகைமாடத்திலும்** வாங்கிக் கொள்ளுங்கள்
- அட்சய திருதியை முன்னிட்டு அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு அதற்கான விலையில் நம்பமுடியாத விலைக் கழிவுகளும் வழங்கப்படும்.
- பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.
- பவுண் காசு மற்றும் லக்ஷ்மி காசுக்கு விலைக் கழிவு உண்டு.
- குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.

**வாடிக்கையாளர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!**
அட்சய திருதியையை முன்னிட்டு ஏப்பிரில் 15ஆம் திகதி தொடக்கம் மே 09ஆம் திகதி வரை எம்மிடம் நகைகளை வாங்குபவருக்கு மைதிலி நகைமாடம் வழங்கும் மூன்று சிறப்பு பரிசுகள் காத்திருக்கின்றன.
முதலாம் பரிசு
இரண்டாம் பரிசு
மூன்றாம் பரிசு
10 ஆறுதல் பரிசுகள்
பரிசுபெற்றவர்களின் விவரம் 11.05.2016 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவரும்
வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு:-
நீங்கள் இலகுவான முறையில் நகைகளை கொள்வனவு செய்ய விரும்பினால் ஏப்பிரல் 15 தொடக்கம் மே 8 வரை பிடித்த டிசைன்களை தெரிவு செய்து கொள்ளுங்கள்



Yarl Maithily Jewellers யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்
79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க நகைகள் வாங்கும் போது



### கல் நகைகள்!

கல் வைத்த நகைகளை வாங்குகிறீர்கள் எனில், அவை எத்தனை கிராம் உள்ளன, அதற்கான விலை எவ்வளவு, மொத்த விலையில் கற்கள் போக தங்கத்தின் விலை சரியாக உள்ளதா என்று பார்த்து வாங்குங்கள். பிற்காலத்தில் அந்த நகைகளை தந்து புது நகை வாங்கும்போதோ அல்லது விற்கும்போதோ கல் நகைகளுக்கு மதிப்புக் குறைத்தே கணக்கிடப்படும். ஆகவே, கல் நகைகளை வாங்கும் போது கவனத்தோடு இருக்க வேண்டியது அவசியம்.

### டிசைன்!

சிலர் நகை வாங்கவேண்டும் என்றதுமே நல்ல டிசைனாக இருக்க வேண்டும் என்று நினைக்க தொடங்கி விடுவார்கள். அப்படி டிசைன் நகைகளை வாங்கும் போது அதற்கு சேதாரம் அதிகமாகும், அப்போது அதற்கான சேதாரம் எவ்வளவு, அது நகையின் டிசைனுக்கு தகுந்த சேதாரம் தானா என்று பார்த்து அதற்குபின் வாங்குங்கள். பார்க்க நன்றாக உள்ளது என நீங்கள் வாங்கும் சிறிய அளவிலான நகைகளின் ஆயுள் பெரும்பாலும் குறைவாகவே இருக்கும். மேலும், நீங்கள் ஏதாவது ஒரு நகையை அக்ஷயதிருதியை அன்று வாங்க வேண்டுமே என்ற காரணத்துக்காக 2 கிராமுக்கு கீழ் நகை வாங்கும் போது தரம் குறைந்த நகைகளை வாங்கும் வாய்ப்பு அதிகம். அதனால், நகை வாங்கும்போது இரண்டு கிராமுக்கு மேல் உள்ள நகையாகப் பார்த்து வாங்கு வது நல்லது.

### தரம்

நகைவாங்கும்போது சரியான தரத்தில் நகைகளை வாங்குவது முக்கியம். அதோடு ஒவ்வொரு நகை வாங்கும்போதும் அதற்கு என்ன தரக் குறியீடு எனப் பார்த்து வாங்க வேண்டும். தங்கம் என்றால் 916 நகைகள், வைர நகைகள் வாங்கும்போது தரச் சான்றிதழ் பார்த்து வாங்கவேண்டும். குறிப்பாக, வைரம் வாங்கும் போது கட்டாயம் தரச் சான்றிதழை கேட்டு பெற வேண்டும்.

### சேதாரம்

சேதாரம் எனும் விடயம் கடைக்கு கடை மாறுபடும். நீங்கள் எந்த நகை வாங்குவதாக இருந்தாலும் சேதாரம் எவ்வளவு என்ப தை நன்கு விசாரித்து அறிந்த பிறகே வாங்குங்கள். இதில் குழப்பமான பல கணக்குகள் இருப்பதால் உஷாராக இருப்பது அவசியம்!
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org